நீதித் துறையினர் போராட்டம்

பக்கம் 02

விறுவிறுப்பான வாக்குப் பதிவு

பக்கம் 08

மிகக் குள்ளமான சீனச் சிறுமி

பக்கம் 19

எங்களுக்கும் பங்கு வேண்டும்

பக்கம் 23



விலை ரூபா 25.00

www.onlineuthayan.com

பக்கங்கள் : 32

# உதயன்

சுடர் 27
கதிர் 237

வள்ளுவர் ஆண்டு 2043 ஆடி 05 வெள்ளிக்கிழமை (20/07/2012) UTHAYAN - A Lively National Tamil Daily


## செப்ரெம்பர் 8 இல் தேர்தல்

கொழும்பு,ஜூலை 20

கலைக்கப்பட்ட மூன்று மாகாண சபைகளுக்குமான தேர்தல் எதிர்வரும் செப்ரெம்பர் 8ஆம் திகதி இடம்பெறவுள்ளதாக தேர்தல்கள் ஆணையாளர் நாயகம் மஹிந்த தேசப்பிரிய தெரிவித்தார்.

கிழக்கு, வட மத்திய மற்றும் சப்ரகமுவ மாகாண சபைகள் கலைக்கப்பட்டு அவற்றுக்கான வேட்பு மனு தாக்கல் நேற்று நண்பகலுடன் நிறைவுற்றன. அதன் பின்னரே தேர்தல்கள் ஆணையாளர் இந்த அறிவிப்பை விடுத்துள்ளார். (த)

## அமைச்சர் பஸில் இந்தியத் தூதுவர் இன்று யாழில்

யாழ்ப்பாணம்,ஜூலை 20

யாழ். மாவட்டத்தில் இன்று வெள்ளிக்கிழமை இடம்பெறும் பல்வேறுபட்ட நிகழ்வுகளில் பங்குபற்றுவதற்காக பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பஸில் ராஜபக்ஷ மற்றும் இலங்கைக்கான இந்தியத் தூதுவர் அசோக் கே காந்தா ஆகியோர் வருகை தரவுள்ளனர்.

இந்தியாவின் நிதியுதவியுடன் கைதடியில் அமைக்கப்பட்ட பனை ஆராய்ச்சி நிலையத்தை மு.ப 11 மணிக்கு பஸில் ராஜபக்ஷ மற்றும் அசோக் கே காந்தா ஆகியோர் திறந்து 04

# மு.காவுடன் கிழக்கில் கூட்டாட்சிக்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தயார்




## தேர்தலின் பின்னரே தமது முடிவு என்கிறார் ஹக்கீம்

மட்டக்களப்பு, ஜூலை 20

கிழக்கு மாகாணத் தேர்தலில் வெற்றி பெற்று முஸ்லிம் காங்கிரஸுடன் இணைந்து ஆட்சி அமைப்பதற்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தயாராக உள்ளது. அவ்வாறு கூட்டு அரசு அமைந்தால் அது தமிழ் – முஸ்லிம் சமூகங்களுக்கு பெரும் விமோசனத்தையும் நன்மையையும் ஏற்படுத்தும் என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினரும் பேச்சாளருமான சுரேஸ்பிரேமச்சந்திரன் 'உதயனு'க்குத் தெரிவித்தார்.

எனினும் கூட்டமைப்பின் இந்த அழைப்புக் குறித்து ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸினால் இப்போது எந்த முடிவுக்கும் வரமுடியாது எனவும் தேர்தலுக்குப் பின்னர் அது குறித்துத் தீர்மானிக்கப்படும் எனவும் அதன் தலைவரும் நீதியமைச்சருமான ரவூப் ஹக்கீம் தெரிவித்தார்.

இறுதிவரை அரசுடன் இணைந்து 04

## மன்னார் நீதிமன்றம் மீது நடத்தப்பட்ட தாக்குதலைக் கண்டித்து ஆர்ப்பாட்டம்

### அமைச்சருக்கு எதிராகப் பதாகைகள்

மன்னார், ஜூலை 20

மன்னாரில் நீதிமன்றத்தின் மீது நடத்தப்பட்ட தாக்குதலைக் கண்டித்து மன்னாரில் நேற்று நீதிமன்ற ஊழியர்கள் பணிப் புறக்கணிப்பு மற்றும் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

மன்னார் நீதிவான் மன்று மற்றும் மாவட்ட நீதிமன்றங்களின் ஊழியர்களும் சட்டத்தரணி 04

## தனித்துப் போட்டியிட மஹிந்தவின் ஆசியைப் பெறவில்லையாம் ஹக்கீம்

கொழும்பு,ஜூலை 20

கிழக்கு மாகாணசபைத் தேர்தலில் தனித்துப் போட்டியிடும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ், ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் ஆசியைப் பெறவில்லை என்று ஜனாதிபதியின் பேச்சாளர் பந்துல ஜெயசேகர தெரிவித்துள்ளார்.

முன்னதாக ஆளும் கூட்டணியில் இணைந்து போட்டியிட முடிவு செய்திருந்த ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் நேற்று முன்தினம் திடீரெனத் தனித்துப் போட்டியிடப் போவதாக 04

## முஸ்லிம்களை அடகு வைப்பதா?

கிழக்கில் தனித்துப் போட்டியிடுவது தொடர்பிலும் அரசுடன் இணக்கமாக செயற்படுவது 04

## தேர்தலின் பின் அரசுடன் இணையும் முடிவுடனே மு.கா. தனித்துப் போட்டி

### அமைச்சர் கெஹெலிய அறிவிப்பு



கொழும்பு,ஜூலை 20

எதிர்வரும் கிழக்கு மாகாணசபைத் தேர்தலின் பின்னர் அரசுடன் இணைந்து செயற்படுவது என்ற உடன்படிக்கையின் பிரகாரமே ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ், மேற்படி தேர்தலில் தனித்துப் போட்டியிடுவது என்ற தீர்மானத்தை எடுத்துள்ளது என அரசு நேற்று அறிவித்தது.

தேர்தலைப் பொறுத்தவரையில் இவ்வாறான நடைமுறைகள் அடிக்கடி இடம்பெறுவது வழமையே. இந்த நிலையில், தனியானதொரு அரசியல் பயணத்தை நோக்கிச் செல்வதற்காகவே தனித்துப் போட்டியிடும் முடிவுக்கு வந்தோம் என அந்தக் கட்சியின் உறுப்பினர்கள் நேற்றுமுன்தினம் 04

## நீதிபதி வீட்டின் மீது நேற்றிரவு தாக்குதல்

வடமராட்சி, ஜூலை 20

பருத்தித்துறை மாவட்ட நீதிபதி திருமதி ஸ்ரீநிதி நந்தசேகரனின் நெல்லியடியில் உள்ள வாசஸ்தலத்தின் மீது நேற்றுமுன்தினம் இரவு 10 மணியளவில் வீதியில் இருந்து பொருளொன்று வீசித் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

வீசப்பட்டது தென்னம் கோம்பையாக இருக்கலாம் என சந்தேகம் தெரிவிக்கப்படுகிறது. அப்பொருள் ஜன்னல் மீது விழுந்த போதும் சேதம் எதுவும் ஏற்படவில்லை. இது குறித்து நீதிபதி நெல்லியடிப் பொலிஸ் நிலையத்தில் முறையிட்டதாகத் தெரியவருகிறது.

நேற்றுக் காலை பருத்தித்துறை நீதிமன்ற சட்ட நூலகத்தில் பருத்தித்துறை சட்டத்தரணிகள் சங்கம் அதன் செயலாளர் சட்டத்தரணி பொன். குமாரசாமி தலை 04

## யாழ். பல்கலையின் சர்வதேச மாநாடு இன்றும் நாளையும் யாழ்ப்பாணத்தில்

யாழ்ப்பாணம், ஜூலை 20

யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம் போருக்குப் பின்னர் நடத்தும் சர்வதேச ஆய்வு மாநாடு இன்றும் நாளையும் நடைபெற உள்ளது. இது தொடர்பான ஆரம்ப நிகழ்வு நகரில் உள்ள 'றில்கோ' ஹோட்டலில் நடைபெறுவதைத் தொடர்ந்து ஆய்வு அரங்குகள் யாழ். பல்கலைக் கழக கைலாசபதி கலையரங்கில் நடைபெறும்.

இந்த மாநாட்டில் அறிவியலாளர்கள், ஆய்வாளர்கள், ஆராய்ச்சி மாணவர்கள் என 600 பேர் கலந்துகொள்ளவுள்ளனர் என்று நிகழ்வின் உத்தியோகபூர்வ இணையத் தளத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

விவசாயம், பிரயோக அறிவியல் மற்றும் தொழில்நுட்பம், 04

## சட்டவிரோதமான ஆஸி. பயணத்தின் பின்னணியில் புலம்பெயர் தமிழர்கள்

### குற்றஞ் சாட்டுகிறது அரசு

கொழும்பு,ஜூலை 20

சட்டவிரோதமான முறையில் ஆஸ்திரேலியாவுக்குச் செல்லும் பொதுமக்களின் எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகரித்துள்ள நிலையில், இதன் பின்னணியில் புலம்பெயர் தமிழர்களின் சதித்திட்டமொன்று நிலவுவதாக தகவல்கள் கிடைத்துள்ளன என்று அரசு நேற்று அறிவித்துள்ளது.

எதிர்வரும் மாதங்களில் நடைபெறவுள்ள ஐ.நா மனித உரிமைகள் சபையின் கூட்டத்தொடரில் 04

## புலனாய்வுப் பிரிவினர் எனக் கூறி மருத்துவர் நிமலனுக்கு அச்சுறுத்தல்

### யாழ். பொலிஸில் முறைப்பாடு

யாழ்ப்பாணம், ஜூலை 20

அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் யாழ். கிளையின் தலைவர் மருத்துவர் சங்கரன் நிமலனுக்கு புலனாய்வுப் பிரிவினர் எனத் தெரிவித்து ஒருவரால் அச்சுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளதாக யாழ். பொலிஸ் நிலையத்தில் நேற்று முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

நேற்று முற்பகல் 10.45 மணியளவில் அவரது கைத்தொலைபேசிக்கு அழைப்பை மேற்கொண்ட ஒருவரால் இவ்வாறு அச்சுறுத்தல் விடுக்கப்பட்டதாகவும் யாழ்.போதனா வைத்தியசாலையில் மருத்துவ மாணவர்களுக்கு விரிவுரையாற்றிக்கொண்டிருந்தபோது அந்த அழைப்பு வந்ததாகவும் தெரி 04

## கடற்படை மீது போர்க்குற்றச்சாட்டு

## கனேடிய நீதிமன்றத் தீர்ப்பினால் பெரும் அதிர்ச்சியில் இலங்கை அரசு

கொழும்பு,ஜூலை 20

போர்க் குற்றச்சாட்டுக்கு உள்ளாகியிருக்கும் இலங்கைக் கடற்படையில் பணியாற்றியவர் என்பதால், கொமடோர் குருபரன் என்ற இலங்கைக் கடற்படையின் முன்னாள் அதிகாரிக்குக் கனேடிய நீதிமன்றம் அரசியல் தஞ்சம் அளிக்க மறுத்துள்ள விவகாரம் இலங்கை அதிகாரிகளுக்குக் கடும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

இலங்கைக் கடற்படையில் பணியாற்றிய கொமடோர் குருபரன், இறுதிக்கட்டப் போர் நடவடிக்கைகளில் ஈடுபடாதபோதும், போர்க்குற்றங்களில் ஈடுபட்ட இலங்கைக் கடற்படையில் [illegible] சம் அளிக்க கனேடிய சமஸ்டி நீதிமன் 04

## புலிக்கொடி குறித்து விசாரணை

கொழும்பு,ஜூலை 20


தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் ஏற்பாட்டில் யாழ்ப்பாணம், நெல்லியடி பஸ் நிலையத்துக்கு முன்னால் [illegible]கிழமை [illegible] ஆர்ப்பாட்டத்தின் போது புலிக் கொடி ஏந்தியவாறு 04

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மன்னார் தாக்குதலைக் கண்டித்து வடக்கு நீதித்துறையினர் போராட்டம்

## நீதிமன்றங்களின் பணிகள் ஸ்தம்பிதம்





யாழ்ப்பாணம், ஜூலை 20

மன்னார் நீதிமன்றக் கட்டடத் தொகுதி மீது தாக்குதல் நடத்தப்பட்டமை மற்றும் மன்னார் நீதிவான் அச்சுறுத்தப்பட்டமையைக் கண்டித்து, யாழ். நீதிவான் நீதிமன்ற அலுவலக உத்தியோகத்தர்கள் தவிர்ந்த வடக்கில் உள்ள அனைத்து நீதிமன்றங்களினதும் சட்டத்தரணிகளும், நீதிமன்ற உத்தியோகத்தர்களும், ஊழியர்களும் நேற்றுப் பணிப் புறக்கணிப்பில் ஈடுபட்டனர். அத்துடன் பருத்தித்துறை நீதிமன்ற உத்தியோகத்தர்களும் சட்டத்தரணிகளும் கண்டனப் பேரணி ஒன்றையும் நடத்தினர்.

இதன்காரணமாக நீதிமன்றங்களின் செயற்பாடுகள் அனைத்தும் முன்னதாக ஸ்தம்பிதம் அடைந்தன. நேற்று விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்படவிருந்த வழக்குகள் அனைத்தும் பிறிதொரு திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டன.

யாழ். மாவட்ட நீதிமன்றம், யாழ். மேல் நீதிமன்றம், யாழ். குடியியல் மேன்முறையீட்டு மேல் நீதிமன்றம், சாவகச்சேரி நீதிமன்றம், பருத்தித்துறை நீதிமன்றம், மல்லாகம் நீதிமன்றம், ஊர்காவற்றுறை நீதிமன்றம், கிளிநொச்சி நீதிமன்றம், முல்லைத்தீவு நீதிமன்றம் ஆகியவற்றின் சட்டத்தரணிகளும் உத்தியோகத்தர்களும், ஊழியர்களும் நேற்றைய பணிப் புறக்கணிப்பில் ஈடுபட்டனர்.

ஒவ்வொரு நீதிமன்றங்களினதும் உத்தியோகத்தர்கள், ஊழியர்கள் அனைவரும் தத்தமது நீதிமன்றின் முன்பாக ஒன்றுகூடி சுலோகங்களை ஏந்தியவாறு நேற்று மதியம் அரை மணிநேர பணிப் புறக்கணிப்பில் ஈடுபட்டனர்.

பருத்தித்துறை நீதிமன்ற உத்தியோகத்தர்கள், ஊழியர்கள் கண்டனப்பேரணி ஒன்றை நேற்று மதியம் நடத்தினர். நீதிமன்ற வீதி, துறைமுக வீதி வழியாக நகருள் நுழைந்த பேரணி மத்திய பஸ் நிலையம் ஊடாக மீண்டும் நீதிமன்றைச் சென்றடைந்தது.

நீதிமன்ற உத்தியோகத்தர்களுக்கு ஆதரவு தெரிவித்து சட்டத்தரணிகளும் நீதிமன்றின் முன்பாக ஒன்றுகூடி தமது கண்டனத்தைத் தெரிவித்தனர். தவிர நேற்று முழுநாளும் சட்டத்தரணிகள் பணிப் புறக்கணிப்பில் ஈடுபட்டனர்.

'நீதித்துறையின் சுதந்திரத்தில் தலையிடாதே' நீதிமன்றையும், நீதித்துறை அலுவலரின் சுதந்திரத்தையும் பாதுகாப்பையும் உறுதிசெய்', றிஷாத் பதியுதீனைக் கைது செய்', நீதிபதிகளை அச்சுறுத்தாதே', 'நீதித்துறையில் தலையிடாதே', 'இன்று மன்னார் நாளை எங்கே' போன்ற வாசகங்கள் பொறிக்கப்பட்ட பதாகைகளை ஊழியர்கள் தாங்கியிருந்தனர்.(த-4-8-9)

### காவத்தையில் மீண்டும் இரட்டைப் படுகொலை

இரத்தினபுரி - காவத்தை - கொட்டகேத்தன பகுதி வீடொன்றில் இருந்து எரிந்து கருகிய நிலையில் இரு பெண்களின் சடலங்கள் நேற்று அதிகாலை மீட்கப்பட்டுள்ளதாகப் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் தெரிவித்தார்.

இந்தச் சடலங்கள் நேற்று அதிகாலை 4 மணியளவில் மீட்கப்பட்டுள்ளன. 63 வயது தாய் மற்றும் 32 வயதுடைய அவரது மகள் ஆகியோரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டுள்ளனர். இவர்கள் கொலை செய்யப்பட்டிருப்பதாக சந்தேகிக்கப்படுகிறது. (த)

### மாலைதீவு அமைச்சர் கொழும்பில்

மாலைதீவு பாதுகாப்பு அமைச்சர் மொகமட் நசீம் நேற்று ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவைச் சந்தித்து உரையாடினார். இருநாள் உத்தியோகபூர்வ பயணம் ஒன்றை மேற்கொண்டு இலங்கை வந்துள்ள அவர் நேற்று முன்தினம் பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷவுடன் பேச்சு நடத்தினார்.

மாலைதீவு பாதுகாப்பு உறுப்பினர்களுக்குத் தியத்தலாவைமுகாமில் பயிற்சிஅளிப்பது தொடர்பாக இருவரும் கலந்துரையாடியதாகப் பாதுகாப்புஅமைச்சு அறிவித்துள்ளது.

இது தொடர்பான ஒப்பந்தம் ஒன்று கைச்சாத்திடப்படவுள்ளதாகவும் அறிவிக்கப்படுகின்றது. மாலைதீவு பாதுகாப்பு அமைச்சர் இலங்கை முப்படைத் தலைவர்களையும் சந்தித்துப் பேச ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாகவும் பாதுகாப்பு அமைச்சு மேலும் தெரிவித்துள்ளது. (த)

## யாழ்ப்பாணச் சட்டத்தரணிகள் காலவரையறையற்ற புறக்கணிப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 20

மன்னார் நீதிமன்றம் தாக்கப்பட்டமை மற்றும் மன்னார் நீதிவான் அச்சுறுத்தப்பட்டமையைக் கண்டித்து யாழ். மாவட்ட சட்டத்தரணிகள் நேற்றுத் தொடக்கம் காலவரையறையற்ற நீதிமன்றப் புறக்கணிப்பில் ஈடுபட்டுள்ளதாக தெரிவித்துள்ளனர்.

மன்னார் சம்பவம் தொடர்பாக யாழ்.மாவட்ட சட்டத்தரணிகள் சங்கம் நேற்று ஒன்றுகூடி இந்தத் தீர்மானத்தை எடுத்ததாகச் சங்கம் தெரிவித்தது.

மன்னார் நீதிமன்ற வளாகம் தாக்கப்பட்டமை தொடர்பாகவும் மன்னார் நீதிவான் மிக மோசமான முறையில் அவதூறு செய்யப்பட்டமையைக் கண்டித்தும் அமைச்சர் றிஷாத் பதியுதீனால் மன்னார் நீதிவான் அச்சுறுத்தப்பட்டமையைக் கண்டித்தும் இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டது.

இதன்படி இந்தச் சம்பவம் நீதித்துறையின் சுதந்திரத்தையும், கௌரவத்தையும் மிக மோசமாக அச்சுறுத்துவதாக கருதி இதனைச் சங்கம் வன்மையாகக் கண்டிக்கிறது.

இந்தச் சம்பவத்தில் அமைச்சர் றிஷாத் பதியுதீன் உட்பட சம்பந்தப்பட்ட அனைவரையும் கைது செய்து அவர்களுக்கு எதிராக உரிய சட்ட நடவடிக்கை எடுக்கவேண்டும். இத்தகைய நடவடிக்கைகள் எதிர்காலத்தில் நடைபெறாதவாறு இருக்க ஜனாதிபதி நடவடிக்கை எடுக்க வேண்டும். இந்த விடயம் தொடர்பில் உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படும் வரை யாழ். சட்டத்தரணிகள் சமூகம் காலவரையறையற்ற நீதிமன்ற புறக்கணிப்பில் ஈடுபடத் தீர்மானிக்கின்றது என்றும் சங்கம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (த-4)

## யாழ். நீதிவான் நீதிமன்றம் புறக்கணிப்பில் ஈடுபடவில்லை

யாழ்ப்பாணம், ஜூலை 20

மன்னார் நீதிமன்ற கட்டடத்தொகுதி மீதான தாக்குதல் மற்றும் மன்னார் நீதிவான் அச்சுறுத்தப்பட்டதைக் கண்டித்து அனைத்து நீதிமன்ற உத்தியோகத்தர்களும் பணிப் புறக்கணிப்புச் செய்த போதும் யாழ்.நீதிவான் நீதிமன்ற உத்தியோகத்தர்கள் மட்டும்புறக்கணிப்பில்ஈடுபடவில்லை.

இதுதொடர்பாக யாழ்.நீதிவான் நீதிமன்றப் பதிவாளர் எஸ்.துளசிகனிடம் கேட்ட போது நீதிச்சேவை ஆணைக்குழுவிலிருந்து முறையான முன் அனுமதி பெறுவதற்குக் கால அவகாசம் போதாமையால் பணிப் புறக்கணிப்பில் கலந்துகொள்ளவில்லை என்று தெரிவித்தார்.

இதேவேளை மன்னாரில் நீதிமன்ற உத்தரவுக்கு பின் நடைபெற்ற சம்பவம் தொடர்பில் நடைபெறும் சட்டத்தரணிகளின் பணிப் புறக்கணிப்பு பொது மக்களின் நலன்களையோ, அன்றாட நீதிமன்ற நடவடிக்கைகளையோ பாதிக்கும் வகையில் அமையக்கூடாது எனவும், மன்னாரில் நடைபெற்ற சம்பவம் தொடர்பில் சட்ட முறையான நடவடிக்கை மூலமும், நீதிச்சேவை ஆணைக்குழுவுக்கு முறைப்படி அறிவித்தல் கொடுத்து நடவடிக்கை எடுப்பது தான் உசிதமாக இருக்க முடியும் எனவும் கருதுவதாக யாழ்.நீதிவான் நீதிமன்ற நீதிவான் மாணிக்கவாசகர் கணேசராஜா தெரிவித்தார்.

ஏற்கனவே விசாரணைகள், கட்டளைகள் , தீர்ப்புகள் தாமதிப்பது குறித்து தமக்கு முறைப்பாடுகள் கிடைத்துள்ளதாகவும் இதனால் பொதுமக்கள் அதிகளவில் பாதிக்கப்படுவதாகவும் நீதி தாமதிக்கப்படுவது நீதிமறுக்கப்படுவதற்கு சமம் எனதான் கருதுவதாகவும் குறித்த நீதிவான் தெரிவித்துள்ளதாக நேற்று நீதிமன்றத்தில் வழங்கப்பட்ட துண்டுப்பிரசுரத்தில் தெரிவிக்கப்பட்டிருந்தது. (த-4)

## 6 வருடங்களுக்கு ஒருமுறையே இனி ஐ.தே.க. தலைவர் தெரிவு

கொழும்பு, ஜூலை 20

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் தெரிவு இனி 6 வருடங்களுக்கு ஒருமுறையே இடம்பெறும் என ஐக்கிய தேசியக் கட்சியின் மத்திய செயற்குழுவில் நேற்றுத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

நேற்று இடம்பெற்ற ஐக்கிய தேசியக் கட்சி மத்திய செயற்குழுவில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்களாவன,

* கட்சியின் தலைவர் தெரிவு 6 வருடங்களுக்கு ஒருமுறை.
* கட்சி செயலாளர், தவிசாளர், பொருளாளர் ஆகியோரை தலைவரே தெரிவு செய்வார்.
* பிரதித் தலைவர், உப தலைவர், தேசிய அமைப்பாளர் ஆகியோரையும் தலைவரே தெரிவு செய்வார்.
* பிரதித் தலைவர், உப தலைவர், தேசிய அமைப்பாளர் தெரிவில் போட்டி ஏற்படுமாயின் அதன்பின் மத்திய செயற்குழுவின் மூன்றில் இரண்டு பெரும்பான்மையுடன் மாற்றம் செய்ய முடியும்.
* சரத் பொன்சேகா ஏற்பாடு செய்யும் எந்த கூட்டத்திலும் ஐ.தே.க. உறுப்பினர்கள் கலந்துகொள்ள முடியாது. (த)

## மானிய ஆணைக்குழுத் தலைவரை நீதிமன்றில் முன்னிலையாகப் பணிப்பு

கொழும்பு,ஜூலை 20

நீதிமன்றத்தை அவமதித்த குற்றத்துக்காக நடவடிக்கை மேற்கொள்ளாதிருப்பதற்கான காரணங்களை தெளிவுபடுத்துவதற்காக எதிர்வரும் 23 ஆம் திகதி நீதிமன்றத்தில் முன்னிலையாகுமாறு பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் தலைவருக்கு உயர்நீதிமன்றம் நேற்று உத்தரவிட்டுள்ளது.

ஏற்கனவே வழங்கப்பட்டுள்ள தீர்ப்பை உடனடியாகச் செயற்படுத்துமாறு உத்தரவிடக்கோரி இலங்கை ஆசிரியர் சங்கம் தாக்கல் செய்துள்ள நகர்த்தல் பத்திரமொன்றைப் பரிசீலனைக்கு எடுத்துக்கொண்ட, பிரதம நீதியரசர் கலாநிதி ஷிரானி பண்டாரநாயக்க உள்ளிட்ட மூவரடங்கிய நீதியரசர்கள் குழாம் இந்த உத்தரவைப் பிறப்பித்துள்ளது.

இது தொடர்பாக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் தலைவருக்கு அறிவிக்குமாறு உயர்நீதிமன்றம் அதன் பதிவாளருக்கு நேற்று உத்தரவிட்டுள்ளது.

இதேவேளை எதிர்வரும் 25 ஆம் திகதி புதிய இஸட் புள்ளிகள் வெளியிடப்படும் என பரீட்சைகள் ஆணையாளர் சார்பில் நீதிமன்றத்தில் முன்னிலையான அரச தரப்பு சிரேஷ்ட சட்டத்தரணி நெரில் புள்ளே குறிப்பிட்டுள்ளார்.

கடந்த வருடம் நடைபெற்ற கல்விப் பொதுத்தராதர உயர்தரப் பரீட்சையின் பெறுபேறுகளை ஆட்சேபித்து இலங்கை ஆசிரியர் சங்கமும் மாணவர்கள் சிலரும் தாக்கல் செய்திருந்த அடிப்படை உரிமை மனு தொடர்பான தீர்ப்பு கடந்த மாதம் 25 ஆம் திகதி அறிவிக்கப்பட்டது.

ஏற்கனவே வெளியிடப்பட்டுள்ள இஸட் புள்ளிகளை இரத்துச் செய்து புதிய மற்றும் பழைய பாட விதானங்களை அடிப்படையாகக் கொண்டு வெவ்வேறாக இஸட் புள்ளிகளை கணிப்பிட்டு உடனடியாக அதனை வெளியிடுமாறு இதன்போது உயர்நீதிமன்றம் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவிற்கு உத்தரவிட்டிருந்தது.

(த)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மீனவர் சங்க நிர்வாகங்களில் படைத்தரப்பு, அரசியல் தலையீடு

## சுதந்திரமாக சேவையாற்ற முடியவில்லை என்கிறார் மீனவர் சமாசத் தலைவர்

யாழ்ப்பாணம், ஜூலை 20

பாதுகாப்புப் பிரிவினர் அழுத்தம் மற்றும் அரசியல் தலையீடுகள் ஆகியவற்றின் மூலம் நியமனம் பெறுகின்ற உறுப்பினர்களைக் கொண்ட நிர்வாகம் எப்பொழுதும் கடற்றொழிலாளர்களுக்கு சிறப்பான சேவையை வழங்க முடியாது. வட மாகாணத்தின் சில மாவட்டங்களில் இந்த நிலை இன்றும் காணப்படுகின்றது என வடமாகாண கடற்றொழிலாளர் கூட்டமைப்பின் தலைவர் சி.தவரட்ணம் தெரிவித்தார்.

'இந்திய இழுவைப் படகுகளின் தாக்கமும் வடக்கு மீனவ சமூகம் தற்போது முகம் கொடுக்கும் பிரச்சினைகளும்' என்னும் தொனிப் பொருளில் யாழ்.நகரில் இடம்பெற்ற கலந்துரையாடலிலேயே இவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

கடற்றொழிலாளர்கள் சுதந்திரமாகத் தமது நிர்வாகத்தைத் தெரிவு செய்ய வேண்டும். அப்போதுதான் அந்த நிர்வாகம் சிறப்பாகச் செயலாற்றும்.

ஆனால் துரதிர்ஷ்ட வசமாக வடமாகாணத்தில் பாதுகாப்புப் பிரிவினரின் அழுத்தம், அரசியல் தலையிடுகள் சில சங்கங்களில் உள்ளன.

இவ்வாறு நியமனம் பெறுகின்ற உறுப்பினர்களைக் கொண்ட நிர்வாகம் சிறப்பாகச் சேவையாற்ற முடியாது.

எனவே மாவட்டங்களுக்குப் பொறுப்பான அரச நிர்வாக உத்தியோகத்தர்கள் கடற்றொழிலாளர்கள் சுதந்திரமாக தங்கள் சங்கங்களைத் தெரிவுசெய்ய நடவடிக்கை எடுக்கவேண்டும்-என்றார்.

தொடர்ந்து உரையாற்றிய யாழ்.மாவட்ட கடற்றொழில் பரிசோதகர் ரமேஷ் கண்ணா தெரிவித்ததாவது:

எமது பணிகளை மேற்கொள்வதற்கு ஊழியர்கள் போதாமல் உள்ளது. முன்பு யாழ்.மாவட்டக் கடற்றொழிலாளர் சங்கங்கள் சிறப்பாக இயங்கிக் கொண்டிருந்தன. கடற்றொழில் திணைக்களத்தின் சேவைகளைச் சங்க நிர்வாகம் ஊடாகச் செயற்படுத்த முடிந்தது.

தற்போது அவ்வாறான நிலை காணப்படவில்லை. மேலும் எமக்கும் போதிய ளவு ஊழியர்கள் இல்லாததனால் அதிகளவான வேலைப் பளுவினை எதிர்நோக்குகின்றோம்-என்றார். (த-5)

## குருதிக் கொடைக்கு அழைப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 20

விபத்துச் சிகிச்சை, புற்றுநோயாளர்களுக்கான சிகிச்சைகள் அதிகரித்துள்ளமையால் குருதி விநியோகமும் அதிகரித்துள்ளது. இதனால் யாழ். போதனா வைத்தியசாலையில் குருதி வகைகளுக்குத் தட்டுப்பாடு அதிகரித்துள்ளது.

எனவே குருதிக் கொடை வழங்கத் தகுதியுடைய 18 தொடக்கம் 60 வயதுக்கு இடைப்பட்ட ஆண், பெண் இருபாலாரும் குருதி வங்கிக்கு வந்து குருதிக்கொடை செய்யுமாறும் கேட்கப்பட்டுள்ளது.

பிரதேசங்களில் குருதி வழங்க விரும்புமிடத்து அதற்கான ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டால் குறிப்பிட்ட இடத்துக்கு யாழ். போதனா வைத்தியசாலையின் குருதி வங்கிப் பிரிவினர் நேடியாக வந்து குருதியைச் சேகரிப்பர் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தற்போது வீதிவிபத்துச் சம்பவங்கள் அதிகரித்துள்ளதால் அதற்குச் சிகிச்சையின் போது குருதி ஏற்ற வேண்டிய தேவை அதிகரித்துள்ளது. இதேவேளை பிற மாவட்டங்களில் இருந்தும் புற்றுநோயாளர்கள் சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்தியசாலைக்கு வருவது அதிகரித்துள்ளது. குருதி ஏற்றிய பின்னரே சிகிச்சை செய்ய வேண்டிய நிலைமை உள்ளது. ஒரு நோயாளிக்கு 5 பைந் குருதி வரை ஏற்ற வேண்டியுள்ளது.

தவிர குருதிச் சோகையால் பாதிக்கப்பட்டு சிகிச்சைக்கு வருபவர்களின் எண்ணிக்கையும் அதிகரித்துள்ளது. அதனால் இவர்களுக்கு குருதி விநியோகிக்க வேண்டிய தேவை அதிகரித்துள்ளது.

எனவே குருதிதானம் செய்து குருதி தட்டுப்பாட்டை நிவர்த்தி செய்ய அனைவரும் முன்வர வேண் டும் என்று குருதி வங்கிப் பிரிவினர் கேட்டுக் கொண்டுள்ளனர். (ம-4)

## மீன்பிடி வள்ளங்களை இனங்காண ஸ்ரிக்கர்

வலி.தென் மேற்கு, ஜூலை 20

குடாநாட்டில் கடற்றொழிலில் ஈடுபடும் மீன்பிடி வள்ளங்களை இலகுவில் இனங்காணும் வகையில் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட இலக்கங்கள் குறிக்கப்பட்ட ஸ்ரிக்கர் வள்ளங்களில் ஒட்டும் நடைமுறை தற்பொழுது ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

குடாநாட்டில் பல இடங்களிலிருந்தும் பல நூற்றுக் கணக்கான மீன்பிடி வள்ளங்கள் ஆழ் கடலிலும் சிறு கடலிலும் மீன் பிடிப்பதற்கும் பயன்படுத்தப்பட்டு வருகின்றன. தொழிலில் ஈடுபடுத்தப்படும் வள்ளங்கள், காணாமல் போகும் சந்தர்ப்பங்களிலும் திருடப்படும் பொழுதும் மற்றும் சட்ட விரோதத் தொழில்களுக்குப் பயன்படுத்தப்படும் போதும் சம்பந்தப்பட்டவர்களால் வள்ளங்களை இலகுவில் இனங்காண முடியாத நிலை ஏற்படுகின்றது.

இதையடுத்து தற்பொழுது மீன்பிடிப்பதற்குப் பயன்படுத்தப்படும் வள்ளங்களுக்கு ஸ்ரிக்கர் ஒட்டும் நடைமுறை திணைக்களத்தின் அறிவுறுத்தலுக்கமைய அமுல்படுத்தப்பட்டு வருகின்றது.

கடற்றொழில் நீரியல் வளத்துறைத் திணைக்களத்தால் வழங்கப்பட்ட இலக்கங்கள் குறிக்கப்பட்ட ஆறு அங்குல அகலமும் இருபத்தி நான்கு அங்குல நீளமும் கொண்ட மஞ்சள் பேப்பரில் கறுப்பு நிறத்தில் எழுதப்பட்ட ஸ்ரிக்கர் வள்ளங்களில் ஒட்டப்பட்டு வருகின்றது. இதற்கான சகல ஒழுங்குகளையும் மீன்பிடி சங்கங்கள் மேற்கொண்டுள்ளன. (ம-115)

## நடமாடும் சேவைகள் மூலம் கடற்றொழில் கலன்கள் பதிவு

மண்டைதீவு பிரதேசத்தில் நடமாடும் சேவை மூலம் கடற்றொழில் கலன்களை பதிவு செய்யும் நடவடிக்கையை மேற்கொண்டு வருவதாக யாழ்.மாவட்ட கடற்றொழில் நீரியல் வளத்துறைத் திணைக்களத்தின் உதவிப் பணிப்பாளர் என்.கணேசமூர்த்தி தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது:- கடற்றொழில் கலன்கள் பதிவுகள் மந்த கதியில் நடைபெறுவதால் நடமாடும் சேவை மூலம் துரிதப்படுத்தப்பட்டுள்ளது. யாழ். மாவட்ட கடற்றொழில் கூட்டுறவு சம்மேளனம், மற்றும் யாழ். மாவட்ட கடற்றொழில் கூட்டுறவு சமாசமும் இணைந்து இந்த நடமாடும் சேவையில் ஈடுபட்டு வருகிறது.

யாழ். மாவட்டத்தில் இதுவரையில் பெரும் எண்ணிக்கையான படகுகள் பதிவுகளை மேற்கொள்ளவில்லை. பதிவுகளை மேற்கொள்ளாதவர்கள் மீது சட்ட நடவடிக்கைகள் எடுக்கப்படும். அத்துடன் பதிவுகள் மேற்கொண்டவர்களுக்கே எரிபொருள் மானியங்களும் வழங்கப்படும்.

நடமாடும் சேவையில் தற்போது ஈடுபட்டுள்ளதால் இவற்றில் இலகுவாக பதிய முடியும். இவற்றில் பதியத் தவறியவர்கள் யாழ். மாவட்டக் கடற்றொழில் நீரியல் வளத்துறை திணைக்களத்தில் தங்களது படகின் பதிவுகளை மேற்கொள்ள முடியும்.

யாழ். மாவட்டத்தில் இதுவரையில் 3ஆயிரம் படகுகளே பதிவு செய்யப்பட்டுள்ளன. இன்னும் சில நாள்களுக்குள் பதிவு செய்யாதவர்களுக்கு எதிர்வரும் காலத்தில் எரிபொருள் மானியங்கள் வழங்கப்படாது எனத் தெரிவித்தார். (ம-13)

## கருத்திட்டம் சமர்ப்பித்தும் அபிவிருத்தி இடம்பெறவில்லை

யாழ்ப்பாணம், ஜூலை 20

வடக்கின் பிரதேச அபிவிருத்திக்காக நுண் கருத்திட்டமாகவும் பெரிய கருத் திட்டமாகவும் அரசுக்கு பல முன்மொழிவுகளை சமர்ப்பித்து 10 மாதங்கள் கடந்து விட்டன. எனினும் இந்தக் கருத் திட்டங்களுக்கான எந்த விதமான அபிவிருத்திகளுக்கும் இங்கு இடம் பெறவில்லை.

இதனால் மக்களால் தெரிவு செய்யப்பட்ட நாம் பயனுள்ள எவற்றையும் முன்னெடுக்க முடியாத நிலையில் உள்ளோம்.

வலி. மேற்கு பிரதேச சபை உறுப்பினர் த.நடனேந்திரன் இவ்வாறு தெரிவித்திருந்தார்.

அராலி தெற்கு களவத்துறை விளையாட்டு கழகம் நடத்திய 65 ஆவது ஆண்டு ஆடி விழாவில் உரையாற்றும் போதே மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டது.

இந்த விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

கடந்த 10 மாதங்களில் அராலி, வேலணை கடற்பாதை அபிவிருத்தி, வடக்கு நவீன சிறுவர் வைத்தியசாலை, அராலி சர்வதேச விளையாட்டு திடல், சங்கானை புதிய நகர சபைக்கான முன்மொழிவு, சங்கானையில் இரு மாடி நவீன கட்டடம், வளுக்கையாற்றில் ஐங்கோண பிண எரிப்பகம் உள்ளிட்ட 14 இற்கும் மேற்பட்ட திட்டங்களை முன்வைத்து அபிவிருத்திக்கான நிதியை எதிர்பார்த்து உள்ளோம் என்றார்.

இந்த நிகழ்வில் உதவித் திட்டமிடல் பணிப்பாளர் எஸ்.சிவகுமார், பிரதிப் பணிப்பாளர் எஸ்.சிறிபவானந்தராஜா, சாவகச்சேரி நகர சபை உறுப்பினர் எஸ்.அலெக்சாண்டர், வலி.மேற்கு பிரதேச சபை உறுப்பினர்களான சி.பாலகிருஸ்ணன் உட்படப் பலர் கலந்து கொண்டனர்.(ம-50)

## நிகழ்வுகள் இன்று

### அதிபர்கள் கூட்டம்

தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலைகளின் அதிபர்களுக்கான பௌதிக தரவு திரட்டல் தொடர்பான கூட்டம் காலை 8.30 மணிக்கு சாவகச்சேரி இந்துக் கல்லூரி மண்டபத்தில் நடைபெறுமென வலயக் கல்விப் பணிப்பாளர் கு.பிறேமகாந்தன் அறிவித்துள்ளார். (ம-9)

### பரிசளிப்பு விழா

பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலையின் பரிசளிப்பு விழா காலை 9.30 மணிக்கு பாடசாலை மண்டபத்தில் நடைபெறவுள்ளது. இந்த நிகழ்வுக்கு பிரதம விருந்தினர்களாக தென்மராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் கே.பிறேமகாந்தனும் திருமதி ரஞ்சித மலர் பிறேமகாந்தனும் கலந்துகொள்வர். (ச-16)

### கண்காணிப்புக் குழுக் கூட்டம்

சுகாதாரத் திணைக்களத்தின் கீழ் இயங்கும் வைத்திய நிறுவனங்களுக்கும் மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களுக்குமான மாதாந்த மாவட்ட கண்காணிப்புக் குழுக் கூட்டம் காலை 9.30 மணிக்கு யாழ்.பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனை மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது. (ம-14-51)

### கருத்துரை நிகழ்வு

தென்மராட்சி கல்வி வலய நலன்புரி சங்கத்தின் ஏற்பாட்டில் ''நல்லதொரு குடும்பம்'' என்னும் கருத்துரை நிகழ்வு பிற்பகல் 2 மணிக்கு வலயக் கல்வி அலுவலக கேட்போர் கூடத்தில் நடைபெறும். யாழ்ப்பாணம் அகவொளி நிறுவகப் பணிப்பாளர் வண இராசநாயகம் அடிகளார் இந்த நிகழ்வில் கருத்துரை வழங்கவுள்ளார். (ம-9)

## கணவனும் மனைவியும் காயமடைந்து ஆஸ்பத்திரியில்


தென்மராட்சி, ஜூலை 20

வளவினுள் அத்துமீறி புகுந்தவர்கள் நடத்திய தாக்குதலில் கணவனும், மனைவியும் காயமடைந்தனர்.

இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் உசன் தெற்கில் இடம்பெற்றது.

இதே இடத்தைச் சேர்ந்த கிட்டினன் ராசுதன்(வயது 36) அவரது மனைவியான ராசுதன் ஜெயலட்சுமி (வயது 36) ஆகியோர் காயமடைந்த நிலையில் சாவகச்சேரி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

கொடிகாமம் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ம-9)



தென்மராட்சி வலயக் கல்வி அலுவலகத்தின் புதிய கட்டடத் திறப்பு விழா நேற்று இடம்பெற்றது. திறந்து வைக்கப்பட்ட புதிய கட்டடம். (ம-8)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அமைச்சர் பஸில் இந்தியத் தூதுவர்...

01↘ வைக்கவுள்ளனர். அதன் பின்னர் அவர்கள் யாழ். மாவட்ட செயலகத்துக்கு முன்பாக அமைக்கப்பட்டுள்ள பழைய பூங்கா கட்டத்தை மக்கள் பாவனைக்காகத் திறந்துவைக்கவுள்ளனர்.

தொடர்ந்து வடகடல் நிறுவனத்துக்கும், அச்சுவேலி கைத்தொழில் பேட்டைக்கும் செல்லவுள்ளனர். பிற்பகல் 2 மணியளவில் தெல்லிப்பழை வீமன்காமம் பாடசாலைக்கான மின்சார விநியோகத்தை ஆரம்பித்து வைக்கும் இவர்கள், கொல்லன் கலட்டி, மாவிட்டபுரம்,மாவிட்டபுரம் தெற்கு, தந்தை செல்வபுரம் ஆகிய பகுதிகளில் மக்கள் மீளக்குடியமர்வதுக்குரிய தற்காலிக கூடாரங்களையும் இவர்கள் வழங்கவுள்ளனர். (த-5)

## புலனாய்வுப் பிரிவினர்...

01↘ விக்கப்பட்டது.தன்னைச் சந்தான என்று பெயர் கூறி அறிமுகப்படுத்திய அந்த நபர், தான் வவுனியா பொலிஸ் பிரிவைச் சேர்ந்தவர் என்று கூறியுள்ளார்.

மருத்துவர் நிமலன் பயன்படுத்தும் கைத்தொலைபேசி இலக்கம் யாருடையது என்று அந்த நபர் கேட்டுள்ளார். அது தன்னுடையது என்பதை மருத்துவர் தெரிவித்தார். பின்னர் யாழ். போதனா வைத்தியசாலையில் பணியாற்றுகிறீரா? என்று கேட்க மருத்துவர் ஆம் என்று கூறியுள்ளார்.

அதன் பின்னர் தொலைபேசியில் பேசிய அந்த நபர்,

கடந்த மூன்று மாத்தினுள் வவுனியாவிலிருந்து விடுதலைப் புலிகள் பலர் உமது கைத்தொலைபேசியில் பல தடவை அழைப்பை மேற்கொண்டு கதைத்து வருகின்றனர். வைத்தியசாலை விடயங்களிலும் அதிகமாகத் தலையிடுகிறீர். எனவே அதிலிருந்து விலக வேண்டும். இல்லையேல் உமக்கு எதிராக வவுனியா நீதிமன்றில் வழக்குத் தொடருவேன். அதிலிருந்து விலகினால் மற்றைய விடயங்களைப் பெரிதுபடுத்தாமல் விடுகிறேன் என்று அச்சுறுத்தியுள்ளார்.

அவரது குற்றச்சாட்டுக்களை நிராகரித்த மருத்துவர், நீர் வேண்டுமானால் வவுனியா நீதிமன்றில் மட்டுமன்றி கொழும்பு நீதிமன்றிலும் வழக்கைத் தொடரும் என்று கூறினார். எனினும் அந்த நபர் அச்சுறுத்திவிட்டு தொடர்பைத் துண்டித்துவிட்டார்.

அவர் 0786366835 எனும் தொலைபேசி இலக்கத்திலிருந்து தனக்கு அழைப்பை மேற்கொண்டுள்ளார் என்று மருத்துவர் நிமலன் பொலிஸில் முறைப்பாடு செய்துள்ளார்.

இது தொடர்பாக யாழ். மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் ஸ்ரீ.குகனேசனிடம் தொடர்புகொண்டு கேட்டபோது, மருத்துவர் நிமலன் தனக்கு அச்சுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளதாகப் பொலிஸில் முறைப்பாடு செய்துள்ளதை உறுதிப்படுத்தினார். தாம் மேலதிக விசாரணையை மேற்கொண்டு வருவதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (த-4)

## நீதிபதி வீட்டின் மீது நேற்றிரவு..

01↘ மையில் கூடியபோது நீதிபதியின் வாசஸ்தலம் மீது கோம்பை வீசிய சம்பவத்துக்கு கடும் கண்டனம் தெரிவிக்கப்பட்டது. இந்தச் சம்பவம் தொடர்பாக பொலிஸாரின் கவனத்துக்கு கொண்டுவந்ததாக பருத்தித்துறை சட்டத்தரணிகள் சங்க வட்டாரங்கள் தெரிவித்தன.

தற்போது நீதிபதியின் வாசஸ்தலத்துக்கு மேலதிக பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது. (த-8)

## தனித்துப் போட்டியிட மஹிந்தவின்...

01↘ அறிவித்தது. வேட்பாளர் பட்டியலில் இடம் ஒதுக்குவதில் இணக்கம் ஏற்படத் தவறியதால், தனித்துப் போட்டியிட முடிவெடுத்த ரவூப் ஹக்கீம் அதுபற்றி ஜனாதிபதியிடம் தனது முடிவை அறிவித்து, ஆசி பெற்றதாகக் கொழும்பு ஆங்கில ஊடகம் ஒன்று செய்தி வெளியிட்டிருந்தது.

அப்போது, ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியில் இருந்து கொண்டு, சிறிலங்கா அரசுக்கு எதிராகப் பரப்புரை செய்யக் கூடாது. நீங்கள் தனித்துப் போட்டியிட்டாலும், நாம் கூட்டணியாக வெற்றிபெற முனைவோம் என்பதை நினைவில் கொள்ள வேண்டும் என்று ஜனாதிபதி கூறியதாகவும், அதற்கு ரவூப் ஹக்கீம் இணங்கியதாகவும் அந்த ஊடகம் தகவல் வெளியிட்டிருந்தது.

## யாழ். பல்கலையின் சர்வதேச மாநாடு...

01↘ வர்த்தகம் மற்றும் முகாமைத்துவம், கல்வி, சுகாதாரம் மற்றும் மருத்துவ அறிவியல், தகவல் அறிவியல் மற்றும் தொழில்நுட்பம், தூய அறிவியல், சமூக அறிவியல் ஆகிய துறைகளில் பல்வேறு நாடுகளைச் சேர்ந்த சுமார் 200க்கும் அதிகமான துறைசார் அறிஞர்கள் ஆய்வுக் கட்டுரைகளை இந்த மாநாட்டில் முன்வைக்கவுள்ளனர்.

தொடக்க நிகழ்வில் உயர் கல்வி அமைச்சர் எஸ்.பி.திஸநாயக்கவும் சிறப்பு விருந்தினராக இலங்கைக்கான இந்தியத் தூதுவர் அசோக் கே.காந்தாவும் கலந்து கொள்கின்றனர். களனி பல்கலைக்கழக துணை வேந்தர் பேராசிரியர் சரத் அமுனுகம அதிதி உரையாற்றுவார். (உ)

## புலிக்கொடி குறித்து விசாரணை...

01↘ மோட்டார் சைக்கிள்களில் வலம் வந்த மர்ம நபர்கள் தொடர்பில் உரிய விசாரணை நடத்தப்படும் என்று ஊடகத்துறை அமைச்சரும் அமைச்சரவையின் பேச்சாளருமான கெஹலிய ரம்புக்வெல தெரிவித்தார். (த)

## மன்னார் நீதிமன்றம் மீது நடத்தப்பட்ட தாக்கு....

01↘ களும் நேற்று முழுநாள் பணிப்புறக்கணிப்பில் ஈடுபட்டதுடன் ஆர்ப்பாட்டமும் செய்தனர்.

நீதிமன்றத்துக்கு எதிரான ஆர்ப்பாட்டம் மற்றும் தாக்குதலின் பின்னணியில் அமைச்சர் ஒருவர் செயற்பட்டுள்ளார் என்று ஊழியர்கள் கண்டித்தனர். இதனைக் கோடிட்டுக் காட்டும் வாசகங்கள் அடங்கிய அட்டைகளையும் அவர்கள் தமது போராட்டத்தில் தாங்கியிருந்தனர்.

"அமைச்சரே! ஆண்டவன் வேறு! நீ வேறு!", "அமைச்சரே! நீதிமன்றத் தீர்ப்பில் தலையிடாதே!", "அமைச்சரே! நீதிமன்றத்தின் முன் உன் காடையர்களை அவிழ்த்து விடாதே!" என்று எழுதப்பட்ட பதாகைகளை போராட்டத்தில் ஈடுபட்ட ஊழியர்கள் தாங்கியிருந்தனர்.

போராட்டத்தில் ஈடுபட்ட ஊழியர்கள் மற்றும் சட்டத்தரணிகளுக்கு ஆதரவாக வவுனியாவில் இருந்தும் சட்டத்தரணிகள் குழு ஒன்று மன்னாருக்கு வந்து போராட்டத்தில் கலந்துகொண்டது.

மன்னார் உப்புக் குளம் பகுதியைச் சேர்ந்த மக்கள் நேற்றுமுன்தினம் நீதிமன்றத்தின் முன்பாக ஆர்ப்பாட்டம் நடத்தியபோது நீதிமன்றத்தின் மீது கல்லெறிந்து நடத்திய தாக்குதலை அடுத்தே ஊழியர்களும் சட்டத்தரணிகளும் நேற்றுப் போராட்டத்தில் குதித்தனர்.

மன்னார், கோந்தைப்பிட்டி கடலில் ஜோசப்வாஸ் நகர் மீனவர்கள் மீன்பிடிப்பது தொடர்பாக நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டிருந்தது.

ஜோசப்வாஸ் நகர் மீனவர்களுக்கு மாற்று இடம் ஒன்று வழங்கப்படும் வரை அவர்களைக் கோந்துபிட்டியில் தொழில் செய்ய அனுமதிக்குமாறு நீதிமன்றம் உத்தரவிட்டிருந்தது. இதனை எதிர்த்தே உப்புக்குளம் பகுதி மக்கள் நேற்றுமுன்தினம் ஆர்ப்பாட்டம் நடத்தினர். இதன்போது மன்னார் நீதிமன்றத்தை நோக்கி கற்கள் வீசப்பட்டன. இதில் ஜன்னல் கண்ணாடிகள் சில நொருங்கின. அத்துடன் நீதிமன்றப் பணியாளர்கள் சிலர் காயமடைவதில் இருந்து நூலிழையில் தப்பினர்.

இவற்றைத் தொடர்ந்து பொலிஸார் கண்ணீர் புகைக் குண்டுகளை வீசியும் தடியடி நடத்தியும் ஆர்ப்பாட்டக்காரர்களை அங்கிருந்து அகற்றினர்.

இந்தப் போராட்டத்தின் பின்னணியில் அமைச்சர் ஒருவரே செயற்பட்டார் என்றும் அவரது தூண்டுதலின் பேரிலேயே நீதிமன்றம் மீது தாக்குதல் நடத்தப்பட்டது என்றும் சட்டத்தரணிகள் தெரிவித்தனர்.

இதேவேளை, மன்னாரில் ஏற்பட்ட பதற்றத்தைத் தொடர்ந்து உடனடியாக அங்கு விரைந்த அமைச்சர் ரிஷாத் பதியுதீன் நிலமையைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வர நடவடிக்கை எடுத்தார் என்றும் மீனவர்கள் தொடர்பான பிரச்சினையை ஆராய்ந்து தீர்க்க மன்னார் ஆயருடன் கலந்து பேசுவதற்கு முடிவு செய்யப்பட்டுள்ளதாகவும் அமைச்சரின் அலுவலகச் செய்திக் குறிப்பு ஒன்று தெரிவித்தது. (உ-12)

## மு.காவுடன் கிழக்கில் கூட்டாட்சி...

01↘ போட்டியிடுவது என்ற தீர்மானத்தில் இருந்து பின்னர் தனித்துப் போட்டியிடுவது என்ற தீர்மானத்தை மேற்கொண்ட கட்சி என்ற வகையில் இப்போது உடனடியாக கூட்டமைப்பின் இந்த அழைப்புப் பற்றி என்னால் எதுவும் கூற முடியாது எனக் குறிப்பிட்ட அமைச்சர் ஹக்கீம், அவ்வாறான ஒரு தேவை ஏற்படும் இடத்து அது பற்றிச் சிந்தித்து நல்ல முடிவை மேற்கொள்வோம் எனவும் கூறினார்.

இது குறித்து சுரேஷ் பிரேமச்சந்திரன் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

முஸ்லிம் காங்கிரஸ் கிழக்குத் தேர்தலில் மேற்கொண்ட இறுதித் தீர்மானம் மிக வரவேற்புக்குரியது. நாங்கள் மட்டுமல்ல முஸ்லிம் மக்களும் இதனை வரவேற்கிறார்கள். இந்த முடிவை அர்த்தமுள்ளதாக மாற்ற முஸ்லிம் காங்கிரஸ் முன்வரவேண்டும்.

மாகாண சபைத் தேர்தலில் முஸ்லிம் காங்கிரஸ் வெற்றி பெற்றால் அது அரசுடன் மீண்டும் கூட்டுச்சேரக்கூடாது. அப்படிச் சேர்வதாயின் இவ்வாறானதொரு முடிவை எடுத்ததில் பயனில்லாது போய்விடும்.

இந்த நேரத்தில் கூட்டமைப்பு மு.காவுக்கு பகிரங்க அழைப்பை விடுக்கிறது. தேர்தலில் இரு கட்சிகளும் வெற்றி பெறும் இடத்து கிழக்கில் கூட்டு ஆட்சி ஒன்றை அமைக்க தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தயாராக இருக்கிறது. அவ்வாறான ஒரு ஆட்சி அமையும்போது முதலமைச்சர் மற்றும் அமைச்சர்கள் தொடர்பில் நாம் எமக்குள்ளே பேசி ஒரு உடன்பாட்டுக்கு வரமுடியும். அத்துடன் இந்த கூட்டு தமிழ் முஸ்லிம் சமூகத்துக்கும் பெரும் விமோசனத்தையும் நன்மையையும் உண்டு பண்ணும் என்றார்.

கூட்டமைப்பின் இந்த அழைப்புக் குறித்து அமைச்சர் ஹக்கீம் குறிப்பிட்டதாவது:-

இந்தத் தேர்தலில் போட்டியிடும் எந்தக் கட்சியும் அறுதிப் பெரும்பான்மையுடன் வெற்றிபெற முடியாது என்ற நிலை இப்போது இருக்கிறது. அதனால் நாம் கூட்டமைப்பின் இந்த அழைப்புக் குறித்து இப்போது எதையும் கூறமுடியாது. தேர்தலின் பின்னரே அது பற்றி நாம் யோசிப்போம். நாம் இப்போது மத்திய அரசில் அங்கம் வகிக்கிறோம். அதனால் உடனடியாக [illegible] வெளியேற முடியாத நிலை உள்ளது. அதற்காக அரசு செய்வதற்கெல்லாம் தலையாட்டிக்கொண்டிருக்கவும் முடியாது. எனவே நாம் இது குறித்து சிந்தித்து ஒரு நல்ல முடிவை எடுப்போம் என்றார்.

இதேவேளை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் இந்த அழைப்புக் குறித்து கருத்து வெளியிட்ட கூட்டமைப்பின் செயலாளர் மாவை சேனாதிராசா, கிழக்கில் கூட்டு ஆட்சியை அமைப்பது தொடர்பில் நாங்கள் முஸ்லிம் காங்கிரஸுடன் பேசவுள்ளோம். அது பற்றி கூட்டமைப்புக்குள் இணக்கம் ஏற்பட்டுள்ளது. தேர்தலுக்கு முன்னர் கூட்டாட்சி பற்றி முஸ்லிம் காங்கிரஸுடன் பேசப்படும். அவ்வாறான ஒரு கூட்டாட்சி ஏற்பட்டால் அது தமிழ் முஸ்லிம் சமூகங்களுக்கு [illegible]நன்மைகளைக் கொண்டு வரும் என்றார். (த-5)

## முஸ்லிம்களை அடகு வைப்பதா?

01↘ தொடர்பிலும் நான் அமைச்சர்களிடம் தெளிவாகக் கூறிவிட்டேன். இணக்கப்பாடு என்ற போர்வையில் எனது சமூகத்தை எவரிடமும் அடகுவைக்க நான் தயாரில்லை.

இவ்வாறு குறிப்பிட்டார் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவரும், அமைச்சருமான ரவூப் ஹக்கீம்.

அவர் மேலும் கூறியவை வருமாறு:-

தனித்துப் போட்டியிடுவது தொடர்பான எங்களது தீர்மானத்தை நான் எங்களுடன் தேர்தல் பேச்சுகளில் ஈடுபட்ட அமைச்சர்களுக்கு அறிவித்தேன். இணக்கப்பாட்டுடன் இருதரப்புகளும் தொடர்ந்து செயற்படுவதென்றும் தீர்மானிக்கப்பட்டது. இந்த நிலையில், இது தெரியாதென்று ஜனாதிபதி கூறுவது பற்றி எனக்கு சரியான விவரமில்லை. என்ன இருந்தாலும் இணக்கப்பாடு என்ற போர்வையில் எனது சமூகத்தையும், கொள்கையையும் அடகுவைக்க நான் தயாரில்லை. அதை அவர்கள் புரிந்து கொள்ளவேண்டும் - என்றும் குறிப்பிட்டார் அமைச்சர் ரவூப் ஹக்கீம்.

## சட்ட விரோதமான ஆஸி. பயணத்தின்....

01↘ இலங்கைக்கு எதிராக மேற்படி விடயம் கையாளப்பட வாய்ப்பு உள்ளது என்று ஊடகத்துறை அமைச்சரும் அமைச்சரவைப் பேச்சாளருமான கெஹலிய ரம்புக்வெல தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

சட்டவிரோத ஆஸ்திரேலியப் பயணமானது திட்டமிட்ட சதியாகக் காணப்படுவதாக தகவல்கள் கிடைக்கப்பெற்றுள்ள நிலையில் தற்போது அவை தொடர்பில் விசாரணைகள் நடத்தப்பட்டு வருகின்றன. அத்துடன், இந்த சட்ட விரோத பயணத்தை தடுத்து நிறுத்துவதற்காக எம்மாலான அனைத்து நடவடிக்கைகளையும் முன்னெடுத்து வருகின்றோம்.

இதனை ஒரு பிரச்சினையாகப் பார்க்குமாறு ஆஸி. அரசிடம் நாம் கோரிக்கை விடுத்துள்ளோம்-என்றார். (த)

## தேர்தலின் பின் அரசுடன்...

01↘ அறிவித்திருந்தாலும், அந்தத் தீர்மானம் நேற்று மாறியிருக்கிறது என்று ஊடகத்துறை அமைச்சரும் அமைச்சரவைப் பேச்சாளருமான கெஹெலிய ரம்புக்வெல தெரிவித்தார். அமைச்சரவைத் தீர்மானங்களை அறிவிக்கும் வாராந்த ஊடகவியலாளர் மாநாட்டில் நேற்று உரையாற்றிய அமைச்சர் தெரிவித்ததாவது:-

'தேர்தல் காலங்களின் போது தங்களது பிரதேசத்தினதும் அந்தப் பிரதேச மக்களினதும் உரிமைகளைப் பாதுகாப்பதற்காக முன்வரும் அரசியல் கட்சிகள், பல்வேறு உடன்படிக்கைகளை மேற்கொண்டு அரசுடன் இணைந்து போட்டியிடுவது வழமை.

இருப்பினும் அரசுடன் இணைவதற்கு அந்தக் கட்சிகள் பல்வேறு நிபந்தனைகளை விதிக்கின்ற போதிலும் அரசுடன் இணைய வேண்டும் என்பதே ஸ்ரீலங்கா சுதந்திர கூட்டமைப்பு விதிக்கும் ஒரே நிபந்தனையாகும்.

அந்தவகையில், ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் ஆரம்பத்தில் அரசுடன் இணைந்து போட்டியிடத் தீர்மானித்திருந்த போதிலும் தற்போது, தேர்தலின் பின்னர் அரசுடன் இணைந்தே செயற்படுவது என்ற உடன்படிக்கையின் பிரகாரம் தனித்துப் போட்டியிடும் தீர்மானத்துக்கு வந்துள்ளது-என்றார். (த-2)

## கனேடிய நீதிமன்ற....

01↘ றம் மறுத்து விட்டது.கடந்த மாதம் 13ஆம் திகதி இதுபற்றிய தீர்ப்பைக் கனேடிய சமஸ்டி நீதிமன்றம் வெளியிட்டது. கொமடோர் குருபரன் போரின் இறுதிக் காலகட்டத்திலோ (2006-2009 வரை) அல்லது அதற்கு முன்னரோ போர் நடவடிக்கைப் பிரதேசத்தில் பணியாற்றியிருக்கவில்லை என்று இலங்கைக் கடற்படை வட்டாரங்கள் கூறியுள்ளன.

இலங்கைக் கடற்படையின் ஆழ்கடல் ரோந்து படகான எஸ்.எல்.என்.எஸ் ஜெயசாகரவில் 1980களில் இவர் ஒரு பதில் சப் லெப்டினன்டாகப் பணியாற்றியிருந்தார்.அவருடன் விடுதலைப் புலிகள் இணக்கப்பாட்டுக்கு வருவதைத் தடுப்பதற்காக, அவர் கொழும்புக்கு மாற்றப்பட்டார் என்றும் அந்த வட்டாரங்கள் கூறியுள்ளன.

இதற்கிடையே, போர்க்குற்றங்களில் ஈடுபட்ட கடற்படையில் பணியாற்றியதைக் காரணம் காட்டி அவரது அரசியல் தஞ்சக் கோரிக்கையை கனடா நிராகரித்துள்ளது, ஏற்றுக் கொள்ள முடியாத முடிவு என்று இலங்கை அரசின் உயர் அதிகாரி ஒருவர் கூறியுள்ளார்.

விடுதலைப் புலிகளின் கொடியின் கீழ் போரிட்ட நூற்றுக்கணக்கான முன்னாள் புலிகள் தற்போதும் கனடாவில் வசிக்கின்றனர் என்றும், 2009 மே மாதம் போர் முடிவுக்கு வந்த பின்னரும் அவர்களில் பலர் அங்கு சென்றுள்ளதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

கனடாவின் இந்த முடிவுக்கு சிறிலங்காவின் கொலைக் களங்கள் ஆவணப்படங்களும், ஐ.நா. நிபுணர் குழுவின் அறிக்கையுமே காரணம் என்றும் அந்த அதிகாரி குறிப்பிட்டுள்ளார்.

விடுதலைப்புலிகள் தோற்கடிக்கப்பட்ட சில வாரங்களில் - 2009 ஜூனில் இலங்கைக் கடற்படையில் இருந்து ஓய்வு பெற்ற கொமடோர் குருபரன், 2009 ஓகஸ்ட் 4ஆம் திகதி கனேடிய எல்லையை அடைத்திருந்தார். இவர் கனடாவில் அரசியல் தஞ்சம் கோரியது பற்றி இலங்கைக் கடற்டை அறிந்திருக்கவில்லை.

அவரது தஞ்சக் கோரிக்கையை நிராகரித்து சமஸ்டி நீதிமன்றம் வெளியிட்ட தீர்ப்பு அனைத்துலக ஊடகங்களில் வெளியான பின்னரே, இதுபற்றி இலங்கைக் கடற்படை அறிந்துள்ளது.கனடாவின் இந்த முடிவு இலங்கை அதிகாரிகளுக்கு அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன. (த)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முல்லை. மந்துவிலில் மக்கள் 28 ஆம் திகதி மீளக்குடியமர்வு

வவுனியா, ஜூலை 20

முல்லைத்தீவு மாவட்டத்தின் புதுக்குடியிருப்புப் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட மந்துவில் பகுதியைச் சேர்ந்த மக்கள் இம்மாதம் 28 ஆம் திகதி தமது சொந்த இடங்களில் மீளக்குடியமர்த்தப்படவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. ஆயினும் குறித்த பகுதியில் வெடிபொருள் அகற்றும் பணிகள் பூர்த்தியடைந்தமை தொடர்பான உறுதிக்கடிதம் கிடைத்த பின்னரே மீளக்குடியமர்த்தும் பணிகள் மேற்கொள்ளப்படவுள்ளதாக முல்லைத்தீவு மாவட்ட செயலக் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

இறுதிக்கட்ட போர் நடவடிக்கைகளின் போது தமது சொந்த இடங்களில் இருந்து இடம்பெயர்ந்த முல்லைத்தீவு மந்துவில் கிராம மக்கள் தற்போது ஆனந்தகுமாரசாமி, கதிர்காமர் நலன்புரி நிலையங்களில் தங்கியுள்ளனர். இந்த மக்களே தமது சொந்த இடங்களில் மீளக் குடியமர்த்தப்படவுள்ளனர் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. மீளக்குடியமர்வுக்கான ஆரம்பகட்ட நடவடிக்கைகள் தற்போது துரித கதியில் நடைபெற்று வருகின்றன.

கதிர்காமர் நலன்புரி நிலையத்திலுள்ள 13 குடும்பங்களைச் சேர்ந்த 374 பேரும் ஆனந்தகுமாரசாமி முகாமில் இருந்து 15 குடும்பங்களும் இவ்வாறு மீளக் குடியமர்த்தப்படவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இது தொடர்பாக முல்லைத்தீவு மாவட்ட செயலகத்துடன் தொடர்பு கொண்டு கேட்டபோது " முல்லைத்தீவு மந்துவில் பகுதியில் வெடிபொருள்கள் அனைத்தும் அகற்றப்பட்டு, அது வெடிபொருள் அச்சுறுத்தலற்ற பகுதியாக உள்ளது என்பதை உறுதிப்படுத்தி மிதி வெடி அகற்றும் நிறுவனத்தினர் கடிதம் எதனையும் இது வரை எமக்கு கையளிக்கவில்லை. குறித்த உறுதிமொழிக் கடிதம் கிடைத்தவுடன் மீளக்குடியமர்வுப் பணிகள் துரிதகதியில் மேற்கொள்ளப்படும்'' என்று தெரிவிக்கப்பட்டது.

கடந்த சில மாதங்களாக மந்துவில் பகுதியில் வெடிபொருள்களை அகற்றும் பணிகள் துரிதப்படுத்தப்பட்டிருந்தன. இறுதிப்போர் உக்கிரமாக நடைபெற்ற பகுதிகளில் ஒன்றாக மந்துவிலும் இருந்ததால் அந்தப் பகுதியில் வெடிபொருள்களை அகற்றும் பணிகள் ஏனைய இடங்களைப்போல சுலபமாக இருக்கவில்லை என்று வெடிபொருள்களை அகற்றும் பணியாளர்கள் தெரிவித்திருந்தனர்.

இதேவேளை, புதுக்குடியிருப்பு சிவநகர் பகுதியைச் சேர்ந்த உறவினர் வீடுகளில் அல்லது வெளியில் தங்கியவர்கள் சிவநகர்ப் பகுதியில் மீளக் குடியமர்த்துவதற்கான பதிவுகள் நாளை சனிக்கிழமை புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரியில் இடம்பெறவுள்ளன. எனவே குறித்த பகுதிகளில் மீளக்குடியமர விரும்புவோர் அன்றையதினம் காலை 9 மணியளவில் வருகைதந்து பதிவுகளை மேற்கொள்ளுமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. (ங-க-400)

## குடியமர்ந்த சிவநகர் மக்களுக்கு 20 ஆயிரம் ரூபா கொடுப்பனவு

புதுக்குடியிருப்பு, ஜூலை20

புதுக்குடியிருப்புப் பிரதேசத்தில் சிவநகர் கிராம உத்தியோகத்தர் பிரிவில் மீளக்குடியமர்த்தப்பட்ட குடும்பங்களுக்கு யு.என்.எச்.சி.ஆர் நிறுவனம் 20 ஆயிரம் ரூபாவுக்கான காசோலையைக் கடந்த செவ்வாய்க்கிழமை வழங்கியுள்ளது. இந்தக் காசோலையைப் பணமாக மாற்றுவதற்கு வசதியாக கிராம உத்தியோகத்தர் காரியாலயத்தில் ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

சிவநகர் கிராமத்திலிருந்து இடம்பெயர்ந்து செட்டிக்குளம் மனிக்பாம் முகாமில் தங்கவைக்கப்பட்டிருந்த குடும்பங்களைச் சேர்ந்த 372 அங்கத்தவர்கள் எந்தவிதமான அடிப்படை வசதிகளும் மேற்கொள்ளப்படாத நிலையில் கடந்த சனிக்கிழமை மீளக்குடியமர்த்தப்பட்டனர்.

இவர்களின் வீடுகள் முற்றாக அழிந்த நிலையில் தற்காலிக வீடுகளை அமைப்பதில் இவர்கள் ஈடுபட்டுள்ளார்கள். கூரைத்தகடு, தறப்பாள் போன்ற பொருள்கள் இல்லாதவர்களுக்கு யு.என்.எச்.சி.ஆர், டி.ஆர்.சி ஆகிய நிறுவனங்கள் கூரைத்தகடு, தறப்பாள், அலவாங்கு, மண்வெட்டி, வாளி ஆகிய பல பொருள்களையும் வழங்கி வருகின்றன.

மீளக்குடியமர்த்தப்பட்ட 141 குடும்பங்களில் கடந்த செவ்வாய்க்கிழமை 129 குடும்பங்களுக்கு யு.என்.எச்.சி.ஆர் நிறுவனத்தினால் 20 ஆயிரம் ரூபாவுக்கான காசோலை வழங்கப்பட்டுள்ளது. இந்தக் காசோலையைப் பணமாக மாற்றுவதற்கான சகல ஒழுங்குகளும் கிராம உத்தியோகத்தர் அலுவலகத்தில் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இதேவேளை அங்குள்ள கிணறுகளை இறைத்துத் துப்புரவு செய்வதில் சோ.ஆ நிறுவனம் ஈடுபட்டுள்ளது. புதுக்குடியிருப்பு பிரதேச சபையினர் ஆயிரம் லீற்றர் கொண்ட எட்டு நீர்த்தாங்கிகளைத் தேவையான இடங்களில் வைத்துக் குடிதண்ணீரை வழங்கி வருகின்றனர். (க-115)

# மன்னாரில் நீதித்துறைக்கு விடுக்கப்பட்ட அச்சுறுத்தலைக் கண்டித்து சட்டத்தரணிகள் நடத்திய ஆர்ப்பாட்டங்களின் பதிவுகள்

மன்னாரில்...





கிளிநொச்சியில்...









வவுனியாவில்...







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 14 ஆம் வருட நினைவு நாள் கவிதாஞ்சலி




தோற்றம் 05. 05. 1968 | மறைவு 25. 07. 1998 | தோற்றம் 11. 04. 1950

## அ. இந்துமதி கி. சிவகெங்கா

### திதி: துதியை

கடந்தன ஆண்டுகள் பதின்னான்கு இருப்பினும்
அகலாதவை தங்கள் நினைவுகள் என்றும் எம்மனதில்
நேற்று மாதிரி இருக்கின்றன நடந்தவை எல்லாம்
பிறந்த நாள் முதல் வளர்ந்த நாள்வரை நீங்கள்
வாழ்ந்த வாழ்க்கையை நினைக்கின்றோம் என்றும்
மறந்திட முடியுமா இலகுவில் இவை அனைத்தையும்
எதைத்தான் சொல்வது எப்படித்தான் சொல்வது
நெஞ்சமதில் நிறைந்து நிற்கும் நின் நினைவுகள்

என்றும் உங்கள் நினைவில் வாழும்
ஆ. கி. அருணகிரிராசாவும்
குடும்பத்தினரும்

கம்பர்மலை, வல்வெட்டித்துறை.

(20504)(45- 6 -7)

## சான்றிதழ் வழங்கும் நிகழ்வு

யாழ்ப்பாணம்,ஜூலை20

வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியின் தொழில்நுட்ப நிறுவன 26 ஆவது ஆண்டு நிறைவு விழாவும் சான்றிதழ் வழங்கும் வைபவமும் நாளை முற்பகல் 9.30 மணிக்கு தொழில்நுட்ப நிறுவன பிரதான மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

நிறுவனப் பணிப்பாளர் என்.ஆர்.ஜி. கூல் தலைமையில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வில் பிரதம விருந்தினர்களாக நுகேகொட திறந்த பல்கலைக் கழக பேராசிரியர் எஸ்.அன்பழகன் அரியதுரை மற்றும் சிரேஸ்ட வைத்திய நிபுணர் டாக்டர் யூலியட் எஸ்.அரியதுரை ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர். (16)

## 60 ஆவது பிறந்தநாள் வாழ்த்துக்கள்



இராசரட்ணம் இரத்தினகோபால் தனது 60 ஆவது பிறந்தநாளை இன்று (20.07.2012) தலையாளியில் உள்ள தனது இல்லத்தில் கொண்டாடுகின்றார். அவரை சகல சௌபாக்கியங்களுடனும் நலமுடனும் வாழ வாழ்த்துபவர்கள்

இ.கோபிராம்(மகன்)
தலையாளி
வைரவர் கோயிலடி,யாழ்ப்பாணம்.

மனைவி, மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்

(20510)(5-6-7)

### விற்பனைக்கு

புத்தம் புதிய யமகா Fazer NP XV..... தொடர் இலக்கம் கொண்ட மோட்டார் சைக்கிள் விற்பனைக்கு உண்டு.

(20507)(5-6-7) தொடர்பு: 077 025 9877

### வீடு வாடகைக்கு தேவை

வவுனியாவில் அமைந்துள்ள எமது நிறுவனத்திற்கு வீடு வாடகைக்குத் தேவை.

தொடர்பு: 077 367 8103 (20632)(5-6-7)

# மரண அறிவித்தல்

## பூதப்பிள்ளை சின்னத்துரை

(ஓய்வு பெற்ற பொலிஸ் உத்தியோகத்தர்)



காங்கேசன்துறையைப் பிறப்பிடமாகவும், உரும்பிராய் வடக்கை வசிப்பிடமாகவும் கொண்ட பூதப்பிள்ளை சின்னத்துரை (16.07.2012) திங்கட்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பூதப்பிள்ளை - சின்னம்மா தம்பதியரின் மகனும், காலஞ்சென்றவர்களான வைத்தி - நாகமுத்து தம்பதியரின் மருமகனும், அம்மணியின் அன்புக் கணவரும், துசிதரன் (கனடா), ஜெசிந்தா (ஜேர்மனி), சதீஸ்தரன் (மாவட்ட நீதிபதி, திருகோணமலை), ஜெர்மிளா (லண்டன்) ஆகியோரின் பாசமிகு தந்தையும், முரளிதரன் (ஜேர்மனி), மனோராணி (கனடா), சிறீகரன் (லண்டன்), மிஷாந்தி ஆகியோரின் மாமனும், சாரூபன், சதுர்சன், சாருகா, ருதுனையா, ஸ்வரமியா, ஜெனுஸ், ஹரிசன், ஹரிஸ்ணா, சுஜனிகா ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (20.07.2012) வெள்ளிக்கிழமை பி.ப. 4 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக இருளன் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**தகவல்:**
சதீஸ்தரன் (மகன்),
உரும்பிராய் வடக்கு, உரும்பிராய்.

(20505)(6-7-8)

# மரண அறிவித்தல்

## ஆறுமுகம் பூமணி



இணுவிலைப் பிறப்பிடமாகவும், சித்தங்கேணியை வசிப்பிடமாகவும் கொண்ட ஆறுமுகம் - பூமணி (17.07.2012) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற ஆறுமுகத்தின் அன்புமனைவியும், காலஞ்சென்றவர்களான செல்லர் - தங்கமுத்து தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான கணபதி - நாகம்மா தம்பதியரின் மருமகளும், சின்னமணி, இராசமணி, காலஞ்சென்ற கந்தசாமி மற்றும் சிவபாதம், சற்குணம், பொன்ராசா (Germany), வீரசிங்கம், மனோன் மணி(Germany), ஆனந்தராசா (France) ஆகியோரின் அன்புச் சகோதரியும், நவரத்தினராசா (Swiss), கலாவதி, காலஞ்சென்ற புஸ்பலீலா மற்றும் கமலா, யோகராசா (Swiss), காலஞ்சென்ற பாக்கியராசா மற்றும் புஸ்பராசா (Germany), காலஞ்சென்ற வனிதா ஆகியோரின் பாசமிகு தாயும், ராஜசுலோசனா (Swiss), காலஞ்சென்ற பொன்னுத்துரை மற்றும் பரமசிவம் (London), வனிதா (Swiss), உசாநந்தினி (Germany) ஆகியோரின் அன்புமாமியும், உதயவடிவேல், துரேஷ்கா (Canada), கிருபராசா - ரோகினி, (Swiss), வசந்தராசன் - சாருகா (Canada), தயசீலன் - ஜான்சி, சந்திரிகா, சுரேந்திரன் - துவாரகா, பாக்கிராஜ் (Swiss), சோபியா, திவ்வியா (Swiss), நியூஷா (Swiss), சாதுசன் (Swiss), வனிஜா (Germany), உதர்சியா (Germany) ஆகியோரின் அன்புப்பேர்த்தியும், கிருஷிகா, சாதுரியா, ஆர்வலன் (Canada), விகல்யன்(Canada), வேதியா, யாதவி, (Canada), சயன் (Swiss), அபிலேஷ் ஆகியோரின் பாசமிகு பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (20.07.2012) வெள்ளிக்கிழமை பிற்பகல் 2.00 மணிக்கு நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக விளாவெளி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கீரிமலை வீதி, சித்தங்கேணி.

**தகவல்:** குடும்பத்தினர்

(20619)(6-7-8)


## ANDRA வின் ஆதரவில் மாபெரும் இசைநிகழ்ச்சி



யாழ். குடா நாட்டில் முதன் முறையாக

உலகத் தமிழர்களை தன் செல்லக்குரலால் வியக்கவைத்த

விஜய்TV ஜீனியர் சுப்பர் சிங்கர் புகழ் பாடகி

அல்கா அஜித்துடன்

மற்றும்பல முன்னணிக் கலைஞர்கள் கலந்து கலக்கும்

அல்காவின் ஆனந்த ராகங்கள்

அனுசரணை

Aircom E Travels & Tours

WESTERN UNION Money Master

ரிக்கற் கிடைக்கும் இடங்கள்
ANDRA டிஜிற்றல் இமேஜ் 0750404144
எயார்கொம் ரவல்ஸ் 021 2219113
த போன் சொப் - நெல்லியடி 021 226...

நாளை மாலை 6.00 மணிக்கு
வடமராட்சி நெல்லியடி மத்திய மகாவித்தியாலய கலையரங்கில்

இம்மாதம் 22ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மாலை 3.00 மணிக்கு

திருமண அழைப்பிதழ்கள்



ANDRA WEDDING CARDS

Tel : 0212228929, 0217200000
Mob : 0776622981, 0777481696

திருமண அழைப்பிதழ்களின் சாம்ராட்சியம்

நுழைவுச்சீட்டுக்கள் : 200/= 300/= 500/= மற்றும் VIP

Event Manegement : CEYLON ART CREATION

(C/1575)(6-7-8)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அம்பாறை தேர்தல் களத்தில் 16 கட்சிகள், 19 சுயேட்சைகள்

## நேற்று வேட்பு மனு தாக்கல்

அம்பாறை,ஜூலை 20

கிழக்கு மாகாண சபை தேர்தலுக்காக அம்பாறை மாவட்டத்தில் போட்டியிடுவதற்காக 16 அரசியல் கட்சிகள் மற்றும் 19 சுயேச்சை குழுக்கள் சார்பாக 35 வேட்பு மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டன.

இவற்றில் ஒரு வேட்பு மனு நிராகரிக்கப்பட்டது என்று அம்பாறை மாவட்ட தேர்தல் தெரிவத்தாட்சி அதிகாரியும் மாவட்ட செயலாளருமான நீல் டி அல்விஸ் தெரிவித்தார்.

ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டமைப்பு, ஐக்கிய தேசியக் கட்சி, ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ், இலங்கை தமிழரசுக் கட்சி, மக்கள் விடுதலை முன்னணி, ஜன செத்த பெரமுன, ஐக்கிய சோசலிசக் கட்சி, அகில இலங்கை தமிழர் கூட்டணி, முஸ்லிம் விடுதலை முன்னணி, எக்ஸத் லங்கா மகா சமாஜ, ஈழவர் ஜனநாயக முன்னணி, ஸ்ரீலங்கா தொழிலாளர் கட்சி, சமாஜ்வாதி ஜனதா பெரமுன, றுஹுணு ஜனதா கட்சி, தேசப்பிரேமி ஜாதிக பெரமுன, எக்ஸத் லங்கா பொதுசனக் கட்சி ஆகிய கட்சிகள் மற்றும் 18 சுயேச்சை குழுக்களின் வேட்பு மனுக்களே ஏற்றுக் கொள்ளப்பட்டன என்று அவர் கூறினார்.

ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டமைப்பு சார்பில் அமைச்சர் சுசில் பிரேம் ஜயந்த, ஐக்கிய தேசியக் கட்சியின் சார்பில் கிழக்கு மாகாண சபையின் முன்னாள் எதிர்க்கட்சி தலைவரும், கட்சியின் தேசிய அமைப்பாளருமான தயா கமகே, ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிர ஸின் சார்பில் அக்கட்சியின் செயலாளர் ஹஸன் அலி, இலங்கை தமிழரசுக் கட்சி யின் சார்பில் அக் கட்சியின் செயலாளர் மாவை சேனாதி ராசா, மக்கள் விடுதலை முன்னணியின் சார்பில் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் வஸந்த பிய திஸ்ஸ ஆகியோர் வேட்பு மனுக்களைத் தாக்கல் செய்தனர்.

கடந்த 2008ஆம் ஆண்டு நடைபெற்ற கிழக்கு மாகாண சபைத் தேர்தலில் அம்பாறை மாவட்டத்தில் 11 அரசியல் கட்சிகளும், 22 சுயேச்சை குழுக்களும் போட்டியிட்டமை குறிப்பிடத்தக்கது.

(ச)

# நாகதம்பிரான் ஆலய பொங்கல்

எருவில்,ஜூலை20

மட்டக்களப்பு, களுதாவளை வட்டிக் குளம் அத்தியடி ஸ்ரீ நாகதம்பிரான் ஆலய வருடாந்த பொங்கல் விழா நாளைமறுதினம் ஞயிற்றுக்கிழமை ம நடைபெறும்.

களுதாவளை திருநீற்றுக் கேணி சிவசக்தி முருகன் ஆலய பிரதம குரு சிவஸ்ரீ சபா நாயகன் குருக்களால் அபிசேக ஆராதனை ஆரம்பிக்கப்பட்டு பொங்கல் படைப்பு இடம்பெறும். (ச-31)

## கிழக்கு மாகாண சபையை

# தமிழரும் முஸ்லிம்களும் சேர்ந்து கைப்பற்றுவோம்

## சம்பந்தன் அழைப்பு

திருகோணமலை,ஜூலை20

**கிழக்கு மாகாணசபையை தமிழ், முஸ்லிம் மக்கள் இணைந்து கைப்பற்ற வேண்டும் என்று தமிழ ரசுக் கட்சித் தலைவர் இரா.சம்பந்தன் கோரிக்கை விடுத்துள்ளார்.**



கிழக்கு மாகாணசபைத் தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைபில் போட்டியிடும் திருகோணமலை மாவட்ட வேட்பாளர்கள் மற்றும் கட்சியின் ஆதரவாளர்களுடனான கலந்துரையாடல் கட்சியின் தலைவர் இரா.சம்பந்தன் தலைமையில் அவருடைய இல்லத்தில் நேற்று முன்தினம் புதன்கிழமை மாலை 4 மணிக்கு நடைபெற்றது. இந்தக் கலந்துரையாடலிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:-

இது ஒரு மாகாண சபைத் தேர்தல். நாடாளுமன்றத் தேர்தல் அல்ல. மாகாண ஆட்சி அதிகாரம் மத்திய அரசியலில் குவிந்து இருக்க முடியாது. மாகாணங்களுக்கு அதிகாரம் பகிர்ந்தளிக்கப்பட வேண்டும். இறைமையுள்ள மக்களுக்கு ஆட்சி அதிகாரம் இறைமையின் அடிப்படையில் சுயநிர்ணய உரிமையை ஓரளவு பெற்றுக்கொள்ள முடியும்.

1986ஆம் ஆண்டு அப்போதைய அரசால் 13ஆவது திருத்தச் சட்டம் கொண்டு வரப்பட்டது. இந்திய-இலங்கை ஒப்பந்தத்தின்படி வடக்கு, கிழக்கு தமிழ் பேசும் மக்களின் சரித்திர ரீதியான வாழ்விடமாகும். வடக்கு, கிழக்கு இணைப்பும், உறுதிப்படுத்தப்பட்டு இருக்கின்றது.

2002ஆம்ஆண்டுஒஸ்லோ பிரகடனத்தில் சுயநிர்ணய உரிமைபற்றி ஆராய்வதற்கு இணக்கம் காணப்பட்டமை முக்கிய விடயமாகும். ஆனால் தற்போது இருக்கும் மாகாண சபையின் அதிகாரங்களை நாங்கள் ஏற்றுக்கொள்ளவில்லை. கல்வி,பொருளாதாரம், காணி உட்பட பல அதிகாரங்கள் அதிகரிக்கப்பட வேண்டும். போராட்டத்தை முதலில் ஆரம்பித்தவர்கள் தமிழர்கள். தொடர்ந்தும் போராட்டத்தை நடத்தியவர்கள் தமிழர்கள். இந்த அரசு தமிழ், முஸ்லிம் மக்களுடைய உரிமைகளைப் பெற்றுத் தரப்போவதில்லை. முஸ்லிம் காங்கிரஸ் தனித்துப் போட்டியிடுவதால் அரசின் பலம் குறைவடைந்துள்ளது.

சிங்கள மக்களின் வாக்குகளும் முழுமையாக ஆளும் கட்சிக்குக் கிடைக்கப்போவதில்லை. 18 சுயேச்சைக் குழுக்கள் போட்டியிடுகின்றன. எனவே நாங்கள் ஆட்சியைக் கைப்பற்றுவதன் ஊடாக மாகாணசபைக்குரிய பண ஒதுக்கீடு, வெளிநாட்டின் உதவிகளை கணிசமான அளவு பெற்றுக்கொள்வதுடன் பல திருத்தங்களை ஏற்படுத்த முடியும். மாகாண அதிகாரத்தைக் கைப்பற்றுவோமாக இருந்தால் அது எமது மக்களுக்குப் பலமாக இருக்கும்.

தமிழ்பேசும் மக்களின் அபிலாஷைகளுக்கு பாதிப்பு ஏற்படும் விதத்தில் முஸ்லிம் காங்கிரஸ் செயற்பட்டால் அதனைச் சுட்டிக்காட்டும் உரிமை எமக்கு இருக்கின்றது.

எமது பிரச்சினைகள் தீர்ந்துவிடவில்லை. மக்களுடைய இழப்புக்கள் சாதாரணமானவை அல்ல. மீண்டும் ஓர் ஆயுதப் போராட்டம் வேண்டாம். மாகாண ஆட்சி முறையில் அக்கறை உண்டு என்பதை இந்தத் தேர்தல் மூலம் காட்டவேண்டும் - என்றார்

இந்தக் கூட்டத்தில் மாவட்டத்தின் முதன்மை வேட்பாளர் சி.தண்டாயுதபாணி, முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் கே.துரைரெட்ண சிங்கம் உட்பட பலர் உரை யாற்றியாற்றினர்.

(ச-40)

# முஸ்லிம்களின் உரிமையைப் பாதுகாக்க கூட்டமைப்புடன் இணைந்தது சரியானதே

## ஹஸனலி தமிழ்பேசும் மக்களை காப்பாற்றி விட்டார் யுனெஸ்கோ அட்டாளைச்சேனை கிளை வேண்டுகோள்

மட்டக்களப்பு,ஜூலை20

முஸ்லிம்களின் இருப்பு, உரிமை பாதுகாக்கப்பட வேண்டுமானால், முஸ்லிம்கள் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் இணைந்து பயணிக்கவேண்டிய கட்டாய தேவை ஏற்பட்டுள்ளது.

இது காலத்தின் தேவை. மிகச் சரியான முடிவும் கூட இது நாம் எமது சந்ததியினருக்காக இணைந்து செயற்படத் தான் வேண்டும். பட்டம் - பதவிகளுக்காக இன்னும் பேரினவாத சக்திகளுடன் ஒட்டிக் கொண்டிருக்க முடியாது.

முஸ்லிம்கள் சிங்களவர்களுடன் நடத்தி வந்த இணக்க அரசியல் தோல்வியுற்று வருகின்றது என்று சர்வதேச யுனெஸ்கோவின் அட்டாளைச்சேனை கிளை வேண்டுகோள் விடுத்துள்ளது.

இதுதொடர்பில் குறித்த கிளை வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

மு.கா. தலைமை, அரசுடன் இணைந்து கிழக்கு மாகாணத் தேர்தலில் போட்டியிடுவதற்காக எடுக்கப்பட்ட தீர்மானத்துக்கு எதிராகத் தன்னந்தனியாக நின்று தலைவர் ஹக்கீமை எதிர்த்து வாக்குவாதம் புரிந்து மு.கா. தனித்துப் போட்டியிடுவதற்காக அயராது பாடுபட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஹஸனலியைப் பாராட்டுகின்றோம்.

கிழக்கு மாகாண முஸ்லிம்கள் மட்டுமல்லாது, நாட்டின் முழு முஸ்லிம்களையும் அடிமையாக்க எடுக்கப்பட்ட தீர்மானத்துக்கு எதிராகத் துணிச்சலாக தனது செயலாளர் நாயகம் பதவியைத் தூக்கி எறிவதற்கு முன்வந்த ஹஸனலியை மறைந்த தலைவர் அஷ்ரப்பின் இடத்தில் வைத்துப் பார்க்கின்றோம்.

முஸ்லிம்களை மட்டுமல்லாது, ஒட்டுமொத்த தமிழ் இனத்தையும் சேர்த்து தமிழ் பேசும் மக்களையே ஹஸனலி காப்பாற்றியுள்ளார். ஹஸனலியின் தீர்க்க தரிசனம், முற்போக்குச் சிந்தனைகள் சர்வதேசத்துக்கு நல்லதொரு செய்தியை தமிழ் பேசும் மக்களின் சார்பாக கிழக்குத் தேர்தல் சொல்லப்போகின்றது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு விரும்பக் கூடிய நல்லதொரு தீர்மானமாக ஹஸனலியின் தீர்மானம் பார்க்கப்படுகின்றது. அத்துடன், தமிழ் அரசியலுடன் ஒன்று கலக்கக்கூடிய தமிழ், முஸ்லிம் மக்களின் ஒற்றுமைக்காகச் செயற்படக்கூடிய ஒரு தலைவராக தமிழ் மக்களாலும், முஸ்லிம் மக்களாலும் ஹஸனலி பார்க்கப்படுகின்றார்.

கிழக்குத் தேர்தல் முடிந்த கையோடு கூட்டமைப்புடன் மு.கா. இணைந்து ஆட்சி அமைப்பதற்காக மீண்டும் ஹஸனலி பாடுபடவேண்டும். உரத்துக் குரல் கொடுக்க வேண்டும்; தமிழ் - முஸ்லிம் உறவைப் பலப்படுத்த வேண்டும்.

பட்டம் பதவிகளுக்கு அப்பால் சமுதாய சிந்தனையும், தூரநோக்குச் சிந்தனையும் வேண்டும். அந்த வகையில் மு.கா. தலைமைத்துவமே பின்வாங்கிய போது ஹஸனலி மட்டும் விடாப்பிடியாக நின்று தமிழ் பேசும் சமுதாயத்திற்குப் [illegible] தெரிவிக்கப்பட்டுள்ளது.(ச)

# மருதமுனையில் 4 பேர் போட்டி; வெற்றி யாருக்கு?

மருதமுனை,ஜூலை20


கிழக்கு மாகாண சபைத் தேர்தலில் மருதமுனை பிரதேசத்திலிருந்து நால்வர் களமிறங்கியுள்ளனர்.

முஸ்லிம் காங்கிரஸ் சார்பாக இருவரும், தேசிய காங்கிரஸ் சார்பாக ஒருவரும், ஐ.தே.க. சார்பாக ஒரு வருமே தேர்தல் களத்தில் குதித்துள்ளனர்.

மு.கா. சார்பாக முன்னாள் தே.கா. மாகாணசபை உறுப்பினர் துல்கர் நயீமும், கல்முனை மாநகரசபை உறுப்பினர் அமீரும் போட்டியிடுகின்றனர். தே.காங். சார்பாக தொழிலதிபர் ஜே.எம்.சுபைர் போட்டியிடுகின்றார். ஐ.தே.க. சார்பாக சுவீஸ் சித்திக் போட்டியிடுகின்றார்.

தேசிய காங்கிரஸின் முன்னாள் மாகாண சபை உறுப்பினரான துல்கர் நயீம், மு.காவில் இணைவது தொடர்பில் நேற்றுமுன்தினம் அதிரடியாக நாடாளுமன்ற உறுப்பினர் ஹரீஸ் மற்றும் முன்னாள் மாகாணசபை உறுப்பினர் ஏ.எம்.ஜெமீல் ஆகியோரைச் சந்தித்துப் பேச்சு நடத்தினார். இதன் அடிப்படையிலேயே அவர் மு.கா. தலைவரின் அனுமதியோடு வேட்பாளராகக் களமிறக்கப்பட்டுள்ளார்.

கல்முனை மாநகர சபை மு.கா. உறுப்பினரான அமீர், மு.கா.தலைவரின் பணிப்புக்கு இணங்க களமிறங்கியுள்ளதாகக் கட்சி வட்டாரங்கள் தெரிவித்தன. (ச-சி)



[illegible]ஸ்வரத்தில் ஆடிப்பூரத் திருவிழாவின் 4 ஆம் நாளான கடந்த [illegible]க்கிழமை அலங்கரிக்கப்பட்ட மயில் வாகனத்தில் கோமாரியம்மன் வீதியுலா வருகிறார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சட்டவிரோத ஆள்கடத்தல் தீவிர விசாரணை ஆரம்பம்

கொழும்பு,ஜூலை 20

சட்டவிரோத ஆள்கடத்தல் நடவடிக்கைகள் குறித்துத் தீவிர விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் அறிவித்துள்ளனர். அண்மைக்காலமாகச் சட்டவிரோத ஆள்கடத்தல் நடவடிக்கைகள் இலங்கையில் அதிகரித்துள்ளதை அடுத்து இந்த விசாரணை கள் துரிதப்படுத்தப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

சட்டவிரோத ஆள்கடத்தல் நடவடிக்கைகளின் பின்னணியில் சர்வதேச சக்திகள் இயங்குகின்றனவா என்பது தொடர்பில் புலனாய்வுப் பிரிவினர் விசாரணை நடத்தி வருவதாகக் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த ஆண்டில் இதுவரையில் சட்டவிரோதமான முறையில் ஆஸ்திரேலியாவுக்குச் செல்ல முற்பட்ட 510 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவர்களில் இருபது பேர் அரச ஊழியர்கள்எனவும், கைது செய்யப்பட்டவர்களில் பெரும்பாலானவர்கள் தமிழர்கள் எனவும் விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

**இந்த ஆண்டில் இதுவரையில் சட்டவிரோதமான முறையில் ஆஸ்திரேலியாவுக்குச் செல்ல முற்பட்ட 510 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.**

மீன்பிடிப் படகுகளைப் பயன்படுத்தியே அநேக மானவர்கள் இவ்வாறு ஆஸ்திரேலியா நோக்கிப் பயணம் செய்ய முயற்சிப்பதாகக் குறிப்பிடப்படுகிறது.

குறிப்பாக நீர்கொழும்பு, திருகோணமலை, மட்டக்களப்பு ஆகிய இடங்களில் இருந்தே சட்டவிரோதமாக இவர்கள் ஆஸ்திரேலியா நோக்கிப் பயணிப்பதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது. (த)

## 79200 பேருக்கு உதவிப் பணம்

நாடுமுழுவதிலும் உள்ள சிரேஷ்ட பிரஜைகள் 79200 பேருக்கு உதவிப்பணம் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக சமூக சேவைகள் அமைச்சர் பீலிக்ஸ் பெரேரா நேற்றுநாடாளுமன்றத்தில் தெரிவித்தார்.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ நிதி அமைச்சர் என்ற வகையில் நாடாளுமன்றத்திற்கு சமர்ப்பித்த 2012ஆண் டுக்கான வரவு செலவு அறிக்கையின் படி 70 வயதைத் தாண்டிய சிரேஷ்ட பிரஜை களுக்கு மாதாந்தம் 1000 ரூபா உதவிப்பணம் வழங்குவதற்குச் சமூக சேவைகள் அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளது.

மற்றும் வயது முதிர்ந்தவர் அவர்களது வாழ்க்கையை கொண்டு நடத்துவதற்கு இவ்வாறன பல சலுகைகளை மஹிந்த சிந்தனை வேலைத்திட்டத்தின் கீழ் செயல்படுத்தப் படுகின்றமை பாராட்டத் தக்கது என்று நாடாளுமன்ற உறுப்பினர் சாந்த பண்டார நாடாளுமன்றத்தில் சபை ஒத்தி வைப்பு பிரேரணையின் போது தெரிவித்தார்.

நாடுமுழுவதிலுமள்ள பிர தேச செயலக மட்டத்தில் ஒரு பிரதேச செயலகப்பிரிவில் 34 பேர்வீதம் தேர்ந்தெடுத்து அவர் களுக்கு 3000ரூபா வீதம் வழங்குவதற்கும் அவர்களுக்கு வீடு கட்டுவதற்கு நிதி உதவிகளை வழங்குவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகச் சமூக சேவைகள் அமைச்சர் மேலும் தெரிவித்தார். (த)

## ரூ.21 மில்லியனுடன் ஒருவர் விமான நிலையத்தில் கைது

கொழும்பு,ஜூலை 20

21 மில்லியன் ரூபா வெளிநாட்டு பணத்துடன் கட்டுநாயக்க விமான நிலைய சுங்க அதிகாரிகளால் சந்தேகநபர் ஒருவர் நேற்றுக் காலை கைது செய்யப்பட்டுள்ளார்.

ஜி- 9506 என்ற விமானத்தில் சார்ஜா நோக்கிப் பயணிக்கவிருந்த வர்த்தகர் ஒருவர் இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்.

குறித்த நபரின் பயணப் பொதியைச் சுங்க அதிகாரிகள் சோதனை செய்தபோது அதில் அதிக வெளிநாட்டு பணம் இருந்தமை கண்டுபிடிக்கப்பட்டது. இதில் அமெ ரிக்க டொலர், யுரோ மற்றும் குவைத் தினார் என்பன பயணப் பொதியில் இருந்துள்ளன.

கைது செய்யப்பட்டவரிடம் விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகச் சுங்க அதிகாரிகள் குறிப்பிட்டனர். (த)


யாழில்
சகலவிதமான
பிறிண்டிங் வேலைகளையும்
4 கலர் பிறிண்டிங்
மிகவிரைவாக
உயர்தொழில்நுட்பத்தில்
நவீன முறையில் செய்திட
...ம்பு டிஜிற்றல் இமேஜ்
கே.கே. எஸ் வீதி, யாழ்.
0771974875
விசிட்டிங்காட், சான்றிதழ், அழைப்பிதழ், லேட்டபாட்.


## சேவை நலன் பாராட்டு



### திரு.கனகசபை தர்மரட்ணம்

திரு. கனகசபை தர்மரட்ணம் கடந்த முப்பத்தாறு வருடகாலமாக எமது வைத்தியசாலையின் தாதிய உத்தியோகத்தராகவும் எமது சங்கத்தின் முன்னைநாள் தலைவராகவும் கடமையாற்றி இன்று (20.07.2012) தனது சேவையில் இருந்து ஓய்வு பெறும் திரு.கனகசபை தர்மரட்ணம் அவர்களை சீரும் சிறப்பும் பெற்றுப் பல்லாண்டு காலம் நோய் நொடியின்றி வாழ எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

தாதிய உத்தியோகத்தர், கூட்டுறவு நலன்புரிசங்கம்
போதனாவைத்தியசாலை, யாழ்ப்பாணம்.

(20517)(15-14)

## துயர்பகிர்கின்றோம்



எமது நண்பர்களான அ.கங்காதரன், அ.இராஜேந்திரன், அ.பிரபாகரன் ஆகி யோரின் அன்புத்தாயார்

### தங்கேஸ்வரி அருளானந்தன்

அவர்களின் மறைவால் துயருற்றிருக்கும் குடும்பத்தாரின் துயரில் நாமும் கலந்து கொள்கின்றோம்.

யாழ். அத்தியடி நண்பர்கள்

(சி/1593)(14.3)

## 31 ஆம் நாள் நினைவுடன்

| தோற்றம் | மறைவு |
|---|---|
| 01 * 04 * 1938 | 20 * 06 * 2012 |



### திருமதி சீதேவிப்பிள்ளை சின்னத்தம்பி (நெடுந்தீவு)

எம் வாழ்வில் இருக்கும் காலம் மட்டும் தாயவளே!
என்றும் எம் மனதில் கடவுள் கண்ணீருடன் கை கூப்பி நிற்கிறோம்.

சி.கேதீஸ்வரன் (மகன்)
(கொமர்ஷல் வங்கி சாவகச்சேரி)
திருமதி கே.விஜயகுமாரி (ஆசிரியை)
(யாழ்/கொக்குவில் இந்து ஆரம்ப பாடசாலை)
திருமதி செல்வநேசன் கேதீஸ்வரி (சந்திரா)
செ.தர்மினி, கே.குகேசன், கே.ஜேகீசன்
"தாயகம் இல்லம்"
56/40 ஆசாட் ஒழுங்கை
மானிப்பாய் வீதி
யாழ்ப்பாணம்

T.P- 0758058431 / 0757629245

(20527)(3.14)

## பூப்புனித நீராட்டு விழா அழைப்பு

### மரியரத்தினம் பேர்ணடெற்

இடம் : "குளோறியா வாசம்"
டாக்டர் சுப்பிரமணியம் வீதி, சுன்னாகம்
காலம் : 22.07.2012 காலை 10.00 மணி

நிகழும் ஆடித்திங்கள் 07 ஆம் நாள் [22.07.2012] எமது செல்வப்புதல்வி மரியரத்தினம் பேர்ண டெற் அவர்களுக்கு பூப்புனித நீராட்டு விழா நடத்த பெற்றோராகிய நாம் நிச்சயித்துள்ளோம்.

அத்தருணம் உற்றார், உறவினர், நண்பர்கள், அயலவர்கள் அனைவரும் வருகை தந்து இந்நிகழ்வை சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

Best Wishes



Mr.&Mrs. Mariaratham
02, RUE JEAN MACE
APT - 64, ESC - D
86000, POITIERS
FRANCE
0033 668180154,
0033 5532 14064
0094 776415094

தங்கள் நல்வரவை நாடும்:
திரு திருமதி மரியரத்தினம்
வண.பிதா அற்புதராசா (O.M.I)

## அகவை இருபத்து மூன்றில் ஆறாத் துயரத்துடன்



| தோற்றம் | மறைவு |
|---|---|
| 20 * 07 * 1989 | 01 * 07 * 2012 |

### அமரர் தவபாலன் கிரிதரன்

2012.07.20

ஆயிரம் கனவுகள் சுமந்தோம் அன்று
ஆறாத் துயரம் சுமக்கின்றோம் இன்று
அமரகாவியமே கபிலா!
அகவை இருபத்து மூன்று தன்னில்
அருகில் நீ இல்லையே
தேடுகின்றோம் ஈரவிழிகளுடன்

01.07.2012 அன்று அமரத்துவம் அடைந்த தவபாலன் கிரிதரன் அவர்கள் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு உயிருக்காகப் போராடிய வேளையில் மிகுந்த சிரமத்தின் மத்தியிலும் அர்ப்பணிப்புடன் சேவை யாற்றிய யாழ்.போதனா வைத்தியசாலையின் மருத்துவநிபுணர்கள், மருத்துவர்கள், தாதியர், ஊழியர்கள் மற் றும் உடனிருந்து உதவிய நண்பர்கள் அனைவருக்கும் அன்னா ரின் பிறந்த தினத்தை முன்னிட்டு விநாயகர் சனசமூக நிலையத்தில் நாளை (21.07.2012) சனிக்கிழமை இரத்ததான முகாமை நடத்தவுள்ள கொழும்பு பல்கலைக்கழக கணினி விஞ்ஞானப் பிரிவு மாண வர்களுக்கும் இரத்ததானம் வழங்கவுள்ள நண்பர்களுக்கும் எமது மனங் கனிந்த நன்றி களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

துவாளி வீதி,
இணைபாளைச் சேற்கு,
உரும்பிராய்

இ.தவானந்தன்
குடும்பத்தினர்

(சி/1582)(5.6.3)

## மரண அறிவித்தல்

### கார்த்திகேசு திருவிளங்கம்



தம்பாலை, இடைக்காட்டைப் பிறப்பிடமாகவும், தும்பளை, பருத்தித்துறையை வசிப்பிடமாகவும் கொண்ட காத்திகேசு திருவிளங்கம் (இளைப்பாறிய /கிளை முகாமையாளர் ப.நோ.கூ.ச. தம்பாலை, அச்சுவேலி) நேற்று (19.07.2012) வியாழக்கிழமைகாலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கார்த்திகேசு- வள்ளியம்மை தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம் -தெய்வானை (தும்பளை), தம்பதியரின் மருமகனும், காலஞ்சென்ற பாக்கியலட்சுமியின் (இளைப்பாறிய தாதிய உத்தியோகத்தர், இனுவில் மக்லட் வைத்தியசாலை) அன்புக் கணவரும், சிவநேசன் (திட்டமிடல் பிரிவு வடமராட்சி வலயக்கல்வி அலுவலகம்), காலஞ்சென்ற வசந்தி (விஜி) ஆகியோரின் அருமைத் தந்தையும், சரோஜாவின் (ஆயுள்வேத மத்திய மருந்தகம், ஆத்தியடி, பருத்தித்துறை) அன்பு மாமனும், பவித்திரனின் அருமைப்பேரனும் காலஞ்சென்றவர்களான திருமதி பொன்னம்மா வைத்திலிங்கம் (தம்பாலை), திருமதி வியாளம்மா இராசையா (தம்பாலை), திருமதி முத்தம்மா இராசரத்தினம் (தம்பாலை), சுப்பிரமணியம் (தம்பாலை), ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் சாத்திரியார் ஒழுங்கை தும்பளை, பருத்தித்துறையிலுள்ள இல்லத்தில் இன்று (20.07.2012) வெள்ளிக்கிழமை பிற்பகல் 3 மணியளவில் நடைபெற்று பூதவுடல் கோரியடி மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

சாத்திரியார் ஒழுங்கை
தும்பளை,
பருத்தித்துறை.

தகவல்:
குடும்பத்தினர்.

(20532)(3)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்



# அமைதியான போராட்டத்தை அசிங்கப்படுத்தும் முயற்சி

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் போராளிகள் அழித்து ஒழிக்கப்பட்டு விட்டார்கள். அவர்களின் அடையாளங்களே வெளியில் தெரியாதபடி மண்ணோடு மண்ணாகப் புதைக்கப்பட்டு விட்டன. போராடி மடிந்தவர்களின் புதை குழிகளும் கூட இருந்த இடம் தெரியாமல் தகர்த்து தரைமட்டமாக்கப்பட்டு விட்டன. அரசின் அறிவிப்புகளும் முப்படைகளின் செயற்பாடுகளும் இதைத்தான்- இப்படித்தான் பறைசாற்றிக் கொண்டிருக்கின்றன.

ஆனால் போர் முடிந்து மூன்று வருடங்கள் உருண்டோடி விட்ட பின்னரும் போரினால் பாதிக்கப்பட்டு விட்ட மக்கள் மெதுவாக எழுந்து மீண்டும் தம் வாழ்வியலைச் சீர்படுத்திக்கொள்ள முயன்று கொண்டிருக்கும் வேளையில் அம்மக்களின் காணிகளை அபகரிப்பதிலும் ஆக்கிரமித்துக் கொள்வதிலும் அரசும்- ஆயுதப்படையினரும் மும்முரமாக இறங்கியிருப்பது அவர்களை வேதனை கொள்ளச் செய்துள்ளது. மனிதாபிமானப் போரை நடத்தி தமிழ் மக்களை மீட்டு விட்டதாகக் கூறிக் கொள்ளும் அரசும்- படைகளும் அந்த மக்களின் வேதனைகளைப் புரிந்து கொண்டு- அவர்களின் துன்பங்களைத் துடைத்தெறிவதற்கான வழிகளை துரிதப்படுத்துவதற்குப் பதிலாக வெந்த புண்ணில் வேல் பாய்ச்சுவது போன்ற நடவடிக்கைகளில் இறங்கியிருப்பது நியாயமில்லை. தர்மத்துக்கும் அடுக்காது. அதனால்தான் அவர்கள் ஆர்ப்பாட்டங்களிலும் பேரணிகளிலும் ஈடுபடுகிறார்கள்.

இந்த நிலைமையில் அந்த மக்கள் பெரும்பாடுபட்டு மறந்து போக முயன்று கொண்டிருக்கும் கடந்தகால நிகழ்வுகளை மீண்டும் நினைவுறுத்துவது போல் சம்பவங்கள் நடைபெறுவது கவலையளிப்பது மட்டுமல்ல, கண்டிக்கத்தக்கதுமாகும்.

சில நாள்களுக்கு முன்புதான் தெல்லிப்பழை துர்க்கை அம்மன் கோயிலுக்கு அருகில் நடந்த ஆர்ப்பாட்டத்தைக் குழப்பிவிட முயற்சி நடந்தது. ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டு திரும்பிய மக்கள் மோட்டார் சைக்கிள்களில் வந்தவர்களால் வழிமறித்துத் தாக்கப்பட்டார்கள். போதாக் கொடுமைக்கு அவர்கள் மீது கழிவு எண்ணெய் தெளித்த இழி செயலும் இடம்பெற்றது.

இப்பொழுது நெல்லியடி பஸ் நிலையத்தில் இடம் பெற்ற கவனவீர்ப்புப் போராட்டத்தின்போது இரு மோட்டார் சைக்கிள்களில் வந்தவர்கள் அரசு அழித்து ஒழித்து விட்டதாகக் கூறிக்கொள்ளும் தமிழீழ விடுதலைப் புலிகளின் சின்னம் பொறிக்கப்பட்ட புலிக்கொடியை உயர்த்திப் பிடித்துக் காட்டிக்கொண்டு வலம் வந்துள்ளார்கள். இதனைப் பொலிஸாரும் ரசித்துப் பார்த்திருக்கிறார்கள். அதன் பின்பே விஷமிகள் ஓடி மறைந்துள்ளனர்.

கடந்த மே மாதம் ஐ.தே. கட்சியும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் இணைந்து நடத்திய மே தின விழாவின் போதும் இவ்வாறு மோட்டார் சைக்கிளில் வந்த விஷமிகள் புலிக் கொடியை உயர்த்திக்காட்டி விட்டு ஓடிமறைந்திருந்தார்கள். இது உண்மையில் யார் செய்த 'சாகஸமாக' இருந்தாலும் கண்டிக்கத்தக்க செயலே.

ஆர்ப்பாட்டப் பேரணியைக் குழப்புவதற்காக இராணுவப் புலனாய்வுப் பிரிவினர் இவ்வாறு செய்வதாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் கண்டித்து வருகின்றனர். புலனாய்வுப் பிரிவினர் இதனை நிச்சயம் மறுப்பார்கள் என்பது தெரிந்த விஷயமே. ஏனென்றால் இதனை நிரூபிப்பதற்கான ஆதாரம் எதுவும் இல்லை. கூட்டமைப்புக்குள் இருப்பவர்களே அல்லது அவர்களுக்கு எதிரானவர்களே இவ்வாறு செய்கிறார்கள் என்று சில ஊடகங்கள் பரப்புரை செய்வதும் நடக்கலாம்.

தமிழீழ புலிப்படையின் கொடியை அமைதியாக நடத்தப்படும் ஆர்ப்பாட்டத்தின் போது அங்கே மோட்டார் சைக்கிள்களில் அடாத்தாக நுழைந்து உயர்த்திப் பிடித்து காட்டிக்கொண்டு ஓடித் தப்புவதென்பது அது யார் செய்திருந்தாலும் கோழைத்தனமானதொரு கோமாளிச் செயல்தான். ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்ட மக்களை திகில் கொள்ளச் செய்வது- அதை விரும்பாத மக்கள் அவர்களை மடக்கிப் பிடிக்க அல்லது தாக்குதல் நடத்த முற்படின் அதனால் ஏற்படக் கூடிய கலவரத்தைத் தமக்குச் சாதகமாகப் பயன்படுத்திக்கொள்வது, அத்துடன் இனிமேலும் நடக்கக் கூடிய ஆர்ப்பாட்டங்களில் மக்கள் பெரும் எடுப்பில் கலந்து கொள்ள அஞ்சும் வகையில் நிலைமைகளை மோசமாக்கிவிடுவது, இவை போன்றவை தான் இந்த விஷமிகளின் நோக்கமாக இருக்கலாம்.

அரசின் நடவடிக்கைகளால் பாதிக்கப்படும் போது தம் எதிர்ப்புக்களை- குறைகளை அரசுக்கு எடுத்துக் கூறி நிவாரணம் பெறுவதற்கு பலவழிகளிலும் முயன்று பார்த்து பயன் ஏற்படாத நிலையில்தான் பகிரங்கமாகவும் ஒன்று திரண்டும் மக்கள் அமைதியான முறையில் ஆர்ப்பாட்டங்களைச் செய்கிறார்கள். ஜனநாயக நாடுகளில் மிகச் சாதாரணமாக ஏற்றுக் கொள்ளப்பட்ட ஒரு நடைமுறை இது. அதன் மூலமாவது ஆட்சியாளரின் கவனம் தம் பக்கம் திரும்பி குறைகள் நிவர்த்தி செய்யப்படமாட்டாதா என்பதே அந்த மக்களின் நோக்கம். அதனை விஷமத்தனத்தினால் தடுத்து நிறுத்த எவரும் முயலக் கூடாது. இம்மாதிரிச் சம்பவங்கள் தொடர்ந்தும் நடைபெறாமல் தடுக்க வேண்டியது அதிகாரிகளின் கடமை.

# பனை மர கணக்கெடுப்புப் பணி மதிப்பீட்டுத் திணைக்களத்திடம்

யாழ்ப்பாணம், ஜூலை 20

யாழ்.மாவட்டத்தில் உள்ள பனை மரங்களின் எண்ணிக்கைகளைக் கணக்கிடுவதற்கான பணிகள் மதிப்பீட்டுத் திணைக்களத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன என்று பனை அபிவிருத்திச் சபைத் தலைவர் பசுபதி சீவரத்தினம் தெரிவித்தார்.

**யாழ். மாவட்டத்தில் அண்ணளவாக 35 லட்சம் வரையான பனைகள் உள்ளன. இலங்கை முழுவதும் அண்ணளவாக 11 மில்லியன் பனைகள் உள்ளன.**

கடந்த காலங்களில் இடம் பெற்ற போர் காரணமாகவும் பல் வேறுபட்ட காரணங்களாலும் பனை மரங்கள் அழிக்கப்பட்டுள்ளதுடன் பெரும்பாலான மரங்கள் சேதமடைந்தும் உள்ளன. இதனால் பனைகளின் எண்ணிக்கைகளை கணக்கிட முடியவில்லை.

தற்போது மதிப்பீட்டுத் திணைக்களத்தால் ஒவ்வொரு பிரதேச செயலர் பிரிவு ரீதியாகவும் அறிவுறுத்தல் விடப்பட்டுள்ளன. இவர்கள் தங்களது பிரதேச செயலகங்களுக்கு உட்பட்ட பனைகளின் எண்ணிக்கைகளை கணக்கிட்டு மதிப்பீட்டு திணைக்களத்திடம் ஒப்படைக்க வேண்டும்.

யாழ். மாவட்டத்தில் அண்ணளவாக 35 லட்சம் வரையான பனைகள் உள்ளன. இலங்கை முழுவதும் அண்ணளவாக 11 மில்லியன் பனைகள் இருக்கும் என்று மதிப்பீடு செய்யப்படுகிறது.

சரியான தகவல்களை பிரதேச செயலகங்கள் மூலமாக மதிப்பீட்டுத் திணைக்களம் பெறமுடியும். அழிக்கப்பட்ட பனைகளுக்கு பதிலாக புதிய நாற்றுப் பனைகள் நடப்பட்டுள்ளன என்று அவர் மேலும் தெரிவித்தார். (ம-13)

## வலி.தென்மேற்கு பிரதேச சபைக்கு சட்ட ஆலோசகர்

வலி. தென்மேற்கு பிரதேச சபைக்கு சட்ட ஆலோசகராக சட்டத்தரணி இ.வசந்தசேனன் நியமிக்கப்பட்டுள்ளார். இதற்கான தீர்மானம் பிரதேச சபையின் மாதாந்தக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டுள்ளது.

பிரதேச சபையின் மாதாந்தக் கூட்டம் அ.ஜெபநேசன் தலைமையில் சபை மண்டபத்தில் நடைபெற்றது.

பிரதேச சபையின் அனுமதியின்றிக் கட்டப்படும் கட்டடங்கள் உட்பட சபையின் சட்ட திட்டங்களுக்கு மாறாகச் செயற்படும் அனைத்து விடயங்களையும் கையாள்வதற்கு சட்ட ஆலோசகர் ஒருவர் தேவைப்படுவதால் சட்டத்தரணி இ.வசந்தசேனனை சட்ட ஆலோசகராக நியமிப்பதென்று இந்தக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது. (ம-115)

## பொதுசன தொடர்பு அலுவலரிடம் சேவையைப் பெறுவது எவ்வாறு?

### தெருக்கூத்தை ரசித்தனர் மக்கள்

யாழ்ப்பாணம், ஜூலை 20

உள்ளூராட்சி சபைகளில் உள்ள பொறுப்பு வாய்ந்த அதிகாரியான பொதுசன தொடர்பு அலுவலரிடம் இருந்து மக்கள் எவ்வாறு பயனுள்ள சேவைகளைப் பெறலாம் என்ற தொனிப் பொருளில் வேலணையில் 3 பிரதேசங்களில் 'தெருக் கூத்து' இடம்பெற்றது.

சுழிபுரம் - காவேரி கலாமன்றத்தால் வண. ரி.எஸ்.யோசுவா அடிகளாரின் நெறியாள்கையில் பொதுசன தொடர்பு அதிகாரியை மக்கள் பயன்படுத்தல் எனும் தொனிப் பொருளில் தெருக்கூத்து இடம்பெற்றது.

பெருந்திரளான மக்கள் ஒன்று கூடி இந்த நிகழ்வை பார்த்ததுடன் பொதுசன தொடர்பு அதிகாரியை தாங்கள் சந்தித்து பிரச்சினையை தீர்த்துக் கொள்ளலாம் என்ற அடிப்படையில் மக்கள் கருத்து வெளியிட்டனர். இந்த தெருக்கூத்துக்கு மோ.திவாகர் இணைப்பாளராகச் செயற்பட்டார்.

எம்.குகதாஸ், பி.உதயசந்திரன், எஸ்.ரதீஷ்வரன், எஸ்.பிரியா, ரி.தயாராணி, ரி.கலை வாணி, எஸ்.உதயசாந்தினி, எம்.சுகிர்தா ஆகியோர் நடித்தனர்.

விரைவில் ஏனைய சபைகளிலும் இந்தத் தெருக்கூத்து நடத்தப்படவுள்ளது என்று தெரிவிக்கப்பட்டது. (ம-41)

## வெளிநாட்டு தொழிற் பயிற்சி வள நிலையங்கள்

யாழ்ப்பாணம், ஜூலை 20

யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்னார் உட்பட 22 மாவட்டங்களில் வெளிநாட்டு தொழில் பயிற்சி வள நிலையங்கள் அமைக்கப்படவுள்ளன.

வெளிநாட்டு வேலைவாய்ப்பை பெற்றுச் செல்வோருக்கு வினைத்திறனான தொழில் பயிற்சிகளை வழங்கவென மாவட்ட மட்டத்தில் வடக்கில் 4 மாவட்டங்கள் உட்பட 22 வள நிலையங்கள் அமைக்கப்படவுள்ளன.

வெளிநாடுகளில் வேலை வாய்ப்பு பெற்றுச் செல்லும் ஆண்-பெண்களுக்காகவே இந்த வள நிலையங்கள் அமைக்கப்படவுள்ளன. முதற்கட்டமாக தங்காலையிலும் இரத்தினபுரியிலும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்பட்டது. (ம-50)

## ஆர்ப்பாட்டத்துக்கு இடைக்காலத் தடை விளக்கம் கோருகிறது மேல் நீதிமன்றம்

யாழ்ப்பாணம், ஜூலை 20

இராணுவத்தினரால் மேற்கொள்ளப்படும் நில அபகரிப்புக்கு எதிராக யாழ்.பஸ் நிலையம் முன்பாக நடத்தவிருந்த ஆர்ப்பாட்டத்துக்கு இடைக்காலத் தடை விதித்த யாழ். நீதிமன்றின் தீர்ப்பை மீளாய்வு செய்து ரத்துச் செய்யுமாறு கோரிய வழக்குத் தொடர்பில் சட்டமா அதிபரிடமும் யாழ். பொலிஸ் நிலைய தலைமைப் பொறுப்பதிகாரியிடமும் விளக்கம் கேட்டு அறிவித்தல் அனுப்ப யாழ். மேல் நீதிமன்றம் கடந்த 17 ஆம் திகதி உத்தரவிட்டுள்ளது.

யாழ். மேல் நீதிமன்றில் கடந்த 10 ஆம் திகதி தாக்கல் செய்யப்பட்ட இந்த வழக்கு மேல் நீதிமன்ற நீதிபதி ஜே.விஸ்வநாதன் முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் செயலாளர் செ.கஜேந்திரன் சார்பில் சட்டத்தரணிகளான கு.குருபரன், கே.சுகாஸ், வி.மணிவண்ணன் ஆகியோர் இந்த வழக்கைத் தாக்கல் செய்திருந்தனர்.

ஆர்ப்பாட்டம் நடத்துவது தொடர்பான ஏற்பாட்டாளர்களின் நியாயங்களைச் சட்டத்தரணிகள் மன்றில் எடுத்துக்கூறியிருந்தனர். வழக்கில் பிரதிவாதிகளாக சட்டமா அதிபர் மற்றும் யாழ். பொலிஸ் நிலைய தலைமைப் பொறுப்பதிகாரி சமன் சிகேரா ஆகியோர் குறிப்பிடப்பட்டனர்.

அதனைப் பரிசீலித்த நீதிவான் சம்பந்தப்பட்ட இருவருக்கும் அறிவித்தல் அனுப்ப உத்தரவிட்டு இந்த வழக்கை எதிர்வரும் 8ஆம் திகதிக்கு ஒத்திவைத்தார்.

கடந்த 8ஆம் திகதி இந்த ஆர்ப்பாட்டம் நடத்தவிருந்த வேளை யாழ். பொலிஸார், யாழ். நீதிமன்றினூடாக ஆர்ப்பாட்டத்தை நிறுத்துவதற்கான இடைக்காலத் தடை உத்தரவு பெற்று ஆர்ப்பாட்டத்தை நிறுத்தினர் என்பது குறிப்பிடத்தக்கது.(த-10-4)

## சுன்னாகத்தில் நாளை காகில்ஸ் திறப்பு

காகில்ஸ் பூட் சிற்றியின் 193 ஆவது விற்பனை நிலையம் சுன்னாகத்தில் திறந்து வைக்கப்படவுள்ளது.

அன்றாட வாழ்க்கைத் தேவைக்கான அனைத்துப் பொருள்களையும், இலகுவான முறையில் பெற்றுக் கொள்ளக் கூடிய விற்பனை நிலையமாகத் திகழும் காகில்ஸ் பூட்சிற்றி இலங்கையின் சகல மாவட்டங்களிலும் 192 விற்பனை நிலையங்கள் ஊடாக சிறந்த நுகர்வோர் சேவையை வழங்கி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

இதற்கமைய நாளை சனிக்கிழமை முற்பகல் 9.30 மணிக்கு இல.91 கே.கே.எஸ்.வீதி, சுன்னாகம் எனும் முகவரியில் தனது 193 ஆவது விற்பனை நிலையத்தைத் திறந்து வைக்கவுள்ளது. (ம-14)

## சர்ச்சையை ஏற்படுத்திய காளையைப் பார்க்க ஆர்வம்

வலி வடக்கு, ஜூலை 20

இந்து மக்களிடையே பெரும் சர்ச்சையை உருவாக்கிய காளை மாட்டை பார்வையிடுவதில் பொது மக்கள் நகுலேஸ்வரம் ஆலயத்தில் பெருமளவில் முண்டியடித்ததைக் காணக் கூடியதாக இருந்தது.

கடந்த சில மாதங்களுக்கு முன்னர் விற்பனை செய்யப்பட்ட காளை மாட்டை கொள்வனவு செய்த வியாபாரி அதனை இறைச்சிக்காக வெட்ட விளம்பரம் செய்த நிலையில் நீதிமன்றத்தை நாடி காளை மாடு வியாபாரியிடம் இருந்து மீட்கப்பட்டு கீரிமலை நகுலேஸ்வரம் ஆலயத்தில் ஒப்படைக்கப்பட்டது.

குறிப்பிட்ட காளை மாடு கீரிமலை நகுலேஸ்வரத்தில் வளர்க்கப்பட்டு வரும் நிலையில் ஆடி அமாவாசைக்கு வந்த பொது மக்கள் பலரும் இந்த மாட்டைப் பார்வையிடுவதிலும் அதிக அக்கறை காட்டினர். (ம-86)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாந்தை மேற்கில் கடத்தப்பட்ட இளம் பெண் பொலிஸாரால் மீட்பு

## இரு இளைஞர்கள் கைது

மன்னார், ஜூலை 20

இளைஞர்கள் இருவரால் கடத்திச் செல்லப்பட்ட 22 வயதான இளம் பெண் ஒருவர் பொலிஸாரால் மீட்கப்பட்டு அவரது பெற்றோரிடத்தில் ஒப்படைக்கப்பட்டார்.

மாந்தைமேற்குப் பிரதேச செயலர் பிரிவைச் சேர்ந்த இத்திக்குளம், ஆண்டாங்குளம் என்ற கிராமத்தைச் சேர்ந்த மேற்படி யுவதி காலை 9 மணியளவில் மோட்டார் சைக்கிளில் தமது அலுவலகத்தை நோக்கிச் சென்று கொண்டிருந்தார். அப்போது டொல்பின் ரக வாகனத்தில் வந்து அவரை இடைமறித்த இரண்டு இளைஞர்கள் தாம் வந்த வாகனத்தில் அவரைப் பலாத்காரமாக ஏற்றிச் சென்றனர்.

பெண் கடத்தப்பட்ட சம்பவத்தை நேரில் கண்டவர்கள் பொலிஸ் அவசர தொலைபேசியுடன் தொடர்பை ஏற்படுத்திப் பொலிஸாருக்கு நடந்த சம்பவத்தைக் கூறினர்.

உடனடியாகச் சகல இடங்களிலும் பாதுகாப்புப் பலப்படுத்தப்பட்டது. முற்பகல் 11 மணியளவில் செட்டிகுளம் ஜயசிங்கபுரம் பகுதியில் சென்று கொண்டிருந்த வாகனத்தை மறித்துச் சோதனையிட்ட பொலிஸார் யுவதியைக் கடத்திய வாகனத்தைக் கண்டுபிடித்தனர்.

பெண் மீட்கப்பட்டதோடு 23 மற்றும் 28 வயதான கடத்தலில் ஈடுபட்ட இளைஞர்கள் இருவரும் கைது செய்யப்பட்டு விடத்தல்தீவுப் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டனர்.

விடத்தல் தீவு பொலிஸார் மேற்கொண்ட விசாரணையின்போது குறித்த யுவதியைத் தான் காதலிப்பதால் அவரைக் கடத்திச் சென்றதாக 28 வயதான இளைஞர் கூறினார்.

ஆனால் இதனைக் குறித்த பெண் மறுத்ததுடன் தமக்கு வேறு ஓர் இடத்தில் திருமணம் நிச்சயிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார்.

இதனையடுத்து பெண் அவரது பெற்றோரிடம் ஒப்படைக்கப்பட்டார்.

இளைஞர்கள் இருவரையும் விடத்தில்தீவுப் பொலிஸார் தடுத்து வைத்துள்ளதுடன் விசாரணைகளையும் மேற்கொண்டு வருகின்றனர். (க-12)

# பனை, தென்னை வள கூட். சங்கம் ஒட்டுசுட்டானில் சிறப்புடன் சேவை

## இளைஞர், யுவதிகளுக்கு வேலை வாய்ப்பு

முல்லைத்தீவு, ஜூலை 20

ஒட்டுசுட்டான் பனை, தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம் புனரமைக்கப்பட்டு சிறந்த முறையில் இயங்கி வருவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

போரின் போது பெரும் அழிவுகளையும், பொருள் இழப்புக்களையும் இந்தச் சங்கம் எதிர்கொண்டது.

தற்போது 'என்றிப்' நிறுவனத்தின் நிதியுதவியுடன் புனரமைக்கப்பட்டுச் சிறந்த முறையில் இயங்கி வருவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

பனம் பழத்திலிருந்து ஜாம் தயாரித்தல், பதநீரின் மூலமாக வெல்லம் தயாரித்தல், பனங்கள்ளைப் போத்தலில் அடைத்தல், பன்ன வேலைகளுக்குப் பயிற்சி வழங்குதல் ஆகிய செயற்பாடுகளில் சங்கம் தற்போது ஈடுபட்டுள்ளதைக் காண முடிகின்றது.

இதனால் இங்குள்ள இளைஞர், யுவதிகள் பலர் தொழில் வாய்ப்பைப் பெற்று வருகின்றனர்.

சங்கத்தின் செயற்பாடுகள் மென்மேலும் அதிகரிக்கும் போது, மேலும் பலர் தொழில் வாய்ப்பபைப் பெறும் சாத்தியங்களும் உள்ளன.

பெரும் அழிவிலிருந்து மீண்டு சிறப்பான சேவைகளை ஆற்றிவரும் ஒட்டுசுட்டான் பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கத்தின் செயற்பாடுகளைப் பலரும் பாராட்டுகின்றனர். (க-500)


## சிறப்புடன் இடம்பெற்ற சித்திரக் கண்காட்சி

நெளுக்குளம் கலைமகள் மகாவித்தியாலய மாணவர்களால் சித்திரக் கண்காட்சி ஒன்று நேற்று முன்தினம் நடத்தப்பட்டது. அற்புதமாக பல்வேறு வகையில் வரையப்பட்ட சித்திரங்களும், சிற்பங்களும் அங்கு பார்வைக்கு வைக்கப்பட்டிருந்தன. இந்த நிகழ்வைச் சித்திர ஆசிரியர் ஜெயந்த ஜெயசிறி ஒழுங்குபடுத்தியிருந்தார். அதிபர் சு. அமிர்தலிங்கம் தலைமை தாங்கினார்.

மாணவர்களின் ஆளுமையை விருத்தி செய்யும் நோக்குடன் இந்தச் சித்திரக் கண்காட்சி ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

தொழில்முறை ரீதியில் அறிவை விருத்தி செய்து பாடசாலை காலத்துக்குப் பின்னர் பல்கலைக் கழகத்துக்கு செல்லாத மாணவர்கள் துணி அலங்காரம், மாபிள் அலங்காரம், சிற்பச் சித்திர வேலைகள் ஆகியவற்றை மேற்கொள்ளத்தக்க வகையில் அறிவை விருத்தி செய்யும் முனைப்புள்ள முன்னோடிக் கண்காட்சியாக இது அமைந்ததாக இந்தக் கண்காட்சியைப் பார்த்த பலரும் தெரிவித்தனர்.

இந்தக் கண்காட்சியை ஆயிரக்கணக்கான மாணவர்கள் பார்வையிட்டமை குறிப்பிடத்தக்கது. (க-402)



துணுக்காய் ஐயன்கன் கிராமத்தில் இடம்பெற்ற பொதுச் சந்தைக்கான அடிக்கல் நடும் நிகழ்வில் கலந்து கொண்ட அமைச்சர் றிசாத் பதியுதீன் ஏனைய பிரமுகர்களுடன் அமர்ந்திருக்கின்றார். (க-415)

# மழையால் காப்பாற்றப்பட்ட சிறுபோக நெற்செய்கை

கிளிநொச்சி, இரணைமடுக்குளத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்டு அழிவடையும் நிலையில் காணப்பட்ட சிறுபோக நெற்செய்கை தற்போது பெய்த மழையால் ஓரளவு பாதுகாக்கப்பட்டுள்ளது.

கிளிநொச்சி இரணைமடுக்குளத்தின் 8 ஆயிரம் ஏக்கர் நிலப்பரப்பிலும், ஏனைய கல்மடுக்குளம், அக்கராயன்குளம், புதுமுறிப்புக்குளம், வன்னேரிக்குளம் ஆகிய குளங்களின் கீழ் 5 ஆயிரம் ஏக்கரிலும் என 15 ஆயிரம் ஏக்கர் நிலப்பரப்பில் இவ்வாண்டு சிறுபோக நெற்செய்கை மேற்கொள்ளப்பட்டது. இரணைமடுக்குளத்தின் கீழான செய்கைகள் உரிய வகையில் திட்டமிடப்படாததால் 30 வீதமான பயிர்ச் செய்கை நீர்ப்பற்றாக்குறையால் அழிவடைந்து முழுமையாகக் கைவிடப்பட்டுள்ளது.

கடந்த வாரம் முதல் குளத்தின் நீர்மட்டம் மிக வேகமாக குறைவடைந்த நிலையில் ஆலயங்களில் விசேட அபிஷேகங்கள், பூசைகள், யாகங்கள் என்பன மழை வேண்டி இடம்பெற்றன.

இந்த நிலையில் கடந்த சனிக்கிழமை பெய்த மழையினால் நெற்செய்கை ஓரளவு பாதுகாக்கப்பட்டுள்ளது. இவ்வாறு நெடுநாள்கள் மழை பெய்யுமானால் எஞ்சிய செய்கைகளைப் பாதுகாக்க முடியும் என்றும் விவசாயிகளும் நீர்ப்பாசனத் திணைக்கள அதிகாரிகளும் தெரிவித்துள்ளனர். (க-6)

## கற்சிலைமடுவில் கணினிப் பயிற்சி

முல்லைத்தீவு, ஜூலை 20

கனடா - வன்னி தமிழ் சமூக கலாசார அமையத்தின் உதவியுடன் கற்சிலைமடுக் கிராமத்தில் கணினிப் பயிற்சி நிலையமொன்று திறந்து வைக்கப்பட்டுள்ளது.

இராணுவ அதிகாரியான கேணல் விஜயபால இதனைத் திறந்து வைத்துள்ளார்.

எஸ். தில்லையம்பலம் தலைமையில் இடம்பெற்ற திறப்பு விழாவின் போது ஓய்வுபெற்ற ஒட்டுசுட்டான் மகாவித்தியாலய அதிபரும் தற்போது கனடாவில் வசிப்பவருமாகிய தா. ஆறுமுகத்தினால் போரினால் பாதிக்கப்பட்டு ஊனமடைந்த ஆறு பேருக்குத் தலா 5 ஆயிரம் ரூபா வங்கியில் இடப்பட்டமைக்கான வங்கிப் புத்தகங்களும் கையளிக்கப்பட்டன.

தற்போது 18 பேர் கணினிப் பயிற்சிகளை இங்கு பெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (க-500)

# வயோதிபரின் மோதிரம், பணத்தை சூறையாடிய இளைஞருக்கு தண்டம்

### ஒத்திவைக்கப்பட்ட கடூழியச் சிறையும் விதிப்பு

கிளிநொச்சி, ஜூலை 20

கிளிநொச்சி ஸ்கந்தபுரம் பகுதியில் பஸ்ஸுக்குக் காத்திருந்த வயோதிபரைத் துன்புறுத்தியதுடன் அவரிடம் கொள்ளையிலீடுபட்ட இளைஞருக்கு பத்து வருடங்களுக்கு ஒத்திவைக்கப்பட்ட ஒருவருட கடூழிய சிறைத் தண்டனையும், 2500 ரூபா தண்டமும் விதிக்கப்பட்டுள்ளது.

கிளிநொச்சி ஸ்கந்தபுரம் பகுதியில் கடந்த முதலாம் திகதி மாலை 5 மணியளவில் கிளிநொச்சி செல்வதற்கு பஸ்ஸுக்காகக் காத்திருந்த வயோதிபர் ஒருவரை வலிந்து மோட்டார் சைக்கிளில் ஏற்றிக் கொண்டு கிளிநொச்சி கந்தன் குளம் பகுதியில் உள்ள ஆள்கள் நடமாட்ட மற்ற ஓரிடத்தில் வைத்து அவரை முழந்தாளில் இட்டுக் கொட்டனால் அடித்துத் துன்புறுத்தி, அவரது உடைமையில் வைத்திருந்த 13 ஆயிரம் பணத்தையும் அவர் அணிந்திருந்த தங்கமோதிரத்தையும் பறித்தபோது இராணுவத்தினால் குறித்த இளைஞர் பிடிக்கப்பட்ட போதும், இராணுவத்தினரிடம் இருந்து தப்பிச்சென்ற நிலையில் இந்த இளைஞரை அடுத்த தடவை மீளவும் இராணுவத்தினர் பிடித்து கிளிநொச்சி பொலிஸாரிடம் ஒப்படைத்திருந்தனர்.

குறித்த குற்றச்சாட்டு தொடர்பாக குறித்த இளைஞரை கிளிநொச்சிப் பொலிஸார் கடந்த 02ஆம் திகதி கிளிநொச்சி நீதிவான் நீதிமன்ற நீதிபதி பெ. சிவகுமார் எதிரில் முன்னிலைப்படுத்தியபோது கடந்த 16 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டார். பின்னர் நீதிமன்றில் முன்னிலைப்படுத்திய போது நபர் குற்றத்தை ஒப்புக் கொண்டார்.

இதனையடுத்து 10 வருடங்களுக்கு ஒத்திவைக்கப்பட்ட ஒரு வருட கடூழிய சிறைத் தண்டனையும் 2500 ரூபா தண்டமும் பாதிக்கப்பட்ட வயோதிபருக்கு நிவாரணத் தொகையாக 5 ஆயிரம் ரூபாவும் வழங்கவேண்டும் என்று நீதவான் பெ.சிவகுமார் தீர்ப்பளித்தார். (க-6)

# இந்திய ட்ரோலர் ஆதிக்கம்: மன்னாரில் மீனவர்கள் ஆய்வு

இந்திய இழுவைப்படகுகளின் தாக்கம் மற்றும் வடக்கு மீனவ சமுதாயம் தற்போது முகம் கொடுத்து வரும் பிரச்சினைகள் தொடர்பில் ஆராயும் விசேட கலந்துரையாடல் ஒன்று தேசிய மீனவ ஒத்துழைப்பு இயக்கத்தின் ஏற்பாட்டில் அண்மையில் மன்னார் 'ஹொலிடே' விடுதியில் தேசிய மீனவ ஒத்துழைப்புப் பேரவையின் மன்னார், மாவட்ட இணைப்பாளர் எஸ்.சுனேஸ் சோசை தலைமையில் இடம்பெற்றது.

தேசிய மீனவ ஒத்துழைப்பு இயக்கம் கடந்த 15 வருடங்களாக இலங்கை வாழ் மீனவர்கள், தொழிலாளர்கள், விவசாயிகள் மற்றும் தோட்டப்புற தொழிலாளர்களின் உரிமைகள் மற்றும் நலன்புரி தேவைகளுக்காகச் செயற்பட்டு வருகின்றது.

இதன்போது தேசிய மீனவ ஒத்துழைப்பு பேரவையின் தேசிய இணைப்பாளர் ஏ.ஜேசுதாசன், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன், மன்னார் மாவட்டக் கடற்றொழில் திணைக்களத்தின் உதவிப் பணிப்பாளர் மெராண்டா, மதத் தலைவர்கள், மீனவ சங்கங்களின் பிரதிநிதிகள் என பலர் கலந்து கொண்டிருந்தனர். இதன் போது மன்னார் மாவட்ட மீனவர்கள் எதிர்கொள்ளும் சகல பிரச்சினைகளும் முன் வைக்கப்பட்டன.

தேசிய மீனவ ஒத்துழைப்பு இயக்கம் கடந்த 15 வருடங்களாக இலங்கை வாழ் மீனவர்கள், தொழிலாளர்கள், விவசாயிகள் மற்றும் தோட்டப்புற தொழிலாளர்களின் உரிமைகள் மற்றும் நலன்புரி தேவைகளுக்காகச் செயற்பட்டு வருகின்றது.

இந்த நிலையில் இந்திய இழுவைப்படகுகளின் வருகையினால் வடக்கு மீனவர்கள் முகம் கொடுத்து வரும் பிரச்சினைகள், போர் மற்றும் ஏனைய காரணங்களினால் பாதிக்கப்பட்டுள்ள வடக்கு மீனவர்களின் பிரச்சினைகள் என்பவற்றைத் தீர்ப்பதற்காகத் தேசிய மீனவ ஒத்துழைப்பு இயக்கம் கடந்த 2004 ஆம் ஆண்டு தொடக்கம் இன்று வரை பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றது.

இந்த நிலையில் இந்தப் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு மேலும் ஒரு படிமுறையாக ஆன்மீகத் தலைவர்கள், துறைசார் நிபுணர்கள் மற்றும் மக்கள் பிரச்சினைகளில் அக்கறையுடன் செயற்படும் செயற்திறனாளிகளோடு இந்தப் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கான ஆலோசனைகள் மற்றும் செயற்பாடுகளைக் கண்டறிவதற்கான முக்கிய கலந்துரையாடலே கடந்த வெள்ளிக்கிழமை மன்னாரில் நடத்தப்பட்டதாகத் தேசிய மீனவ ஒத்துழைப்புப் பேரவையின் மன்னார் மாவட்ட இணைப்பாளர் எஸ்.சுனேஸ் சோசை தெரிவித்தார். (க-12)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## குடாநாட்டு கடற்றொழிலாளர் கடலட்டை பிடிக்க அனுமதி

யாழ்ப்பாணம், ஜூலை 20
பல வருடங்களுக்குப் பின் குடாநாட்டு கடற்றொழிலாளர் ஆழ்கடலுக்குச் சென்று கடலட்டை பிடிப்பதற்கு அரசால் அனுமதி வழங்கப்பட்டுள்ளதாகத் தேசிய கடற்றொழில் சம்மேளத்தின் உபதலைவர் என்.பொன்னம்பலம் தெரிவித்துள்ளார்.

இந்த தொழிலைச் செய்ய விரும்பும் கடற்றொழிலாளர் தமது சங்கங்கள் மூலம் கடற்றொழில் நீரியல் வளத்துறைத் திணைக்களத்தின் பணிப்பாளருக்கு விண்ணப்பங்களை அனுப்பி வைக்குமாறு மேலும் தெரிவித்துள்ளார்.

நாட்டில் ஏற்பட்டிருந்த போர்ச் சூழ்நிலை காரணமாக ஆழ்கடல் தொழிலுக்கு அரசு தடை விதித்ததால் கடலட்டை பிடிக்கும் தொழிலும் நிறுத்தப்பட்டது. இதனால் கடற்றொழிலாளர்களின் வருமானத்திலும் பாதிப்பு ஏற்பட்டது.

தற்பொழுது தென்னிலங்கை மீனவர் வடபகுதிக் கடலில் கடலட்டை பிடிப்பதில் ஈடுபட்டு வருகின்றனர். ஆனால் குடாநாட்டு மீனவர்களுக்கு மட்டும் கடலட்டை பிடிப்பதற்கு அரசு அனுமதி வழங்கவில்லை.

தேசிய கடற்றொழில் சம்மேளனத்தின் உபதலைவர் கடற்றொழில் அமைச்சருடன் இது குறித்துப் பேச்சு நடத்தியதைத் தொடர்ந்து, குடாநாட்டு மீனவர்களுக்கும் கடலட்டை பிடிப்பதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

இந்தத் தொழிலில் ஈடுபட விரும்பும் கடற்றொழிலாளர் யாழ்.மாவட்ட கடற்றொழில் நீரியல் வளத்துறைத் திணைக்கள உதவிப் பணிப்பாளர், பரிசோதகர் ஆகியோரின் சிபார்சுடன் அங்கத்தவரகளாக இருக்கும் சங்கங்கள் மூலம் கடற்றொழில் நீரியல் வளத்துறைப் பணிப்பாளருக்கு விண்ணப்பிக்க வேண்டும் என்று சம்மேளனத்தின் உபதலைவர் மேலும் தெரிவித்துள்ளார். (ம-115)

## வைரவருக்குப் 'புனர்வாழ்வு' கிடைக்குமா.....?



கீரிமலையில் அமைந்துள்ள பழம்பெரும் ஆலயமான ஞானவைரவர் ஆலயம் போரால் சேதமடைந்த நிலையில் புனரமைக்கப்படாமல் காணப்படுகின்றது. இதனைப் புனரமைப்பதற்கான நடவடிக்கைகள் எதுவும் இதுவரை மேற்கொள்ளப்படவில்லை. ஆலயம் எப்போது புனரமைக்கப்பட்டுப் புதுப்பொலிவு பெறும் என்று அந்தப்பகுதி மக்கள் கேட்கின்றனர். (த-17)

## சுண்டுக்குளி விதானையார் வீதி புனரமைப்பு

யாழ்ப்பாணம்,ஜூலை20
சுண்டுக்குளி விதானையார் வீதி நீண்ட காலத்தின் பின்னர் தார் ஊற்றிப் புனரமைக்கப்பட்டுள்ளது.

கடந்த பல வருடங்களாகப் புனரமைக்கப்படாமல் குன்றும் குழியுமாக பெரும் சேதமடைந்து காணப்பட்ட இந்த வீதி ஊடாகப் பயணிப்பதில் பலரும் சிரமங்களை எதிர்கொண்டு வந்தனர்.

தற்போது இந்த வீதியும் இந்த வீதியால் செல்லும் குறுக்கு வீதிகளும் தாரிட்டு புனரமைக்கப்பட்டுள்ளன. (த-17)

## கொக்குவில் அலுவலகத்தில் மாயமாகும் சைக்கிள்கள்

நல்லூர் பிரதேச சபையின் கொக்குவில் உப அலுவலக வளாகத்தில் நிறுத்தப்படும் சைக்கிள்கள் திருட்டுப் போவதாக முறைப்பாடு தெரிவிக்கப்படுகிறது. எனவே இந்த இடத்தில் சைக்கிள்களை நிறுத்தி விட்டுச்செல்வோர் மிகவும் அவதானமாக இருக்க வேண்டும் என்று அறிவுறுத்தப்பட்டுள்ளது.

கடந்த சில நாள்களாக இந்த அலுவலகத்துக்கு வருவோரின் சைக்கிள்கள் காணாமல் போயுள்ளன. கடந்த வாரமும் அலுவல் நிமித்தம் அங்கு வந்த ஒருவர் உள்ளே சென்று பின் திரும்பி வந்து பார்த்தபோது சைக்கிள் காணாமல் போயிருந்ததாகத் தெரிவிக்கப்பட்டது. (த-17)

# தீவகத்துக்கான மின்விநியோக வேலைகள் ஆரம்பமாகவில்லை

### பிரதேச மக்கள் விசனம் தெரிவிப்பு

யாழ்ப்பாணம்,ஜூலை 20
வடக்கின் வசந்தம் அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் தீவகத்துக்கான மின்சார வேலைகள் யாவும் ஓகஸ்ட் 31 ஆம் திகதிக்கு முன்னர் முடிவுறுத்தப்படவேண்டும் என்று தெரிவிக்கப்பட்ட நிலையில் வேலைகள் எதுவும் ஆரம்பிக்கப்படவில்லை என்று மக்கள் தெரிவித்துள்ளனர்.

வடக்கின் வசந்தம் மின்சார சபையின் பிரதம பொறியியலாளர் எந்திரி ரி.குணசீலன் இந்த அறிவுறுத்தலை விடுத்திருந்தார்.

இந்த நிலையில் வேலைகள் ஆரம்பிக்கப்படவில்லை என்று மண்டைதீவு மக்கள் வேலணை பிரதேச சபையிடம் முறையிட்டுள்ளனர்.

> செட்டிபுலம், புங்குடு தீவு, நெடுந்தீவு ஆகிய பிரதேசங்களுக்கும் மின் வழங்கப்படும் என்று கூறப்பட்டது

கடந்த மாதம் ஊர்காவற்றுறையில் இடம்பெற்ற தீவக இணைப்புக் குழுக்கூட்டத்தில் இந்த உறுதிமொழி தெரிவிக்கப்பட்டது.

இதில், மண்டைதீவு பிரதேசத்திற்கு வடக்கின் வசந்தத்தின் கீழான நிதி கிடைக்கப்பெற்றுள்ளது. உயர் அழுத்த மின் இணைப்பை யாழ். நகரில் இருந்து கடலுக்கு ஊடாக மண்டைதீவு பிரதேசம் முழுவதற்கும் எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் 31 ஆம் திகதிக்கு முன்னர் வழங்க நடவடிக்கை எடுக்கப்படும்.

செட்டிபுலம், புங்குடு தீவு, நெடுந்தீவு ஆகிய பிரதேசங்களுக்கும் மின் வழங்கப்படும்.

இதற்கான ஆளணியையும் ஒப்பந்தகாரரையும் தற்போது தேடுகின்றோம் விரைவில் முடிவுறுத்துவோம் என்று தெரிவிக்கப்பட்டிருந்தது.

எனினும் எந்தவித வேலைகளும் ஆரம்பிக்கப்படாத நிலை குறித்து மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர். (ம-41)

## வயல் வரம்பு மணல் அபகரிப்பு

தென்மராட்சி,ஜூலை 20
அண்மையில் பெய்த மழையை அடுத்து நெல் வயல்களில் வரம்பு கட்டுவது போல் பாவனை செய்து பெருமளவு வயல் வரம்பு மணல் கடத்தப்பட்டுள்ள பரபரப்பான சம்பவம் மந்துவில் பகுதியில் இடம்பெற்றது.

பகலில் வரம்பு கட்டுவது போல பாவனை செய்த சிலர் அந்த வரம்பு மணலை இரவிரவாக வாகனங்களில் ஏற்றிக் கடத்தியுள்ளனர். மழை பெய்த சிறிது நாள்களில் நெல் விதைப்புக்கான ஆரம்ப கட்டப் பணிகள் வயல்களில் இடம்பெறுவது வழமை. முதலில் வரம்புகள் கட்டப்பட்ட பின்னரே ஏனைய வேலைகள் இடம்பெறும்.

கடந்த வாரம் மழை பெய்ததையடுத்து இனந்தெரியாதவர்கள் வரம்புகட்டும் பணியில் ஈடுபடுவது போல பாசாங்கு செய்து இரவிரவாக வரம்பாகக் கட்டப்பட்ட மணலை வாகனங்களில் ஏற்றிச் சென்றுள்ளனர் என்று விசனம் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-9)

## நிமலரூபன் கொலையை கண்டித்து தீர்மானம்

வவுனியா சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுப் பின்னர் படுகொலை செய்யப்பட்ட தமிழ் அரசியல் கைதியான நிமலரூபனின் கொலையைக் கண்டித்து காரைநகர் பிரதேச சபைக் கூட்டத்தில் கண்டனத் தீர்மானம் ஒன்று நிறைவேற்றப்பட்டுள்ளது.

சபையின் 12 ஆவது கூட்டம் கடந்த புதன் கிழமை சபையின் தலைவர் வே.ஆனைமுகன் தலைமையில் இடம்பெற்றது. இதன்போதே இந்தத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

அரசியல் கைதி நிமலரூபனின் கொலை ஒரு பாரதூரமான விடயமாகும். இதனைப் புரிந்த கொலையாளிகள் சட்டத்தின் முன் நிறுத்தப்பட வேண்டும் என இந்தக் கூட்டத்தில் கண்டனத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டதாக சபையின் உபதலைவர் ச.துர்க்கேஸ்வரன் தெரிவித்தார். (த-17)

## மின்மார்க்கத் தொடர்புகளைத் துண்டிக்கும் விஷமிகள்

சுன்னாகம் கந்தரோடை பிரதான வீதியின் மின்மார்க்கத்தொடர்புகள் அடிக்கடி விஷமிகளால் துண்டிப்புச் செய்யப்படுகின்றன. இதன் காரணமாக அந்தப் பகுதி மின் பாவனையாளர்கள் பெரிதும் பாதிப்படைந்துள்ளனர்.

கந்தரோடைப் பகுதியில் அடிக்கடி திருட்டு மற்றும் கொள்ளைச் சம்பவங்கள் கடந்த சில மாதங்களுக்கு முன்பு இடம்பெற்று வந்தன. இதனால் இந்தப் பகுதி மக்கள் இரவு, பகல் என நிம்மதியின்றி பொழுதை அச்சத்துடன் கழித்து வந்தனர்.

தற்போது இந்தப் பகுதியில் புதியதொரு பிரச்சினையாக பிரதான வீதியின் மின் விளக்குகளை ஒளிரவிடாமல் செய்யும் நோக்குடன் கடந்த சில தினங்களாக இரவு நேரங்களில் சில விஷமிகள், மதுப்பிரியர்கள் போன்றோரால் மின்மார்க்கத் தொடர்புகள் துண்டிக்கும் செயற்பாடுகள் இடம்பெற்று வருகின்றன. இதன் காரணமாக மின்சாரம் தடைப்பட்டு அந்தப் பகுதி முழுவதும் இருளில் மூழ்கிக் காணப்படுகிறது. அடிக்கடி இடைநிறுத்தப்படும் மின்சாரத்தால் மின் பாவனையாளர்களின் வீட்டு உபகரணங்கள் பழுதடைவதுடன் மறுநாள் வரை மின்சாரத்தைப் பெற முடியாமல் உள்ளதாகவும் கூறப்படுகிறது.

இது தொடர்பாக உடனடி நடவடிக்கையை மேற்கொண்டு சீரான மின்பாவனையைப் பெற்றுத்தருவதுடன் விஷமிகளின் இந்தச் செயற்பாடுகளை நிறுத்த நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் எனவும் அந்தப் பகுதி மக்கள் உரிய அதிகாரிகளிடம் கேட்கின்றனர். (ம-14)

# இறைவரிப் பரிசோதகரின் செயற்பாடுகளுக்கு இடையூறு விளைவித்த ஆளும் கட்சி உறுப்பினர்

### கண்டிக்கிறார் மாநகரசபை எதிர்க்கட்சி உறுப்பினர் விந்தன்

யாழ்ப்பாணம்,ஜூலை20
யாழ். மாநகரசபை ஆளும் கட்சி உறுப்பினர் ஒருவர் பிரதம இறைவரிப் பரிசோதகர் தனது கடமையைச் செய்வதற்கு இடையூறு விளைவித்து அவரை அச்சுறுத்தும் வகையில் நடந்து கொண்டதை வன்மையாகக் கண்டிப்பதாக மாநகரசபையின் எதிர்க்கட்சி உறுப்பினர் விந்தன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக விந்தன் அனுப்பி வைத்துள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

மாநகரசபை இறைவரிப் பகுதிக்குச் சென்ற ஆளும் கட்சி உறுப்பினரும் அவரது ஆதரவாளர்களும் நல்லூர் கந்தன் திருவிழாக் காலங்களுக்கென ஆலய சுற்றாடலில் வியாபார நடவடிக்கைகளுக்காக மாநகரசபையால் வழங்கப்படும் நிலங்களை தமக்கு வழங்குமாறு கோரி பிரதம இறைவரிப் பரிசோதகர் த.சிவகரனுடன் வாக்குவாதப்பட்டுள்ளனர்.

திருவிழாக்கால ஒழுங்கு நடவடிக்கைகள் தொடர்பாக அறிவுறுத்தப்படுகின்ற கூட்டம் வருடாவருடம் மாநகரசபையால் ஒழுங்கு செய்யப்பட்டு உரிய ஒழுங்கு நடவடிக்கைகள் தொடர்பாக உரிய தரப்பினர்களுக்கு அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டு வருகின்றமை வழமை.

ஆனால் இந்த முறை இந்த அறிவித்தல்களோ கூட்டங்களோ நடத்தப்படாமையால் குறித்த ஆளும் கட்சி உறுப்பினர் தன்னிச்சையாகச் செயற்பட்டு பரிசோதகரை அச்சுறுத்தியுள்ளார்.

மாநகரசபை ஊழியர்களது சுதந்திரமான செயற்பாடுகளுக்கும் தமது கடமைகளைத் தங்குதடையின்றிச் செயற்படுத்துவதற்கும் இது போன்ற செயற்பாடுகள் மூலம் இடையூறு விளைவிப்பதை வன்மையாகக் கண்டிப்பதாக அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

யாழ். மாநகரசபையால் கடந்த வருட நல்லூர் திருவிழாவின் போது மட்டும் ஆலய புறச்சூழலில் கடைகள் மற்றும் வியாபார நிலையங்களுக்கான நிலங்களை வழங்கியதன் மூலம் 80 லட்சம் ரூபா வருமானம் கிடைக்கப் பெற்றது எனவும் அதில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (ம-16)

## கள்ளுத் தவறணையை அகற்றக் கோரிக்கை

யாழ்ப்பாணம்,ஜூலை20
நல்லூர் பிரதேச சபையில் கொக்குவில் உப அலுவலகத்துக்கு அருகில் உள்ள கள்ளுத் தவறணையை அங்கிருந்து அகற்றுமாறு பிரதேச சபை கோரிக்கை விடுத்துள்ளது என சபையின் தலைவர் ப.வசந்தகுமார் தெரிவித்தார்.

சபையின் உப அலுவலகத்துக்கு எதிரே பிறவுண் வீதியில் அமைந்துள்ள இந்தக் கள்ளுத் தவறணையால் வீதியால் பயணிக்கும் மக்கள் பெரும் அசௌகரியங்களுக்கு முகம் கொடுப்பதாகச் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இதனையடுத்து தவறணையை அங்கிருந்து உடனடியாக அகற்றுமாறு பிரதேச சபை பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்க சமாசத்தைக் கேட்டுள்ளதாகத் தலைவர் கூறினார்.

பொதுமக்களின் குடியிருப்புக்கள், சபையின் உப அலுவலகம், தொழில் நுட்பக் கல்லூரி ஆகியவற்றுக்கு அருகில் இது அமைந்துள்ளமையால் அந்தப் பகுதியால் பயணிப்போர் பெரும் சிரமங்களை எதிர்கொள்வதாகத் தெரிவிக்கப்படுகிறது. (த-17)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்திய ஜனாதிபதித் தேர்தலில் விறுவிறுப்பான வாக்குப் பதிவு

டில்லி, ஜூலை 20

இந்தியா முழுவதும் பெரும் எதிர்பார்ப்பை ஏற்படுத்தியுள்ள, 14 ஆவது ஜனாதிபதித் தேர்தலுக்கான வாக்குப் பதிவு டில்லி நாடாளுமன்றத்தில் ஆரம்பமாகியது. முற்பகல் 10 மணியிலிருந்து மாலை 5 மணிவரை வாக்குப்பதிவு நடைபெற்றது.



ஜனாதிபதித் தேர்தலில் டில்லி நாடாளுமன்றில் வைக்கப்பட்டுள்ள வாக்குப் பெட்டியில் பிரணாப் முகர்ஜி வாக்களித்தார். அருகில் சோனியா, மன்மோகன் சிங்.

ஜனாதிபதி தேர்தலில் மக்களவை மற்றும் மாநிலங்களவையைச் சேர்ந்த 776 நாடாளுமன்ற உறுப்பினர்களும், சட்டசபை உறுப்பினர்கள் 4,120 பேருமாக மொத்தம் 4,896 பேர் வாக்களிக்கத் தகுதிபெற்றுள்ளனர்.

தமிழக சட்டசபையில் முதல்வர் ஜெயலலிதா, மற்றும் சட்டசபை உறுப்பினர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள் தங்களின் வாக்குகளைப் பதிவு செய்தனர். பிரணாப் முகர்ஜிக்கும், சங்மாவுக்கும் இடையே, நேரடிப்போட்டி நிலவுவதால், விறு விறுப்பு ஏற்பட்டுள்ளது. நாடு முழுவதும் உள்ள நாடாளுமன்ற உறுப்பினர்கள் டில்லியில் நாடாளுமன்ற வளாகத்தில் தமது வாக்குகளை அளித்தனர். நாடு முழுவதும் 31 இடங்களில் வாக்குச்சாவடிகள் அமைக்கப்பட்டுள்ளன. சட்டசபை உறுப்பினர்கள் மாநிலங்களிலும், நாடாளுமன்ற உறுப் பினர்கள் தங்களின் அனுமதிக்கேற்ப ஆங்காங்கே வாக்களித்தனர்.

இவர்களது மொத்த வாக்கு எண்ணிக்கை 10 லட்சத்து 98 ஆயிரம் ஆகும். இதில் வெற்றி பெறத் தேவை 5 லட்சத்து 49 ஆயிரத்து 442 வாக்குகள் ஆகும்.

இதில் பிரணாப் முகர்ஜிக்கு 7 லட்சத்து 5 ஆயிரம் வாக்குகள் கிடைக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

ஐ.மு. கூட்டணி சார்பில், பிரணாப் முகர்ஜியும், பாரதீய ஜனதாக் கட்சியின் ஆதரவுடன், லோக்சபா முன்னாள் சபாநாயகர் சங்மாவும் போட்டியிடுகின்றனர்.

ஜனாதிபதித்தேர்தலைப் பொறுத்தவரை, வாக்களிப்போரின் கைவிரல்களில், அடையாள மை எதுவும் இடப்படாது. வாக்குச் சீட்டில், பிரணாப் முகர்ஜியின் பெயரும், சங்மாவின் பெயரும் இருக்கும். மக்கள் பிரதி நிதிகள், இவர்களில் யாருக்கு வாக்களிக்க விரும்புகின்றனரோ, அவர்களின் பெயருக்கு முன், 1 என்ற எண்ணை எழுதி, வாக்குப் பெட்டியில் போட வேண்டும். குறிப்பிட்ட வேட்பாளருக்குத் தான் வாக்களிக்க வேண்டும் என்று எந்த ஓர் அரசியல் கட்சியும், தங்களின் பிரதிநிதிகளை கட்டாயப் படுத்த முடியாது என்பதால், சட்டசபை உறுப்பினர்களும் நாடாளுமன்ற உறுப்பினர்களும், சுதந்திரமாக வாக்களித்தனர். நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை வாக்குகள் எண்ணப்பட்டு, அன்றே முடிவுகள் அறிவிக்கப்படும்.

**40 நிமிடங்களில் முடிந்த புதுச்சேரி தேர்தல்:**

புதுச்சேரி சட்டசபையில், 30 பேர் இந்தத் தேர்தலில் வாக்களிக்கத்தகுதி பெற்றிருந்தனர். இந்தநிலையில், சட்டசபைக்குழு அறையில் வாக்களிப்பதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன. முற்பகல் 10 மணிக்கு வாக்குப்பதிவு ஆரம்பமாகிய போதிலும், அ.தி.மு.க. சட்டப் பேரவை உறுப்பினர் ஓம்சக்தி சேகர், 10.40 மணிக்கு வந்து முதல் ஆளாக வாக்களித்தார். அதன்பின், முதல்வர் ரங்கசாமி, அமைச்சர்கள் உள்ளிட்டோர் வாக்களித்தனர். 11.20 மணியளவில், காங்கிரஸ் கட்சியின் சட்டசபை உறுப்பினரும், பிரணாப் முகர்ஜியின் முகவருமான வல்சராஜ் இறுதி ஆளாக வந்து வாக்களித்தார். 10.40 மணிக்கு ஆரம்பித்த வாக்குப்பதிவு, 11.20 மணியளவில் முடிவடைந்தது. புதுச்சேரியில் 100 சதவீத வாக்குகள் பதிவாகியுள்ளன. (வ)

## வேட்பு மனுத்தாக்கல் செய்தார் அன்சாரி



துணை ஜனாதிபதி தேர்தலுக்காக காங்கிரஸ் வேட்பாளரான ஹமீது அன்சாரி நேற்று முன்தினம் வேட்பு மனுத் தாக்கல் செய்தார்.

ஜனாதிபதித் தேர்தல் நேற்று நடைபெற்றது. இதனையடுத்து துணை ஜனாதிபதித் தேர்தல் அடுத்த மாதம் 7 ஆம் திகதி நடைபெற உள்ளது.

இதில் துணை ஜனாதிபதி காங்கிரஸ் வேட்பாளராக ஹமீது அன்சாரியை கடந்த சில தினங்களுக்கு முன்பு அந்தக் கட்சியின் தலைவர் சோனியா காந்தி அறிவித்தார்.

இந்தநிலையில் நேற்று முன்தினம் சோனியாகாந்தி, பிரதமர் மன்மோகன் சிங் உட்பட முக்கிய தலைவர்கள் முன்னிலையில் அன்சாரி வேட்பு மனுத் தாக்கல் செய்தார். (வ)

## உயர் பதவி ஏற்க நான் தயார்

**ராகுல் கருத்து**



டில்லி, ஜூலை20

காங்கிரஸ் கட்சியில் உயர் பதவி வகிக்கத் தயாராகவே இருக்கிறேன் என்றும் ஆனால் அது குறித்து காங்கிரஸ் கட்சியின் மேலிடம்தான் முடிவெடுக்க வேண்டும் என்றும் ராகுல் காந்தி தெரிவித்துள்ளார்.

காங்கிரஸ் கட்சியின் பொதுச் செயலாளர் ராகுல் காந்தி விரைவில் முக்கிய பொறுப்பில் நியமிக்கப்பட உள்ளார் என்பது குறித்து வந்த செய்திகள் பற்றி நேற்று முன்தினம் சோனியா காந்தியிடம் கேட்கப்பட்டதற்கு, முக்கிய பொறுப்பில் அமர்வது குறித்து ராகுல் மட்டுமே முடிவு செய்ய முடியும். வேறு யாரும் அந்த முடிவை எடுக்க முடியாது என்று பதில் ளித்திருந்தார்.

இந்த நிலையில், தான் தயாராக இருப்பதாக ராகுல் கூறியிருப்பதை அடுத்து, விரைவில் முக்கிய பொறுப்பு வழங்கப்பட உள்ளது என்பது தெளிவாகிறது. (வ)

## தவறுதலாக சங்மாவுக்கு வாக்களித்த முலாயம்



டில்லி, ஜூலை 20

சமாஜ்வாடி கட்சித் தலைவர் முலாயம் சிங் யாதவ் நேற்று ஜனாதிபதித் தேர்தலுக்கான வாக்குப் பதிவின் போது தவறுதலாக பி.ஏ. சங்மாவுக்கு தனது வாக்கைச் செலுத்தி விட்டார். பின்னர் தான் செய்த தவறை அறிந்த முலாயம், தனது வாக்குச் சீட்டைக் கிழித்தெறிந்தார். அதன் பின்னர் அவருக்கு புதிய வாக்குச் சீட்டு அளிக்கப்பட்டது. அதில் அவர் பிரணாபுக்கு வாக்களித்தார். (வ)

## அமெ. கடற்படையினரால் கொல்லப்பட்ட மீனவரின் உடலை வாங்க உறவினர்கள் மறுப்பு

துபாயில் அமெரிக்கக் கடற்படையினரால் சுட்டுக் கொல்லப்பட்ட தமிழக மீனவர் சேகரின் உடலை வாங்கப்போவதில்லை என்று அவரது உறவினர்கள் தெரிவித்துள்ளனர். இராமநாதபுரம் மாவட்டம் கீழக்கரையைச் சேர்ந்த சேகர், மீன்பிடி நிறுவனம் ஒன்றில் வேலை பார்க்க கடந்த வருடம் துபாய்க்குச் சென்றார்.

இந்தநிலையில் அவருடன் பணியாற்றும் சில மீனவர்களுடன் கடலில் மீன் பிடிக்கும்போது, சர்வதேச கடல் எல்லையை மீறி மீன்பிடித்ததாக அமெரிக்க கடற்படையினரால் சுட்டுக்கொல்லப்பட்டார். இந்நிலையில் சேகரின் உறவினர்களை இராமநாதபுரம் மாவட்ட ஆட்சியாளர் நந்தகுமார் சந்தித்து ஆறுதல் கூறினார்.


சேகரின் உயிரிழப்புக்கு காரணமான அமெரிக்க கடற்படையினரை தண்டிக்க மத்திய அரசு உறுதியான நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று அவரது உறவினர்கள் வலியுறுத்தினர்.

தமிழக அரசு சார்பில் வழங்கப்பட்ட 5 லட்சம் ரூபா நிதியுதவி தங்களுக்குக் கிடைத்துவிட்டதாகவும் அவர்கள் குறிப்பிட்டனர்.




தமிழக மீனவரை படுகொலை செய்த அமெரிக்க கடற்படையைக் கண்டித்தும், சில்லரை வர்த்தகத்தில் நேரடி அந்நிய முதலீட்டை அனுமதிக்கக்கோரியும் இந்தியாவை அச்சுறுத்தும் ஒபாமாவைக் கண்டித்தும் எஸ்.டி.பி.ஐ. கட்சி அமெரிக்கத் தூதரகம் முன்பாக நேற்று முற்றுகைப் போராட்டம் நடைபெற்றது.

## மோடியுடன் நெருக்கமாக இருக்கும் தமிழ் நடிகை



**குஜராத்தில் எதிர்வரும் டிசெம்பர் மாதம் நடைபெறவுள்ள தேர்தலுக்கு முன்பாக மோடியின் நற்பெயருக்குக் களங்கத்தை ஏற்படுத்தும் நோக்கில் இது தயாரிக்கப்படுகிறது.**

தமிழ் நடிகையுடன் குஜராத் முதல்வர் நரேந்திர மோடி நெருக்கமாக இருப்பது போன்ற போலி இறுவட்டை காங்கிரஸ் தயாரிப்பதாக சிவசேனா குற்றம்சாட்டியுள்ளது. தனது கட்சிப் பத்திரிகை யான சாம்னாவில் முதல் பக்கத்தில் வெளியிட்டுள்ள செய்தியில் இந்தக் குற்றச்சாட்டை சிவசேனா தெரிவித்துள்ளது.

இதுகுறித்து வெளிவந்த செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

குஜராத்தில் எதிர்வரும் டிசெம்பர் மாதம் சட்டப்பேரவை தேர்தல் நடைபெறவுள்ளது. அதற்கு முன்பாக மோடியின் நற் பெயருக்குக் களங்கத்தை ஏற்படுத்தும் நோக்கத்தில் இந்த இறுவட்டை காங்கிரஸ் இரகசியமாகத் தயாரிக்கின்றது.

தமிழ் நடிகையும், பஞ்சாப் பெண்ணும் பா.ஜ. தலைமையிலான தேசிய ஜனநாயகக் கூட்டணியுடன் தொடர்புள்ளவர்கள். இந்த இறுவட்டில் நடிக்க இருவருக்கும் பெருந்தொகை நிதி கொடுக்கப்பட்டுள்ளது. தமிழ் நடிகை ஏற்கனவே இரு படங்களில் நடித்தவர். அவருக்கு மும்பையில் வீடு கொடுக்கப்பட்டுள்ளது. பஞ்சாப் பெண்ணுக்கு சண்டிகரில் வீடு வழங்கப்பட்டுள்ளது. இந்த போலி இறுவட்டைத் தயாரிக்கும் முயற்சியில் கணினி மற்றும் டிஜிட்டல் நிபுணர்கள் தீவிரமாக ஈடுபட்டுள்ளனர் என்று செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்தத் தகவலால் அரசியல் வட்டாரத்தில் பெரும் பரபரப்பு ஏற்பட்டுள்ளது.

## 30 இல் நித்திக்கு ஆண்மைப் பரிசோதனை

நித்தியானந்தா எதிர்வரும் 30 ஆம் திகதி பெங்களூர் விக்டோரியா மருத்துவமனையில் மருத்துவப் பரிசோதனைக்கு முன்னிலையாகவேண்டும் என்று மத்திய புலனாய்வுப் பொலிஸார் நோட்டீஸ் அனுப்பியுள்ளனர்.

நித்தியானந்தா மீது பாலியல் குற்றசாட்டு எழுந்ததையடுத்து, அவர் கைது செய்யப்பட்டு பிணையில் உள்ளார். [illegible] போன்றவன்; நான் பாலியலில் ஈடுபட முடியாது என்று கூறியிருந்தார். இதையடுத்து, இந்த வழக்கை விசாரித்து வரும் மத்திய புலனாய்வுப் பொலிஸார் நித்தியானந்தாவுக்கு மருத்துவப் பரிசோதனை செய்ய முடிவு செய்து, ஏழு முறை அவருக்கு நோட்டீஸ் அனுப்பினர்.

ஆனால், அவர் பொலிஸில் முன்னிலையாகவில்லை. இந்த வழக்கில் உண்மையைக் கண்[illegible] வேண்டுமானால், நித்தி[illegible]க்கு மருத்துவப் பரிசோதனை, குரல் பரிசோதனைசெய்ய வேண்டும் என்று ராம் நகர் நீதிமன்றத்தில் கடந்த 15 ஆம் திகதி அனுமதி கேட்டனர். இதற்கு நீதி மன்றம் அனுமதி வழங்கியிருந்தது.

இதையடுத்து எதிர்வரும் 30 ஆம் திகதி பெங்களூர் விக்டோரியா மருத்துவமனையில் நித்தியானந்தாவுக்கு ஆண்மை பரிசோதனை செய்ய, மத்திய புலனாய்வுப் பொலிஸார் முடிவு செய்து, பிரதம டாக்டர் தலைமையிலான குழுவை நியமித் தது. எதிர்வரும் 30 ஆம் திகதி காலை ராம் நகர் பொலிஸ் நிலையத்துக்கு நித்தியானந்தா வர வேண்டும். பின்னர், அவரை அங்கிருந்து பாது காப்புடன் பெங்களூர் விக்டோரியா மருத்துவமனைக்கு பொலிஸார் அழைத் துச் செல்வர்.

அங்கு, நித்தியானந்தாவுக்கு ஆண்மை சோதனை, தைரொய்டு சோதனை, விந்து அணுக்கள் பரிசோதனை, குருதிப் பரிசோதனை உட்பட, ஐந்து மருத்துவப் பரிசோதனைகள் நடத்தத் திட்டமிடப்பட்டுள்ளது (வ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மிகக் குள்ளமான சீனச் சிறுமி

பீஜிங், ஜூலை 20

சீனாவைச் சேர்ந்த ஸியா வோஸியாவோ எனும் 3 வயதான சிறுமி உலகிலே மிகவும் உயரம் குறைந்த சிறுமியாக விளங்குகிறார். ஒன்றரை அடி உயரத்துடன் இந்தச்சிறுமி காணப்படுகிறாள்.

இந்தச் சிறுமி புன்னகையுடன் குதூகலமாக காணப்படுகிறாள். ஏனைய சிறார்களுடன் கால்பந்தை உதைத்து விளையாடுகிறாள். ஆனால் அவர்களுடன் ஒப்பிடுகையில் இந்தச்சிறுமியின் உடல்நிலை ஆரோக்கியமாக இல்லை என்கிறார்கள் மருத்துவர்கள்

இந்தச்சிறுமியே உலகில் மிகவும் குள்ளமான சிறுமி என நம்பப்படுகின்றது.

இந்தச் சிறுமி பிறக்கும் போது 1.5 கிலோகிராம் நிறையுடனும் 33 சென்ரி மீற்றர் உயரத்துடனுமே பிறந்தாள். ஆனால் தற்போது அவளுக்கு மூன்று வயது, எனினும் 54 சென்ரி மீற்றர் மட்டுமே வளர்ச்சியடைந்துள்ளாள். அவளது தற்போதைய நிறை 2.5 கிலோகிராமாகும்.

சிறுமியின் வளர்ச்சி குறைவாகவுள்ளமைக்கு மரபியல் கோளாறுகளே காரணமென சீனாவைச் சேர்ந்த வைத்தியர்கள் தெரிவித்துள்ளனர்.



**இந்தச்சிறுமி பிறக்கும்போது 1.5 கிலோகிராம் நிறையுடனும் 33 சென்ரி மீற்றர் உயரத்துடனுமே பிறந்தாள்.**

நீண்டகாலம் வைத்தியசாலையில் பராமரிக்கப்பட்ட இந்த சிறுமி இவ்வாரம் வைத்தியசாலையிலிருந்து வீடு செல்வதற்கு அனுமதிக்கப்பட்டுள்ளாள். (வ)

# தலிபான்களின் தாக்குதலில் 9 ஆப்கன் படையினர் சாவு

தெற்கு ஆப்கானிஸ்தானில் உள்ள சோதனைச் சாவடி ஒன்றின் மீது நேற்று முன்தினம் புதன்கிழமை தலிபான்கள் நடத்திய திடீர்த் தாக்குதலில் 9 ஆப்கன் படையினர் கொல்லப்பட்டதுடன் வட பகுதியில் நேட்டோப் படையினரின் 22 டிரக்குகளும் வெடிகுண்டு வைத்துத் தகர்க்கப்பட்டுள்ளன.

ஆப்கானிஸ்தானில் பாதுகாப்புப் பணியில் ஈடுபட்டுள்ள நேட்டோப் படைகளுக்குத் தேவையான எரிபொருள்கள் பாகிஸ்தான் வழியாகக் கொண்டு செல்லப்படுகின்றன.

இந்தநிலையில் கடந்தாண்டு நவம்பர் மாதம் நேட்டோப் படைகள் நடத்திய தாக்குதலில், 24 பாகிஸ்தான் இராணுவத்தினர் உயிரிழந்தனர்.

இந்த சம்பவத்துக்கு அமெரிக்கா மன்னிப்பு ஏதும் கேட்காத காரணத்தால், ஆப்கானிஸ்தானுக்கான வழியை பாகிஸ்தான் மூடியது.

இதனால் நேட்டோப் படைகளுக்கான பொருள்களை விநியோகம் செய்ய இயலாத நிலை ஏற்பட்டது.

## 22 டிரக்குகள் தீக்கிரை



**இதில் எரிபொருள் நிரப்பிய டாங்கர் டிரக் வெடித்துச் சிதறியதில், அருகே இருந்த மற்ற 22 டிரக்குகளும் எரிந்து சாம்பலாகின.**

இதனையடுத்து அமெரிக்கா வெளிவிவகாரத்துறை அமைச்சர் ஹிலாரி கிளிண்டன் மன்னிப்புக் கேட்ட பின், பாகிஸ்தான் வழியைத் திறக்க சம்மதித்தது.

நேட்டோ வாகன போக்குவரத்துக்கு அனுமதியளித்தால், அந்த வாகனங்களைக் குண்டு வைத்து தகர்ப்போம் என தலிபான்கள் ஏற்கனவே எச்சரிக்கை விடுத்திருந்தனர். இதனால் பாகிஸ்தான் அரசு நேட்டோ வாகனங்களுக்காக பலத்த பாதுகாப்பு ஏற்பாடுகளைச் செய்திருந்தது.

எனவே பாகிஸ்தான் பகுதியில் இந்த வாகனங்களை தகர்க்க முடியாத காரணத்தால், ஆப்கானிஸ்தானில்- உஸ்பெகிஸ்தான் எல்லையையொட்டிய சமாங்கன் மாகாணத்தில் நேட்டோ வாகனங்கள் செல்லும் பாதையில் தலிபான்கள் நேற்று வெடிகுண்டை வெடிக்கச் செய்தனர்.

இதில் எரிபொருள் நிரப்பிய டாங்கர் டிரக் வெடித்துச் சிதறியதில், அருகே இருந்த மற்ற 22 டிரக் வண்டிகளும் எரிந்து சாம்பலாகின.


இந்தச்சம்பவத்தில் தனியார் பாதுகாப்பு நிறுவன வீரர்கள் சிலர் உயிரிழந்துள்ளனர். ஆப்கானிஸ் தான் ஜனாதிபதி ஹமீத் கர்சாய், இந்தச்செயலுக்குக் கண்டனம் தெரிவித்துள்ளார். (வ)

# இத்தாலியில் மோனாலிசாவின் எலும்புக் கூடுகள்

உலகப்புகழ் பெற்ற மோனாலிசா ஓவியத்தை வரைவதற்கு மொடலாக இருந்த லிஸா கிரார்தினியின் எலும்புக் கூடுகளைக் கண்டு பிடித்துள்ளதாக தொல்பொருள் ஆய்வாளர்கள் தெரிவித்துள்ளனர்.

மோனாலிசா ஓவியத்தை வரைவதற்கு டாவின்சிக்குத் தூண்டுகோலாக இருந்தவர் தான் லிஸா கிரார்தினி. இந்த பெண் தொடர்பாக அவ்வப்போது பல தகவல்கள் வெளிவந்தாலும், அவற்றில் சில தகவல்கள் மட்டுமே உண்மையானவை.

இந்த நிலையில் இத்தாலியத் தொல்பொருள் ஆய்வாளர்கள், புளொரொன்ஸில் உள்ள புனித உர்சுலா மட மொன்றில் லிஸா கிரார்தினியின் எலும்புக் கூடுகளை கண்டுபிடித்துள்ளதாகத் தெரிவித்துள்ளனர். மோனாலிசா இத்தாலியில் டெல் கிரார்த்தினி என்று அறியப்படுகின்றது. நவீன வரலாற்றாசிரியர்களும் மோனாலிசா படத்துக்கு மொடலாக இருந்தவர் லிசா டெல் கிரார்த்தினி என ஏற்றுக்கொண்டுள்ளனர்.



வரலாற்றுக் குறிப்புகளின் படி, அப்பெண் தனது கணவர் இறந்ததற்கு பின்பு துறவியாக மாறியதாகவும், அவர் மரணமடைந்த பின்னர் அந்த மடத்திலேயே புதைக்கப்பட்டதாகவும் தெரிகிறது.

இந்தநிலையில் கடந்தாண்டு கண்டுபிடிக்கப்பட்ட மண்டைஓட்டுடன், தற்போது கண்டுபிடிக்கப்பட்டுள்ள எலும்புக்கூடு ஒத்துப் போகின்றதா என்பது குறித்து ஆராய்ச்சிகள் நடைபெற்று வருகின்றன.

இவரது எலும்புக்கூடு கண்டுபிடிக்கப்பட்ட இடத்துக்கு அருகில் மேலும் இரண்டு எலும்புக் கூடுகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

இவ்விரண்டு எலும்புக் கூடுகளும் அவரது பிள்ளைகளின் எலும்புக்கூடுகளாக இருக்கலாம் என்று நம்பப்படுகின்றது.

லிசா டெல் கிரார்த்தினியின் எலும்புக் கூடும் ஏனைய இரண்டு எலும்புக் கூடுகளும் ஒத்துப்போகின்றனவா எனப் பரிசோதனை செய்யப்படவுள்ளது.

இதன் பின்னர் அவரது மண்டையோட்டை வைத்து நவீன தொழில்நுட்பங்களின் மூலம் அவரது முகம் எவ்வாறு இருந்தது என்பதை உருவகப்படுத்த முடியுமென ஆராய்ச்சியாளர்கள் நம்புகின்றனர்.

இவற்றையடுத்து மோனாலிசாவின் மர்மப் புன்னகைக்கும் விடை கிடைக்கும் என்றும் எதிர்பார்க்கப்படுகின்றது. (வ)

# கூட்ட நெரிசலில் மனைவிக்கு கொடுத்தார் முத்தம் ஒபாமா



*அமெரிக்காவுக்கும், பிரேசிலுக்கும் இடையே நடைபெற்ற நட்புறவுக் கூடைப்பந்தாட்டப் போட்டியில் மக்கள் கூட்டத்தின் நடுவே அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமா மனைவி மிச்செல் ஒபாமாவுக்கு முத்தம் கொடுத்தார்.*

அமெரிக்காவுக்கும், பிரேசிலுக்கும் இடையே நடைபெற்ற நட்புறவுக் கூடைப் பந்தாட்டப் போட்டியைக் காண தனது மனைவி மிச்செல் ஒபாமா, மகள் மலியாவுடன் சென்றார் பராக் ஒபாமா. போட்டி நடந்து கொண்டிருந்த போதே மனைவிக்கு அழுத்தமான முத்தம் கொடுத்தார் ஒபாமா. இதை மகள் மலியாவும், மைதானத்தில் திரண்டிருந்த ஆயிரக் கணக்கானோரும் பார்த்து ரசித்துக் கரகோஷம் எழுப்பினர்.

அமெரிக்க கூடைப் பந்தாட்ட அணிக்கும், பிரேசில் அணிக்கும் இடையே ஒலிம்பிக் போட்டிக்கு முந்தைய நட்புப் போட்டி ஒன்று வோஷிங்டனில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

இந்தப்போட்டியைக் காண ஆயிரக்கணக்கானோர் திரண்டிருந்தனர். போட்டி வோஷிங்டன் வெரிசோன் மையத்தில் நடந்தது. ஜனாதிபதி ஒபாமா, அவரது மனைவி மிச்செல், மகள் மலியா, துணை ஜனாதிபதி ஜோ பைடென், அவரது பேர்த்தி உள்ளிட்ட பிரபலங்களும் திரண்டிருந்தனர்.

ஒபாமாவே ஒரு சிறந்த கூடைப் பந்தாட்ட வீரர்தான். தனது மகள் மலியா, சாஷா ஆகியோருக்கு இவர்தான் கூடைப்பந்தாட்ட பயிற்சியாளராக உள்ளார். அமெரிக்கக் கூடைப்பந்தாட்ட அணியில் இடம்பெற்றிருக்கும் வீரர்களில் பாதிக்கும் மேற்பட்டோர் ஒபாமா ஆதரவாளர்கள். இதனால் போட்டிக்கு முன்னிலையாகியிருந்தார் ஒபாமா.

போட்டி விறுவிறுப்பாகப் போய்க் கொண்டிருந்தது. வீரர்கள் விளையாடுவதை அனைவரும் ரசித்துப் பார்த்துக் கொண்டிருந்தனர். ஆனால் ஒபாமாவோ, தனது மனைவியின் பக்கம் திரும்பி திடீரென முத்தம் கொடுத்தார்.

இந்தக் காட்சியைப் பார்த்த அத்தனை பேரும் ஆச்சரியமடைந்தனர். பின்னர் 'ஹோ' வென குரல் எழுப்பினர். அடுத்த நான்கு ஆண்டுகளும் நீங்கள் தான் ஜனாதிபதி என்று தேர்தலில் மீண்டும் போட்டியிடும் ஒபாமாவுக்கு ஆதரவாகவும் குரல் எழுப்பினர். (வ)



*பிலிப்பைன்ஸ் வந்திருந்த கனடா வெளியுறவுத்துறை அமைச்சர் அல்பர்ட் டெல் ரோஸரியோ, அந்நாட்டு வெளியுறவு அமைச்சர் ஜோன் பைர்டை, மணிலாவில் சந்தித்துப் பேசினார்.*


# சோம்பேறிகள் பட்டியலில் முதலிடம் பிரிட்டனுக்கு

உலகின் சோம்பேறிகள் பட்டியலில் முதலிடத்தில் இருப்பவர்கள் பிரிட்டனைச் சேர்ந்தவர்கள்தான் என்பது அண்மைய ஆய்வொன்றின் மூலம் தெரியவந்துள்ளது. ஹார்வார்ட் மருத்துவக் கல்லூரி நடத்திய ஆய்வில், பிரிட்டனில் நாட்டினர் 63 சதவீதத்தினரும், பிரான்ஸில் 33 சதவீதத் தினரும், அமெரிக்காவில் 41 சதவீதத்தினரும் எவ்வித வேலையையும் செய்யாமல் சோம்பேறிகளாக இருக்கின்றனர் என்பது தெரியவந்துள்ளது.

2008ஆம் ஆண்டு தொடக்கம் 5.3 மில்லியன் பேர் உடல் உழைப்பு இல்லாததால் இறந்து போனதாகவும் தெரியவந்துள்ளது. ஹார்வார்ட் மருத்துவக் கல்லூரியின் மருத்துவர் இ மின் லீ என்பவர், பிரிட்டனின் மோசமான தட்ப வெப்பமும், விளையாட்டுக்கான உள்கட்டமைப்புக் குறைபாடுகளும் [illegible]ர்வமில்லாமல் மாற்றுகின்றது -என்றார். (வ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடகொரிய ஜனாதிபதியே இனி இராணுவத் தளபதி



முன்னாள் இராணுவத் தளபதி றீ யோங் ஹோ பதவியிலிருந்து நீக்கப்பட்டபின் இந் நியமனம் வழங்கப்பட்டுள்ளது.

வடகொரிய ஜனாதிபதி கிம் ஜோங் உன், இராணுவத் தளபதியாகத் தரமுயர்த்தப்பட்டுள்ளதாக வட கொரிய அரச ஊடகங்கள் அறிவித்துள்ளன. கடந்த வருடம் டிசெம்பர் மாதம் தனது தந்தை கிம் ஜோங் இல் காலமானதையடுத்து, கிம் ஜோங் ஜனாதிபதியானார்.

கடந்த ஞாயிற்றுக் கிழமை வடகொரிய இராணுவத் தளபதி றீ ஹோங் ஹோ, அந்தப் பதவியிலிருந்து நீக்கப்பட்ட நிலையில் ஜனாதிபதி கிம் ஜோங் இராணுவத் தளபதியாகத் தரமுயர்த்தப்பட்டுள்ளார்.

மார்ஷல் தரமானது வட கொரியாவின் அதி உயர் இராணுவப் பதவி நிலையாகும். வடகொரிய இராணு வத்துறை முழுமையாக கிம் ஜோங் கின்னின் கட்டுப்பாட்டுக்குள் வருவதை இது உறுதிப்படுத்தும்.

முன்னாள் ஜனாதிபதி கிம் ஜோங் இல்லும் மார்ஷலாக தரமுயர்த்தப்பட்டார். ஆனால் அவர் காலமானதன் பின் கடந்த பெப்ரவரி மாதமே இந்தப் பதவி வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, முன்னாள் இராணுவத் தளபதி றீ யோங் ஹோ பதவியிலிருந்து நீக்கப்பட்டபின் இராணுவ ஜெனரல் ஹையோன் ஹோய் சோல், வைஸ் மார்ஷலாக பதவி உயர்த்தப்பட்டுள்ளார். (வ)

# சிரியாவில் தற்கொலைத் தாக்குதல் பாதுகாப்புத்துறை அமைச்சர் சாவு

டமாஸ்கஸ், ஜூலை 20

சிரியாவில் நேற்று முன் தினம் இடம்பெற்ற தற்கொலைக் குண்டு தாக்குதலில், சிரிய ஜனாதிபதியின் மைத்துனரும் பாதுகாப்புத் துறை அமைச்சருமான தாவுத் ராஜ்ஹா (Daoud Rajha) கொல்லப்பட்டுள்ளார்.



சிரியத் தலைநகர் டமஸ்கஸில் உள்ள தேசிய பாதுகாப்பு மையத்தின் தலைமை செயலகத்தை குறிவைத்து இந்தத் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

சில உயர்மட்ட அரச அதிகாரிகளுடன், தாவுத் ராஜ்ஹா கூட்டமொன்றில் கலந்து கொண்டிருந்த போது இந்தத் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

சிரியாவின் புலனாய்வுத் துறைத் தலைவர் ஹிஷாம் இக்திகர், உள்துறை அமைச்சர் மொஹமட் இப்ராஹீம் அல்-ஷார் ஆகியோரும் படுகாயமடைந்துள்ளனர். சிரிய ஜனாதிபதி பஷார் அல் அசாத் இராணுவக் கட்டளைத் தளபதியாகச் செயற்படுகின்ற போதும், இராணுவத் துணைத் தலைமை அதிகாரியாகவும், பாதுகாப்புத் துறை அமைச்சருமாகவும் செயற்பட்டவர் தாவுத் ராஜ்ஹா.

இவ்வருட நடுப்பகுதியில் தாவுத் ராஜ்ஹாவை கொல்வதற்காக அவருடைய உணவில் விஷம் கலக்கப்பட்ட சம்பவம் நடைபெற்றிருந்ததும் குறிப்பிடத்தக்கது.

டமாஸ்கஸில் தாக்குதல்கள் தீவிரமடைந்துவருகின்ற சூழ்நிலையில் இந்தத் தாக்குதல் நடந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (வ)

# புகுஷிமா அணு உலையிலிருந்து எரிபொருள் நீக்கம்.

ஜப்பானில் கடந்த ஆண்டு மார்ச் மாதம் ஏற்பட்ட சுனாமியால் பாதிக்கப்பட்ட புகுஷிமா அணு உலையிலிருந்து எரிபொருள் நீக்கப்பட்டுள்ளது.

ஜப்பானில் கடந்த ஆண்டு மார்ச் மாதம் ஏற்பட்ட நிலநடுக்கமும் சுனாமியும் புகுஷிமா அணு உலையை சேதப்படுத்தியது.

இதனைத் தொடர்ந்து புகுஷிமா அணு மின் நிலையத்திலிருந்து எரிபொருளை நீக்கும் பணி மேற்கொள்ளப்பட்டது.

இந்தப் பணியில் 12 இற்கும் மேற்பட்ட நிபுணர்கள், வெள்ளைக் கவச உடை அணிந்து ஈடுபட்டனர்.

மிக மோசமாகப் பாதிக்கப்பட்ட அணு உலைப் பிரிவு 4இல் இருந்து எரிபொருள் கிரேன் மூலம் அகற்றப்பட்டது. ஒவ்வொன்றும் 12 அடி நீளம் கொண்ட இரண்டு எரிபொருள் கொண்ட உருளைகள் நீக்கப்பட்டன.

சுனாமியால் கடுமையாக பாதிக்கப்பட்ட டோக்கியோ எலெக்ட்ரிக் பவர் நிறுவனத்தின் அணு மின் நிலையத்திலிருந்து முதல் முறையாக அணு எரிபொருள் நீக்கப்பட்டுள்ளது.

இப்போது செயலிழக்கப்பட்ட எரிபொருள் உருளையில் எந்த அளவுக்கு பாதிப்பு உள்ளது என்பதை ஆராயப்போவதாக நிறுவன உயர் அதிகாரிகள் தெரிவித்தனர். (வ)

# முகபாவனைகளுடன் 'பெண்ரோபோ'; இத்தாலி விஞ்ஞானிகள் சாதனை

ரோம், ஜூலை 20

சிரிப்பு, பயம், கோபம், சோகம் என பல்வேறு முக பாவங்களை வெளிப்படுத்தும் பெண் ரோபோவை இத்தாலி விஞ்ஞானிகள் உருவாக்கி அசத்தியுள்ளனர்.

இத்தாலியில் உள்ள பைசா பல்கலைக்கழகத்தின் ஆராய்ச்சி மாணவர் நிகோல் லாசரி. இவரது தலைமையிலான குழு அற்புதமான ரோபோ ஒன்றை உருவாக்கியுள்ளது.

அச்சு அசலாக ஒரு பெண் போல வடிவமைக்கப்பட்டிருக்கும் இந்த ரோபோவுக்கு பெயர் ஃபேஸ். பொதுவாக ரோபோ என்றால் மெட்டல் முகத்துடன் இருக்கும். இது ஹியூமனாய்ட் வகையைச் சேர்ந்தது என்பதால், பிளாஸ்டிக், ரப்பர், கிளாஸ் பைபர் போன்றவற்றை பயன்படுத்தி மனிதத் தோல் போலவே இந்த பெண் ரோபோவை வடி மைத்துள்ளனர். ஆச்சரியம், மகிழ்ச்சி,



சோகம், பயம், கோபம் என பல விதமான உணர்ச்சிகளை முகபாவனையூடாக வெளிப்படுத்துவதுதான் இதன் சிறப்பு.

இதுபற்றி பைசா ஆய்வுக் குழுத் தலைவர் நிகோல் லாசரி தெரிவித் ததாவது:-

உலகம் முழுவதும் ரோபோக்கள், ஹியூமனாய்ட் ரோபோக்கள் தற்போது பிரபலமாகி வருகின்றன. இதில் வித்தியாசமாக ஏதாவது சாதனை படைக்க வேண்டும் என்ற எங்கள் எண்ணம் தற்போது நிறைவேறி உள்ளது. இது 30 ஆண்டு உழைப் புக்கு கிடைத்த வெற்றி. ஃபேஸ் ரோபோ தன் முகத்தில் பலவிதமான உணர்ச்சிகளை வெளிப்படுத்தும். நெற்றியை சுருக்கிக் கோபப்படும். வாயை அகல விரித்து சிரிக்கும். இதற் காக ரோபோவின் முகத்தில் 32 மினி மோட்டர்கள் பொருத்தப்பட்டுள்ளன. -என்றார். (வ)


## விற்பனைப் பிரதிநிதிகள் தேவை

**சுஜித் என்ரபிரைசஸ்**
டச்சுவீதி, சாவகச்சேரி

எமது நிறுவனத்திற்கு விற்பனைப் பிரதிநிதிகள் தேவை. ஆர்வமுள்ளவர்கள் நேரில் வரவும்.

மாதாந்தம் ரூபா 25,000-30,000 வரை சம்பாதிக்கலாம்.

★ தமிழில் சரளமாக பேச எழுதத் தெரிந்த ஆண், பெண் இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்.
★ வாடிக்கையாளர்களுடன் சிறந்த முறையில் பேச்சாற்றல் மிக்கவர்கள் விரும்பத்தக்கது.
★ உணவு மற்றும் தங்குமிட வசதி இலவசம்.

அலுவலக நாள்களில் காலை 7.30 மணி தொடக்கம் 8.30 மணி வரை சான்றிதழ்களுடன் வரவும்.

தொடர்பு: 021 227 0586, 077 059 0668


## 11 ஆவது ஆண்டு நினைவு தினம்



மண்ணில்
29*05*1944

விண்ணில்
20*07*2001

**அமரர் ஜே.எஸ்.சத்தியநாதன்**
(ஓய்வுபெற்ற கணக்குப் பதிவாளர் பனை அபிவிருத்திச் சபை)

சத்தியத்தின் குல விளக்கே
அன்பு நிறை அப்பாவே
மிருதுள்ளம் கொண்டவரே
மீட்டுகின்றோம் உம் நினைவை,
மிருதுளனால் நாமிங்கு!
ஏற்றங்கள் பல தந்தும்
ஏங்குகின்றோம் உம் நினைவால்....

"சத்யம்"
மாந்துங்கா லை,
அல்வாய் மேற்கு.
0776624408

ச.அன்னலட்சுமி (மனைவி), ச.யோன் சத்தியராஜன் (மகன்),
ச.செல்வி (மருமகள்), ச.யோன் மிருதுளன் (பேரன்)


## பணிப்பெண் தேவை

வீட்டு வேலைகள் அனைத்தும் செய்வதற்கு 30 - 40 வயதுக்குட்பட்ட பணிப் பெண் தேவை. தங்குமிட வசதியுண்டு.

தொடர்பு : 021 720 1103

(20800)(6-7-8)

## காணி விற்பனைக்குண்டு

கச்சாய் தமிழ்க்கலவன் பாடசாலைக்கு அருகில் கச்சாய் தோட்டம் மாரியான்காடு என்னும் 17 ஏக்கர் விஸ்தீரணம் கொண்ட தென்னை பயிரிடக்கூடிய காணி விற்பனைக்குண்டு.

தொடர்பு : 077 5227107

(20658)(6-7-45)

## இந்திய சாஸ்திரியார் வருகை

யாழ்ப்பாணப் புண்ணிய பூமிக்கு மீண்டும் வருகை தந்துள்ளார்

ஓம் சக்தி அருள் வாக்கு பெற்ற பரம்பரை ஜோதிடர்

**S.N. குமாரசாமி**

கைரேகை, ஜாதகம், எண்கணிதம் மற்றும் திருமணத்தடை, கல்வித்தடையா, குழந்தை பாக்கியம் மற்றும் புதிய தொழில் தொடங்க வேண்டுமா? தொழில் முன்னேற்றம் இல்லையா, குடும்பப் பிரச்சினையா ? வெளிநாடு செல்லத்தடையா ?, மன உளைச்சலா ? எந்தப்பிரச்சினைக்கும் நேரில் சந்திக்கவும்.

(காலை 9 மணி முதல் மாலை 5 மணிவரை)

பீப்பிள்ஸ் இன் (PEOPLE INN)

இல.112/1, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம்.
(பிள்ளையார் ஹோட்டல் முன்பாக)

T.P: 072 6816681, 0726816691

(20214) (6,7,8)

## தேவை

மில் வேலையில் அனுபவம் உள்ளவரும், இயந்திரத்தில் மா வறுப்பதில் அனுபவமுள்ள (பெண்) உதவியாளர் தேவை.

தொடர்பு: பிருந்தா மில்ஸ் No.18, நக்கா ரோட், யாழ்ப்பாணம். தொ.பே. 077 991 2304

## எமது சேவைகளாக

முழு உழுந்து பாதியாக்குதல் (50kg இக்கு மேல் 3.50) கொப்பறா தேங்காய் எண்ணெய் எடுத்தல் (50kg இக்கு மேல் 25/=) கச்சான் கோது நீக்குதல், ஈர அரிசி திரித்து வறுத்தல், உறைப்பு இல்லாத சரக்குத் தூள், சீயாக்காய், கோப்பி, கட்டைச் சம்பல் தூள், செவி,தூள், தானியங்கள் அரைத்தல் white coconut oil, நெல் உடைத்து தீட்டுதல், வறுத்த பயறு, உழுந்து கோது நீக்குதல், ஈர உழுந்து அரைத்தல், மேலும் அனைத்து அரைக்கும் சேவைகளும் செய்து தரப்படும்.

தொடர்பு: பிருந்தா மில்ஸ் No.18, நக்கா ரோட், யாழ்ப்பாணம்.

தொ.பே. 077 991 2304

(12884)(5-6-7)

## வேலை வாய்ப்புகள்

PAN GLOBAL RECRUITMENTS

| தொழில் | எண்ணிக்கை |
|---|---|
| 01. ஹைட்ரோ இயந்திரவியல் வடிவமைப்பு பொறியியலாளர் | 05 |
| 02. ஹைட்ரோ - இயந்திரவியல் மேற்பார்வையாளர் (வாகனம்) | 05 |
| 03. ஓயர் பொக்ஸ் திருத்துபவர் (டீசல் அன் ஹைட்ரோலிக்) | 10 |
| 04. ஹைட்ரோலிக் மெக்கானிக் | 15 |
| 05. Auto A/c தொழில்நுட்பவியலாளர் | 10 |
| 06. இண்டஸ்ரியல் A/c தொழில்நுட்பவியலாளர் | 05 |
| 07. இயந்திரம் பழுதுபார்க்கும் மெக்கானிக் (டீசல்) & ஹைட்ரோலிக் | 20 |
| 08. ரிங்கர் & ரெண்டர் வேலை | 10 |
| 09. Auto ஸ்பிரே பெயின்டர் | 10 |
| 10. டயர் பழுது பார்க்கும் தொழில்நுட்பவியலாளர் | 05 |

குறிப்பு : இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தால் அங்கீகரிக்கப்பட்ட கட்டணம்
QR 1 = SL: 35.00

நேர்முகத்தேர்வு யாழ்ப்பாணத்தில்!

*திகதி : 21.07.2012 (சனிக்கிழமை)*
*நேரம்: காலை 9.00 முதல் மாலை 5.00வரை*

★ இடம் : ஹோட்டல் லவுசியா
இல. 584, ஹொஸ்பிற்ரல் வீதி,
(வேம்படிச்சந்தி அருகில், யாழ்ப்பாணம்)

★ தங்குமிட, மருத்துவ, போக்குவரத்து வசதிகள் இலவசம் !
★ கடவுச்சீட்டு, புகைப்படங்கள் 2 (கடவுச்சீட்டு அளவு) மற்றும் அனுபவ சான்றிதழ்களுடன் நேரில் வரவும்.

(23602)(6-7-8)

பான் குளோபல் றிக்குறூட்மன்ற் (பிரை) லிமிடட்
ஆர்.ஏ.டி. மெல் மாவத்தை
கொழும்பு - 03
தொ.பே : 011 5300100/ 077 3012020/ 072 6700917

L.L. No: 1980

AL0000/00/00


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சோதனைகள் சாதனைகள் ஆகட்டும்

(4)


இது அவர்களுடைய வாழ்க்கையில் ஏற்பட்ட மிகப் பெரிய சோதனை என்பதில் சந்தேகம் இல்லை. வகுப்புக் கலவரங்களால் நெருக்கமான உறவினர்களை இழந்தவர்கள் பலரும் இருந்தார்கள்.

அந்த நிலையிலும், அவர்கள் மனோ தைரியத்தைக் கைவிடாமல் தங்கள் வாழ்க்கையை மீண்டும் உருவாக்கிக் கொள்ளும் முயற்சிகளில் ஈடுபட்டார்கள். சிலர் சிறிய முதலீட்டில் தொழில் தொடங்கி பின்னர் விடாமுயற்சியின் விளைவாக பெரிய தொழில் அதிபர்கள் ஆனார்கள்.

சிலர் திரைப்படத் துறையில் ஈடுபட்டு பெரிய பட முதலாளிகள் ஆனார்கள். ஓரிருவர் நடிப்புத் துறையில் ஈடுபட்டு நட்சத்திர அந்தஸ்துக்கு உயர்ந்தார்கள். இவ்வாறு பல உதாரணங்களை அடுக்கிக் கொண்டே போகலாம். ராஜீவ் காந்தியின் அமைச்சரவையில் இடம்பெற்று செல்வாக்குடன் விளங்கிய ஜெகதீஷ் டைட்லர், பாகிஸ்தான் பிரிவினையின் போது அகதியாக இந்தியாவிற்கு வந்தவர்தான் என்பது குறிப்பிடத்தக்கது.

ஆகவே பாகிஸ்தான் பிரிவினையின் போது இங்கு அகதிகளாக வந்த பலர், தங்களுக்கு ஏற்பட்ட சோதனைகளை வென்று, சமூக அந்தஸ்துடன் வாழ்கின்ற நிலையைப் பெற்றார்கள்.

அவர்களுக்கு ஏற்பட்ட கஷ்டங்களையும் சோதனைகளையும் விவரித்தால் அதுவே ஒரு தனிப் புத்தகமாய் அமையும். தங்களுக்கு ஏற்பட்ட சோதனைகளை அவர்கள் ஒரு சவாலாக ஏற்றுக்கொண்டார்கள். தம்முடைய வாழ்க்கையில் ஒரு மறுமலர்ச்சி காண வேண்டும் என்கிற நம்பிக்கையுடன் உழைத்தார்கள். அவர்களின் உழைப்பும் வீண் போகவில்லை.



நம்மைப் போன்ற தனிநபர்களுக்கு வாழ்க்கையில் சோதனைகள் ஏற்படும் போது, பிரிவினை சமயத்தில் இந்தியாவிற்கு வந்தவர்களை எண்ணிக் கொண்டால் நமக்கு ஏற்படும் சோதனைகள் மிகச்சாதாரணமானவை என்பது விளங்கிவிடும்.

இரண்டாவது உலகப் போரின் போது, பர்மாவிலிருந்து பல அகதிகள் இந்தியாவிற்கு வந்தார்கள். தங்களுடைய சொத்துக்களை எல்லாம் அங்கேயே விட்டுவிட்டு, கிடைத்ததை மட்டும்கையில்எடுத்துக்கொண்டு இந்தியாவிற்கு வந்தார்கள். சிலர் கையில் எதுவித பணமும் இல்லாமல் வந்தார்கள்.

அவர்களில் பலர் தொழில் தொடங்கி வாழ்க்கையும் வளமும் பெற்றார்கள். வேறு சிலருக்கு கடைகள் திறக்க அரசு உதவி செய்தது. அவர்கள்தான் இன்று பர்மா பஜார் என்கிற பெயரில் முதல் லைன் பீச்சில் பெரிய அங்காடியை நடத்திக் கொண்டிருக்கிறார்கள்.

இவர்களெல்லாம் எத்தனையோ சோதனைகளைச் சந்தித்து வாழ்க்கையில் வெற்றி பெற்றவர்கள் என்பதை நாம் மறந்துவிடக்கூடாது. இந்த அகதிகள் சந்தித்த சோதனைகள் மிகக் கடுமையானவை. இருந்தும் தங்களுடைய விடாமுயற்சியாலும், சலியாத உழைப்பினாலும் மகத்தான வெற்றிகளைக் கண்டார்கள்.

அகதிகள் மட்டுமல்ல, சில மாநிலத்தைச் சேர்ந்தவர்களும் கடுமையான உழைப்பாளிகளாக விளங்குகிறார்கள். தங்கள் முயற்சிகளில் எத்தனை சிக்கல்கள் ஏற்பட்டாலும், அவற்றைச் சமாளிக்கின்ற மன உறுதியினைப் பெற்றவர்களாக இருக்கிறார்கள். பஞ்சாப் மாநிலத்தவரிடமும் இந்த உறுதியினைப் பார்க்க முடியும்.

இந்தியாவில் பல பகுதிகளிலும் பஞ்சாபியர்கள் தொழில் தொடங்கி நடத்தி வருவதைப் பார்க்கலாம். கடுமையாக உழைப்பதற்கு கொஞ்சமும் சளைக்காதவர்கள் இவர்கள். பல்வேறு தொழில்களையும் இவர்கள் வெற்றிகரமாக நடத்திக் கொண்டிருக்கிறார்கள். இவர்களுக்கெல்லாம் வாழ்க்கையில் சோதனைகளே ஏற்படவில்லை என்று சொல்லிவிடமுடியாது. சோதனைகளை வாழ்க்கையில் சந்திக்க வேண்டிய விடயமாக ஏற்றுக்கொண்டவர்கள் இவர்கள். இதனாலேயே இந்தியாவின் எந்தப் பகுதியிலும் வெற்றிகரமாக இவர்களால் தொழில்செய்ய முடிகிறது.

கேரளத்தைச் சேர்ந்தவர்களிடம் சோதனைகளைச் சந்தித்து வெற்றிபெறுகின்ற மனோபாவம் இருக்கிறது. தங்களுடைய சொந்த மாநிலத்தை விட்டு பல்வேறு பகுதிகளுக்கும் சென்று, வெற்றிகரமாக வாழ்க்கையியை அமைத்துக்கொள்ளும் திறமை அவர்களுக்கு இருக்கிறது. தவிர எந்தத் தொழில் செய்வதையும் அவர்கள் கேவலமாக கருதுவது கிடையாது. ஏற்படுகின்ற கஷ்டங்களைப் பொறுமையுடன் தாங்கிக் கொள்கிறார்கள். சோதனைகள் அவர்களுக்கு ஒரு பொருட்டே அல்ல.

-பி.சி.கணேசன்- (தொடரும்)



# மாணவர்களின் கற்றல் செயற்பாட்டுக்கு சூழல் பொருத்தமாக இருக்க வேண்டும்

## யாழ்ப்பாணக் கல்லூரி பரிசளிப்பு விழாவில் உரை

வட்டுக்கோட்டை, ஜூலை 20

மாணவர்களின் கற்றல் செயற்பாடுகளுக்கு அக-புறச் சூழல் பொருத்தமானதாக இருக்க வேண்டும். இந்த இரு தேவைப்பாடுகளையும் ஒருங்கே பூர்த்தி செய்து சர்வதேச தரத்தில் இயங்கும் பாடசாலையாக வட்டு. யாழ்ப்பாணக் கல்லூரி விளங்குகின்றது.

இதனால் இங்கு படிக்கும் மாணவர்கள் சௌபாக்கியம் பெற்றவர்கள் என்று டாக்டர் குருஷாமி சுஜாகரன் தெரிவித்தார்.

வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியின் வருடாந்த பரிசளிப்பு விழா கல்லூரி முதல்வர் நோயல் ஏ.விமலேந்திரன் தலைமையில் நடைபெற்றது. இதில் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு உரையாற்றும் போதே சுஜாகரன் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி இலங்கையில் குறிப்பிட்டுக் கூறக்கூடிய கல்லூரிகளில் ஒன்று. அதிலும் சர்வதேச பாடசாலைகளின் ஒழுங்கு விதிகளுக்கு அமைய, கல்வி- கலை- கலாசாரம் விளையாட்டு மற்றும் ஏனைய சகல விழுமியங்களுடனும் இயங்குகின்றது. இந்தப் பாடசாலையில் கல்வி கற்று தேறியவர்களும் இன்று கல்வி கற்போரும் ஏதோ ஒரு விதத்தில் எதிர்காலத்தில் சமூகத்திற்கு பணியாற்றுபவர்களாகவே இருப்பர்.

**இந்தப் பாடசாலையில் கல்வி கற்று தேறியவர்களும் இன்று கல்வி கற்போரும் ஏதோ ஒரு விதத்தில் எதிர்காலத்தில் சமூகத்திற்கு பணியாற்றுபவர்களாகவே இருப்பர்.**

மேலும் மாணவர்கள் ஒவ்வொருவரும் தமது திறமைகளை வெளிப்படுத்த முன்வரவேண்டும்.

மாணவர்கள் திறமைகளை வெளிப்படுத்தாது, தாழ்வு மனப்பாங்குடன் செயற்பட்டால் அவர்கள் வாழ்வில் பெரும்பாலும் தோல்வியையே சந்திக்க நேரிடும்- என்றார்.

இதில் கல்வியிலும் தனி விளையாட்டு, குழு விளையாட்டுப் போட்டிகளிலும் சிறப்பாக செய்றபட்ட 23 மாணவ மாணவிகள் சுஜாகரனால் தங்கப் பதக்கங்களும் கலர்ஸ் விருதுகளும் வழங்கி கௌரவிக்கப்பட்டனர்.

தொடர்ந்து அன்னப்பா ஜெயராஜன், வண.டி.எஸ்.சொலமன், வண.ஜி.நடராஜா, ஏ.சி.பிரான்சிஸ், என்.வி.ஜெயக்குமார் ஆகியோர் தலைமைகளில் 5 கட்டங்களாக பரிசளிப்பு நிகழ்வும் இடம்பெற்றது. (எ-50)

## கலாசார போட்டி முடிவுகள்

இலங்கை சமுர்த்தி அதிகார சபையின் ஏற்பாட்டில் காரைநகர் பிரதேச செயலர் பிரிவில் சமுர்த்தி சிறுவர் கழகங்களுக்கிடையே நடத்தப்பட்ட இலக்கிய மற்றும் கலாசாரப் போட்டி முடிவுகள் காரைநகர் பாடசாலைகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. இந்தப் போட்டிகளில் முதல் மூன்று இடங்களையும் பெற்ற மாணவர்களின் விவரம் வருமாறு.

**மேற்பிரிவு**

1ஆம் இடம் (சுந்தரமூர்த்தி நாயனார் வித்தி.)

**பேச்சு மேற்பிரிவு**

1ஆம் இடம் ந.டினோஜா (தியாகராசா ம.ம.வி.),2ஆம் இடம் மோ.துர்சிகா (யாழ்ற்றன் கல்லூரி), 3 ஆம் இடம் த.திருமகள் (யாழ்ற்றன் கல்லூரி)

**மத்தியபிரிவு**

1ஆம் இடம் சி.விசாலினி (கலாநிதி ஆ.தியாகராசா ம.ம.வி), 2ஆம் இடம் ச.கஜமாலன் (சுந்தரமூர்த்தி நாயனார் வித்தி.),3 ஆம் இடம் செ.பிரசாந்தன் (சுந்தரமூர்த்தி நாயனார் வித்தி.)

**கீழ்ப்பிரிவு**

1ஆம் இடம் சி.தமிழினி (யாழ்ற்றன் கல்லூரி), 2ஆம் இடம் பி.ரேந்தினி (யாழ்ற்றன் கல்லூரி), 3 ஆம் இடம் த.கிருஸ்சிகா (சுந்தரமூர்த்தி நாயனார் வித்தி.)

**நாடகம்**

**மேற்பிரிவு**

1ஆம் இடம் (கலாநிதி ஆ.தியாகராசா ம.ம.வி.)

**ஓவியம்**

**கீழ்ப்பிரிவு**

1ஆம் இடம் ந. சோபனா (வியாவில் சைவ வித்தி.), 2ஆம் இடம் ச.சஞ்சீவன் (சுந்தரமூர்த்தி நாயனார் வித்தி.), 3 ஆம் இடம் ர.தனுசன் (வியாவில் சைவ வித்தி.)

**மத்திய பிரிவு**

1ஆம் இடம் க.கஜந்தன் (யாழ்ற்றன் கல்லூரி), 1ஆம் இடம் தே.நிலுஜன் (வியாவில் சைவ வித்தி.), 2 ஆம் இடம் சி.காருண்யன் (யாழ்ற்றன் கல்லூரி) 3 ஆம் இடம் சு.கடல்வேந்தன் (யாழ்ற்றன் கல்லூரி)

**மேற்பிரிவு**

1ஆம் இடம் வி.பிரசாந் (சுந்தரமூர்த்தி நாயனார் வித்தி.), 2ஆம் இடம் பா.நிதர்சன் (தியாகராசா ம.ம.வி.),3 ஆம் இடம் வி.றெதுஜன் (சுந்தரமூர்த்தி நாயனார் வித்தி.)

(தொடரும்)




அகில இலங்கை ரீதியிலான தமிழ்த்தினப் போட்டியில் வில்லுப்பாட்டுப் போட்டியில் முதலாமிடத்தைப் பெற்ற யாழ்.சென்.ஜோன்ஸ் கல்லூரி மாணவர்கள் கடந்த செவ்வாய்க்கிழமை கல்லூரி சமூகத்தினரால் கௌரவிக்கப்பட்டனர். கல்லூரி அதிபர், முகாமையாளர், ஆசிரியருடன் வெற்றியீட்டிய மாணவர்கள். (எ)

# பாடசாலை வரவை பின்பற்றத் தவறினால் மாணவர் கல்வியில் பின்னடைவர்

## கரவெட்டி கோட்டக் கல்விப்பணிப்பாளர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 20

மாணவர்கள் பாடசாலைக் காலத்தில் சீரான வரவை பின்பற்றத் தவறினால், கல்வியில் பின்னடைவைச் சந்திப்பதுடன் இணைபாடவிதான செயற்பாடுகளையும் பின்பற்ற முடியாமல் பரீட்சைக் காலத்தில் பல இடர்பாடுகளைச் சந்திக்க நேரிடும்.

ஏனெனில் பாடசாலை வரவு என்பது மாணவரின் நடத்தையைத் தீர்மானிப்பது மட்டுமல்லாது கல்விச் செயற்பாடுகளை ஊக்குவிப்பதாகவும் அமையும் என்று கரவெட்டி கோட்டக் கல்விப் பணிப்பாளர் சி. நற்குணலிங்கம் தெரிவித்தார்.

வதிரி திரு இருதயக் கல்லூரி தினமும் பரிசளிப்பு விழாவும் அண்மையில் நடைபெற்றன. இந்த நிகழ்வுகளில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றும் போதே நற்குணலிங்கம் இவ்வாறு தெரிவித்தார் .

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:-

பாடசாலைகளில் தற்போது நடைபெறுவது தேர்ச்சி மையக் கல்வி ஆகும். இந்தக் கல்வி முறையின் நோக்கம் மாணவர்களின் அறிவுத்திறனை மட்டுமல்லாது வாழ்க்கைக்கான பயிற்சிகளையும் இணைந்து வழங்குவதேயாகும். அத்துடன் மாணவர்களின் வரவு முக்கியமான ஒன்றாகும். பாடசாலை நாள்களில் தவறாது பாடசாலைக்கு சமுகம் கொடுத்து கற்றல் செயற்பாடுகளில் தம்மை ஈடுபடுத்த வேண்டும்.

மாணவர்கள் பாடசாலை வரவை ஒழுங்கீனமாக வைத்துக் கொள்ளும் போது, பாடசாலையில் இருந்து விலகி கல்வி மற்றும் இணைபாடவிதான செயற்பாடுகளில் தம்மை ஈடுபடுத்த முடியாதவர்களாக மாற்றப்படுவார்கள். அத்துடன் நல்ல பழக்கவழக்கங்களைப் பின்பற்றத் தவறி, தவறான நடத்தைகளைப் பின்பற்றத் தொடங்குவார்கள்.

எனவே பாடசாலைக் காலத்தில் மாணவர்கள் தமது கல்வியை முன்னிலைப்படுத்தி அதிபர், ஆசிரியர்கள், பெற்றோர்களுக்கு கீழ்ப்படிந்து அவர்கள் வழிகாட்டல்களைப் பின்பற்றி ஒழுக்கத்திலும் கல்வியிலும் உயர்ந்த நிலையை அடைய வேண்டும்- என்றார். (எ -14-253)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன் தொடர்புகளுக்கு

**தலைமையகம்:**
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
**தொலைபேசி:**021-222 9933, 222 9944, 5679933, 5679944
விளம்பரம்:021-5671111
விநியோகம்: 021-5677222
**தொலைநகல்**
செய்தி: 021-5678844,
விளம்பரம்: 021-2229731

**மின் அஞ்சல்**
செய்தி : news@uthayan.com
கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

**வன்னிப் பணிமனை:**
ஏ-9 வீதி, கரடிப்போக்கு,
கிளிநொச்சி (புனித திரேசா வித்தி. முன்பாக)
தொலைபேசி: 021 228 0065
தொலைநகல்: 021 228 0066
**நெல்லியடிக் கிளை:**
பிரதான வீதி, நெல்லியடி (HNB அருகே)
தொலைபேசி : 021-2262789, 021 226 2395
**சாவகச்சேரிக் கிளை:**
நவீன சந்தை மேல்மாடி,
சாவகச்சேரி
தொலைபேசி: 021 227 0323

விளம்பர முகவர்கள்: 'சதா பொன்ஸ்' –மாலு சந்தி, அல்வாய் : 021 226 3206, 'நெல்லியடி மொடேன் ஸ்ரோர்ஸ்' – பஸ் நிலையம், நெல்லியடி : 021 490 1519, 'மீசாலை கஜானன்' – கண்டி வீதி, மீசாலை தெற்கு : 021 227 0399, 'மன்னார் சிவசாந்தி' – தாழ்வுபாடு வீதி, மன்னார் : 0752824478, 'கொடிகாமம் அருள்நாயகி' – பஸ் நிலையம், கொடிகாமம் : 0774937585, 'மல்லாவி புவனேஸ்வரி புத்தகசாலை' – மத்திய சந்தையடி, மல்லாவி : 0778175116, 'கோபி எலைக்சிற்றி' – முல்லைத்தீவு நகர் : 0779598917, 'அன்பரசன்' – சிவன் கோயிலடி, ஒட்டுசுட்டான் : 0775035571, 'சுஹாரவல்ஸ்' – 98, பிரதான வீதி, மன்னார் : 023 222 3311

## சொல்வது ஒன்று செய்வது வேறொன்று

விடுதலைப் புலிகள் இயக்கத்தில் இருந்து இறுதிப் போரின் பின்னர் படையினரிடம் சரணடைந்தவர்களில் சுமார் 11 ஆயிரம் பேருக்கு புனர்வாழ்வு வழங்கி அவர்களை சமூகத்தில் தான் இணைத்துள்ளது என்று அரசு கூறுகின்றது. உலக அரங்கில் கெட்டுப் போயுள்ள தனது பெயரைத் தூக்கி நிறுத்துவதற்கான ஒரு தந்திரமாக இந்தக் கூற்றை அரசு அடிக்கடி பயன்படுத்தி வருகின்றது.

ஆனால், சமூகத்தில் இணைய விடப்பட்ட முன்னாள் போராளிகள் நிம்மதியாக வாழ வழியேற்பட்டுள்ளதா என்றால் பதில் எதிர்மறையானதாகத்தான் இருக்கிறது.

சமூகத்தில் மீள இணைக்கப்பட்டபோது முன்னாள் போராளிகளில் பலர் அவர்களது சொந்தச் சமூகத்தினாலேயே புறக்கணிக்கப்பட்டனர். இவர்களுடன் பேசுவதும் பழகுவதும் எதிர்காலத்தில் தமக்கும் பிரச்சினை ஆகிவிடுமோ என்று அஞ்சிய உறவுகள் பல ஒதுங்கிக் கொண்டன. இதில் கடுமையாகப் பாதிக்கப்பட்டவர்கள் முன்னாள் பெண் போராளிகளே! அதிலும் திருமணம் செய்து கணவனின் நிலை தெரியாத அல்லது இறந்து போன பெண் போராளிகளின் நிலை சொல்லும் தரமன்று.

வேறு சில போராளிகள் அந்தந்தப் பகுதி இராணுவ முகாம்களில் வாராந்தமோ மாதாந்தமோ கையெழுத்திட வேண்டும் என்று துன்புறுத்தப்பட்டார்கள். இதனால் பலர் வெளி மாவட்டங்களுக்குத்தானும் சென்று தொழில் செய்ய முடியாமல் திண்டாடினார்கள்.

பின்னர் முன்னாள் போராளிகளுக்கு வழங்கப்பட்ட அடையாள அட்டைகள் திரும்பப் பெறப்பட்டன. இவர்கள் புனர்வாழ்வு பெற்று விடுதலையானவர்கள் என்பதை உறுதிப்படுத்தும் விதத்தில் ஐ.ஓ.எம். என்ற சர்வதேச தொண்டு நிறுவனத்தால் இந்த அடையாள அட்டைகள் வழங்கப்பட்டிருந்தன. அவை பிடுங்கப்பட்டபோதே தமக்கு எதிர்காலத்தில் ஏதோ ஆபத்து இருக்கின்றது என்று போராளிகள் அச்சப்பட்டார்கள். உறவினர்கள் ஆதங்கப்பட்டார்கள்.

இப்போது வன்னியில் நட்டாங்கண்டல், வன்னிவிளாங்குளம், பாண்டியன்குளம் போன்ற இடங்களில் மோட்டார் சைக்கிள்களில் வரும் மர்ம நபர்கள் போராளிகளைத் தாக்கியுள்ளனர். விசாரணை என்ற பெயரில் இவர்கள் தாக்கப்பட்டுள்ளார்கள். தாக்கப்பட்டது பற்றி வெளியே தகவல் தெரிவிக்கக்கூடாது என்றும் மிரட்டப்பட்டுள்ளார்கள்.

இறப்புச் சடங்குகள், பூப்புனித நீராட்டு விழாக்கள், பிறந்தநாள் நிகழ்வுகளைக்கூடத் தமக்குச் சொல்லிவிட்டுத்தான் செய்ய வேண்டும் என்று இறுக்கமான கட்டுப்பாடுகளை இராணுவம் விதித்து வைத்திருக்கும் வன்னியில், அவர்களுக்குத் தெரியாமல் யாரோ சிலர் மோட்டார் சைக்கிள்களில் வந்து போராளிகளை பொது இடம் ஒன்றுக்கு அழைத்து விசாரணை நடத்தி தாக்கியும் விட்டுச் செல்ல முடிவது இராணுவத்துக்குத் தெரியாமல் நடக்க முடியாது.

எனவே போராளிகள் சொல்வது போன்று படைப் புலனாய்வாளர்கள்தான் அவர்களைத் தாக்குகிறார்கள் என்பதை மறுப்பதற்கு முகாந்திரங்கள் ஏதுமில்லை. தாக்கியதை வெளியே சொல்லக்கூடாது என்று கூறித்தான் போராளிகள் தாக்கப்பட்டிருக்கிறார்கள்.

இந்த லட்சணத்தில்தான் அரசு வெளி உலகுக்கு முன்னாள் போராளிகள் 11 ஆயிரம் பேரை வழக்கு விசாரணை ஏதுமின்றி சமூகத்துடன் இணைத்து பெரும் சேவை செய்திருக்கிறோம் என்று பறைசாற்றி வருகின்றது.

# வலியுணர்ந்தோரே வழிவிடுங்கள்

■ செந்தூரி

"உங்களைப் பார்த்தால், எனக்கு வெட்கமடைவதைத் தவிர வேறு வழியில்லை"! இரட்டைப் பதவிகளுக்காக ஆசைப்படுவது எவ்வளவு பெரிய அரச துரோகம் தெரியுமா? இரண்டு தினங்களுக்குள் புதிய பதவியை கடமைப் பொறுப்பேற்பதாயின் பொறுப்பெடுங்கள் அல்லது திணைக்களத் தலைவர் ஊடாக, நியமன அதிகாரிக்கு கடிதங்களை மீளக் கையளியுங்கள்" என்று கடும் தொனியிலான மேற்படி எச்சரிக்கை வாசகங்கள் சாரப்படும் சுமார் அரைமணி நேரத்தை அண்மித்ததான அனல் உரையை "ஆற்றி" ஊற்றியவர் வடமாகாண சபையின் உயர் பெண்மணி!

வாசித்தலைத் தவிர மற்றெல்லாவற்றையும் இலகுவாகச் செய்து விடமுடிகின்ற, யாழ்.நூலகத்தின் கேட்போர் கூடத்தில் பிற்பகல் பொழுதொன்றில் ஏற்கனவே அரச சேவையில் உள்ளவர்களில் பட்டதாரிப் பயிலுநருக்கான நியமனக் (?) கடிதத்தை பெற்று இன்னமும் கடமையை பொறுப்பேற்காதவர்களுக்கான சந்திப்பில் ஆற்றப்பட்டதே இந்த வரலாற்றுச் சிறப்புமிக்க எழுச்சியுரை.

கூட்டத்திற்கான அழைப்பு திணைக்களங்களுக்கூடாக அவசர அறிவித்தலாக விடுக்கப்பட்டதும், பங்குபற்றும் அரச உத்தியோகத்தர்களின் பெயர் விவரங்களை "ஆலாய் பறந்து" திரட்டும் பணிகளும் முதல் நாளே இடம்பெற்றதுமான காரணங்களினால் அரைவாசிக்கும் குறைவான தொகையினரே கலந்து கொள்ள முடிந்தது. "மண்ணாசையில், துரியோதனனுக்கு ஒரே ஒரு போட்டியாளனாகும்" தகைமையைத் தன்னுள் கொண்டுள்ள 'கௌரவ' ஆளுநரே மேற்படி மிரட்டல் கூட்டத்தின் மூத்த விருந்தினராகவும் கலந்து கொண்டமை ஆழ்ந்து கவனிக்கப்பட்ட விடயம்!

தேர்தல்களின் வாக்கு வங்கியை பலப்படுத்தும் மறைவெண்ணத்தை மனதில் கொண்டு நாடளாவிய ரீதியில் வழங்கப்பட்ட பட்டதாரி பயிலுநர் நியமனங்களில் வடமாகாணத்திற்குட்பட்ட இளைஞர்களிடம் மென்போக்கை கடைப்பிடிக்க வேண்டிய தேவை அவ்வளவு, அத்தியாவசியமானதோ, அவசரமானதோ இல்லை என்பது 'அவர்களின்' கணிப்பு!

ஏறத்தாழ காலவரையறையின்றி ஒத்திப் போடப்பட்டுள்ள வடமாகாண சபைக்கான மக்கள் பிரதிநிதிகளை தெரிவு செய்வதற்கான தேர்தல், பற்றிய அறிவிப்புக்கள் அதிகார மட்டங்களின் குறுகிய முகங்களை இன்னும் ஒரு படை 'பவுடர்' பூசி இறுக்கமடையவே செய்துள்ளன.

"யாவரும் துன்புற்றிருக்க வேண்டுவதன்றி, வேறொன்றறியேன் பெரியவரே!" என்று, மக்கள் பிரதிநிதிகள் இல்லாத இந்தக் காலப்பகுதிகளுக்குள் மாகாண சபையும், அதற்குட்பட்ட அமைச்சுக்களும், திணைக்களங்களும் போடும் "குத்தாட்டங்கள்" எம்மக்கள் யாவரும் நன்கறிந்தவைகளே!

அரியாலை அலுவலகத்துப் பெரியோனின், "நயன தீட்சை" பெற்றிட்ட மாத்திரத்திலேயே, வேண்டுவன வேண்டியவாறு கைவரப் பெறுங் கலை சகலருக்கும் இலகுவில் வாய்த்து விடுவதில்லை. மறுபடியொரு முறை, 'அவர்' சப்பாத்து நூல் அவிழக்கூடாதா? அதை 'இறுக' கட்டிவிடும் பாக்கியம் எனக்கே கிட்டிவிடக் கூடாதா? என்று முப்பொழுதும் "இதே" கற்பனைகளில் உலாவுவோரே அதிகார ஆசனங்களை ஆக்கிரமித்துள்ள பெரும்பான்மையோர்! "நமக்கு வாய்த்த அடிமைகள், மிகவும் திறமைசாலிகள்" என்று நிலைக் கண்ணாடி முன்பாக 'அவர்' தன்னைத்தானே வெகுவாக சிலாகித்துக் கொள்ளுமளவுக்கு நம்மவர்களின் நட்டுவாங்கங்கள் தாளம் தப்பியதேயில்லை.

இந்த வெட்கங்கெட்ட கதைகளின் முதன்மை அத்தியாயங்கள் யாவற்றையுமே பக்கம் பக்கமாக ஆழ்வாசிப்புச் செய்தவர்கள் அந்தந்த அலுவலகங்களின் சாதாரண அலுவலகர்கள் தான். சாப்பாட்டு மேசைகளிலும், தேநீர் கோப்பைகளிலும், [illegible] அதிகார மட்டங்கள் பற்றிய விமர்சன விண்ணாணங்கள் அவர்களில் பலரை 'எதையும் தாங்கும் இதயங்களாகவும், 'அகழ்வாரையும் தாங்கும் நிலமாகவும்', சினம் கொன்று சிரிக்கும் செவ்வாய்களாகவும், 'அடுத்தது கூறும் தீர்க்கதரிசிகளாகவும்" ஆக்கி வைத்திருப்பதை அடிக்கடி பரிமாறுவாள் தோழியொருத்தி. இதே அலுவலர் குழாமிலிருப்பவர்களே, அன்றைய கூட்டத்திற்கு பலியாடுகளாக அழைத்து அறுத்து விடப்போவதாக மிரட்டப்பட்டவர்கள்.

தமது மேலதிகாரிகள் மனுதர்மத்திற்கும், நீதிக்கும், நியாயத்துக்கும், நேர்மைக்கும் எதிராகச் செயற்படுவதை சொல்லளவிலேனும் எதிர்க்கும் விம்பமொன்றை தமக்குள் சுமப்பவர்கள் சரியாகவும் மனச்சாட்சிக்கு விரோதமில்லாமலும் தாங்கள் எடுக்கின்ற முடிவுகளை, செயல்வடிவமாக்க விடாமல் தடுப்பது தத்தமது அதிகாரிகளின் மனோபாவமே என்கின்ற தொனியில் 'குணசித்திர' வேடமொன்று தாங்கி, அலுவலக நேரங்களில் வில்லனாகவும், ஆறுதலான பிற்பகல் பொழுதுகளில் ஹீரோவாகவும் பேசித்துடிக்கும் பலரை பார்த்திருக்கின்றோம்.

பட்டதாரிகள் ஆன போதிலும், பாடசாலைக் கல்வித் தகைமையே ஆகக்கீழ் தகுதியாகக் கொண்ட 'முகாமைத்துவ உதவியாளர்கள்' என்கின்ற பதவிப்பெயர்களுக்குள் தம்மை இறுக்கி அடைத்து அரச சேவையொன்றைப் பெற்று விட்டதற்கான பெருமூச்சு விட்டவர்களின், இன்றைய அவதாரம் கொஞ்சம் இளக்காரமானதுதான்.

பட்டதாரி பயிலுநர் என்கின்ற ஆறுமாத காலப் பயிற்சிக்குப் பின்னால் நிரந்தர பதவிநிலையுள்ள நியமனமொன்றை பெற்றுக் கொள்பவர்களுக்கும், இன்றைய முகாமைத்துவ உதவியாளர் சேவையிலுள்ளவர்களுக்குமான அடிப்படைச் சம்பள வித்தியாசம் வெறும் எண்ணூற்று சொச்ச ரூபாய்களே!

ஆயிரத்திலும் குறைவான ரூபாய்களில் அளவிடக் கூடிய மேற்படி பதவி மாற்றத்தினை கீழுழைப்பு பட்டதாரிகள் எனும் சொல்லினால் பிரதியீடு செய்து தம்மை நியாயப்படுத்திக் கொள்ளுமளவுக்கு, இவர்களுக்கு வழங்கப்படக் கூடும் என்று எதிர்பார்க்கப்படுகின்ற நிகழ்ச்சித்திட்ட உதவியாளர் என்கின்ற பதவிப் பெயருக்குரிய சேவை, வடமாகாணத்தைத்தவிர வேறெங்கும் கிடையாதுஎன்பதும், நிகழ்ச்சித்திட்ட உதவியாளர் பதவிக்கென்று தனியான 'சேவைப் பிரமாண குறிப்பு' இந்த நொடிவரை ஏற்படுத்தப்படவில்லை என்பதும் அவர்களே நன்கறிந்த சங்கதிகள்!

பயிலுநர்களுக்கான தற்காலிக இணைப்புக் கடிதங்களைப் பெற்று இன்றுவரை கடமையைப் பொறுப்பேற்காத முகாமைத்துவ உதவியாளர் போன்ற கீழுழைப்பு(?) சேவைகளில் உள்ளவர்களின் ஒரேயொரு நியாயமான வாதம் "மத்திய அரசாள்கைக்குட்பட்ட மாவட்ட செயலாளரினால், ஒப்பமிட்டு வழங்கப்பட்டுள்ள கடிதங்களை மீள ஒப்படைக்குமாறு, மாகாண சபை அதிகாரி மட்டங்களில் உள்ளவர்கள் எவ்வாறு கேட்கலாம்?" என்பது மட்டுமே! ஆனால் நிரந்தரமாக்கப்படும் பட்டதாரி நியமனத்திற்கான ஆசையை தூரத்தூக்கியெறிய முடியாமலும், இப்போது கிடைக்கின்ற இருபத்தி மூன்றுக்கு அண்மித்த திரட்டிய சம்பளத்தை கோட்டைவிட முடியாமலும் கூழுக்கும், மீசைக்கும் ஏக நேரத்தில் ஆசைப்படுபவர்களின் கதாநாயக வேஷம், வெளியில் இருந்து வேலை கேட்டுப் போராடுகின்ற டிப்ளோமாதாரிகளின் நியாயமான கோஷங்களின் முன்னால் வெறுமையாகியே போகும்.

ஏனைய மாகாணங்களில் உயர் தேசிய டிப்ளோமா உடையவர்களையும், பட்டதாரி பயிலுநர்களாக சேர்த்துக் கொண்டதன் பின்னணியில் வடமாகாணத்தில் மட்டும் அவர்கள் தவறவிடப்பட்டதன் முக்கிய காரணமாக நாடளாவிய ரீதியிலான எண்ணிக்கையே சொல்லப்படுகின்றது. கேட்கின்ற யாவருக்கும் பட்டதாரி நியமனத்தை கொடுத்து விடுவதாயின் ஏனைய மாகாணங்களை விட, அரச செயல்திட்டங்களுக்கு மேலதிகமான விகித எண்ணிக்கையில் ஆள்சேர்ப்பு செய்யப்பட்டுள்ளமையையிட்டு எதிர்ப்புக் குரல்களை சமாளிக்க வேண்டும் அச்சம், சரியான ஊகத்திற்குரியதே!

இதற்கான முதற்கட்டத் தீர்வாக, ஏற்கனவே சேவையிலிருந்து கொண்டு பயிலுநர் நியமனம் பெற்றவர்களை அவர்களின் ஒப்புதலோடு ஏதாவது ஒரு பதவியை தெரிவு செய்ய நிர்ப்பந்திப்பதன் மூலம் கிடைக்கும் வெற்றிடங்களுக்கு டிப்ளோமா தாரிகளை நியமிக்கலாம் எனும் மந்திராலோசனை வடமாகாண அமைச்சர்களின் பூட்டிய கதவுகளினுள் நிகழ்ந்திருக்கலாம்.

"பயிலுநர் நியமனக் கடிதங்களை மீளத் தாருங்கள் அல்லது கடமையை பொறுப்பேற்றுக் கொள்ளுங்கள்" என்று வலியுறுத்திக் கேட்ட முறையில் உள்ள தவறுகள் மட்டும் நியாயத்தின் பக்கம் உள்ள பகடைகளை வீழ்த்துமளவு வலிமையானவையல்ல நண்பர்களே!

"கணக்குப் பிரிவில் பணியாற்றும் உமக்கு தாபன விதிக்கோவையின் உட்பிரிவுகள் எல்லாமே எப்படி தெரியும்?" என்று அந்த 'அம்மா' குரலில் சூடேற்றி சமாளிப்பு நியாயம் பேசிய போது நூலக கேட்போர் கூடத்தில் குனிந்திருந்த சகல கண்களிலும் நிறைந்து நின்ற "கோபக் கனல்" மாவட்ட செயலகத்தின் முன்பக்கத்து புழுதி உமிழும் வீதியோரத்தில் சுலோக அட்டைகளோடு வேகக் கொதிக்கும் வெயிலில் விறைத்து நின்றவர்களின் கோடிக் கண்களில் விரவி நின்ற "வேலைக்கான ஏக்கத்திலும்" எப்போதும் சிறியதே!

இருபதுக்கு மேற்பட்ட ஆயிரங்களில் வாங்கும் சம்பாத்தியத்தினை, அதிரடியாக பத்திற்கும் குறைவானதான பயிலுநர் நியமனத்துக்கு கீழிறங்கும் உங்களின் தயக்கத்தில் வினா எழுப்பப்படுகின்ற நீதி, ஆர்ப்பாட்டத்திற்கு வருவதற்கான பஸ் கட்டணத்துக்கு கூட அப்பாவிடமோ, அம்மாவிடமோ காலையில் கையேந்தி நிற்கின்ற அவர்களின் அவலத்தினால் புரிந்துணர்த்தப்படுவதற்கு, 'பொருளாதார மேதைகள்'தான் வேண்டுமென்றில்லையே!

உயர் தேசிய டிப்ளோமாக்களை 'கூவி' விற்பனை செய்வதற்கு வந்தவர்களை, பெரும் தொகையான தரகுப் பணத் தொகைகளோடு இலங்கையின் கல்வி முறைகளுக்குள் அனுமதித்தவர்களே, இன்று கல்வித் தரம் பற்றிய கேள்விகளை சாட்டாகக் கொண்டு நிராகரிப்பதில் ஆங்காங்கே ஒளிந்திருக்கும் அரசியல் குதர்க்கங்களை, அதே சூழலில் வளர்ந்து பட்டதாரிகளானவர்களும் நன்கறிவார்கள்.

சில பட்டப் படிப்புகளைவிட மேலான உழைப்பும், பெறுமதி கூடிய பணப்பரிமாற்றங்களும் கற்கைநெறிக் கால விரயமும் செலவழிக்கப்பட்ட பட்டத்துக்கு நிகரான கல்வித் தரம் அவர்களுடையது என்பதை மனந்திறந்து நோக்கும் எந்தவொரு மனிதநேயனாலும் வெகு எளிதில் விளங்கிட முடியுமே!

அனைத்திலும் மேலாக சுற்றறிக்கை வாசகங்களையும், திரட்டிய சம்பளத் தொகையையும், பதவிப் பெயர்களையும், வேலைவாய்ப்புப் போட்டிகளையும் தூக்கியெறிந்த மானுடதர்மத்தின் புறவெளியில் நின்று "தன்னைப்போல் அயலானையும்" நேசித்து உண்மை உணரும் நிமிடங்களை ஏன் இன்னமும் ஏற்படுத்திக்கொள்வதை தள்ளிப்போடுகின்றோம்.

இனமழித்து ஏப்பம் விட்ட அரசியல் தலைவர்களிடம் மன்றாடுவதை விட, பாடசாலை காலைக் கூட்டங்களில் உரையாற்றுமளவுக்கு தாழ்ந்து சுயநலன்களுக்காக சுற்றுகின்ற குறுநில மன்னர்களிடம் மகஜர் அளிப்பதை விட, தாபன விதிக்கோவை வார்த்தைகளாலும், கோப்பு இலக்கங்களாலும் மட்டுமே சட்டம் பேசத் தெரிந்த நாற்காலி விரும்பிகளை நாடுவதை விட, 'வேலையின்மை' என்கின்ற கரும்புள்ளிகளை கடந்த இருள் அனுபவங்களை ஏற்கனவே சுமந்தவர்களிடம் அன்புரிமையுடன் பேசுவது பன்மடங்கு மேலானதில்லையா, என்ன?

"தனியொருவனுக்கு உணவில்லையெனில் இந்தச் செகத்தினை அழித்திட" எழுந்த பாரதீக் குழந்தைகளாய், தலைமுறைக் குழுமம் ஒன்றுக்கு அரச பணியாற்றும் சந்தர்ப்பம் கொடுத்ததை, வரலாற்றின் பக்கங்கள் நிச்சயம் தன்னுள் செதுக்கும். ஆதலினால்.... (விழிநிமிர்ந்து, தலைப்பை மீளக் வாசியுங்கள் நண்பர்களே!)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பேராசிரியர்: ப.புஷ்பரட்ணம்

# யாழ்.பல்கலைக்கலையில் ஆய்வுப் புலமையை அடையாளப்படுத்தும் பன்னாட்டு கருத்தரங்கம்

**இன்றும் நாளையும் அபிவிருத்தியை நோக்காகக் கொண்ட பன்னாட்டுக் கருத்தரங்கு இடம்பெறவுள்ளது.**

1974 இல் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் ஒரு வளாகமாக ஆரம்பிக்கப்பட்ட காலத்திலிருந்து எமது பிரதேசத்தின் கல்வி, கலாசாரம் பொருளாதாரம், தொழில்நுட்பம் என்பவற்றை எதிர்கால நோக்கில் முன்னிலைப்படுத்திச் செல்வதற்கு பல்கலைக்கழகம் தனது ஆய்வுப் பணிகளை அகலப்படுத்திக் கொள்ள வேண்டும் என்ற ஆதங்கம் எமது மக்களிடம் நீண்டகாலமாக இருந்து வந்தது.

கடந்த ஆண்டு நடந்து முடிந்த கருத்தரங்கம் இப்பணிகளுக்கு ஒரு தொடக்கப் புள்ளியாக இருந்தது எனலாம். இந்த நிலையில் இன்றும், நாளையும் நடைபெறும் சர்வதேசக் கருத்தரங்கு சர்வதேச அளவில் எமது பல்கலைக்கழகத்தின் பெருமையை அடையாளப்படுத்தும் நிகழ்வாக அமையும் என்பதில் ஐயமில்லை. எமது பிரதேசத்தின் அபிவிருத்தி பற்றிய பார்வை, சிந்தனை, திட்டமிடல், முகாமைத்துவம் என்பன எமது பல்கலைக்கழகத்துக்கு அல்லது எமது பிரதேசத்திற்குள் இருந்து மட்டும் வெளிக்கிளம்பவேண்டும் என எதிர்பார்க்க முடியாது. அது பூரணமானதாகவும் இருக்கமுடியாது. இன்று ஒரு நாட்டின் அல்லது ஒரு பிரதேசத்தில் அபிவிருத்தியில் பூகோள, சர்வதேச அரசியல், பொருளாதார நிலைப்பாடுகள், மாற்றங்கள், புதிய தொழில் நுட்ப கண்டுபிடிப்புக்கள் பெரும் செல்வாக்குச் செலுத்தி வருகின்றன. நடைபெறவுள்ள எமது பல்கலைக்கழக கருத்தரங்கில் அமெரிக்கா, பிரிட்டன், பிரான்ஸ், நெதர்லாந்து, நியூசிலாந்து, இந்தியா எனப் பல நாடுகளில் இருந்து வரும் அறிஞர்கள் பங்கு கொள்கின்றனர். இவர்களில் கணிசமானவர்கள் நீண்டகாலமாக அந்த நாட்டுப் பல்கலைக்கழகங்களில் உயர் பதவியில் இருந்த, இருக்கின்ற எம்நாள்டுப் புலமையாளர்கள். ஆகவே எமது பிரதேசத்தின் அபிவிருத்தி பற்றிய அவர்களின் பார்வையும், ஆய்வுத்துறையில் அவர்களுக்கிருக்கும் அனுபவங்களும் எமது பிரதேசத்தின் அபிவிருத்தியிலும், எமது பல்கலைக்கழக ஆய்வுப் போக்கிலும் பலதரப்பட்ட நன்மைகளையும் மாற்றங்களையும் ஏற்படுத்தும் என எதிர்பார்க்கலாம்.

அபிவிருத்தியை நோக்காகக் கொண்ட இக்கருத்தரங்கில் பௌதீக விஞ்ஞானம், உயிரியல் விஞ்ஞானம், தொழில் நுட்பம், கணினி, மீன்பிடி, புள்ளிவிபரவியல், மருத்துவம், சித்தமருத்துவம், பொறியியல், விவசாயம், சமூகவிஞ்ஞானம், மனிதப்பண்பியல், சட்டம், நுண்கலை, ஊடகம், விளையாட்டுத்துறை, வணிகம் மற்றும் முகாமைத்துவம் ஆகிய துறைசார்ந்த அறிஞர்கள் பங்கு கொள்ள இருக்கின்றனர். முதலில் ரில்கோ விடுதியில் துணைவேந்தர் தலைமையில் நடைபெறும் கருத்தரங்கிக்கு வருகை தரும் பரதமவிருந்தினர், கௌரவ விருந்தினர், சிறப்பு விருந்தினர்கள் ஆகியோர் கலந்து சிறப்பிக்கும் ஆரம்ப நிகழ்வுகள் நடைபெறும்.

அதைத்தொடர்ந்து பல்கலைக்கழகத்திலுள்ள எட்டு ஆய்வு மையங்களில ஒரே நேரத்தில் இரண்டு நாள்கள் கருத்தரங்கு நடைபெறவுள்ளது. அவற்றுள் கருத்தரங்குக்கு சமர்ப்பிக்கப்பட்ட 450இற்கு மேற்பட்ட ஆய்வுக்கட்டுரைகளில் 325 கட்டுரைகள் ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படுகின்றன.

இக்கருத்தரங்கில் எமது பல்கலைக்கழக மற்றும் எமது பிரதேச அறிஞர்களுடன் தென்னிலங்கைப் பல்கலைக்கழக அறிஞர்கள் மற்றும் அபிவிருத்தி தொடர்பான திட்டமிடலில் புலமை பெற்ற அறிஞர்களும் கலந்து கொள்வது இக்கருத்தரங்கை மேலும் ஆரோக்கியப்படுத்துவதாக அமைகிறது. இக்கருத்தரங்கு தனிமனித முயற்சியல்ல. இதன் வெற்றிக்குப் பன்னால் பல பீடங்கள், துறைகள் சார்ந்த ஆசிரியர்கள், மாணவர்கள், பல்கலைக்கழக நிர்வாகிகள், தொழிலாளர்கள் ஆகியோரின் ஆறுமாத கடின உழைப்பும், அரச, தனியார் நிறுவனங்களின் ஒத்துழைப்பும் அடங்கியுள்ளன.

இவற்றையெல்லாம் முறையாகத் திட்டமிட்டு சிறிதும் பிசகாமல் நடைமுறைப்படுத்திவரும் கருத்தரங்கு ஒருங்கமைப்பாளர் பேராசிரியர் ஸ்ரீசற்குணராஜாவும், நியாயமான செயற்பாடுகளுக்கு பூரண அங்கீகாரம் அளித்து அவற்றை நெறிப்படுத்தி வரும் துணைவேந்தரும் நன்றியுடன் நினைவுபடுத்தப்பட வேண்டியவர்கள். கருத்தரங்குக்கான தொடக்க நிலையில் இருந்த வேகம் பல்கலைக்கழக ஆசிரியர்களின் நியாயமான உரிமைப் போராட்டத்தால் தொய்ந்துவிடுமோ என்ற ஐயம் எல்லோர் மத்தியிலும் காணப்பட்டது. ஆனால் எமது பல்கலைக்கழகத்தின் 38 ஆண்டு கால வரலாற்றில் முதன் முறையாக நடைபெறும் சர்வதேசக் கருத்தரங்குக்கு முன்னுரிமை கொடுத்து அனைத்து ஆசிரியர்களும் ஒத்துழைப்பு வழங்கி வருவதன் மூலம் இன்று இப்பல்கலைக்கழகம் பெருமையடைகிறது.

எமது பல்கலைக்கழகத்தில் நடைபெறுவது சர்வதேசக் கருத்தரங்காக இருப்பதால் அதில் பார்வையாளராகக் கலந்து கொள்வதற்கான அனுமதி குறிப்பட்ட கால எல்லைக்குள் உறுதிப்படுத்திக் கொள்வது அவசியம். இதன் அடிப்படையில் 680இற்கு மேற்பட்ட அறிஞர்கள், ஆர்வலர்கள் உரிய காலத்தில் தம்மைப் பதிவு செய்துள்ளனர். ஆயினும் ஆர்வமுள்ள மாணவர்கள், அறிஞர்கள் தம்மால் சில காரணங்களால் இக்கருத்தரங்கில் கலந்துகொள்ள முடியவில்லை என ஆதங்கப்படுகின்றனர். அப்படியான ஆர்வலர்கள் கலந்து கொள்ள சாதகமான வழிமுறைகள் கண்டறியப்படுமானால் பலரும் மகிழ்ச்சியடைவர்.

---

பனை அ.சபை

# பனம் பொருள் உற்பத்திக்கு விடிவுகாலம்

**" கைதடியில் அமைந்துள்ள பனை ஆராய்ச்சி நிலையம் புனரமைப்புச் செய்யப்பட்டுள்ளது அதன் ஆரம்ப நிகழ்வு இன்று முற்பகல் 11.30மணிக்கு இடம்பெறவுள்ளது பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ஷ பிரதம அதிதியாகக் கலந்து கொள்கிறார்.**



பனை ஆராய்ச்சி நிறுவனம் 1986 ஆம் ஆண்டு ஸ்தாபிக்கப்பட்டு 1995 ஆம் ஆண்டு வரை தொழிற்பட்டது. இந்த நிறுவனம் போர்ச் சூழ்நிலைகள் காரணமாக 1995 இல் இருந்து 2011 ஆம் ஆண்டு வரை செயலிழந்து காணப்பட்டது.

பனை ஆராய்ச்சி நிலையத்தின் கட்டட புனரமைப்பு வேலைத் திட்டத்துக்கு இலங்கை அரசு 25 மில்லியன் ரூபாவை ஒதுக்கியிருந்தது. இதன் கீழ் கட்டட புனரமைப்பு வேலைகள் முடிவுறுத்தப்பட்டன. பனை ஆராய்ச்சி நிறுவனத்தின் ஆய்வுகூட உபகரணங்களுக்கென இந்திய அரசு 70 மில்லியன் ரூபா நிதியை சிறு அபிவிருத்தி நன்கொடைத் திட்டத்தின் கீழ் வழங்கியிருந்தது. இதில் ஆய்வுகூட உபகரணங்கள், இரசாயனப் பொருள்கள், தளபாடங்கள், வாகனங்கள் என்பன கொள்வனவு செய்யப்பட்டன. இந்த நிலையத்தை மீளக் கட்டியெழுப்பும் செயற்பாடுகள் நிறைவு பெற்றுள்ளன.

பனை ஆராய்ச்சி நிறுவனத்தின் ஆராய்ச்சித் திட்டம் பல ஆராய்ச்சி நிறுவனங்களின் கலந்துரையாடல்கள் மூலம் தயாரிக்கப்பட்டது. இவ் ஆராய்ச்சித் திட்டம் பனை சார்ந்த பொருள்களின் உற்பத்தித் திறன், தரம், சந்தை வாய்ப்பு, பெறுமதிச் சேர்க்கை என்பவற்றை உயர்த்துவதன் மூலம் பனை வளம் நிறைந்த பிரதேசங்களில் சுயதொழில் வாய்ப்பை ஏற்படுத்துவதற்கான ஒரு வாழ்வாதார திட்டமாக முன்னெடுக்கப்படுகின்றது. பனங்கட்டி, பனங்களி, பனம்பானம், பனம்பாணி, கல்லாக்காரம், வினாகிரி, பதனீர், என்பவற்றின் தரத்தை உயர்த்தி அவற்றின் பாவனைக் காலத்தை அதிகரிப்பதை நோக்கமாகக் கொண்ட ஆராய்ச்சி செயற்பாடுகளே இந்தத் திட்டத்தில் உள்ளடக்கப்படுகின்றன.

பனை வளம் அதிகமாக வடக்கு கிழக்கு மாகாணங்களில் உள்ளது. இலங்கையில் உள்ள பனை மரங்களின் மொத்த எண்ணிக்கை 11 மில்லியன் எனவும் இதில் 3.5 மில்லியன் பனை மரங்கள் யாழ்.மாவட்டத்திலும், 3.5மில்லியன் பனை மரங்கள் கிளிநொச்சி மாவட்டத்திலும் காணப்படுகின்றன என்றும் புள்ளி விவரங்கள் கூறுகின்றன.

பனை ஆராய்ச்சி நிறுவனத்தின் அங்கீகரிக்கப்பட்ட ஆளணிகளாக ஆராய்ச்சி சார்ந்த உத்தியோகத்தர்கள் 13 பேரும் பதவி நிலை சாராத உத்தியோகத்தர் 07 பேருமாக மொத்தம் 20 ஊழியர்கள் உள்ளடக்கப்பட்டுள்ளனர்.

### பனை அபிவிருத்தி ஆராய்ச்சி செயற்பாடுகள்

✱ புதிய பொருள்களையும் பெறுமதி சேர்க்கப்பட்ட பொருள்களையும் அறிமுகப்படுத்தி அதன் மூலம் பனைசார் பொருள்களை மக்கள் மத்தியில் பிரபல்யப்படுத்தி உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் சந்தை வாய்ப்பை விரிவாக்குவதற்கு வசதிசெய்தல்.

✱ பனை சார்ந்த கைப்பணி கைவினைப் பொருள்களின் சந்தை வாய்ப்புக்கு உகந்த புதிய வடிவமைப்புக்களைக் கொண்டு பனை சார் உற்பத்திப் பொருள்களின் உற்பத்திகளை ஊக்குவிப்பதன் மூலம் பனை சார்ந்த கைப்பணித் துறையை சக்தி மிக்க பொருளாதார செயற்பாடாக முன்னெடுத்தல்.

✱ குட்டைப் பனை மரங்களை அறிமுகப்படுத்துதல் தொடர்பான ஆராய்ச்சி மூலம் பனை மரத்தில் ஏறுவதனால் ஏற்படக் கூடிய ஆபத்தைக் குறைத்து பனை வளத்தை மேம்படுத்துவதனையும் பனை வளங்கள் தொடர்பான கணக்கெடுப்பை மேற்கொண்டு அதன் மூலம் பனை சார் உற்பத்தி தொடர்பான சமூக பொருளாதார தரவுகளை வழங்குவதும் பனை ஆராய்ச்சி வேலைத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளது.

### பனை சார்ந்த உற்பத்திகளின் தரத்தை உயர்த்துவதற்கு ஆராய்ச்சி முக்கியம்.

✱ பனம்பழம் சார்ந்த பொருள்களின் (பனங்களி, பனம் பாணம், பனம் கோடியல், பனங்காய் பலகாரம், இனிப்புப் பொருள்கள், கேக், ஜாம்) தரத்தை உயர்த்துதல்.

✱ பதனீர் சார்ந்த உற்பத்திகளில் (பனங்கட்டி ,பனம்பாணி, கல்லாக்காரம், பனம்சீனி, பனங்கள், பனஞ்சாராயம், வினாகிரி) தரத்தை உயர்த்துதல்.

✱ பனங்கிழங்கு சார்ந்த பொருள்களின் (பனங்கிழங்கு, ஒடியல், ஒடியல் மா, கூழ்,புழுக்கொடியல், புழுக்கொடியல் மா) தரத்தை உயர்த்துதல்.

✱ ஓலை சார்ந்த பொருள்களின் (சுளகு, பனங்கூடை, பெட்டி, பாய் , அலங்காரப் பொருள்கள்) வடிவமைப்பை நவீனமாக்கி தரத்தை உயர்த்துதல்.

✱ பனந்தும்பு சார்ந்த பொருள்களின் (தும்புத்தடி, துடைப்பான், தூரிகை, கயிறு, கால்த்துடைப்பான்) தரமான உற்பத்தியை விரிவாக்குதல்.

பனை ஆராய்ச்சி நிறுவனத்தின் ஊடாக பனங்கட்டிஉருகும் நிலையை தவிர்த்தல், பனங்களியில் காணப்படும் கசப்புத் தன்மையை அகற்றுவதன் மூலம் பனம்பழம் சார் பொருள் உற்பத்தியின் நுகர்வு நாட்டத்தைக் கூட்டுதல் ,பனையில் இருந்து பெறப்படும் பதனீரின் அளவைக் கூட்டுவதற்கான கஸ்பர் தொழில்நுட்பத்தை ஒத்த விளைவை அதிகரிக்கும் தொழில்நுட்பங்களை அறிமுகப்படுத்தல், பனை சார் புதிய உணவுப் பொருள்கள் , மென்பானங்கள் , இனிப்புப் பண்டங்கள் என்பவற்றின் உற்பத்திகளை அறிமுகப்படுத்துவதுடன் அவற்றின் போசாக்கு மற்றும் மருத்துவ பெறுமதிகளை வெளிக் கொணர்வதன் மூலம் பனை சார் உற்பத்திகளில் பொருளாதார முக்கியத்துவத்தை அதிகரித்தல்.

பனை ஆராய்ச்சி சபை பனை சார்ந்த உற்பத்திகளை பொருளாதார ரீதியாக முக்கியம் வாய்ந்த ஒரு துறையாக மாற்றுவதன் மூலம் மொத்த தேசிய உற்பத்தியில் பனையின் பங்களிப்பை அதிகரிப்பதுடன் பனை மூலம் வேலை வாய்ப்பு, சுயதொழில் வாய்ப்பு அந்நியச் செலாவணி என்பவற்றை ஏற்படுத்தி பொருளாதார அபிவிருத்திக்கு பங்களிப்பு செய்யும் ஒரு துறையாக பனை சார்ந்த துறையை மேம்படுத்துவதானது ஒரு முக்கிய இலக்காகும்.

பனை ஆராய்ச்சி நிறுவனம் மீண்டும் புனரமைக்கப்பட்டமை வடக்கு, கிழக்கு மாகாணங்களில் பொருளாதார, வாழ்வாதார மேம்பாட்டை ஏற்படுத்தும் ஒரு முக்கியான செயற்பாடாக நோக்கப்படுகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரசரிடம் பாட்டி கேட்ட கேள்வி?

ஓர் ஊரில் அரசர் ஒருவர் இருந்தார்.

அவர் மிகவும் நல்லவர்; தர்ம சிந்தனை உள்ளவர்.

அவர் எல்லோருக்கும் எல்லா உதவிகளையும் எப்போதும் செய்து வந்தார். யாருக்கும் அவர், 'இல்லை' என்று சொல்ல மாட்டார். ஒருசமயம் அவர் ஒரு பெரிய காட்சிச் சாலையைத் திறந்து வைத்தார்.

அதில் அதிகளவான பொருள்கள் இருந்தன. அவை எல்லாவற்றையும் இலவசமாக மக்களுக்குக் கொடுப்பதற்காக அரசர் அங்கு வைத்திருந்தார்.

''இந்தக் காட்சிச்சாலைக்கு யார் வேண்டுமானாலும் வரலாம்; எந்தப் பொருளை வேண்டுமானாலும் எடுத்துக் கொண்டு போகலாம்; பணம் கிடையாது! ஆண், பெண் எல்லோரும் வந்து அவரவர்களுக்கு விருப்பமான பொருள்களை இங்கிருந்து எடுத்துக்கொண்டு போங்கள். அதற்கேற்ப இந்தக் காட்சிச்சாலையை ஏற்பாடு செய்திருக்கிறோம்!'' என்று அங்கு அரச அதிகாரிகள் அறிவித்துக் கொண்டிருந்தார்கள்.

அந்தக் காட்சிச்சாலைக்கு அதிகமான மக்கள் வந்தார்கள்.

அவரவர்களுக்கு வேண்டியதை எடுத்துக் கொண்டு போனார்கள். சிலர் தங்களுக்குத் தேவையான வேட்டி சட்டைகளை எடுத்துக்கொண்டு போனார்கள்.

சிலபேர் வந்து அங்கே இருந்த விலை உயர்ந்த நகைகளை எடுத்துக் கொண்டு சென்றார்கள். சிலபேர் இரும்புப் பெட்டிகளை எடுத்துக் கொண்டு போனார்கள்.

சிலபேர் நல்ல பழவகைகளை எடுத்துக் கொண்டார்கள்.

அதனால் எல்லோருக்கும் முழு மனநிறைவு ஏற்பட்டது. அங்கிருந்து அவர்கள் மகிழ்சியுடன் திரும்பிச் சென்றார்கள்.

காட்சிச்சாலையைப் பார்க்க வந்தவர்களில் வயதான அம்மா இருந்தார். அவள் மட்டும் அங்கிருந்து எதையும் தொடவில்லை. அவளுக்கு மனநிறைவு இல்லை.

எல்லோரும் ஆச்சரியமாகப் பார்த்தார்கள்.

'ஊர் மக்கள் எல்லோருக்கும் மன நிறைவு... இந்த அம்மாவுக்கு மட்டும் மனநிறைவு இல்லையா? என்ன காரணமாக இருக்கும்?' என்று அனைவரும் நினைத்தார்கள்.

அவர்கள் அவளிடம், ''ஏன் பேசாமல் இருக்கிறீர்கள்? உங்களுக்குப் பிடித்ததை எடுத்துக் கொள்ள வேண்டியதுதானே?'' என்று வினாவினார்கள்.

''இங்கே இருக்கும் எந்தப் பொருளும் எனக்குத் திருப்தி அளிக்கவில்லை! நான் அரசரைப் பார்க்க வேண்டும்'' என்று அவள் கூறினாள்.

அங்கே இருந்த திவான் ஓடிப்போய் அரசரிடம் விவரம் தெரிவித்தார்.

உடனே அரசர் ஒரு யானை மீது ஏறிக்கொண்டு அந்த அம்மாவைப் பார்ப்பதற்கு வந்துவிட்டார்.

அந்த அம்மா மன்னரைப் பார்த்து ''அரசே! கீழே இறங்கி வாருங்கள்... ஒரு முக்கியமான விடயம் பற்றி உங்களிடம் பேச வேண்டும்!'' என்றாள்.

அரசர் யானையிலிருந்து கீழே இறங்கினார்.

அந்த அம்மா ராஜாவின் வலது கையைப் பிடித்துக் கொண்டு ''அரசே! இப்போது நீங்கள் எனக்குச் சொந்தமாகி விட்டீர்கள். இந்தக் காட்சிச்சாலையில் இருக்கும் சின்னச் சின்னப் பொருள்களையும், விளையாட்டுப் பொம்மைகளையும் நான் விரும்பவில்லை. உங்களைப் பெறவேண்டும் என்றுதான் விரும்புகிறேன். நீங்கள் எனக்குச் சொந்தமாகி விட்டதால் இந்த அரண்மையின் செல்வம் முழுவதும் இப்பொழுது எனக்குச் சொந்தமாகி விட்டது!'' என்று கூறினாள்.

அரசர் மலைத்துப் போய் நின்றார். அந்த அம்மாவைக் கடைசி வரையில் தன் அரண்மனையிலேயே வைத்து தாய் மாதிரிக் கவனித்துக் கொண்டார். எமக்குப் பலவிதமான ஆசைகள். அதனால் அந்தந்த ஆசைக்குரிய பொருள்களை நாம் தேடிச் செல்கிறோம். இப்படிச் செய்வதால் எமக்குத் திருப்தியே உண்டாவதில்லை.

ஆசைக்கு அடிமையாகிறவர்கள் பிச்சைக்காரர்களுக்கும் பிச்சைக்காரர்களாக ஆகிவிடுகிறார்கள்.

"உலக இச்சைகளையும் பொருள்களையும் துறந்து இந்தப் பரந்த பிரபஞ்சத்தின் மூலம் பரம்பொருளைப் பெற்றுவிட்டால், உங்களுடைய எல்லா ஆசைகளும் பூர்த்தி ஆகிவிடும்!'' என்று ரிஷிகேஷ் சுவாமி சிவானந்தர் கூறுகிறார்.



''எப்படி ஞானம் உள்ள அந்த வயதான அம்மா அரசரைச் சொந்தமாகப் பாராட்டி அவருடைய செல்வத்திற்கெல்லாம் அதிபதியாக ஆனாளோ, அப்படியே நீங்கள் இறைவனைப் பெற்றுவிட்டால் எல்லா வசதிகளும் உங்களைத் தேடிக் கொண்டு வரும்'' என்கிறார் அவர்.

**தென்கச்சி கோ.சுவாமிநாதன்**

# ஆரம்பக் கல்வியில் முன்னேறத் துடிக்கும் கோப்பாய் வடக்கு றோ.க.த.க. பாடசாலை

**ஞானி**

(கடந்த வாரத் தொடர்ச்சி)



கோப்பாய் வடக்கு றோமன் கத்தோலிக்க பாடசாலை குறிப்பிடத்தக்க மாணவர் எண்ணிக்கையோடு, ஆரம்ப காலப்பகுதியில் தரம் 1 முதல் 8 வரையான வகுப்புக்களோடு செயற்பட்ட போதிலும், பாடசாலையில் நிலவிவரும் இட நெருக்கடியும், வள வசதிக் குறைபாடும் மாணவர் எண்ணிக்கையைக் குறைவடையச் செய்ததோடு, மட்டுமல்லாமல் கனிஷ்ட இடைநிலைப் பாடசாலை என்ற நிலையில் இருந்து ஆரம்பப் பாடசாலை என்ற தர நிலைக்கு இறங்கியது.

பாடசாலைக் கட்டடத் தொகுதி, மாணவர், ஆசிரியர்களுக்கான மலசலகூடத் தொகுதி மற்றும் குடிதண்ணீர் வசதிக்கான குழாய்க்கிணறு என்பனவற்றோடு பாடசாலைக்குச் சொந்தமான நிலப்பரப்பு நிறைவடைகின்றது. மாணவர்கள் ஆசிரியர்களின் இயல்பான செயற்பாடுகளுக்கு இட வசதி இன்மை பெரும் தடையாக இருப்பதாகக் கூறப்படுகின்றது.

''பாடசாலையின் கிழக்குப் பக்கமாக உள்ள பனந்தோப்பைப் பாடசாலைக்கென கொள்வனவு செய்தால், பாடசாலையில் நிலவிவரும் இடவசதி குறைபாடு நிவர்த்தி செய்யப்படுவதோடு மாணவர்களின் இணைப்பாட விதான செயற்பாடுகளையும் முன்னெடுப்பதற்கு வாய்ப்பாக இருக்கும். புலம்பெயர் பழைய மாணவர்களின் நிதி உதவியோடு காணியைக் கொள்வனவு செய்வதற்கு முயன்ற போதிலும் பொருத்தமான அளவு நிதி கிடைக்காமையால் அது முடியாமல் உள்ளது. காணியைக் கொள்வனவு செய்வதற்கு பாடசாலைச் சமூகம் உரிய முறையில் முன் வந்து உதவ வேண்டும். இந்த கைங்கரியத்திற்கு சமூக வேறுபாடுகளைக் கடந்து சகலரும் ஒத்துழைப்பு வழங்கினால் இந்த முயற்சி நிச்சயம் கை கூடும் என எதிர் பார்த்துள்ளோம்'' என பாடசாலையின் தற்போதைய அதிபர் திருமதி ஜெ.பிரேமலதா தெரிவித்தார்.

பாடசாலையின் வரலாறுகள் மற்றும் ஆவணங்கள் 1995 ஆம் ஆண்டு இடப்பெயர்வின்போது முற்றாக அழிவடைந்த நிலையில் பாடசாலை இடம்பெயர்ந்து, மட்டுவில் கிராமத்தில் செயற்பட்டது. குறித்த காலப் பகுதியில் மாணவர்களும் இடம்பெயர்ந்தனர். மீளக் குடியமர்ந்த நிலையில் 1996 இல் பாடசாலை மீண்டும் செயற்படத்தொடங்கியது.

> **பாடசாலையின் வரலாறுகள் மற்றும் ஆவணங்கள் 1995 ஆம் ஆண்டு இடப் பெயர்வின்போது முற்றாக அழிவடைந்த நிலையில் பாடசாலை இடம்பெயர்ந்து, மட்டுவில் கிராமத்தில் செயற் பட்டது.**

பாடசாலையின் முதலாவது அதிபராக எஸ். அருமைநாயகம் கடமையாற்றினார். அவரைத்தொடர்ந்து வி.அம்பலவாணர், செ.கணபதிப்பிள்ளை, வி.யோசேப் எஸ்பிரியர் ஆகியோர் அதிபர்களாகக் கடமையாற்றினர். வி. யோசேப் எஸ்பிரியர் அதிபராகக் கடமையாற்றிய காலப்பகுதியான 1962 ஆம் ஆண்டு டிசெம்பர் 15 ஆம் திகதி 1343 ஆம் இலக்க உரித்தாக்கும் கட்டளையின் பிரகாரம் பாடசாலையை அரசு பொறுப்பேற்றது.

யோசேப் எஸ்பிரியர் காலமானதை அடுத்து க.இராசரத்தினம் அதிபராகக் கடமையேற்றார். அதன் பின்னர் சி.பினாகபானி 04.07.1975 ஆம் ஆண்டு அதிபராகப் பொறுப்பேற்றுக் கொண்டார். அவருக்குப் பின்னர் [illegible] நாகரத்தினம் அதிபராகக் கடமையேற்றார். நாகரத்தினம் சேவையில் இருந்து ஓய்வுபெற 23.03.1989 இல் க.விநாயகலிங்கம் அதிபராகப் பொறுப்பேற்று 2002 ஆம் ஆண்டு சேவையில் இருந்து ஓய்வு பெறும் வரை 14 வருட காலம் அதிபராகக் கடமையாற்றியுள்ளார். இந்தக் காலப்பகுதியில் பாடசாலைக்கான கட்டட வசதியும் அதனோடு இணைந்த பொருத்தமான வள வசதிகளும் உருவாக்கப்பட்டன. ''குறித்த காலப்பகுதியில் விளையாட்டுப் போட்டி மற்றும் பரிசளிப்பு விழா என்பனவும் நடத்தப்பட்டன மாணவர்களுக்கான விளையாட்டுப் பயிற்சிகள் மற்றும் போட்டிகள் அருகில் உள்ள சூசையப்பர் தேவாலய வீதியை மைதானமாகக் கொண்டு மேற்கொள்ளப்பட்டது.

குறித்த பாடசாலையை முன்னேற்றுவதற்கு பாடசாலைச் சமூகமும், கல்வி அதிகாரிகளும் முன்னுரிமை அடிப்படையில் முயற்சி எடுக்க வேண்டும். பின் தங்கிய சமூகத்தைச் சேர்ந்த வறிய மாணவர்கள் கல்வி கற்கும் இத்தகைய பாடசாலைகளை மேல் நிலைப் படுத்துவதற்கும் உரிய வசதிகள் வழங்குவதற்கும் விசேட வேலைத் திட்டங்கள் முன்னெடுக்கப்பட வேண்டும்'' என்று இவ்வாறு முன்னாள் அதிபர் க.விநாயகலிங்கம் (வயது 73) கவலையோடு தெரிவித்தார்.

விநாயகலிங்கம் அதிபராக இருந்த காலப்பகுதியில் அவரது முயற்சியால் பாடசாலைக்கான மதில் மற்றும் வேலிகள் என்பன நிர்மாணிக்கப்பட்டதோடு, தற்பொழுது பாவனையில் உள்ள கட்டடத் தொகுதியின் கட்டுமானப் பணிகளும் முன்னெடுக்கப்பட்டன.

இடநெருக்கடியால் பாடசாலையின் கட்டுமாணப் பணிகள் மேற்கொள்ள முடியாமல் இருந்தமையால், அயலில் உள்ள க. மார்க்கண்டு ஆசிரியரின் வீட்டில் ஒரு வருடம் மாணவர்களுக்கான வகுப்புகள் நடத்தப்பட்டன.

2002 ஆம் ஆண்டு விநாயகலிங்கம் சேவையில் இருந்து ஓய்வு பெற சி.தர்மசீலன் அதிபராகப் பொறுப்பேற்றார். அவரைத் தொடர்ந்து எஸ். புஸ்பராசாவும் 2010-04-16 இல் இருந்து கு.திலீபனும் அதிபர்களாகப் பொறுப்பேற்றனர். இந்தக் காலப்பகுதியில் இரண்டு தடவை ஹொலண்ட் சத்திய சேவா நிறுவனத்தின் உதவியுடன் மாணவர்களுக்கு காலணிகள் மற்றும் உபகரணப் பொதிகள் வழங்கப்பட்டன. திலீபன் இடமாற்றப்பட்டதை அடுத்து 2011-06-07 ஆம் திகதியில் இருந்து அதிபராக திருமதி ஜெ.பிரேமலதா கடமையாற்றி வருகின்றார். 'கற்றாங்கு ஒழுகுக' என்ற மகுட வாசகத்தையும் சமூகத்தில் சகலருக்கும் கல்வி என்ற தூர நோக்கையும் கொண்ட கோப்பாய் றோமன் கத்தோலிக்க தமிழ்க் கலவன் பாடசாலை மாணவர்களின் கல்வி முன்னெடுப்புகள், உரிய வள நிலையில் மேல் நிலைபெற சகல தரப்பினரும் உதவ முன் வர வேண்டும். (முற்றும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மட்டக்களப்பில் நேற்று வேட்பு மனுத் தாக்கல்







எருவில்,ஜூலை20

கிழக்கு மாகாண சபைத் தேர்தலில் போட்டியிடுவதற்காக மட்டக்களப்பு மாவட்டத்தில் இலங்கை தமிழரசுக் கட்சி, ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ், ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு, ஐக்கிய தேசியக் கட்சி உட்பட சுயேச்சைக் குழுக்கள் நேற்று வியாழக்கிழமை காலை மட்டக்களப்பு மாவட்ட செயலகத்தில் வேட்பு மனுக்களைத் தாக்கல் செய்தன.

இலங்கை தமிழரசுக் கட்சியின் சார்பில் நாடாளுமன்ற உறுப்பினரும் இலங்கை தமிழரசுக் கட்சியின் பிரதிச் செயலாளருமான கி.துரைராஜசிங்கம், நாடாளுமன்ற உறுப்பினர் பொன்.செல்வராசா, கே.கருணாகரன் ஆகியோர் தாக்கல் செய்தனர்.

ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் சார்பில் அதன் செயலாளர் அமைச்சர் சுசில் பிரேம்ஜயந்த, கட்சியின் மட்டக்களப்பு மாவட்ட தலைமை வேட்பாளர் முன்னாள் கிழக்கு மாகாண முதலமைச்சர் சிவநேசதுரை சந்திரகாந்தன், முன்னாள் அமைச்சர் எம்.எஸ்.எஸ்.அமீர் அலி ஆகியோர் வேட்பு மனுக்களைத் தாக்கல் செய்தனர்.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் சார்பில் அதன் தலைவர் அமைச்சர் ரவூப் ஹக்கீம், தவிசாளர் பிரதி அமைச்சர் பசீர் சேகுதாவூத், தலைமை வேட்பாளர் நசீர் அகமட் உட்பட அதன் வேட்பாளர்கள் வேட்பு மனுக்களைத் தாக்கல் செய்தனர். ஐக்கிய தேசியக் கட்சியின் சார்பில் அதன் தலைமை வேட்பாளர் முன்னாள் கிழக்கு மாகாண சபை உறுப்பினர் அரசரட்ணம் சசிதரன், முன்னாள் மாகாண சபை உறுப்பினர் எம்.மாசிலாமணி ஆகியோரும் வேட்பு மனுக்களைத் தாக்கல் செய்தனர்.

கிழக்கு மாகாண சபைத் தேர்தலுக்கான வேட்பு மனுத் தாக்கல் இறுதித்தினம் நேற்றாகும். (ச-31)

## இளைஞன் மீது துப்பாக்கிச் சூடு

மட்டக்களப்பு,ஜூலை20

மட்டக்களப்பு மாவட்டத்தின் வெல்லாவெளி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட 40 ஆம் கொலனிப் பகுதியில் நேற்றுமுன்தினம் புதன்கிழமை மாடு மேய்க்கச்சென்ற இளைஞரொருவர் மீது இனந்தெரியாதோரினால் மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கிச் சூட்டில் அவர் காயமடைந்துள்ளார் என வெல்லாவெளிப் பொலிஸார் தெரிவித்தனர்.

அம்பிளாந்துறை, கல்சேனை பிரதேசத்தைச் சேர்ந்த தங்கவடிவேல் அருள்பிரகாசம் (வயது 20) என்ற இளைஞரே இவ்வாறு காயமடைந்துள்ளார்.

தான் மாடு மேய்த்துக் கொண்டிருந்தபோது மறைந்திருந்த இனந்தெரியாத நபர்கள் தன் மீது துப்பாக்கிச்சூடு நடத்தியதாக காயமடைந்தவர் பொலிஸாரிடம் கூறியுள்ளார்.

இந்த இளைஞன் கையில் படுகாயமடைந்த நிலையில் மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார் என்று பொலிஸார் குறிப்பிட்டனர்.

இந்தச் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை வெல்லாவெளிப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ச)

## புதையல் தோண்டிய 3பேர் கைது

பதுளை,ஜூலை20

பதுளை - பண்டாரவளை பகுதியில் புதையல் தோண்டிக்கொண்டிருந்த மூன்று சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

அகரதென்ன விசேட அதிரடிப்படையினரால் நேற்றுமுன்தினம் புதன்கிழமை மாலை இவர்கள் கைதுசெய்யப்பட்டு பதுளை பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளனர்.

சந்தேகநபர்கள் பயணித்த ஓட்டோ, புதையல் தோண்ட பயன்படுத்தப்பட்ட உபகரணங்கள் என்பனவும் கைப்பற்றப்பட்டுள்ளன.

சந்தேகநபர்கள் பசறை நீதிவான் நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்படவுள்ளனர். (ச)

## ரம்புட்டான் பழச் சண்டை ஒருவரின் உயிரைப் பறித்தது

கண்டி,ஜூலை20

கண்டி - திகண நகரில் ரம்புட்டான் பழ வியாபாரிகள் இருவருக்கு இடையில் நேற்று வியாழக்கிழமை ஏற்பட்ட கருத்து வேறுபாடு மோதலில் சென்று முடிந்ததில் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

ரம்புட்டான் பழ வியாபாரி ஒருவர் மற்றைய வியாபாரியை பொல்லால் அடித்துக் கொலை செய்துள்ளார்.

உயிரிழந்தவரின் சடலம் தெல்தெனிய வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது.

இந்த நபரைக் கொலை செய்த சந்தேகநபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

இந்தச் சம்பவம் தொடர்பாக பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.(ச)

## இந்திய தாக்குதல் கப்பல் திருமலைத் துறைமுகத்தில்

திருகோணமலை,ஜூலை20

இந்திய கடற்படையின் அதிவேக தாக்குதல் கப்பலான 'செற்லற்' திருகோணமலை துறைமுகத்தை நேற்றுமுன்தினம் புதன்கிழமை வந்தடைந்துள்ளதாக இலங்கை கடற்படை தெரிவித்துள்ளது.

கப்பலின் கட்டளை அதிகாரி, லெப்டினன்ட் கொமாண்டர் நிட்டின் குப்தா, இலங்கைக்கான இந்திய பாதுகாப்பு ஆலோசகர் சுமீற் கபூர் ஆகியோர் கிழக்கு கரையோரப் பகுதியின் கடற்படை கொமாண்டர் ரியர் அட்மிரல் ஜயந்த கொலம்பகேயைச் சந்தித்துப் பேசினர்.

இவர்கள் சுமுகமான கலந்துரையாடல்களில் ஈடுபட்டதாகவும் நினைவுப் பரிசுகளை பரிமாறிக் கொண்டதாகவும் கடற்படை கூறியுள்ளது.

இந்தியக் கடற்படை கப்பல் இலங்கைக்கான பயணத்தை மேற்கொண்டமைக்கான காரணம் தெரியவரவில்லை என்று தெரிவிக்கப்படுகின்றது.

இந்தக் கப்பல் இன்று வெள்ளிக்கிழமை வரை இலங்கையில் தரித்திருக்கும். இலங்கை கடற்படையினரின் உதவியுடன் திருகோணமலையிலுள்ள வரலாற்று புகழ்மிக்க இடங்களையும் முக்கியத்துவம் வாய்ந்த இடங்களையும் கப்பல் பணியாளர்கள் சென்று பார்ப்பதற்குத் திட்டமிட்டுள்ளனர்.

'செற்லற்' கப்பல் 48.1 மீற்றர் நீளத்தைக் கொண்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ச)

## குளவி கொட்டியதில் நான்கு பேர் பாதிப்பு

ஹற்றன், ஜூலை 20

ஹற்றன், பட்டன்வின் தோட்டத்தில் கொழுந்து பறித்துக் கொண்டிருந்த ஆண் தொழிலாளிகளை நேற்று வியாழக்கிழமை குளவி கொட்டியதில் பாதிக்கப்பட்ட நான்கு பேர் கொட் டகலை மாவட்ட வைத்தி யசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

பாதிக்கப்பட்ட தொழிலாளர்கள் தோட்ட அம்புலன்ஸ் வாகனத்தின் மூலம் உடனடியாக கொட்ட கலை மாவட்ட வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்டனர். (ச)

## மு.காவில் இணைவு

மட்டக்களப்பு,ஜூலை20

அமைச்சர் அதாவுல்லா தலைமையிலான தேசிய காங்கிரஸின் முன்னாள் கிழக்கு மாகாண சபை உறுப்பினர் சட்டத்தரணி துல்கர்நயீம், ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸில் நேற்று வியாழக்கிழமை இணைந்து கொண்டுள்ளதாக முன்னாள் மாகாண சபை உறுப்பினர் ஏ.எம். ஜெமீல் தெரிவித்தார்.

கிழக்கு மாகாண சபை தேர்தலில் ஸ்ரீலங்கா முஸ் லிம் காங்கிரஸ் சார்பாக அம்பாறை மாவட்டத்தில் அவர் போட்டியிடவுள்ளார். (ச)

## அடிக்கடி நீர் வெட்டு: மக்கள் கடும் விசனம்

கல்முனை,ஜூலை20

கல்முனைப் பிரதேசத்தின் கல்முனை, கல்முனைக்குடி, சாய்ந்தமருது ஆகிய பிரதேசங்களில் நீண்ட நாள்களாக அடிக்கடி நீர்வெட்டு இடம்பெறுகிறது என்று பிரதேசவாசிகள் விசனம் தெரிவிக்கின்றனர்.

அதிக உஷ்ணம் நிலவிவரும் இக்காலப்பகுதியில் பல்வேறு தேவைகளுக்காகவும் நீரின் பயன்பாடு அதிகரித்துக் காணப்படும் நிலையில் இந்தப் பிரதேசங்களில் வாழும் மக்கள் பெரும் சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர். இந்தப் பகுதிகளில் நீர் வழங்கப்பட்டாலும் அது மிகக் குறைந்தளவிலேயே மக்களுக்கு விநியோகிக்கப்படுகிறது என்று தெரிவிக்கப்படுகின்றது.

கரையோரப் பிரதேசங்களாகிய இப்பகுதிகளில் ஆழிப்பேரலை இடர்களுக்குப் பின்னர் இங்குள்ள சகல கிணறுகளும் பாவிக்க முடியாத நிலையில் உள்ளதனால் இப்பிரதேசத்தின் சகல மக்களும் சுத்திகரிக்கப்பட்ட குழாய் நீரையே பயன்படுத்தி வருகின்றமை குறிப்பிடத்தக்கதாகும்.

இந்தநிலையில், இந்த நீர்வெட்டுப் பிரச்சினைகளால் பிரதேசவாசிகள் பாதிக்கப்படுவதோடு பாடசாலை மாணவர்கள் உரிய நேரத்துக்குப் பாடசாலைக்குச் செல்வதில் இடர்பாடுகளைச் சந்திக்கின்றனர். அதுபோல, தொழிலுக்குச் செல்வோரும் உரிய நேரத்துக்குச் செல்வதில் பிரச்சினைகளை எதிர்நோக்குகின்றனர் என்று கவலை தெரிவிக்கின்றனர்.

முஸ்லிம்களின் புனித றமழான் நோன்பு காலம் வருகின்றது. அதிகளவான நீர் இந்தக்காலப்பகுதியில் தேவையாக உள்ளமையால் தங்குதடையின்றி நீரைப் பெற்றுக்கொடுக்க ஆவன செய்யு மாறு வேண்டுகோள் விடுக் கப்பட்டுள்ளது.

எனவே, இந்த விடயத்தில் கூடிய அக்கறை எடுத்து அத்தியாவசியத் தேவைகளில் ஒன்றான நீர்த்தேவையை நிவர்த்திசெய்யுமாறு சம்பந்தப்பட்ட உயர் அதிகாரிகளுக்கு மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (ச)

## எரியுண்ட நிலையில் தாய், மகள் இருவரின் சடலங்கள் மீட்பு

### காவத்தையில் மீண்டும் பரபரப்பு சம்பவம்

இரத்தினபுரி,ஜூலை20

இரத்தினபுரி மாவட்டம் காவத்தை பகுதியில் வீடொன்றில் இருந்து எரிந்து கருகிய நிலையில் இரண்டு பெண்களின் சடலங்கள் நேற்று வியாழக்கிழமை அதிகாலை மீட்கப்பட்டுள்ளன என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

தாய் (வயது-63) மற்றும் அவரது மகள் (வயது-32) ஆகியோரே இவ்வாறு சடலங்களாக மீட்கப்பட்டுள்ளனர்.

இவர்கள் கொலை செய்யப்பட்டிருக்கலாம் எனச் சந்தேகிக்கப்படுகிறது.

இந்தப் பரபரப்பான சம்பவம் தொடர்பாக விசாரணைகளை மேற்கொள்ள கொழும்பில் இருந்து விசேட சி.ஐ.டி.குழுவினர் அங்கு விரைந்துள்ளனர்.

அதே சமயம் காவத்தைப் பொலிஸாரும் விசாரணை நடத்தி வருகின்றனர்.

இந்தச் சம்பவம் இடம்பெற்ற இடத்தில் பாதுகாப்புக் கடமையில் விசேட அதிரடிப் படையினரும், பொலிஸாரும் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

இதேவேளை இந்தப் பகுதியில் கடந்த சில மாதங்களுக்கு முன்னரும் தாயும் மகளும் படுகொலை செய்யப்பட்ட சம்பவம் நடைபெற்று நீதிமன்றில் விசாரணை நடைபெற்று வருகிறது.

இந்தச் சம்பவம் மக்கள் மத்தியில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தி இருந்தது. இவ்வாறான நிலையில் அதே பகுதியில் மற்றொரு சம்பவம் நேற்று நடைபெற்றுள்ளது. (ச)



மட்டக்களப்பு, கல்லடி சிவானந்தா தேசிய பாடசாலையின் ஸ்தாபகரான விபுலானந்தரின் ஸ்தாபகர் தினவிழா நேற்று வியாழக்கிழமை நடைபெற்றது. இந்நிகழ்வில் சுவாமி விபுலானந்தரின் உருவப்படம் தாங்கிய பேரணி மட்டக்களப்பு- கல்முனை பிரதான வீதியினூடாக பல இடங்களுக்குச்சென்று மீண்டும் பாடசாலையை வந்தடைந்துள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தருவது வித்தியா

# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

**மேடம்:** சிலரின் சந்திப்புகள் அதிகம் யோசிக்க வைக்கும். தொழில் சிந்தனை கூடும். விட்டுப்போன தொடர்புகளைப் புதுப்பித்து கொள்வீர்கள். தேங்கிக்கிடந்த வேலைகளை முடிப்பீர்கள். குழந்தைகளுக்காகச் சில செலவுகளை மேற்கொள்வீர்கள். உற்றார், உறவினர் பகை அகலும்.

**இடபம்:** எதிர்ப்புகள் மறைமுக சூழ்ச்சிகளை முறியடிப்பீர்கள். மனதில் புத்துணர்ச்சி உருவாகும். சிந்தனை தெளிவாகி, தீர்க்கமான முடிவு எடுப்பீர்கள். எதிர்பார்க்கும் தகவல்கள் சற்று தாமதமாகும். அலுவலகப் பணிகளில் வீண்பேச்சுக் களைத் தவிர்த்துக்கொள்ளுங்கள்.

**மிதுனம்:** சில பணிகளில் உடன்பாடு இல்லாதபோதும், எடுத்த பணிகளைச் செய்து முடிப்பீர்கள். உங்களின் முயற்சிகளுக்கு நண்பர்கள் உறுதுணையாக இருப்பர். குடும்பத்தில் குழப்பங்கள் தீர்ந்து நிம்மதி காணப்படும். எதிர்பார்க்கும் கடன் சற்றுத் தாமதமாகும்.

**கடகம்:** சில காரணங்களால் எதிலும் பிடிப்பற்ற மனநிலையோடு காணப்படுவீர்கள். சற்று மாற்றிக் கொள்ளுங்கள். நண்பர்களின் மத்தியில் வேடிக்கையான பேச்சுக்கள் அதிருப்தியை ஏற்படுத்தலாம் கவனம். குழந்தைகளால் சிறுசிறு தொல்லைகளைச் சந்திக்கலாம்.

**சிங்கம்:** தொடர்கதையாய் வந்த துன்பங்களுக்குத் தீர்வு காண்பீர்கள். தொழிலில் சில இடர்பாடுகள் ஏற்பட்டபோதும், உங்களின் சாதுர்யமான செயற்பாடுகளால் பாதிப்புற்றுக் கொண்டு செல்வீர்கள். பெண்களால் அன்புத் தொல்லைகளுக்கு ஆளாகுவீர்கள்.

**கன்னி:** தொழில் ரீதியாக புதிய முயற்சி மேற்கொள்வீர்கள். கூடவே வெற்றியா, தோல்வியா என்ற சிந்தனையும் நிலவும். அதைத் தவிர்த்து நம்பிக்கையோடு செயற்படுங்கள். குழந்தைகளால் மகிழ்ச்சி அடைவீர்கள். பொருளாதார நிலைமை சீராக இருக்கும்.

## நாளை

ஆடி 06 சனிக்கிழமை 21.07.2012
திதி: துதியை மு.ப 10.15 வரை
நட்சத்திரம்: ஆயிலியம், மரண பி.ப 12.59 வரை
சுபநேரம்: 03.01- 04.31 வரை
ராகு காலம்: 09.01- 10.31 வரை

**துலாம்:** உங்களின் தெளிவான செயற்பாடுகளால் வேலைப்பளு குறையும். உற்றார், உறவினர்களிடம் எதிர்பார்க்கும் உதவிகள் கிடைக்கப் பெறுவீர்கள். அலுவலகப் பணிகளில், குடும்ப விவகாரங்கள் பேசுவதைத் தவிர்த்துக் கொள்ளுங்கள்.

**விருச்சிகம்:** அதிக அலைச்சல் காரணமாக உடல் நலக்குறைவு ஏற்படும். செலவுகள் அதிகமாகி நிதி நிலைமையில் நெருக்கடி ஏற்படும். அலுவலகத்தில் நிர்வாகத்தின் கட்டுப்பாட்டுக்கு உட்பட்டு செயற்படுங்கள். தொழில் மற்றும் வியாபாரத்தில் லாபம் கூடும்.

**தனுசு:** உங்களின் துணிந்த செயற்பாடுகள் பல பிரச்சினைகளுக்கும் தீர்வு காண வழி வகுக்கும். வியாபாரத்தில் போட்டிகள் கூடும். நண்பர்களிடையே ஏற்பட்ட மனக்கசப்பு அகலும். உறவினர் ஒருவரின் வருகையும் அவரால், சிற்சில சங்கடங்களையும் எதிர்கொள்ள நேரிடும்.

**மகரம்:** உங்கள் மனதில் தேவையற்ற பயங்கள் மற்றும் கவலைகள் ஆக்கிரமிக்கும். இதனால் எடுக்கும் காரியங்களில் தடை தாமதம் இடையூறுகளைச் சந்திக்கலாம். வழக்குகளில் கூடுதல் செலவுகள் ஏற்படும். புதிய முயற்சிகளை பிற்போட வேண்டும்.

**கும்பம்:** வழக்கத்தைவிட அதிகநேரம் ஓய்வெடுக்க நேரிடலாம். மேலும், பணிகளைக் கூட செவ்வனே செய்ய முடியாமல் திண்டாடலாம். நிதானம் தேவை. பழைய நண்பர் ஒருவருக்காக சில வேலைகளை மேற்கொள்ள வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்படலாம்.

**மீனம்:** தொழில் ரீதியான எந்தவொரு நடவடிக்கைகளிலும் அவசரம் காட்டாமல் நிதானமாகச் செயற்பட்டால் ஏமாற்றங்களில் இருந்து தப்பிக்கலாம். புதிய வீடு பற்றிய சிந்தனை மேலோங்கும். தெய்வ வழிபாடு மனநிறைவு தரும்.

# சுடோக்கு

## எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | 4 | 3 | | | | 1 | | |
| | 5 | | 2 | 3 | | | | 9 |
| | 7 | | 9 | | | 8 | | 5 |
| 7 | 1 | 8 | 3 | 5 | | 2 | 9 | |
| | | | | | | | | |
| | 2 | 9 | | 7 | 4 | 3 | 8 | 6 |
| 4 | | 5 | | | 2 | | 1 | |
| 6 | | | | 1 | 3 | | 4 | |
| | | 7 | | | | 9 | 5 | |

## சுடோக்கின் நேற்றைய விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 8 | 2 | 3 | 7 | 4 | 6 | 9 | 5 | 1 |
| 7 | 5 | 4 | 8 | 9 | 1 | 2 | 6 | 3 |
| 6 | 1 | 9 | 2 | 3 | 5 | 8 | 4 | 7 |
| 3 | 9 | 5 | 6 | 7 | 2 | 4 | 1 | 8 |
| 2 | 8 | 7 | 1 | 5 | 4 | 6 | 3 | 9 |
| 1 | 4 | 6 | 3 | 8 | 9 | 7 | 2 | 5 |
| 9 | 6 | 8 | 4 | 1 | 3 | 5 | 7 | 2 |
| 5 | 3 | 2 | 9 | 6 | 7 | 1 | 8 | 4 |
| 4 | 7 | 1 | 5 | 2 | 8 | 3 | 9 | 6 |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்குபடுத்தல்தான் இதன் அடிப்படை. 1–9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3 ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உபசதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும் நிரலிலும் 1–9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராமல் நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப் படுகையில் உள் பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1–9 இலக்கங்கள் இரட்டைப் படாமல் வரவேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும் தர்க்க ரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் 'தனி எண்' என்பதாகும். 1986 இல் ஜப்பானிய நிறுவனமான 'நிகோலி' இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாகப் பரவலாக்கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்யமானது.


# காமராஜர் பல்கலைக்கழகம், மதுரை
## BA, B.Sc, B.Com

மேற்படி பல்கலைக்கழகத்தினால் புதிய ஆண்டுக்கான பதிவுகள் கோரப்பட்டுள்ளன

★ A/L இல் கலை, வர்த்தகம், கணிதம், விஞ்ஞானம் ஆகிய பிரிவுகளில் சித்தி அடைந்தவர்கள் விண்ணப்பிக்கத் தகுதியுடையவர்கள் ஆவர்.
★ BA இல் பொருளியல், வரலாறு, அரசியல், தமிழ், ஆங்கிலம், சமூகவிஞ்ஞானம் ஆகிய பாடங்களில் ஒருபாடத்தினை பிரதான பாடமாக தெரிவுசெய்ய முடியும்.
★ இவற்றுக்கான விரிவுரைகள் ஆரம்பமாகி நடைபெறுகின்றன.
★ இவற்றுக்கான பதிவுகள் எமது நிறுவனத்தினூடாக நடைபெறுகின்றன.

முக்கிய குறிப்பு: இந்த வருடம் மாத்திரம் A/L இல் இரண்டு பாடம் சித்தி அடைந்தவர்களும் விண்ணப்பிக்கலாம்

குறிப்பு: 1. வெளிமாவட்ட மாணவர்களுக்கான தங்குமிட வசதி இலவசம்
2. இப்பட்டநெறிகளானது பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்டவையாகும்
3. பரீட்சைகள்யாவும் புதிய உயர்கல்லூரி வளாக பரீட்சை மண்டபத்தில் நடைபெறுகின்றன.

கவனிக்குக: கடந்த காலங்களில் இப்பட்டநெறிகளை நிறைவுசெய்த பட்டதாரிகளுக்கு பட்டதாரி பயிலுநருக்கான நியமனங்கள் வழங்கப்பட்டதனை அறியத்தருகின்றோம்.

யாழ். இணைப்பாளர்
காமராஜர் பல்கலைக்கழகம் (மதுரை),
T.P : 021 222 8148

புதிய உயர்கல்லூரி,
ஆரியகுளம் சந்தி,
யாழ்ப்பாணம்.

(C/1541)(6-7-45)


# 2 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

மண்ணில் 29★08★1980 விண்ணில் 11★08★2010



மண்ணில் 04★03★1982 விண்ணில் 28★08★2010



திதி : 20 . 07 . 2012

**தங்கராசா சுகந்தன்** **கஜந்தி சுகந்தன்**

அன்னை மனம் குளிர தந்தை மனம் மகிழ
தரணியில் வந்துதித்தனையோ ?
வாழும் காலம் பலவிருக்க சிந்தை கலங்கவைத்து
வந்த வழி சென்றனையோ ?
காலமெல்லாம் துணையிருப்பேன் என்றவரையும் துணையாக்கி
இன்று எங்கு மறைந்தனையோ ? உம் நினைவுகள் நிழலாய் தொடர்ந்து வர
நித்தமும் கலங்குகின்றோம். உங்கள் ஆத்ம சாந்திக்காக பிரார்த்திக்கும்

பத்திரகாளி கோயில் ஒழுங்கை,
பருத்தித்துறை.
T.P : 001 416 287 1453 (Canada)

தந்தை - க.த...
சகோதரி, மைத்துனி - ...
மைத்துனர், சகோதரன் - ச. சந்திரகாந்த்
மருமக்கள் - சஜீவன், சஞ்சய்

(20563)(6-7-8)

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



பிறப்பு
17.05.1927

இறப்பு
01.08.2011

திதி:- பூர்வபக்க துதியை
(20.07.2012)

அமரர்
## சின்னத்தம்பி சிவகுரு J.P.
(ஓய்வுபெற்ற அதிபர்)

அன்புக்கும் பண்புக்கும் பாசத்திற்கும்
உறைவிடமாய் வாழ்ந்த எங்கள் குல தெய்வமே!
எமை விட்டு எங்கு சென்றீர்கள்
தேடுகிறோம்... ஏங்குகிறோம்
வாழ்க்கை எனும் பாதையிலே நீங்கள் காட்டிய
சீரான வழியிலே வாழ்ந்து வந்தோம்
உங்களை இழந்து ஓராண்டு ஆனதே!
எம் உயிரோடும் உணர்வோடும் கலந்துவிட்ட
உங்கள் நினைவுகள் என்றென்றும்
எம்முடன் நிலைத்திருக்கும்.

இணுவில் வீதி,
சுதுமலை வடக்கு, மானிப்பாய்.
021 225 5174

என்றும் நினைவில்:
குடும்பத்தினர்.

(சி/1552) (2-6-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நுளம்பைக் கட்டுப்படுத்த இலங்கையில் ஆராய்ச்சி

கொழும்பு,ஜூலை20

நாட்டில் டெங்கு நுளம்பைக் கட்டுப்படுத்த புதிய ஆராய்ச்சி ஒன்று மேற்கொள்ளப்பட்டு வருவதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

இலங்கை வைத்திய ஆராய்ச்சி நிலையம் மற்றும் கொழும்பு பல்கலைக்கழகம் என்பன இணைந்து இந்த ஆராய்ச்சியை மேற்கொண்டு வருகின்றன.

நுளம்புகளின் ஒலி அலைகளைக் கொண்டு அவற்றை அழிப்பது குறித்து ஆராய்ச்சி செய்யப்பட்டு வருவதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது. விசேடமாக பெண் நுளம்பு இனப்பெருக்கத்துக்காக ஆண் நுளம்பைக் கவர்வது அதன் சிறகு துடிக்கும் வேகத்தை வைத்தாகும். அந்த ஒலி அலைகளை இனங்கண்டு அதற்கு இடையூறு ஏற்படுத்தும் வகையிலான ஓர் ஒலி அலையை உருவாக்குவது இந்த ஆராய்ச்சியின் நோக்கமாகும். இந்த ஆராய்ச்சியின் ஆரம்ப கட்டப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன என்று சுகாதார அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

(ச)



மறைந்த தனது கணவர் விஜயகுமாரதுங்கவுக்குச் சொந்தமான சீதுவை முக்கலங்கமுவவில் உள்ள இரண்டு ஏக்கர் காணி தொடர்பான வழக்கில் தனது இரண்டு பிள்ளைகளின் சார்பாக முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க நேற்றுமுன்தினம் நீர்கொழும்பு மாவட்ட நீதிமன்றுக்கு வருகை தந்தபோது...

## அக்குரஸ்ஸ பிரதேச சபைக்கு புதிய தலைவர்

கொழும்பு,ஜூலை20

அக்குரஸ்ஸ பிரதேச சபைக்கு புதிய தலைவர் நியமிக்கப்படுவார் என்று ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலாளர் மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார். கொழும்பில் நேற்று வியாழக்கிழமை இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே இவ்வாறு தெரிவித்தார். 14 வயதுச் சிறுமி ஒருவரை வன்புணர்வுக்கு உட்படுத்திய குற்றச்சாட்டில் அக்குரஸ்ஸ பிரதேச சபைத் தலைவர் சாருவ லியனகே சுனில் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ச)

## போலி நாணயத் தாளை அச்சிட்ட கல்விப் பணிப்பாளர் கைதானார்

கொழும்பு,ஜூலை20

போலி நாணயத்தாள்களை அச்சிட்ட மாத்தளை பிரதேசத்தைச் சேர்ந்த கல்விப் பணிப்பாளர் ஒருவரும், அவரது நண்பரும் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

மாத்தளை, ரண்தொழுகம பகுதியில் இவர்களின் செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டு வந்ததாக பொலிஸார் கூறுகின்றனர்.

இந்த நபர்கள் நீர்கொழும்பு பிரதான நீதிவான் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்பட்டு எதிர்வரும் 30 ஆம் திகதி வரை விளக்கமறியலில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

ரண்தொழுகம பொலிஸாருக்குக் கிடைத்த தகவல்களின் அடிப்படையில், கடந்த 16 ஆம் திகதி இவர்கள் பண அச்சிடல் செயற்பாட்டில் ஈடுபட்டிருந்த போது கைது செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

(ச)

## வன்புணர்வுக் புரிந்தோருக்கு 10 வருட சிறை

கொழும்பு,ஜூலை20

மஹரகமவில் ஆடைத் தொழிற்சாலையில் பணியாற்றும் பெண்ணொருவரை வன்புணர்வுக்கு உட்படுத்தியதாகக் குற்றம் சுமத்தப்பட்ட இருவருக்கு கொழும்பு மேல் நீதிமன்றம் நேற்றுமுன்தினம் 10 வருட சிறைத்தண்டனை விதித்துத் தீர்ப்பளித்துள்ளது.

களுகே சரத் சந்திரசிறி, மொஹமட் சமூர்டீன் ஆகிய இருவருக்குமே இந்தத் தண்டனை விதிக்கப்பட்டது.

இந்த நபர்கள் இருவரும் ஆடைத்தொழிற்சாலை ஊழியரான பெண் ஒருவரை பலவந்தமாக கடத்திச்சென்று வன்புணர்வுக்கு உட்படுத்தியதாகச் குற்றம் சுமத்தப்பட்டிருந்தனர்.

கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி பந்துல கே. அத்தபத்துவினால் இவர்களுக்கு 10 வருட சிறைத்தண்டனை விதிக்கப்பட்டதுடன் பாதிக்கப் பட்ட பெண்ணுக்கு தலா 25,000 ரூபா நஷ்ட ஈடு வழங்குமாறும் நீதிபதி உத்தரவிட்டார்.

(ச)

# இலவசக் கல்வி முறை அரசால் சீர்குலைப்பு

## கபீர் ஹாசீம் எம்.பி. குற்றச்சாட்டு

கொழும்பு,ஜூலை 20

இலவசக்கல்வி முறைமையை அரசு சீர்குலைத்துள்ளது என்று ஐக்கிய தேசியக் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் கபீர் ஹாசீம் குற்றம்சாட்டியுள்ளார்.

கொழும்பில் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

தொழிலாளர்களின் பிள்ளைகளுக்கு கல்வி பயிலும் சந்தர்ப்பத்தை அரசு முடக்கியுள்ளது.

சீ.டபிள்யு.டபிள்யு கன்னங்கரவினால் அறிமுகம் செய்யப்பட்ட இலவசக் கல்வித் திட்டத்தை முன்னாள் ஜனாதிபதி ஜே.ஆர். ஜயவர்த்தன மிகச் சிறந்த



முறையில் முன்னெடுத்தார் என்று அவர் கூறினார்.

1994 ஆம் ஆண்டு ஐக்கிய தேசியக் கட்சியிடமிருந்து ஆட்சி அதிகாரம் கைப்பற்றப்பட்டது முதல் இலவசக் கல்வி முறைமை சீர்குலைக் கப்பட்டுள்ளது என்று அவர் குறிப்பிட்டுள்ளார்.

(ச)

> 1994 ஆம் ஆண்டு ஐக்கிய தேசியக் கட்சியிடமிருந்து ஆட்சி அதிகாரம் கைப் பற்றப்பட்டது முதல் இலவசக் கல்வி முறைமை சீர்குலைக் கப்பட்டுள்ளது

## மக்களைத் துன்புறுத்தும் அரசியல்வாதிகளை மண்டியிட வைக்கும் சூழ்நிலை வேண்டும்

### அரசியல் கலாசாரத்தை மாற்றுவேன் என்கிறார் பொன்சேகா

கொழும்பு,ஜூலை 20

அரசியல்வாதிகள் மக்களிடம் மண்டியிடக்கூடிய சூழ்நிலை உருவாக்கப்பட வேண்டும்.

இந்த அரசியல் கலாசாரத்தை மாற்றி அமைப்பதே எனது நோக்கமாகும் என்று முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகா தெரிவித்தார்.

கொட்டாவ பிரதேசத்தில் நடைபெற்ற நிகழ்வு ஒன்றில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:-

அரசியல்வாதிகள் அனைத்து விடயங்களிலும் தலையீடு செய்ய முடியாத வகையில், மக்களைச் சுரண்டி மக்கள் மீது வரிச் சுமையை சுமத்தி, மக்களை துன்புறுத்தி வரும் அரசியல்வாதிகளுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படும்.

எனது பாட்டனாருக்கு மூன்று அறைகள் கொண்ட வீடு இருந்தது, எனது தந்தை ஒரு பாடசாலை அதிபர் அவருக்கும் மூன்று அறைகளைக் கொண்ட வீடு இருந்தது. நான் இந்த நாட்டின் இராணுவத் தளபதியாக கடமையாற்றியவன். எனக்கும் மூன்று அறைகளைக் கொண்ட வீடு ஒன்று இருக்கின்றது.

எனினும், அண்மையில் நான் கடுவெல பிரதேசத்துக்குச் சென்றபோது ஒரு வீடு நிர்மாணிக்கப்பட்டு வருவதைப் பார்த்தேன்.

சாதாரணமாக வீட்டின் மதில் ஆறு அடி இருக்கும், எனினும் இந்த வீட்டின் மதில் குறைந்தபட்சம் 14 அடி இருக்கும். உழைக்கும் மக்களுக்காக கடந்த காலங்களில் குரல் கொடுத்த, தமக்காகவும் பேசும் கட்சியொன்றின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும், தற்போது ஆளும் கட்சி அமைச்சருமான ஒருவரின் வீடே இவ்வாறு நிர்மாணிக்கப்பட்டு வருகின்றது.

கொள்கை அடிப்படையில் நான் குறிப்பிட்ட நபரின் பெயரை பகிரங்கப்படுத்த விரும்பவில்லை.

இந்த நபருக்கு இரண்டு தொலை பேசிகளைக் கொண்ட ஒரு சிறிய தொலைத் தொடர்பு நிலையம் ஒன்று மட்டுமே வாழ்வாதாரத்துக்கு இருந்தது.

எனினும், தற்போது அவர் நிர்மாணித்து வரும் வீட்டின் நாலா பகுதியிலும் அமைக்கப்பட்டுள்ள பாதுகாப்பு கூடாரங்களின் அளவு நான் தற்போது வசித்து வரும் வீட்டின் அளவை ஒத்தாகும்.

இவ்வாறு ஆளும் கட்சி உறுப்பினர்களினால் செல்வம் சம்பாதிக்க முடியுமாயின் அவர்கள் எவ்வாறு ஊழல் மோசடிகளை இல்லாதொழிக்குமாறு மக்களிடம் கோர முடியும்- என்றார். (ச)

## வியட்நாம் அமைச்சரை சந்தித்து பீரிஸ் பேச்சு

கொழும்பு, ஜூலை 20

வியட்நாமுக்கு சென்ற வெளிவிவகார அமைச்சர் ஜி.எல்.பீரிஸுக்கும் வியட்நாம் வெளிவிவகார அமைச்சர் பாம் பின் மின் ஆகியோருக்குமிடையே சந்திப்பொன்று இடம்பெற்றுள்ளது.

வியட்நாமின் ஹா நொய் நகரில் இடம்பெற்ற இச் சந்திப்பில் இரு நாடுகளுக்கும் இடையில் மேற்கொள்ளப்பட்ட உடன்படிக்கைகளைத் துரிதமாகச் செயற்படுத்துவது குறித்து கூடிய கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

2011 ஆம் ஆண்டு ஒக்ரோபரில் இலங்கை வந்த வியட்நாம் ஜனாதிபதி ட்ரொங் டென் செங் அரசியல், பாதுகாப்பு, தேசிய பாதுகாப்பு, பொருளாதாரம், வர்த்தகம், முதலீடு, கலாசாரம் மற்றும் கல்வித் துறைகள் குறித்து இலங்கையுடன் புரிந்துணர்வு உடன்படிக்கை செய்துகொண்டார்.

இந்த உடன்படிக்கைகளைத் துரிதகதியில் செயற்படுத்தவும் வர்த்தகம் மற்றும் வலய, சர்வதேச விடயங்களில் இணைந்து செயற்படுவது குறித்தும் இந்தச் சந்திப்பில் ஆராயப்பட்டுள்ளது.

சர்வதேசக் கடல் சட்டங்களுக்கு அமைய கடல் எல்லைப் பாதுகாப்பு விடயத்தில் இலங்கையும் வியட்நாமும் இணைந்து செயற்படத் தீர்மானித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ச)

## ஹெரோயின் விற்ற பெண்ணுக்கு தூக்குத் தண்டனை விதிப்பு

கொழும்பு, ஜூலை 20

ஹெரோயின் போதைப்பொருள் விற்பனை செய்த பெண்ணொருவருக்கு கொழும்பு மேல் நீதிமன்றம் நேற்றுமுன் தினம் புதன்கிழமை மரண தண்டனை விதித்துள்ளது.

இந்தப் பெண் 2001 ஆம் ஆண்டு வெள்ளவத்தைப் பகுதியில் ஹெரோயின் விற்பனை செய்ததாகக் குற்றம் சுமத்தப்பட்டிருந்தார். இந்த வழக்கில் குற்றவாளியாகக் காணப்பட்ட குறித்த பெண்ணுக்கு நீதிவான் மரண தண்டனை விதித்ததுடன், 30,000 ரூபா அபராதமும் விதித்து தீர்ப்பளித்தார். அபராதத் தொகையை செலுத்தத் தவறினால், 12 மாதச் சிறைத் தண்டனை அனுபவிக்க வேண்டும் என்று நீதிபதி உத்தரவிட்டார்.-

(ச)

## பொன்சேகா ஐ.தே.கவுக்கு வர நிபந்தனை தேவையில்லை

### சஜித் பிரேமதாச எம்.பி. கருத்து

கொழும்பு,ஜூலை20

நிபந்தனைகள் இன்றி சரத் பொன்சேகாவை கட்சியில் இணைத்துக் கொள்ள வேண்டும் என்று ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதித் தலைவர் சஜித் பிரேமதாச கோரிக்கை விடுத்துள்ளார்.

நாரஹேன்பிட்டி போதிரணசிங்க அமைப்பில் நடைபெற்ற நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:-

சரத் பொன்சேகா ஐக்கிய தேசியக் கட்சியில் இணைந்து கொண்டால் மகிழ்ச்சி அடைவேன். அவர் கட்சியில் இணைந்து கொள்வதற்கு நான் பூரணமான ஒத்துழைப்புக்களை வழங்குவேன்.

நிபந்தனைகள், சட்டங்களை பிறப்பிக்காது சரத் பொன்சேகாவுக்கு உரிய பதவிகளை வழங்க கட்சி நிர்வாகம் நடவடிக்கை எடுக்க வேண்டும். சரத் பொன்சேகா கட்சியில் இணைந்து கொண்டால் அது கட்சிக்கு மேலும் வலிமை சேர்க்கும். ஐக்கிய தேசியக் கட்சிக்குள் முரண்பாடுகள் இல்லை. உறுப்பினர்களுக்கு இடையில் ஒற்றுமை காணப்படுகின்றது- என்றார்.

இதேவேளை, சரத் பொன்சேகா ஐக்கிய தேசியக் கட்சியில் இணைந்து கொள்ள வேண்டுமாயின் உத்தியோகபூர்வமாக அறிவிக்க வேண்டும் என்று ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க சுட்டிக்காட்டியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ச)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாராட்டு வாழ்த்து



வவுனியா இறைபணிச்செம்மல்
வைத்திலிங்கம் செல்லத்துரை தேவராசா J.P.
அவர்களின் 75ஆவது பிறந்த நாள் ஆரம்ப தினத்தில்
இன்று 20.07.2012 பாராட்டி வாழ்த்துகின்றோம்.

இறைபணிச் செம்மல், திருவாசகச் செல்வர், பெரியபுராண மாமனிதர், ஈழத்து சிவதொண்டன் எனப் பல பாராட்டுகளைப் பெற்றுக் கொண்டவரும் வவுனியாவில், கொழும்பில், யாழ்ப்பாணத்தில், தமிழ்நாட்டில், சிங்கப்பூரிலும் திருவாசக முற்றோதலை இன்று வரை 880இக்கு மேற்பட்ட தடவைகள் திருவாசகத்தை முற்றோதல் செய்தும் செய்வித்தும் செய்யும் இடங்களில் கலந்து கொண்டும் இப்பணியை இன்றும் தொடர்ந்து வரும் இறைபணிச் செம்மல் வை.செ.தேவராசா J.P. அவர்களைப் பாராட்டி வாழ்த்துகின்றோம். அவரது சேவை இன்னும் பல ஆண்டுகள் தொடர வேண்டும் என மனதார வாழ்த்துகின்றோம். பாராட்டுகின்றோம்.

20.07.2012 இன்று வவுனியா வைரவப்புளியங்குளம் ஆதி விநாயகர் ஆலய அமரர் திருமதி பாலாம்பிகை தேவராசா கலாசார மண்டபத்தில் திருவாசக முற்றோதல் நடைபெறும். வழமையாக திருவாசக முற்றோதலில் கலந்து கொள்ளும் அடியார்கள் வந்து கலந்து கொள்ளுமாறு அன்புடன் வேண்டுகிறோம்.

வவுனியா ஆதிவிநாயகர் ஆலய
நிர்வாகமும், வைரவப்புளியங்குளம்,
வவுனியாஎன்.கே.புத்தக நிலையமும்.

(16916)(5-6-7)

# 11 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

அன்னையிடம்
29 ★ 05 ★ 1944

ஆண்டவனிடம்
20 ★ 07 ★ 2001



அமரர் **ஜோன் சண்முகம் சத்தியநாதன்**

(ஓய்வுபெற்ற கணக்குப் பதிவாளர்,
இலங்கை பனை அபிவிருத்திச் சபை)

சத்திய வழி நின்று வாழ்ந்தவரின்
வளர்ப்பினால் நாமின்று "ஷத்யகி"யில் சிறப்பாக
வாழ்வதனை எம் உயர்வுக்கு உரமிட்ட
தாங்கள் காணவில்லையே என்னும் குறையுள்ளது
பரிதவிப்புக் கொண்ட உள்ளத்தை தேற்றுகின்றோம்
நித்தமும் தங்களை நினைப்பதாலே

"ஷத்யகி"
ஆவரங்கால் கிழக்கு, புத்தூர்

கண கிருஷ்ணராஜன்
குடும்பம்.

(20626)(6-7-8)

# மரண அறிவித்தல்

திருமதி **மங்கையர்க்கரசி விநாயகமூர்த்தி**

*(அரசக்கா)*

அரியாலையைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட அரசக்கா என்று அன்பாக அழைக்கப்படும் திருமதி மங்கையர்க்கரசி விநாயகமூர்த்தி நேற்று (19.07.2012) வியாழக்கிழமை காலமாகி விட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா - ஆச்சிமுத்து தம்பதியரின் அன்புமகளும், காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி - விசாலாட்சி தம்பதியரின் அருமை மருமகளும், காலஞ்சென்ற விநாயகமூர்த்தியின் (ஓய்வு பெற்ற தலைமை காவலர், புகையிரத நிலையம்) அன்புமனைவியும், ஜெயந்தியின் (நூலகர் - யாழ். பொதுசன நூலகம்) அன்புத்தாயும், காலஞ்சென்றவர்களான Dr.சந்திரசேகரம், கனகாம்பிகை - மகேஸ்வரன் மற்றும் வசந்தகோகிலா - ஜெகசோதி ஆகியோரின் அன்புச்சகோதரியும், காலஞ்சென்றவர்களான உமையவல்லி - பொன்னுத்துரை, பர்வதம் - சொக்கலிங்கம், இராசம்மா - கந்தசாமி, கண்மணி - புண்ணியமூர்த்தி ஆகியோரின் மைத்துனியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (19.07.2012) வியாழக் கிழமை கச்சேரி கிழக்கு ஒழுங்கையிலுள்ள அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் அரியாலை சித்துப்பாத்தி இந்து மயானத்தில் தகனம் செய்யப்பட்டது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கச்சேரி கிழக்கு ஒழுங்கை, அரியாலை

தகவல்:
ஜெயந்தி (மகள்)

(20627(6-7-8)

## நாயால் வந்த வினை

வலி. வடக்கு, ஜூலை 20

கொக்குவில் கிழக்கில் நாய் வளர்ப்பால் ஏற்பட்ட வாய்த் தர்க்கத்தைத் தொடர்ந்து அயலவர் தாக்கப்பட்டு காயங்களுக்கு உள்ளாகிய நிலையில் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்ட சம்பவம் ஒன்று இடம் பெற்றுள்ளது.

கொக்குவில் கிழக்கு இராம கிருஸ்ணா பாடசாலை ஒழுங்கையில் இந்தச் சம்பவம் கடந்த மூன்று நாள்களுக்கு முன்னர் இடம்பெற்றுள்ளது.

குறிப்பிட்ட நாயால் அயலவர் நாளாந்தம் பல சிரமங்களுக்கும் ஆளாகி வந்துள்ளார். இதனைத் தொடர்ந்து குறிப்பிட்ட நாயைக் கட்டி வளர்க்கும்படி தெரிவித்ததைத் தொடர்ந்து இருவருக்கும் இடையே வாய்த் தர்க்கம் ஏற்பட்டுள்ளது. இது கைகலப்பாக மாறியதை அடுத்து நாய்ச் சொந்தக்காரரால் அயலவர் தாக்கப்பட்டுள்ளார்.

இந்த விடயம் தொடர்பாக பொலிஸார் விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.

(ம-86)


## வீடுகள் வாடகைக்கு

கண்டி வீதி, அரியாலையிலும் மற்றும் AV Road அரியாலையிலும் இரண்டு வீடுகள் வாடகைக்கு உண்டு.

தொடர்பு: 077 257 1253

(20624) (45.6.7)

## வீடு வாடகைக்கு தேவை

கோண்டாவில் கிழக்கு, திருநெல்வேலி, உரும்பிராய்ப் பகுதிகளில் பலாலி வீதிக்கு அருகில் சிறிய அரசசேவையிலுள்ள குடும்பமொன்றுக்கு வீடு வாடகைக்குத்தேவை.

தொடர்புகளுக்கு: 077 7808 625, 071 8474 650

(20625) (45.6.7)




## வீடு விற்பனைக்கு

உடுவில் மானிப்பாய் வீதியிலிருந்து 100 யார் அருகில் (உடுவில் மகளிர் கல்லூரிக்கு அருகில்) ஐந்து அறைகள் உட்பட எல்லா வசதிகளும் உள்ள நல்ல சுற்றாடலில் அமைந்த வீடு விற்பனைக்கு.

தொடர்பு: 077 8546 124

(G/1365)(45.6.7)

## டிப்பர் விற்பனை

LD தொடர் இலக்கமுடைய LANKA ASHOK LEY LAND (2007 ஆம் வருட உற்பத்தி) Turbo engine உடைய டிப்பர் வாகனம் விற்பனைக்குண்டு

தொடர்புகளுக்கு:077 360 1749, 077 8767 804

(20620) (45.6.7)

## பெயர்மாற்றம்

சங்குவேலி வடக்கு, மானிப்பாய் என்னும் முகவரியைச் சேர்ந்த செல்லையா பரிமளம் ஆகிய நான் இன்றிலிருந்து செல்லையா சந்திரலேகா என பெயர் மாற்றி சகல ஆவணங்களிலும் கையொப்பம் இடுவேன் என்று சகலருக்கும் அறியத்தருகின்றேன்.

சங்குவேலி வடக்கு,
மானிப்பாய்.

செ. சந்திரலேகா

(20622) (45.6.7)

## யாழ் நகரில் வேலை வாய்ப்பு

யாழ்.நகரில் இயங்கும் கணினி நிறுவனத்துக்கு Ms office தெரிந்த இருபாலாரிடமிருந்தும் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றது.
(பயில விரும்புபவர்களும் விண்ணப்பிக்கலாம்)

தொடர்புகளுக்கு - 0779906299

## சிங்கள மொழி கற்பிக்கப்படும்

பேச, எழுத, வாசிக்க தனியார் கல்வி நிலையங்களிலும் வீடுகளிலும் பிரத்தியேகமாக வந்து சிங்கள மொழி கற்பிக்கப்படும்.

தொடர்பு: 075 0480935

(20601)(6-7-8)


# ஓராண்டு நினைவஞ்சலி

தோற்றம்
15 ★ 08 ★ 1930

மறைவு
31 ★ 07 ★ 2011



**அமரர் அரியகுட்டி இராசரத்தினம்**

(இளைப்பாறிய எழுதுவினைஞர்)

அன்பான குணத்தால் பூப்போன்ற மனத்தால்
அன்னையையும் எங்களையும் அரவணைத்த அன்பு அப்பா
அவயத்தில் எம்மை முந்தியிருக்க வைத்து
தியாகத்தின் தீபமென எம் மனதில் வாழ்கின்றீர்

31.07.2011 இறைபதம் அடைந்த எமது குடும்பத் தலைவர் அரியகுட்டி இராசரத்தினம்அவர்களின் ஓராண்டு நினைவுப் பிரார்த்தனை இன்று (20.07.2012) வெள்ளிக்கிழமை எமது இல்லத்தில் நடைபெற இருப்பதால் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் கலந்து அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

டச்சு றோட்,
உடுவில்.

மகன், மகள்,
மருமக்கள்
பேரப்பிள்ளைகள்.

(20605)(5-6-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாசிப்பை வழங்குங்கள்

தூய சிந்தனையையும் சிறந்த வழிகாட்டலையும் ஏற்படுத்தும் வாசிப்புப் பழக்கமானது இன்றைய உலகில் பல மாற்றங்களை வாசகர் மத்தியில் ஏற்படுத்தி இருக்கிறது. உலக வரலாற்றில் வாசிப்புப் பழக்கமானது ஒரு மனிதனை உலகப் பிரசித்திபெற்ற எழுத்தாளனாகவும் சிறந்த தலைவனாகவும் மாற்றியிருக்கின்றமை குறிப்பிடத்தக்கது. இந்த வாசிப்புப் பழக்கமூடாக ஒரு சமூகத்தையே உயர்ந்த அந்தஸ்துள்ள சமூகமாக மாற்ற முடியும் என்பது வரலாறு தந்த பாடமாகும்.

வாசிகசாலைகளை அமைப்பவர்கள் இதனைக் கருத்தில் கொண்டு செயலாற்றுவார்களா? இது இன்றைய காலப்பகுதியின் தேவையாகவுள்ளது. வெறுமனே வாசிகசாலைகளை பெரிய அளவில் கட்டிவிட்டு அந்தக் கட்டடங்களுக்குள் சிறந்த நூல்களை வாசகர்களுக்கு காட்சிப்படுத்தாது இருப்பது வேதனை தரும் விடயமாகும். இதனை அதிகாரிகள் கருத்தில் கொள்வார்களா?

வாசிப்பு ஒரு மனிதனை பூரணமடையச் செய்கிறது. அதனால் வாசிப்புப் பழக்கத்தினை எமது சமூகத்தில் ஏற்படுத்த வேண்டும். அதன் மூலமே அறிவுள்ள சமூகமாக எமது சமூகத்தை மாற்ற முடியும். ஆகவே வாசிப்புப் பழக்கத்தினை ஏற்படுத்த வாசிகசாலைகளை உருவாக்க வேண்டும். அந்த வாசிகசாலைகளில் பயன்தரும் நூல்களை காட்சிப்படுத்த வேண்டும். அப்பொழுதுதான் வாசிகசாலைக்கு வரும் வாசகர்கள் பத்திரிகைகளை மட்டும் வாசிப்பதோடு நின்றுவிடாது பல நூல்களையும் வாசிக்கக்கூடியதாக இருக்கும்.

இதனை ஒவ்வொரு ஊரில் உள்ள பெரியவர்களும் கருத்தில் எடுத்து செயற்பட்டால் அந்த ஊர் அறிவு வளர்ச்சியில் பொருளாதார மட்டத்தில் முன்னோக்கி வளரும் என்பது உண்மை. பெயருக்கு வாசிகசாலைகளைக் கட்டி திறந்து விட்டு அங்கு 4 பேப்பரை வைத்திருக்கின்றார்கள் பல இடங்களில். இந்த நிலைமை மாறவேண்டும். பின்தங்கிய பிரதேசங்களில் வாசிகசாலைகள் இருக்கின்றன. ஆனால் அவை செயற்படாமல் இருப்பது வேதனைதரும் விடயமாகும். இதனை சம்பந்தப்பட்ட அதிகாரிகள் கருத்தில் எடுப்பார்களா?

நகர்ப்புற வாசிகசாலைகளைவிட பின்தங்கிய கிராமப்புற வாசிகசாலைகளை புனரமைப்புச் செய்து அந்த வாசிகசாலைகளில் பயன்தரும் நூல்களைக் காட்சிப்படுத்த வேண்டும். அப்பொழுதுதான் அந்த ஊர் மக்களிடம் வாசிப்புப் பழக்கத்தினை ஏற்படுத்தி அவர்களிடம் அறிவினை உண்டு பண்ணி பின்தங்கிய கிராமப்புறங்களையும் வளரச்சியடைய வைக்க முடியும்.

நாவாந்துறை பகுதியொன்றில் மண்பிட்டி பிரதேசத்தில் உள்ள ஒரு வாசிகசாலை ஒன்று மூச்சு விடமுடியாது இயக்கம் இல்லாமல் உயிர் வாழ்ந்து கொண்டிருக்கிறது.

கடந்த ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 6 மணி இருக்கும் சூரியன் மறைந்து கொண்டிருக்கும் கடற்கரைப்பக்கம் உள்ள நாவாந்துறைப் பிரதேசத்துக்குள் நுழைகிறேன். பிரபல சிறுகதை எழுத்தாளனாக இருந்த அதே பகுதியைச் சேர்ந்த மறைந்த டானியல் அன்ரனியின் ஊர் என்றால் அந்தக் காலம் சொல்லவா வேண்டும்? இலக்கிய நண்பர்கள் கூடுதலாக காணப்படும் ஊராக இருந்தது.

என்னை எதிர்பார்க்காத நண்பன் ஒருவன் அந்தப் பிரதேசத்தில் உள்ள வாசிகசாலை ஒன்றிற்குள் அழைத்துச் சென்றார். எதுவித வசதிகளும் இன்றி அந்த வாசிகசாலை உயிர்வாழ்வதற்காக மூச்சுவிட்டுக் கொண்டிருப்பதை பார்க்கிறேன். ஓட்டை விழுந்த கூரை ஓடுகளும் உள்ள அந்த வாசிகசாலை மின்சாரம் இல்லாமல் இருளில் இருக்கிறது. அங்குள்ள மேசை மீது பத்திரிகைகளும், தமிழ் நாட்டிலிருந்து வெளிவரும் சஞ்சிகைகளான ஆனந்தவிகடன், குமுதம், உயிர்மை போன்ற சஞ்சிகைகளும் யாரும் எம்மை வாசிப்பார்களா என்று திறந்தும், திறக்காமல் மூடி இருக்கின்றன.

அந்த வாசிகசாலையின் நிலைமை பற்றி அவனிடம் கேட்டபோது "இந்த வாசிகசாலைக்கான புதிய கட்டடம் 2009 ஆம் ஆண்டு மாநகரசபையினால் வாசிகசாலைக்குப் பின்பக்கம் அரையும் குறையுமாக கட்டப்பட்டு இன்றும் முழுமையடையாமல் இருக்கிறது" என்கிறார்கள். இன்று மூன்று ஆண்டுகள் கடக்கும் நிலையில் பல தடவைகள் மாநகரசபைக்கு இந்த வாசிகசாலை கட்ட வேலையை பூர்த்தி செய்து தருமாறு கடிதம் அனுப்பியும் எந்தப் பயனும் இல்லாமல் இருக்கிறதாம். பிறகு எதற்கு இந்த வாசிகசாலைக்கான புதிய கட்டடத்தை கட்ட ஆரம்பித்தார்களோ என்ற விடயம் எதிரும் புதிருமாக உள்ளது.

ஊர் மக்களின் முயற்சியால் தமிழ் நாட்டில் இருந்து சஞ்சிகைகள் எடுக்கப்பட்டும் இந்த வாசிகசாலை வாசிப்புக்கு ஏற்றவாறு வசதியில்லாததால் அந்த சஞ்சிகைகளை வாசிக்க எவரும் முன்வர தயங்குகின்றனர். அரைகுறையாக இருக்கும் இந்த வாசிகசாலைக்கான புதிய கட்டடத்தை கட்டி முடிப்பார்கள் ஆயின் இந்தப் பகுதி மக்களிடையே வாசிப்புப் பழக்கத்தினை ஏற்படுத்த முடியும். டானியல் அன்ரனி இருந்த காலப்பகுதியில் நாவாந்துறைப் பிரதேசம் இலக்கியத்துறையில் பெயர் எடுத்திருந்தது. "சமர்" என்ற மாதாந்த இலக்கிய சஞ்சிகையை வெளியிட்டு அந்தப் பகுதி மக்களின் வாசிப்பினை ஊக்கப்படுத்தினார். அதுமட்டுமா இலக்கிய அமைப்பொன்றை உருவாக்கி அந்தப் பகுதி மக்களின் அறிவினைக் கூட்டுவதற்கு முயற்சியும் செய்தார். அவர் இறந்தவுடன் அந்த இலக்கியமும் வாசிப்புப் பழக்கமும் அந்த மக்களிடையே நலிந்து விட்டன.

பின்தங்கிய கரையூர் பிரதேசம் என்று கைவிட்டு விடாதீர்கள். இந்தப் பகுதியில் மீண்டும் இலக்கிய ஆர்வலர்களை உருவாக்க வாசிகசாலை ஒன்று வசதிவாய்ப்

**கோப்பாய் சண்முகம்**
**கதையோடு செய்தி**

புக்களுடன் உருவாக வேண்டும். அப்பொழுதான் இந்த மக்களிடையே மீண்டும் வாசிப்புப் பழக்கத்தை ஏற்படுத்தி டானியல் அன்ரனி போன்று பெயர் எடுக்கும் ஓர் எழுத்தாளரை உருவாக்கமுடியும். அலையாடி கலையும் கரையும், படகேறி கடலும் உலவும் வாழ்வினை அழகாக "அலை" என்ற சிறகதைத் தொகுதியில் தனது ஊர் மக்களின் வாழ்வினை டானியல் அன்ரனி பதிவுசெய்துள்ளார். அவருக்கு பல விருதுகளும் அந்தக் காலப்பகுதியில் கிடைக்கப்பெற்றமை குறிப்பிடத்தக்கது.

அவர் மறைந்து போன பின்னர் எமது பகுதியில் இருந்து பெயர் சொல்லும்படி ஒரு எழுத்தாளன் கிடைக்கவில்லை என்பதும் சமகால பதிவுகளை பதிவுசெய்ய முடியாமல் உள்ளது என்பதும் கவலை தரும் விடயம் என்று நண்பன் கவலைப்பட்டான். நாவாந்துறைப் பிரதேசத்தின் வளர்ச்சியில் மாநகரசபை உதவுமா?

கட்டிமுடிக்கப்படாத வாசிகசாலையின் புதிய கட்டடத்தை கட்டி முடித்து இந்தப் பிரதேசத்தில் மீண்டும் பிரசித்தி பெற்ற ஓர் எழுத்தாளனை உருவாக்கி இந்தப் பிரதேசம் முன்னேற வழியை ஏற்படுத்திக் கொடுப்பார்களா? இருக்கிற கட்டடத்தை உடைத்து புதிய கட்டடம் அமைத்து தமது பெயர்களை அந்தக் கட்டடத்தின் மீது பதிய முண்டியடிக்கும் அரசியல்வாதிகள் கட்டி முடிக்கப்படாத இந்த புதிய வாசிகசாலையின் கட்டடத்தை கட்டிமுடிப்பார்களா?

**இப்போது விற்பனையில்**




பெற்றோரே உங்கள் பிஞ்சுகளைக் காப்பாற்றுங்கள். பெற்றோரை விட பிள்ளைகளுக்கு பாதுகாப்பு வேறு எவருமில்லை என்பதை பொறுப்புடன் உணருங்கள்.





**இப்படித்தான் இன்று சிங்கப்பூர்**

அவர்கள் தரும் நாள்களுக்கு மேல் நாட்டில் தங்கி இருப்பவர்களுக்கு ஒரு நாளுக்கு ஒரு கசையடி வழங்கப்படும் என்பது முதலே நான் கேள்விப்பட்ட தண்டனை. அது ஆயுள் முழுக்க உடலை விட்டு அழியாதாம்.



இதுவரை காலமும் ஞாயிறு இதழாக வெளிவந்த **சுடர் ஒளி** இப்போது **புதன் கிழமைகளில்** வெளியாகின்றது என்பதை வாசகர்களுக்கு அறியத்தருகின்றோம்.!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## விரைவில் களமிறங்கும் நவீன 'ரப்லட்'

கூகுளின் பிந்திய அன்ரோயிட் பதிப்பான 4.0 Ice Cream Sandwich இயங்குதளத்தில் செயற்படக்கூடிய Velocity Micro Cruz T508 வகை நவீன ரப்லட்கள் விரைவில் அறிமுகமாகின்றன.

எட்டு அங்குல திரை கொண்டு அமைக்கப்பட்டுள்ள இந்த ரப்லட்களில் 1.2 GHz வேகத்தில் செயற்படக்கூடிய Allwinner A10 ARM Cortex &A8 வகை புரோசசரும் காணப்படுகின்றது.

மேலும் இவற்றுடன் பிரிமியம் மென்பொருள் பொதிகளும் உள்ளடக்கப்பட்டிருப்பதுடன் Flash Player 11.1 மென்பொருள் செயற்படக்கூடியதாகவும் உருவாக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## வருகிறது விண்டோஸ் -8

புதிய இயங்குதளத் தினை எதிர்வரும் ஒக்டோபர் மாதம் வெளியிடுவதாக மைக்ரோசொப்ட் நிறுவனம் தெரிவித்துள்ளது.

உலகளவிலான பங்குதாரர் கண்காட்சி அண்மையில் கனடாவில் உள்ள ரொரன்டோவில் நடைபெற்றது.

இந்தக் கண்காட்சியில் மைக்ரோசொப்ட் நிறுவனம் தனது புதிய இயங்குதளமான விண்டோஸ்-8 வருகிற ஒக்டோபர் மாதம் வெளியாகும் என்று அறிவித்திருக்கிறது.

இந்த இயங்குதளம் கொண்ட கணினிகள் தயாரிக்கும் வேலைகள் மும்முரமாக நடைபெற்று வருகின்றன.

இந்த வேலைகள் ஓரளவு முடிந்து வெளியாகும் நிலையில் உள்ளது. இருப்பினும் இறுதிக் கட்டப் பணிகள் நடைபெற்று வருகின்றன.




ஏனெனில் வாடிக்கையாளர்கள் இந்த புதிய விண்டோஸ்-8 இயங்குதளத்தினைப் பயன்படுத்தும்போது, மிகச்சிறப்பான பயன்பாட்டைக் கொடுக்க வேண்டும்.

ஓகஸ்ட் மாதம் இந்த விண்டோஸ் இயங்குதளம் வெளியிடப்படும் திகதி அறிவிக்கப்படும் என்றும் தகவல்கள் வெளியாகி உள்ளது.

மைக்ரோசொப்ட்டின் இந்த புதிய விண்டோஸ்-8 இயங்குதளம் 2,233 டொலர் இருக்கும் என்றும், விண்டோஸ்-8 இயங்குதளம் 231 சர்வதேச சந்தைகளில் வெளியிடப்பட உள்ளதாக வும் மைக்ரோசொப்ட் நிறுவனம் அறிவித்துள்ளது.

**விண்டோஸ்-8 இயங்குதளம் 231 சர்வதேச சந்தைகளில் வெளியிட உள்ளது.**





உலகில் தற்போது கைபேசிகளின் பயன்பாடுகள் அதிகரித்துக் கொண்டே வருகின்றன. இதில் இருக்கும் ஒரு சிறிய குறைபாடு என்னவென்றால் விரும்பும் நேரத்தில் பற்றரியை மின்னேற்றம் செய்து கொள்ள இயலுவது இல்லை.

ஆனால் இந்தக்குறையை நீக்குவதற்காக போர்ட்ரானிக்ஸ் நிறுவனம் ஒரு சிறிய மொபைல் மின்னேற்றக்கருவியை (Mobile Charger) களமிறக்கி இருக்கிறது.

இந்த மின்னேற்றக்கருவிக்கு 'சார்ஜ் எக்ஸ்' என்று பெயர் சூட்டப்பட்டிருக்கிறது. சிறிய வடிவில் இருக்கும் இந்த மின்னேற்றக்கருவியை வெளியில் போகும்போது எளிதாக எடுத்தச்செல்ல முடியும். இந்த சார்ஜ் எக்ஸில் 5,600 எம்.ஏ.எச். லித்தியம் பொலிமர் பற்றரி இருக்கிறது. அதோடு இதில் 2 யு.எஸ்.பி. போர்ட்டுகளும் உள்ளன.

அதனால் ஒரே நேரத்தில் இரண்டு கைபேசி அல்லது இரண்டு ரேப்லெட்டுகளுக்கு இந்த சாதனத்தின் மூலம் ரீசார்ஜ் செய்ய முடியும். குறிப்பாக இந்த சார்ஜ் எக்ஸில் கைபேசிகள், டேப்லெட்டுகள், கேமிங் சாதனங்கள், ப்ளூடூத் சாதனங்கள், சிறிய ஸ்பீக்கர்கள் மற்றும் ஜிபிஎஸ் சாதனங்களுக்கு சார்ஜ் செய்ய முடியும்.

மேலும், இந்த சார்ஜ் எக்ஸ் 11 மணி நேர சார்ஜ் வழங்கும் திறனையும் கொண்டது என்பதுடன் இதை ரூ.3000க்கு வாங்கலாம் என்பது தான் மகிழ்ச்சியான செய்தி.




இணையத்தளங்களில் பயனாளர்களின் இரகசியத் தகவல்களைத் திருடுவது அண்மைக் காலமாக அதிகரித்துள்ளது.

இந்த நிலையில் தற்போது பிரபலமான யாகூ இணையத்தளத்தில் சுமார் 4 லட்சத்து 53 ஆயிரம் பேரின் கடவுச் சொற்கள் திருடப்பட்டு உள்ளன.

இது பயனாளர்களை அதிர்ச்சியில் ஆழ்த்தி உள்ளது. இதுஎப்படி நடந்தது? யார் திருடினார்கள்? என்று தெரியவில்லை என யாகூ இணையத்தளம் கூறியுள்ளது.

இதுகுறித்து இந்த நிறுவனத்தின் பிரிட்டன் தலைமை அலுவலக நிர்வாகி பி.ஆர்.கரோலின் மோக்லியோட் ஸ்மித் கூறுகையில், இந்தச் சம்பவம் நடந்தது உண்மைதான். அது குறித்து தீவிர விசாரணை நடைபெற்று வருகிறது. மேற்கொண்டு வேறு விவரங்கள் எதுவும் தெரிவிக்க இயலாது என்றார்.





## நொக்கியாவின் புதிய மென்பொருள்

நொக்கியா நிறுவனம் லூமியா 800 மற்றும் லூமியா 710 ஸ்மார்ட் போன்களுக்கு புதிய மென்பொருள் பதிவேற்ற வசதியை வழங்குகிறது. இந்த மென்பொருள் பதிவேற்றம் மூலம், ஒரே நேரத்தில் 5 மின்னணு சாதனங்களில் 3ஜி வசதியைப் பெறலாம் என்பதுதான் இதன் சிறப்பு.

ஒன்றுக்கும் மேற்பட்ட தொழில்நுட்பச் சாதனங்களை இணைக்க வேண்டும் என்றால் அதற்கு ரூட்டர் கருவி தேவைப்படுகிறது. ஆனால் நொக்கியா வழங்கும் இந்த மென்பொருள் பதிவேற்றம் மூலம் 4, 5 மின்னணுச் சாதனங்களிலும் எளிதாக ஒரே நேரத்தில் 3ஜி வசதியைப் பயன்படுத்தலாம்.

நொக்கியா வழங்கும் இந்த மென்பொருள் பதிவேற்ற அறிவிப்பை அதிகார பூர்வமாக தனது வலைத்தளத்தில் தெரிவித்துள்ளது. அண்மைக் காலமாக நொக்கியா நிறுவனம் பல சரிவுகளைச் சந்தித்து வந்தாலும் கூட, ஸ்மார்ட்போன் உலகில் சிறப்பாக கால் பதிக்க முயற்சித்துக் கொண்டு வருகிறது என்பதற்கு நொக்கியா வழங்கும் இந்த பதிவேற்றம் சிறந்த உதாரணம் என்று சொல்லலாம்.

## பேஸ்புக் 'டிப்ஸ்'

உலகின் முன்னணியில் இருக்கும் பேஸ்புக் சமூக வலைத்தளத்தில் கணக்கு வைத்திருப்பவர்கள் அதிகமான நண்பர்களைச் சேர்த்து விடுவார்கள்.

அதில் பலர் யார் என்றே எமக்குத் தெரியாது. இதனால் முக்கியமான நண்பரை எமது நண்பராய் இணைக்க முடியாதது, முக்கியமானவர்களின் Status களை பார்க்க இயலாத நிலை வரலாம்.

அதற்கு எமக்குத் தெரியாத நண்பர்களை நாம் நீக்குவது அவசியமாகிறது.

இதற்கு முதலில் உங்கள் Profile பக்கத்துக்கு(Timeline பக்கம்) வந்து அதில் Friends என்று உள்ளதை கிளிக் செய்யவும்.

இவ்வாறு இல்லாமல் அவர் நண்பர் பட்டியலில் இருக்க வேண்டும், ஆனால் அவர் போடும் செய்திகள் எனக்கு வேண்டாம் என்று நினைத்தால், மேலே படத்தில் உள்ள "Show in News Feed" என்பதை Unclick செய்து விடவும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



புனரமைக்கப்பட்ட

# யாழ். பழைய பூங்கா திறப்பு விழா

## 20 ஜூலை 2012, மதியம் 12.00 மணி







மேன்மை தங்கிய ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ச அவர்களுடைய
மஹிந்த சிந்தனை கொள்கைத் திட்டத்தின் கீழ் "வடக்கின் வசந்தம்"
நிகழ்ச்சித் திட்டத்தில் பொருளாதார அபிவிருத்தி அமைச்சரும் வட மாகாண
ஜனாதிபதி செயலக அணித் தலைவருமான கௌரவ பசில் ராஜபக்ச
அவர்களின் வழிகாட்டலிலும் மற்றும் பாரம்பரிய கைத்தொழில்
மற்றும் சிறுதொழில் முயற்சியாண்மை அபிவிருத்தி அமைச்சர்
கௌரவ டக்ளஸ் தேவானந்தா அவர்களின் ஆலோசனையுடனும்
வட மாகாண ஆளுநர் கௌரவ ஜீஏ சந்திரசிறி அவர்களின் செயற்பாட்டிலும்
யாழ்ப்பாணத்தில் புனரமைக்கப்பட்ட பழைய பூங்காவானது மக்களின்
பயன்பாட்டிற்காக 20 ஆம் திகதி ஜூலை மாதம் 2012 மதியம் 12 மணிக்கு
பொருளாதார அபிவிருத்தி அமைச்சர்

**கௌரவ பசில் ராஜபக்ச**

அவர்களினால் வைபவ ரீதியாக திறந்து வைக்கப்பட்டு
மக்களின் பயன்பாட்டிற்காக ஒப்படைக்கப்படுகின்றது.

ஆளுநர் அலுவலகம், வடமாகாணம்

[சி/1588]









# ஞாயிறு தோறும் யாழிலும் வலம் வருகிறது

## 'சுடர் ஒளி'

**வாசகர்களே.....**

**இவ்வாரம் விருந்தாக.....**

★ முஸ்லிம் காங்கிரஸும், தமிழ்க் கூட்டமைப்பும் எமக்குச் சவாலே கிடையாது
- மு.கா. பிரிந்த கதையை விளக்கி அமைச்சர் பஸில் பரபரப்புப் பேட்டி

★ கிழக்குத் தேர்தலும் இந்தியாவின் இராஜதந்திரமும்
- சிறப்புக்கட்டுரை

★ கவித்துப் போட்டியிட்டது தனித்துவத்தைக் காக்கவே
- அமைச்சர் ஹக்கீம் அதிரடி பேட்டி

★ மற்றும் பல சூடான தகவல்களுடன்...

(சி/1366)

பிரதிக்கு முந்துங்கள்



# 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்

தோற்றம்
20 . 01 . 1959



மறைவு
20 . 06 . 2012

அமரர்

## மதியாபரணம் சரத்பஞ்சாட்சரம்

## [ராசி சில்க்ஸ்]

கடந்த 20.06.2012 அன்று இறைவனடி சேர்ந்த எமது குடும்பத் தலைவரின் மறைவுச்செய்தி அறிந்து ஓடோடிவந்து உதவிபுரிந்தோருக்கும், வெளிநாடு, உள்நாட்டிலிருந்தும் அனுதாபம் தெரிவித்தோருக்கும் மற்றும் பல வழிகளிலும் உதவிபுரிந்த வர்த்தகர்கள், நிறுவனபணியாளர்கள், உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றியைத் தெரிவிப்பதுடன் இன்று (20.07.2012) வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறும் வீட்டுக்கிருத்திய நிகழ்விலும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்துகொள்ளும் வண்ணம் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

நிரந்தர முகவரி : வடலியடைப்பு
தற்போதைய முகவரி :
சந்தைப் பிட்டி, கோப்பாய் வடக்கு.
T. P : 072 221 1922

மதியாபரணம் குடும்பத்தினர்.

(சி/1576)(6-7-8)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சாவகச்சேரி பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் (வரையுள்ளது)
# கிளைக்குழு உறுப்பினர் தெரிவு தொடர்பான அறிவித்தல்

வடக்கு, கிழக்கு மாகாணக் கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளரும் பதிவாளரும் அவர்களினால் ஆக்கப்பட்டு 1998.05.19ஆம் திகதிய 1028/6 இலக்கம் கொண்ட அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டதுமான வடக்கு-கிழக்கு மாகாண நிர்வாக எல்லைக்குட்பட்ட பகுதியில் இயங்கிவரும் வரையறுக்கப்பட்ட பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்களின் கிளைக் குழுக்களைத் தெரிவு செய்வதற்கான விதிகளின்படி யாழ். மாவட்ட கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளராகிய நான் 2009.04.08ஆம் திகதி 1596/17இலக்கம் கொண்ட அதிவிசேட வர்த்தமானி மூலம் என்மீது பாரிக்கப்பட்ட அதிகாரங்களின்படி மேற்படி சங்கத்தின் துணைவிதி 23இற்கமைய சங்கத்தின் சகல கிளைகளுக்குமான கிளைக்குழுத் தெரிவுக்கான கிளைப் பொதுச்சபைக் கூட்டங்கள் 22.07.2012 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.00 மணிக்கு நடைபெறுவதற்காக இந்தக் கூட்டங்களை அழைப்பதற்கும் அவற்றின் தவிசாளராகக் கடமையாற்றுவதற்கும் பின்வரும் அலுவலர்களை பெயர் குறித்து நியமித்துள்ளேன்.

## கிளைப் பொதுச்சபைக் கூட்டங்கள் தொடர்பான விவரம் காலம் 22.07.2012 ஞாயிற்றுக்கிழமை

| கிளை இல | கிளையின் பெயர் | தவிசாளர் பெயர் | கூட்டம் நடைபெறும் இடம் |
|---|---|---|---|
| 01. | தென்மராட்சி | திரு.இ.பாலச்சந்திரன் | கிளை நிலைய முன்றல் |
| 02. | சாவகச்சேரி தெற்கு | திருமதி க.நல்லதம்பி | நுணாவில் கிழக்கு யா/அமிர்தாம்பிகை வித்தியாலய மண்டபம் |
| 03. | நுணாவில் கிழக்கு | திரு. வை.கைலைநாதன் | கிளை நிலைய முன்றல் |
| 04. | நுணாவில் ஜோதி | திரு.அ.சீராளன் | கிளை நிலைய முன்றல் |
| 05. | கைதடி நுணாவில் | திரு.வீ.இரத்தினகாந்தன் | கிளை நிலைய முன்றல் |
| 06. | மீசாலை கிழக்கு | திரு.இ.தயாகரன் | கிளை நிலைய முன்றல் |
| 07. | வேரற்கேணி | திரு.க. திசாகரன் | கிளை நிலைய முன்றல் |
| 08. | மலர்மகள் | திரு.பொ.கோகுலன் | கிளை நிலைய முன்றல் |
| 09. | சோமஸ்கந்தா | திரு.வே. பிரதீஸ்குமரன் | கிளை நிலைய முன்றல் |
| 10. | மட்டுவில் வடக்கு | திரு.ச.சசீந்திரன் | கிளை நிலைய முன்றல் |
| 11. | சரசாலை மட்டுவில் | திரு.க. நிமலன் | கிளை நிலைய முன்றல் |
| 12. | சரசாலை தெற்கு | திரு.பா.சிவபாலன் | கிளை நிலைய முன்றல் |
| 13. | சரசாலை வடக்கு | திரு.க.பாலகிருஸ்ணன் | கிளை நிலைய முன்றல் |
| 14. | மோகனதாஸ் | திரு.சி.குகதீப் | கிளை நிலைய முன்றல் |
| 15. | கல்வயல் | திரு.க.கமலநாதன் | கிளை நிலைய முன்றல் |
| 16. | சாவகச்சேரி வடக்கு | திரு.ந.பத்மசோதி | முன்னர் கிளைஇயங்கிய கிளைக் கட்டட முன்றல் |
| 17. | வேம்பிராய் | திரு.அ.தயாளன் | பாரதி சனசமூக நிலையம், வேம்பிராய் |
| 18. | மீசாலை வடக்கு | திரு.சி.குணாளன் | கிளை நிலைய முன்றல் |
| 19. | மீசாலை மேற்கு | திரு.சி.ஸ்ரீதரன் | கிளை நிலைய முன்றல் |
| 20. | சாவகச்சேரி வடகிழக்கு | திரு.வி.சிவகுமார் | கிளை நிலைய முன்றல் |
| 21. | சங்கத்தானை | திருமதி.ச. முருகதாஸ் | கிளை நிலைய முன்றல் |
| 22. | சப்பச்சி மாவடி | திரு.வி.ஜெயந்தன் | கிளை நிலைய முன்றல் |
| 23. | கோயிற்குடியிருப்பு | திருமதி.ர.அருட்செல்வம் | கிளை நிலைய முன்றல் |

கிளைப் பொதுச்சபைக் கூட்டத்திற்குச் சமுகமளித்து வாக்களிக்கத் தகைமையுடைய உறுப்பினர்களுக்கு என்னால் அதிகாரமளிக்கப்பட்ட அலுவலரால் ஏற்கனவே கூட்ட அறிவித்தல்கள் வழங்கப்பட்டுள்ளன. கிளைக் குழுக்களை தெரிவு செய்வதற்காக கிளைப்பொதுச்சபைக் கூட்டங்கள் தொடர்பான நடைமுறை ஒழுங்குகள் பற்றிய பொது அறிவித்தல்களை சங்கத்தின் சகல கிளைகளிலும் பொது இடங்களிலும் பார்வையிடலாம். கிளைப் பொதுச்சபைக் கூட்டங்களில் சமுகமளித்து வாக்களிக்கத் தகுதியுள்ள உறுப்பினர்களை குறித்த அறிவிப்புக்களின்படி கிளைப்பொதுச்சபை கூட்டங்களுக்கு சமுகமளித்து தங்கள் ஜனநாயக உரிமையைப் பயன்படுத்தி கூட்டுறவு அமைப்பினை ஜனநாயக ஆளுமை கொண்டதாக செயற்படுத்துமாறு கேட்டுக்கொள்கின்றேன்.


கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் அலுவலகம்,
கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம். 19.07.2012

V.K.அருந்தவநாதன்
கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர்
யாழ்.மாவட்டம்.

(C/1573)(5-6-7)

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி
# அமரர் கணபதிப்பிள்ளை மகாலிங்கம்

**ஊரங்குனை, கட்டுவன்**



பாச மனையாளுக்கு ஆசைக் கணவராய்,
பிள்ளைகள் தமக்கொரு பேரன்பு அப்பாவாய்,
நல்வழிகள் காட்டியெமை வாழ்வினிலே உயர வைத்தீர்
ஆசை மகளவள் மேல், அன்பு மருமகன் மேல்
பாசமது பொழிந்து நீர், மகிழ்ந்திருந்தீர்; மகிழவைத்தீர்
பேர்த்தியவள் சஜானாவைக் கொஞ்சி மகிழவெனக்
காத்திருந்த உம்மைக் காலனவன் கவர்ந்திட்டான்.
விதி வலிது; துயர் கொண்டோம் உம் இழப்பால்
உம் நினைவை எக்கணமும் எம் மனங்கள்
சுமந்திருக்கும்

உங்களது ஆத்மா சாந்திபெற அருளுமாறு ஆண்டவன் பாதம் பணிகின்றோம்.

தாயின் மடியில்
10★12★1961

இறைவன் அடியில்
20★07★2011

என்றும் உங்கள் நினைவுடன் வாழும்
*மனைவி– செல்வமலர் மகாலிங்கம்*
*மகன்மார் – சஞ்ஜீபன், நிசந்தன், அனுசன்*
*மகள் – நிசந்தினி றஜீவன்*
*பேர்த்தி – சஜானா றஜீவன்*
*சகோதர , சகோதரிகள்*
*மற்றும் உறவினர்கள்.*

கரந்தன், நீர்வேலி.

சிவலிங்கம் றஜீவன்
(மருமகன்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(சி/1568)(5-6-7)

# ஐ.தே.கவின் முதலமைச்சர் வேட்பாளராக தயா கமகே

மட்டக்களப்பு, ஜூலை 20

கிழக்கு மாகாண சபைக்கான ஐக்கிய தேசியக்கட்சியின் முதலமைச்சர் வேட்பாளராக கிழக்கு மாகாண சபையின் முன்னாள் எதிர்க்கட்சி தலைவர் தயா கமகே நியமிக்கப்பட்டுள்ளார். அதே நேரம் வடமத்திய மற்றும் சப்ரகமுவ மாகாணத்துக்கான முதலமைச்சர் வேட்பாளர் இடங்களை திறந்த நிலையில் வைக்க ஐக்கிய தேசியக் கட்சி தீர்மானித்துள்ளது

இது தொடர்பான யோசனை, கட்சியின் செயற்குழுவில் நேற்றுச் சமர்ப்பிக்கப்பட்டது.

> வடமத்திய மற்றும் சப்ரகமுவ மாகாணத்துக்கான முதலமைச்சர் வேட்பாளர் இடங்களை திறந்த நிலையில் வைக்க ஐக்கிய தேசியக் கட்சி தீர்மானித்துள்ளது

இதேவேளை மாகாண சபை தேர்தல்களின் நடவடிக்கைகளை முன்கொண்டு செல்ல, ஐக்கிய தேசியக்கட்சியின் தலைவர் ரணில் விக்



கிரமசிங்க, பிரதித் தலைவர் சஜித் பிரேமதாஸ,தவிசாளர் காமினி ஜெயவிக்கிரம பெரேரா மற்றும் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க ஆகியோர் உள்ளடக்கப்பட்டுள்ளனர். (த)

# பற்றிக்ஸ் மாணவன் தேசிய மட்டத்துக்கு

யாழ்ப்பாணம், ஜூலை 20

வடமாகாண பாடசாலைகளுக்கிடையேயான தடகளப் போட்டியில் 19வயதின் கீழ் ஆண்கள் பிரிவில் யாழ். புனித பத்திரிசியார் கல்லூரியைச் சேர்ந்த கி.மடோண் எல்விஸ் 110 தடைதாண்டல் போட்டியில் முதல் இடத்தைப் பெற்று தேசிய மட்டப் போட்டியில் பங்குபற்றத் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

இவர் குறித்த தூரத்தை 16.5 செக்களில் கடந்து நிறவிருதையும் (Colours award) இப்போட்டியில் பெற்றுக்கொண்டுள்ளார். கடந்த 2008, 2010, 2011



வருடங்களில் நடைபெற்ற வடமாகாண பாடசாலை தடகளப் போட்டிகளில் 110 மீற்றர் தடைதாண்டல் போட்டியிலும் இவர் முதலிடத்தைப் பெற்றிருந்தமையும் குறிப்பிடத்தக்கது. (ஒ)

## மூன்று மாகாணங்களிலும் விசேட பாதுகாப்பு திட்டம்

கொழும்பு,ஜூலை 20

கிழக்கு, சப்ரகமுவ மற்றும் வடமத்திய மாகாணங்களிலுள்ள மாவட்டங்களை உள்ளடக்கும் வகையில் விசேட பாதுகாப்புத் திட்டமொன்று செயற்படுத்தப்பட்டுள்ளது.

இதற்கமைய குறித்த மாவட்டங்களில் உள்ள மாவட்ட செயலகங்களை அண்மித்த பகுதியில் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளதாகப் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் பொலிஸ் அத்தியட்சகர் அஜித் ரோஹன தெரிவித்துள்ளார்.

இதனைத் தவிர தேர்தல் நடைபெறவுள்ள மூன்று மாகாணங்களிலும் பொலிஸ் ரோந்து சேவைகள் அதிகளவில் முன்னெடுக்கப்படுவதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார். எதிர்வரும் மாகாண சபைத் தேர்தலுக்கான வேட்புமனுத் தாக்கல் நடவடிக்கை நேற்றுடன் நிறைவுபெற்றதை முன்னிட்டு இந்த விசேட பாதுகாப்புத் திட்டம் செயற்படுத்தப்பட்டுள்ளதாகவும் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் சுட்டிக்காட்டியுள்ளார்.

மாவட்ட செயலகங்களில் விசேட காவலரண்கள் அமைக்கப்பட்டுள்ளதாகத் தெரிவித்த பொலிஸ் அத்தியட்சகர் அஜித் ரோஹன, தேர்தலுடன் தொடர்புடைய முறைப்பாடுகளை பதிவு செய்வதற்கான கரும பீடங்கள் ஆரம்பிக்கப்படவுள்ளதாகவும் குறிப்பிட்டுள்ளார். (த)

# பிரதேச சபையின் தலைவர் உட்பட 4 பேர் பதவி நீக்கம்

## பாலியல் குற்றச்சாட்டில்

கொழும்பு,ஜூலை 20

பெண்ணொருவரையும் சிறுமியொருவரையும் பாலியல் துஷ்பிரயோகத்துக்கு உட்படுத்தியதாக எழுந்த குற்றச்சாட்டைத் தொடர்ந்து அக்குரஸ்ஸ பிரதேசசபைத் தலைவர் உட்பட ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியைச் சேர்ந்த 4 உறுப்பினர்கள் அவர்களின் பதவிகளிலிருந்து நீக்கப்பட்டுள்ளனர்.

பெண்ணொருவரையும் சிறுமியொருவரையும் பாலியல் துஷ்பிரயோகத்திற்கு உட்படுத்தியதாக எழுந்த குற்றச்சாட்டைத் தொடர்ந்து பிரதேசசபைத் தலைவர் உட்பட 4 மாகாணசபை உறுப்பினர்களுக்கும் எதிராக கடுமையான ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகச் சுகாதார அமைச்சர் மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

அக்குரஸ்ஸ பிரதேசசபைத் தலைவர் உட்பட சில மாகாணசபை உறுப்பினர்களின் தவறான நடவடிக்கையால் அரசு விமர்சிக்கப்பட்டது. இவர்களுக்கு எதிராக உறுதியான ஒழுக்காற்று நடவடிக்கையை எடுத்துள்ள நாங்கள், இவர்களை பதவிகளிலிருந்து பணி நீக்கம் செய்துள்ளதுடன், கட்சியிலிருந்தும் நீக்கியுள்ளோம் எனவும் அவர் கூறினார்.

எந்தவித பாரபட்சமும் அச்சமும் இன்றிச் சட்டத்தை நடைமுறைப்படுத்தும்படி பொலிஸாருக்கும் சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபைக்கும் அரசு கட்டளையிட்டுள்ளது எனவும் அமைச்சர் குறிப்பிட்டுள்ளார். (த)

# அதிவிசேட திறமையுடையோரை வேலைக்கு அழைக்கிறது பிரிட்டன்

லண்டன்,ஜூலை 20

விஞ்ஞானம், மானுடவியல், பொறியியல் மற்றும் கலைத்துறையில் அதிவிசேட திறமைகொண்ட இலங்கையர்களை பிரிட்டன் வேலைசெய்ய அழைப்பதாக பிரிட்டன் அரசு கூறுகின்றது.

இலங்கையிலும் மாலை தீவிலும், விஞ்ஞானம், மானுடவியல், பொறியியல் மற்றும் கலைத்துறைகளில் திறமையான சில மேதாவிகள் உள்ளனர். இவர்கள் 'மேதாவிலாச திறமையாளர் குடிவரவு பாதை' என்னும் விசேட ஏற்பாடு வழியாக பிரிட்டனில் வேலை செய்யும் சாத்தியத்தை ஆராய்ந்து பார்க்கும்படி நான் விதந்துரைக்கின்றேன் என இலங்கைக்கான பிரிட்டன் தூதுவர் கூறியதாகக் கொழும்பிலுள்ள பிரிட்டன் தூதரகம் கூறியுள்ளது.

இந்த விசேட ஏற்பாட்டுக்கு அமைய ஓகஸ்ட் 2012 இல் இருந்து ஏப்ரல் 2013 வரையான காலப்பகுதிக்கு 1000 இடங்கள் ஒதுக்கப்பட்டுள்ளன.

இவ்வாறு பிரிட்டனுக்கு வருவோருக்கு முதலில் 3 வருடம் 4 மாதங்களுக்கு விஸா வழங்கப்படும். தேவைக்கேற்ப விஸாக்காலம் நீடிக்கப்படும். 5 வருடம் பிரிட்டனில் இவர்கள் தங்கிவிட்டால் நிரந்தர வதிவுரிமை கோர முடியும்' என அறிவிக்கப்பட்டுள்ளது.


சாவகச்சேரி — கல்வயல்
பிள்ளையார் என அழைக்கப்பெறும்
ஆயிலடி வீரகத்தி விநாயகர் ஆலயத்தில்
தென்மராட்சியின் சிற்பக் கலைஞன்
சிந்தனை சிற்பி கிருஸ்ணபிள்ளை கலாமோகன்
அவர்களின் கை வண்ணத்தில் உருவான திராவிட மரபும்
நவீன கலைநுட்பத்துடனும் கூடிய அற்புதமான



சித்திர சிற்பத் தேர்
வெள்ளோட்ட விழாவும்
சிறப்பு மலர் வெளியீடும்
காலம் : நாளை (21.07.2012) சனிக்கிழமை
பிற்பகல் 2.00 மணி
ஆசியுரை : கலாபூசணம் சிவஸ்ரீ சி. சிதம்பரநாதக்குருக்கள் அவர்கள்
சிவாகம ஞானபூபதி சிவஸ்ரீ செ. பரமானந்தகுருக்கள் அவர்கள்
அருளாசியுரை : நல்லை ஆதினம் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள்
வாழ்த்துரை : திருமதி அ. சாந்தசீலன் அவர்கள் (பிரதேச செயலர்,தென்மராட்சி)
சிந்தனைச் சிற்பியைக் கெளரவித்தலும் பாராட்டுதலும்
பேராசிரியர் செல்வி வசந்தி அரசரட்ணம் அவர்கள்
(துணைவேந்தர் யாழ். பல்கலைக்கழகம்)
நூல் வெளியீடும், சிறப்புரையும்:
செஞ்சொற்செல்வர் கலாநிதி ஆறுதிருமுருகன் அவர்கள்
(தலைவர், துர்க்கையம்மன் தேவஸ்தானம், தெல்லிப்பழை)
முதன்மை பதிப்புக்கள் பெறுதல்
கலைஞர் கெளரவிப்பு
ஏற்புரை: ஸ்தபதி விஷ்வப் பிரம்மஸ்ரீ கி. கலாமோகன் அவர்கள்
நாதஸ்வர இசை: து. சத்தியநாதன் குழுவினர்
வி.சித்தார்த்தன் குழுவினர் (பஞ்சாபிகேசனின் பேரர்கள்)
வாரீர் பாரீர் விநாயகப் பெருமான் அருள் மழையில் நனைந்திடுவீர்
கல்வயல், சாவகச்சேரி
தர்மகர்த்தா
விழா சிறப்புற வாழ்த்துவோர் நிலா புடைவையகம்
இல 20 நவீனசந்தை உட்புறம், சாவகச்சேரி.



விடுதலைப் பெருவிழா
வாருங்கள்... விடுதலை பெறுங்கள்
பாவத்திலிருந்து !
சாபத்திலிருந்து !! தீராத நோயிலிருந்து !!!
பில்லி-சூனியக்கட்டிலிருந்து !!!
பிசாசின் பிடியிலிருந்து !!!
பாவ அடிமைத்தனத்திலிருந்து !!!
இயேசு விடுதலை கொடுக்கிறார்...
இடம் : நகரசபை மைதானம், சாவகச்சேரி.
(பஸ்நிலையம் பின்பாக)
காலம் : ஜுலை 20,21,22ம் திகதிகளில்
நேரம் : மாலை 4.30 மணி
கடந்த காலங்களில் பல்வேறு இடங்களில் நடைபெற்ற விடுதலைப் பெருவிழாக்களில் அநேகர் அற்புத விடுதலை பெற்றார்கள்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ALLIANCE FRANCAISE DE JAFFNA

**The Only Official French Language Centre in Jaffna**

*Learn French the French Way*

French Embassy ஆல் அங்கீகரிக்கப்பட்ட, சர்வதேச தரம் வாய்ந்த, யாழ்ப் பாணத்திலுள்ள ஒரே ஒரு பிரெஞ்சு மொழிக் கல்வி நிறுவனமாகிய Alliance Francaise de Jaffna ஊடாக பிரெஞ்சு மொழி வகுப்புகள் நடத்தப்படு கின்றன. France மற்றும் பிரெஞ் பேசப்படும் நாடுகளுக்கு செல்வோர் மற்றும் மொழி ஆர்வமுள்ள எவரும் கற்றுக்கொள்ளலாம்.

வகுப்புகள்: ரவி, ஆசிரியர்களில்.

புதிய பிரிவுகள் மிக விரைவில் ஆரம்பிக்கப்படவுள்ளன.

61, Kachcheri - Nallur Road, Jaffna Phone: 021 2228093

E-mail: alliance jaffna@yahoo. com

(நல்லூர் வீதியும் கச்சேரி - நல்லூர் வீதியும் இணையும் சந்தியில் அமைந்துள்ள மாடிக் கட்டடம்)

மேலதிக விபரங்களை நேரில்/தொலைபேசியினூடாக பெறலாம்.

(20492) (45-6-7)

## மருந்தாளர் (Pharmacist)தேவை

கோண்டாவில் சந்தியில் ஆரம்பிக்கப்படவிருக்கும் மருந்தகம் ஒன்றை பதிவு செய்வதற்கு மருந்தாளர் (**Pharmacist**) உடனடியாகத் தேவைப்படுகின்றார். அத்துடன் ஏற்கனவே மருந்தகத்தில் பணிபுரிந்த அனுபவமுள்ள உதவியாளர்களும் தேவைப்படுகின்றனர்

**தொடர்புகளுக்கு - Dr. M. சாந்தன்**

**0772897869** (20524) (14.3)


# விவேகானந்தரின் பிறந்தநாள் விழா

யாழ்ப்பாணம், ஜூலை 20.

இராமகிருஷ்ண மிஷன் நலன்புரி நிலையத்தினால் நடத்தப்படுகின்ற சுவாமி விவேகானந்தரின் பிறந்தநாள் விழா நாளை பிற்பகல் 3.30 மணிக்கு வட்டுக்கோட்டை சிந்துபுரம் காந்திஜி சனசமூக நிலையத்தில் நடைபெற வுள்ளது.

சிந்துபுரம் காந்திஜி சனசமூக நிலையம், தாவடி இராமகிருஷ்ண சமிதியுடன் இணைந்து நடத்துகின்ற பிறந்தநாள் விழாவில் வில்லிசை, கவியரங்கம், நிகழ்ச்சி ஒருங்கிணைப்பாளர் சி.சிவமோகனின் 'சுவாமி விவேகானந்தர் அழைக்கிறார்' என்ற தலைப்பிலான ஆன்மீக உரையும் மற்றும் சிறப்பு நிகழ்வுகளும் இடம்பெறவுள்ளன.

(16)

## மரண அறிவித்தல்



### *இராசலிங்கம் பரமேஸ்வரி*

உடுவிலைப் பிறப்பிடமாகவும் அல்லைப்பிட்டி 1ஆம் வட்டாரத்தை வசிப்பிடமாகவும் கொண்ட இராசலிங்கம் பரமேஸ்வரி நேற்று (19.07.2012) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான அரியகுட்டி-செல்லாச்சி தம்பதியரின் மகளும், காலஞ் சென்றவர்களான பொன்னம்பலம் -மாரிமுத்து தம்பதியரின் மருமகளும், இராசலிங்கத்தின் அன்பு மனைவியும், சிறிஸ்கந்தராசா, யசோதரா, கண்ணதாசன், லவதாசன், யசீதரா, கமலதாசன், கலியுகதாசன் ஆகியோரின் தாயும், அஞ்சலாதேவி, கிருஸ்ணலிங்கம், மேனகா, புஸ்பராணி, சுகந்தினி, காலஞ்சென்ற சுமதி, ஆகியோரின் மாமியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (20.07.2012) வெள்ளிக் கிழமை பிற்பகல் 1 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று தகனக்கிரியைகள் அல்லப்பிட்டி இந்து மயானதில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை தயவு செய்து உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல்:**
**பொ.இராசலிங்கம் (செட்டி)**
**கணவர்**

**1ஆம் வட்டாரம்,**
**அல்லைப்பிட்டி** (20523) (14.3.6)


## வாகனம் விற்பனைக்கு

பாவனையிலுள்ள L 250,10½ பெட்டி **42 sri xxxx** வாகனம் உடன் விற்பனைக்கு உண்டு.

**தொடர்பு**

**0775282599 / 0776987025**

## வீடு வாடகைக்கு

*யாழ்.கடற்கரை வீதியில் அமைந்துள்ள 2மாடி வீடு சகல வசதிகளுடன் வாடகைக்கு. மேல் மாடி 2 பெரிய அறை, 2பெரிய ஹோல், கீழ் தளத்தில் 3 பெரிய அறை, பெரிய ஹோல்.*

*மேல் மாடிக்கு*
*முற்பணம் 4லட்சம் வாடகை 15ஆயிரம்.*

*கீழ்வீட்டிற்கு*
*முற்பணம் 4லட்சம் வாடகை 15 ஆயிரம். இரண்டும் சேர்த்து எடுப்பின் முற்பணமும் வாடகையும் குறைக்கப்படும். REST HOUSE ஆகவோ LODGE ஆகவோ பாவிப்பதற்கு ஏற்ற சகல வசதிகளுமுண்டு. வாகனத்தரிப்பிட வசதியும் உண்டு.*

தொடர்பு: 077 025 9877, 021 222 7893

(20508) (5-6-7)

## அலுவலக உதவியாளர்கள் தேவை

யாழ்ப்பாண நகர்ப் பகுதியில் இயங்கும் நிறுவனம் ஒன்றுக்கு அலுவலக உதவியாளர்கள் தேவை. விண்ணப்பிக்க விரும்புவோர் ஒரு வாரத்துக்குள் தமது சுய விவரத்தினை தொலைபேசி இலக்கத்துடன் பின்வரும் முகவரிக்கு அனுப்பிவைக்கவும்.

பணிமனை நிர்வாகி
இல. 12, சிவகுருநாதர் வீதி,
யாழ்ப்பாணம்.

(வி/1580) (45.6.7)


## 31 ஆம் நாள் நினைவஞ்சலி



**மலர்வு**
**09 06 1959**

**மறைவு**
**20 06 2012**

### *சுப்பிரமணியம் சிவானந்தன்*

*(தெல்லிப்பழை பலநோக்கு கூட்டுறவுச்சங்க எழுதுவினைஞர்)*

காலமெல்லாம் சிரித்திருப்பாய் என
கற்பனைகள்
பல எண்ணிக் கனவுபல கண்டிருந்தோம்
கண்மூடித்திறக்குமுன் காலன் உனை
அழைத்தானே
எம்மை எல்லாம் தவிக்கவிட்டு
எங்கு சென்றாயோ மாதம் ஒன்று ஓடினாலும்
ஆறுமா எங்கள் துயர் தினந்தோறும்
உன்பிரிவால்
நிம்மதியை தொலைத்துவிட்டுத் தவிக்கிறோம்.
உங்கள் ஆத்மா சாந்தி பெற
ஆண்டவனை வேண்டுகின்றோம்.

*பிரிவால் துயருறும்*
*மனைவி, அண்ணா, அண்ணி, தம்பி, மச்சாள், சித்தப்பா, சித்தி, சகலன், மாமி, மச்சாள், பெறாமக்கள், உறவினர்கள்.*

(20514) (14.15) **காங்கேசன்துறை, தெல்லிப்பழை**

# 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பும்

**தோற்றம்**
**02.08.1944**

**மறைவு**
**20.06.2012**



*அன்புள்ள அப்பாவே! ஈரவிழி காயவில்லை*
*உம்முகம் பார்க்காது உள்ளம் வாடுதைய்யா*
*இனி எங்கு காண்போம் என்செல்வி அழைப்போம்*
*வார்த்தை ஏதுமில்லை எம் துயர் துடைக்க*
*தேற்றுவார் யாருமின்றி தேம்பியழுகின்றோம்.*
*தேடுகின்றன விழியெல்லாம் உமைக்காண முடியவில்லை*
*உங்கள் வரவினிச் சாத்தியமில்லை என்றபோதும்*
*மறு ஜென்மம் எனும் சொல்லை மனதார நம்புகின்றோம்.*
*எம்மோடு வாழ்ந்த காலம் கனவாகிப் போனாலும்*
*எம்மனதில் உங்கள் முகம் எந்நாளும் உயிர் வாழும்..........*

## அமரர் செல்லப்பா பத்மநாதன்

அன்னாரின் மரணச் செய்தி கேட்டு நேரிலும், உள்நாடு, வெளிநாட்டில் இருந்து தொலைபேசி மூலமும், தந்தி, கடிதம் மூலமும் தொடர்பு கொண்டு ஆறுதல் கூறியோருக்கும், மரணச் சடங்குகளில் கலந்துகொண்டவர்களுக்கும், இறுதி ஊர்வலத்தில் கலந்து கொண்டவர்களுக்கும் வேறு பல வழிகளில் உதவிபுரிந்தவர்களுக்கும், உற்றார்,உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

அன்னாரின் 31ஆம் நாள் . வீட்டுக்கிருத்தியக் கிரியைகள் இன்று (20.07.2012) வெள்ளிக்கிழமை முற்பகல் 10.00மணிக்கு எமது இல்லத்திலும் நடைபெறும் அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.


**(இந்த அழைப்பைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.)**

**சிங்கராயர் வீதி,**
**3ஆம் கட்டை, கல்வியங்காடு.**

(வி/1592)(5-6-7)

**குடும்பத்தினர்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



மாவிட்டபுரம் கந்தசுவாமி ஆலயத் தீர்த்தத் திருவிழா நேற்றுமுன்தினம் இடம்பெற்றது. சுவாமி கீரிமலைக்கு எழுந்தருளியுள்ளார். (ம-86-17)



யாழ்.கோட்டை முனிஸ்வரன் ஆலயத்தில் தேர்த்திரு விழாவில் முனிஸ்வரப் பெருமாள் தேரில் ஆரோகணித்து வீதி வலம் வருகிறார். (ம-17)




மாலி சந்திப் பிள்ளையார் ஆலயத் தேர்த்திருவிழா அண்மையில் இடம்பெற்றது. சுவாமி தேரில் எழுந்தருளி வலம் வருகிறார். (ம-253)




வட்டுக்கோட்டை தெக்கணப்பாய் கண்ணலிங்கேஸ்வரர் ஆலய தேர்த்திருவிழாவின்போது தேரில் சுவாமி வீதியுலா வருகிறார். (ம)



ஆனைக்கோட்டை வரதவிக்ன விநாயகர் சம்பந்தப் பிள்ளையார் ஆலயத்துக்கு அந்தப் பகுதி பிரபல வர்த்தகர் ஒருவரால் இந்தியாவிலிருந்து கொண்டு வரப்பட்ட பஞ்சமுகப் பிள்ளையார் உருவச்சிலை ஆனைக்கோட்டை மூத்தநயினார் ஆலயத்தில் இருந்து ஊர்வலமாக எடுத்து வரப்படுகிறது. (ம-100)



நல்லூர் வீரமாகாளி அம்மன் ஆலயத்தின் வருடாந்த பெருந்திருவிழாவின் தேர்த் திருவிழாவில் சுவாமி வீதியுலா வருகிறார். (ம)



அரியாலை நீர்நொச்சித்தாழ்வு ஸ்ரீ சித்தி விநாயகர் ஆலயத்தில் புதிதாக அமைக்கப்பட்ட இராஜகோபுரம், வசந்தமண்டபம், வீதி வளைவு என்பவற்றுக்கு அண்மையில் குடமுழுக்கு இடம்பெற்றது. (ம-135)



நவாலி சென்.பீற்றேஸ் ஆலயத்தின் திருவிழாவின்போது இடம்பெற்ற திருச்சொரூப பவனி. (ம-100)





காரைநகர் ஈழத்துச் சிதம்பரத்தின் ஆனி உத்தர தரிசனத்தின் போது இடம்பெற்ற நடராஜப் பெருமானின் வீதியுலாக் காட்சி. (ம-250)



கொழும்புத்துறை புனித செபமாலை அன்னை ஆலயத்தின் மருதமடுத் திருவிழாவில் மாதா சொரூபம் வீதி வலமாக எடுத்து வரப்படுகிறது. (ம-135)



கொழும்புத்துறை புங்கன்குளம் வில்வையடி நாகபூஷணி அம்மன் ஆலயத்தின் வருடாந்த பொங்கல், தீக்குளிப்பு விழாவில் பொங்கல் பானை சமய வழிபாட்டுடன் எடுத்து வரப்படுகிறது. தீக்குளிப்பு இடம்பெறுகிறது. (ம-17)

# பட்டதாரிகளின் பிரச்சினையை தீர்க்க அரசு துரித நடவடிக்கை

## அமைச்சர் ரஞ்சித் தெரிவிப்பு

கொழும்பு,ஜூலை20

பட்டதாரிகள் எதிர்நோக்கி வரும் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண அரசு நடவடிக்கை எடுத்துள்ளது.

அமைச்சர் ரஞ்சித் சியம்பலாப்பிட்டியவுக்கும் இலங்கை சுதந்திர பட்டதாரிகள் சங்கப் பிரதிநிதிகளுக்கும் இடையில் அரச நிர்வாக அமைச்சில் நேற்று இடம்பெற்ற சந்திப்பின் போது பிரச்சினைகளை தீர்க்க இணக்கப்பாடுகள் ஏற்படுத்திக் கொள்ளப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப் பட்டுள்ளது.

சேவையிலுள்ள பட்டதாரிகள் நிர்வாக சேவை போன்ற ஏனைய துறைகளுக்குச் செல்லக் கூடிய வகையில் சேவை சட்டத்தில் திருத்தங்களைச் செய்ய இதன்போது இணக்கம் காணப்பட்டுள்ளது.

மேலும் புதிதாக இணைக்கப்பட்டுள்ள பயிற்சி பட்டதாரிகளின் விடுமுறை உள்ளிட்ட விடயங்கள் குறித்தும் இணக்கம் ஏற்படுத்திக் கொள்ளப்பட்டுள்ளது. (ச)




யாழ்ப்பாணம்,ஜூலை20

மிருசுவில் படித்த மகளிர் திட்டம்-துர்க்காபுரம் ஸ்ரீ ஞானதுர்க்கை அம்மன் ஆலய அலங்கார உற்சவம் எதிர்வரும் செவ்வாய்க்கிழமை ஆரம்பமாகித் தொடர்ந்து 10 நாள்கள் நடைபெறவுள்ளது. எதிர்வரும் 2 ஆம் திகதி தீர்த்தத்திருவிழா நடைபெறும்.

திருவிழாக் காலங்களில் காலை 9 மணிக்கு அபிஷேக ஆராதனைகள் நடைபெற்று அம்பாள் வீதியுலா வருவார். (ச-3)

* * *

அனலைதீவு நயினாகுளம் கூழவடியுறை பூர்ணாதேவி, புஷ்கலாதேவி சமேத ஹரிஹர புத்திரர் ஆலய வருடாந்தப் பெருந் திருவிழா எதிர்வரும் திங்கட்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி நடைபெறவுள்ளது. எதிர்வரும் 30 ஆம் திகதி திங்கட்கிழமை சப்பரத்திருவிழாவும் 31 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை தேர்த்திருவிழாவும் மறுநாள் புதன்கிழமை தீர்த்தத்திருவிழாவும் நடைபெறும். (3-78)

# நம்பிக்கை இருந்தால் திருவருளைப் பெறலாம்

நம்பிக்கைகள் எல்லாச் சமயத்திலும் காணப்படும். நம்பிக்கைகளைக் குறைத்துப் பேசுவதால் எந்த உயர்வையும் யாரும் அடையமுடியாது. நம்பிக்கையால் உடல் நோய் கூடக் குணமாவதாக ஆய்வுகள் சொல்கின்றன. இத்தகைய நம்பிக்கைகளுக்கு ''வைராக்கியம்'' என்று பெயர்.

ஆன்மிகத்தில் வைராக்கியம் உயர்ந்த இடத்தைப்பெறும். ஒரு நேர்த்தியைச் செய்யப் போவதாக முடிவு செய்தது முதல் அதைச் செய்து முடிக்கும்வரை அதை யாருக்காகச் செய்கிறோம்? எதற்காகச் செய்கிறோம்? எந்தக் கடவுளிடம் செய்கிறோம்? என்பது நினைவில் இருக்கும்.




இவற்றைச் செய்து முடித்த பிறகும் இந்த நினைவு அலைகள் நம் மனதில் அழியாமல் பசுமையாக இருக்கும்.

''உடம்பை வருத்தி மேற்கொள்ளப்படும் வைராக்கியங்களால் உள்ளம் உறுதியடையும் என்கிறார் யோக சாஸ்திரத்தின் தந்தையான பதஞ்சலி முனிவர். வைராக்கியங்களே பல தெய்வங்களின் திருவருளை நமக்குப் பெற்றுத் தந்ததாக நம் புராண இதிகாசக் கதைகள் கூறுகின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# ஆவரங்கால் இந்து இளைஞர், பன்னாலை கணேசா கரப்பந்தாட்ட அரையிறுதிப் போட்டிக்கு முன்னேற்றம்

பண்டத்தரிப்பு, ஜூலை 20

மட்டுவில் தெற்கு வளர்மதி சனசமூக நிலையத்தினரால் நடத்தப்படும் கரப்பந்தாட்டச் சுற்றுத் தொடரின் அரையிறுதிக்கு ஆவரங்கால் இந்து இளைஞர் விளையாட்டுக்கழகமும் பன்னாலை கணேசா விளையாட்டுக்கழகமும் தகுதி பெற்றுள்ளன.

மட்டுவில் தெற்கு வளர்மதி சனசமூக நிலையத்தின் 47 ஆம் ஆண்டு நிறைவை முன்னிட்டு யாழ்ப்பாணம் . கிளிநொச்சி மாவட்ட விளையாட்டுக் கழகங்களுக்கிடையில் நடத்தப்படும் கரப்பந்தாட்டச் சுற்றுத் தொடரின் காலிறுதிப்போட்டிகள் ஆரம்பித்துள்ளன.

இதில் முதலாவது காலிறுதிப்போட்டி புத்தூர் கலைமதி விளையாட்டுக் கழக அணியும் பன்னாலை கணேசா விளையாட்டுக் கழக அணியும் மோதிக்கொண்டன. இதில் முதலாவது சுற்றை 21:15 என்ற புள்ளிகள் வித்தியாசத்தில் தோற்றாலும் இரண்டாம் சுற்றிலிருந்து பன்னாலை கணேசா விளையாட்டுக்கழக அணி எழுச்சியான ஆட்டத்தை வெளிப்படுத்தியது.



இரண்டாம் சுற்றில் இரு அணிகளும் மாறி மாறி புள்ளிகளைப் பெற்றவண்ணமிருந்தன. இதனால் இரண்டாம் சுற்று மிகவும் விறுவிறுப்பானதாக இருந்தது. இதில் இறுதியாக அடுத்தடுத்து இரு புள்ளிகளைப் பெற்ற பன்னாலை கணேசா விளையாட்டுக் கழகத்தினர் 27:25 என்ற புள்ளிகள் வித்தியாசத்தில் இரண்டாம் சுற்றை தமதாக்கினர். தொடர்ந்து மூன்றாவதும் இறுதியுமான சுற்றில் பன்னாலை கணேசா விளையாட்டுக் கழக அணியினர் ஆக்ரோஷ ஆட்டத்தை வெளிப்படுத்தினர். இதனால் மூன்றாம் சுற்றும் 25:15 என்ற புள்ளிகள் வித்தியாசத்தில் பன்னாலை கணேசா விளையாட்டுக்கழக அணி வசமாக முதலாவது காலிறுதிப் போட்டியில் 2:1 சுற்று என்ற அடிப்படையில் வெற்றி பெற்ற பன்னாலை கணேசா விளையாட்டுக்கழக அணியினர் அரையிறுதிக்கு தகுதி பெற்றனர்.

மற்றுமொரு காலிறுதியாட்டத்தில் நீர்வேலி ஐக்கிய விளையாட்டுக் கழகமும் ஆவரங்கால் இந்து இளைஞர் விளையாட்டுக்க கழகமும் மோதவிருந்தன. இந்தப் போட்டிக்கு நீர்வேலி ஐக்கிய விளையாட்டுக்கழகத்தினர் சமுகளிக்காமையினால் ஆவரங்கால் இந்து இளைஞர்விளையாட்டுக் கழகம் வெற்றி பெற்றதாக அறிவிக்கப்பட ஆவரங்கால் இந்து இளைஞர்விளையாட்டுக் கழகம் இரண்டாவது அணியாக அரையிறுதிக்குள் நுழைந்தது. (ந-130)




யாழ்.துரையப்பா விளையாட்டரங்கில் அண்மையில் நடைபெற்று முடிந்த வட மாகாண தடகளப் போட்டிகளில் கோலூன்றிப் பாய்தல் நிகழ்வில் தனது இலக்கை தாண்டும் வீரர். (ந-84)

# முதல் முறையாக மாகாண நீச்சல் போட்டி நாளை

வலி.வடக்கு, ஜூலை 20

வட மாகாண விளையாட்டுத் திணைக்களத்தால் மாவட்ட அணிகளுக்கு இடையேயான ஆண், பெண் இருபாலாருக்குமான நீச்சல் போட்டி நாளை சனிக்கிழமை யாழ். மத்திய கல்லூரி நீச்சல் தடாகத்தில் இடம் பெறவுள்ளது.

முதல் தடவையாக நடைபெறும் இந்த நீச்சல் போட்டியில் முல்லைத்தீவு, கிளிநொச்சி, யாழ்ப்பாணம், மன்னார், வவுனியா மாவட்டங்களைச் சேர்ந்த வீர வீராங்கனைகள் கலந்து கொள்ளவுள்ளனர்.

வட மாகாணத்தில் இதுவரை பிரபல்யம் பெற்றிராத பல போட்டிகளை விளையாட்டுத் திணைக்களம் அறிமுகப்படுத்தி வருகிறது. சர்வதேச ரீதியில் மிகப் பிரபலமான நீச்சல் போட்டிகளையும் இந்த வகையில் அறிமுகப்படுத்தியிருக்கிறது. எனினும் வட மாகாணத்தில் நீச்சல் போட்டிக்கான பயிற்சிகளும், போட்டிகளை நடத்துவதற்கு உரிய வசதிகளும் இதுவரை ஏற்படுத்தப்பட்டிருக்கவில்லை.

எனினும் யாழ்.மத்திய கல்லூரியில் நீச்சல் தடாகம் அமைக்கப்பட்ட பின்னர் இந்தக் குறை ஓரளவு நீங்கியுள்ளது. இந்த நிலையில் மத்திய கல்லூரி நீச்சல் தடாகத்தில் நடைபெறவுள்ள மாகாண மட்டப் போட்டியில் சாதிக்கும் வீர வீராங்கனைகள் தேசிய மட்டப் போட்டிகளிலும் முதன்முறையாகப் பங்குபெறவுள்ளனர்.

இதன் மூலம் ஏனைய துறைகளில் சாதிப்பதைப் போன்று எதிர்காலத்தில் நீச்சல் போட்டிகளிலும் வட மாகாண வீர வீராங்கனைகள் சாதித்து தமது திறமைகளை நிரூபிப்பர் என்று விளையாட்டு ஆர்வலர்கள் நம்பிக்கை தெரிவிக்கின்றனர். (ந-86)

# வட மாகாண தடகளச் சாதனையாளர்கள்

வட மாகாண தடகளப் போட்டியில் இந்த வருடம் பல புதிய சாதனைகள் வீர வீராங்கனைகளால் நிகழ்த்தப்பட்டுள்ளன. யாழ்.துரையப்பா விளையாட்டரங்கில் இந்த மாதம் 4ஆம் திகதி தொடக்கம் 7ஆம் திகதிவரை நடைபெற்று முடிந்த மாகாண தடகளப் போட்டியிலேயே இதுவரை முறியடிக்கப்படாமல் இருந்த பல சாதனைகளை இந்த வருடம் தகர்த்தெறிந்தனர். சரித்திரம் படைத்த வீர வீராங்கனைகளின் விவரமும், அவர்களின் சாதனைப் பட்டியலும் வருமாறு:



அஸ்டின் அன்ரனி கொஹாய் றொஷான்

19 வயதுப் பிரிவு ஆண்களுக்கான கோலூன்றிப் பாய்தல் போட்டியில் கடந்த ஆண்டுகளில் சிறந்த பெறுபேறாகக் காணப்பட்ட 3.41 மீற்றர் உயரத்தினை 2012 ஆம் ஆண்டு அளவெட்டி அருணோதயக் கல்லூரியைச் சேர்ந்த அஸ்டின் அன்ரனி கொஹாய் றொஷான் 3.70 மீற்றர் உயரத்தினைக் கடந்து புதிய சாதனையைப் பதிவுசெய்துள்ளார்.

இதன் மூலம் தேசிய ரீதியில் பதக்கம் வெல்லும் வாய்ப்பை இவர் அதிகம் கொண்டுள்ளார்.

19 வயதுப் பிரிவு ஆண்களுக்கான 1500 மீற்றர் ஓட்டப் போட்டியில் சிறந்த பெறுபேறாகக் காணப்பட்ட 4:30. 9 செக்கன்கள் என்ற சாதனையை சென்.ஜோண்ஸ் கல்லூரியைச் சேர்ந்த எ..அனோஜன் இம்முறை நடைபெற்ற வட மாகாண பாடசாலைகளுக்கிடையிலான தடகளப் போட்டியின் போது 4:19.9 செக்கன்களில் ஓடி முடித்து முறியடித்து, புதிய சாதனையை நிலை நாட்டினார். இதன் மூலம் தேசிய ரீதிக்கும் தகுதி பெற்றுள்ளார்.



எ.அனோஜன்



ஈ.காவேரி

21 வயதுப் பெண்களுக்கான 100 மீற்றர் ஓட்டப் போட்டியில் கடந்த ஆண்டுகளில் சிறந்த பெறுபேறாகக் காணப்பட்ட 14.2 செக்கன் என்ற சாதனையை தகர்த்து, 2012 ஆண்டு அளவெட்டி அருணோதயக் கல்லூரியைச் சேர்ந்த ஈ.காவேரி 13.9 செக்கன்களில் ஓடிபுதிய சாதனையை நிலைநாட்டியுள்ளார். இதேவேளை 21 வயதுப் பிரிவு பெண்களுக்கான கோலூன்றிப் பாய்தலில் சிறந்த பெறுபேறாகக் காணப்பட்ட 2.30 மீற்றர் தூரத்தை இவர் இந்த ஆண்டு 2.57 மீற்றர் தூரத்தினைக் கடந்து முறியடித்து புதிய சாதனையை நிலைநாட்டினார்.

21 வயதுப் பிரிவு பெண்களுக்கான உயரம் பாய்தல் போட்டியில் சிறந்த பெறுபேறாகக் காணப்பட்ட 1.47 என்றமீற்றர் தூரத்தை இந்த வருடம் அளவெட்டி அருணோதயக் கல்லூரியைச் சேர்ந்த எஸ். தனுஜா 1.50 என்றமீற்றர் உயரத்தைக் கடந்து புதிய சாதனையைப் பதிவுசெய்துள்ளார். இவர் 21 வயதுப் பெண்களுக்கான கோலூன்றிப் பாய்தலிலும் சிறந்த பெறுபேறாகக் காணப்பட்ட 2.30 மீற்றர் தூரத்தை முறியடித்து 2.75 மீற்றர் தூரத்தைப் பாய்ந்து புதிய சாதனையை நிலை நாட்டினார்.



எஸ்.தனுஜா



லவனன்

19 வயதுப் பிரிவு ஆண்களுக்கான கோலூன்றிப் பாய்தல் போட்டியில் இதுவரை 3.41 மீற்றர் உயரத்தைக் கடந்தமையே சாதனையாக இருந்து வந்தது. இந்தச்சாதனையை முறியடித்து இந்த வருடம் வடமாகாண தடகளப் போட்டியில் கோலூன்றிப் பாய்தல் நிகழ்வில் அளவெட்டி அருணோதயக் கல்லூரியைச் சேர்ந்த லவனன் 3.50 மீற்றர் உயரத்தினைக் கடந்து புதிய சாதனையைப் பதிவுசெய்துள்ளார்.

21 வயதுப் பெண்களுக்கான 400 மீற்றர் தடைதாண்டல் போட்டியில் சிறந்த பெறுபேறாக இதுவரை 1:18.0 செக்கன்களில் ஓடி முடித்தமையே சாதனையாக பதிவு செய்யப்பட்டிருந்தது.

இந்தச் சாதனையை தகர்த்தெறிந்த வவுனியா சிவப்பிரகாச மகளிர் கல்லூரியைச் சேர்ந்த கே.லேகாஜினி 1:07.5 செக்கன்களில் குறித்த தூரத்தை ஓடி முடித்து புதிய சாதனையை நிலைநாட்டியுள்ளார்.



கே.லேகாஜினி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்தியாவுக்கு எதிரான தொடரிலிருந்து கிடைக்கும் வருமானத்தில், தங்களுக்கும் பங்கு வேண்டுமென்று பாகிஸ்தான் கோரிக்கை விடுத்துள்ளது.

இந்தியா, பாகிஸ்தான் அணிகள் இடையே 3 ஒரு நாள் ஆட்டங்கள், 2 'ரி-20' ஆட்டங்கள் கொண்ட தொடர் எதிர்வரும் டிசெம்பர் மாதம் நடத்த திட்டமிடப்பட்டுள்ளது. இந்தத் தொடருக்கு கவாஸ்கர் உள்ளிட்ட பலர் எதிர்ப்பு தெரிவித்தனர்.

இந்த நிலையில் இந்தத் தொடரில் இருந்து கிடைக்கும் வருமானத்தில், தங்களுக்கும் பங்கு வேண்டுமென்று பாகிஸ்தான் கிரிக்கெட் சபை (பி.சி.பி) கேட்டுக் கொண்டுள்ளது. இது குறித்து பி.சி.பி அதிகாரி ஒருவர் கூறுகையில், இரு அணிகள் மோதும் ஆட்டங்களில் இருந்து கிடைக்கும் வருமானத்தில் எங்களுக்கும் பங்கு வேண்டும். இதை இந்தியா ஏற்றுக் கொள்ளாவிடில் இலாபம் பெற வாய்ப்பில்லை.

பாகிஸ்தானில் பாதுகாப்புக்கு உகந்த சூழல் ஏற்பட்டால் மட்டுமே, இந்திய அணியை அனுப்ப முடியும் என்று பி.சி.சி.ஐ சொல்கிறது. மும்பைத் தாக்குதலுக்குப் பின்னர் நாங்கள் கோரிக்கை வைத்தும், பொதுவான இடத்தில் விளையாடவும் சம்மதிக்கவில்லை. எனவே இந்த பங்கின் மூலம் தான் 2009 ஆம் ஆண்டில் சந்தித்த இழப்பை சரிசெய்ய முடியும் என்று தெரிவித்தார். (5)

# எங்களுக்கும் பங்கு வேண்டும்







# சிக்கலில் டெக்கான்

தன்னைத் தவறான முறையில் பதவி நீக்கியமைக்காக டெக்கான் சார்ஜர்ஸ் அணிக்கெதிராக அந்த அணியின் முன்னாள் பிரதம நிறைவேற்று அதிகாரி ரிம் ரைட் தாக்கல் செய்த வழக்கில் அவர் வெற்றிபெற்றுள்ளார். இதன் காரணமாக பெருமளவு தொகையான நஷ்ட ஈட்டுத் தொகையை டெக்கான் சார்ஜர்ஸ் அணி வழங்கவேண்டி ஏற்பட்டுள்ளது. இதன் காரணமாக சிக்கலில் மாட்டுப்பட்டுள்ளது டெக்கான் நிர்வாகம்.

ஐ.பி.எல். போட்டியின் முதலாவது பருவகாலம் நிறைவடைந்ததன் பின்பு டெக்கான் சார்ஜர்ஸ் அணியின் பிரதம நிறைவேற்று அதிகாரிக்கான பொறுப்பில் ரிம் ரைட் நியமிக்கப்பட்டார். எனினும் 2009 ஆம் ஆண்டின் ஜனவரி மாதத்தில் அவர் பதவியிலிருந்து நீக்கப்பட்டார். அதற்கெதிராக ரிம் ரைட் வழக்குத் தாக்கல் செய்திருந்தார்.

ஆரம்பத்தில் இந்தியாவிற்குப் புறப்பட்ட அவரை முதலில் இங்கிலாந்திலிருந்தே பணிபுரியுமாறு பணிக்கப்பட்டதாகவும், அதன் பின்னர் பிரிந்து செல்வது இரு தரப்பினருக்கும் சிறப்பானது எனத் தெரிவித்த அவர் பதவியிலிருந்து நீக்கப்பட்டதாகவும் ரிம் ரைட் தெரிவித்திருந்தார். அதன் காரணமாக தன்னோடு மேற்கொள்ளப்பட்டுள்ள ஒப்பந்தம் மீறப்பட்டுள்ளதாக அவர் வழக்குத் தாக்கல் செய்திருந்தார்.

லண்டனில் இடம்பெற்ற வழக்கு விசாரணைகளில் டெக்கான் சார்ஜர்ஸ் அணிக்கெதிராகவும், அதன் பிரதான நிறுவனமான டெக்கான் குறோனிக்கல்ஸ் அணிக்கெதிராகவும் விசாரணைகள் இடம்பெற்றன. இறுதியில் அவரது ஒப்பந்தத்தின் படி அவருக்கான தொகையான 10 மில்லியன் ஸ்ரேர்லிங் பௌண்ஸும், அதற்கான வட்டியாக 0.5 மில்லியன் ஸ்ரேர்லிங் பௌண்ட்ஸ்களும், வழக்குக்கான செலவுகளையும் டெக்கான் சார்ஜர்ஸ் அணி நிர்வாகம் செலுத்த வேண்டும் என்று உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

அத்தோடு நீதிபதி - டெக்கான் சார்ஜர்ஸ் நிர்வாகத்தின் நடவடிக்கைகள் கீழ்த்தரமாகக் காணப்பட்டதாக விமர்சித்தார். (5)

# பாதை தெரியாமல் தடுமாறிய ஒலிம்பிக் போட்டியாளர்கள்

ஒலிம்பிக் போட்டியில் பங்கேற்க உள்ள ஆஸ்திரேலியா, அமெரிக்கா நாடுகளை சேர்ந்த வீர வீராங்கனைகளை ஏறி வந்த சொகுசு பஸ்களை ஓட்டிய ஓட்டுநர்களுக்கு வழி தெரியாமல் பல மணி நேரம் லண்டன் நகரை சுற்றித் திரிந்தனர்.

லண்டன் ஒலிம்பிக் போட்டி எதிர்வரும் 27 ஆம் திகதி தொடங்க உள்ளது. இதில் 205 நாடுகளை சேர்ந்த வீரர்கள், வீராங்கனைகள் பங்கேற்க உள்ளன. பல நாடுகளைச் சேர்ந்த அணியினர் தங்குவதற்காக, சகல வசதிகளுடன் கூடிய ஒலிம்பிக் கிராமம் உருவாக்கப்பட்டுள்ளது.

இதனையடுத்து பல நாடுகளைச் சேர்ந்த விளையாட்டு வீரர்கள், வீராங்கனைகள் லண்டன் நகருக்கு வந்து குவிந்து கொண்டே இருக்கின்றனர். இந்த நிலையில் நேற்று முன்தினம் ஆஸ்திரேலியா மற்றும் அமெரிக்கா நாடுகளைச் சேர்ந்த அணியினர் லண்டனுக்கு விமானத்தில் வந்து சேர்ந்தனர்.


லண்டன் ஹீத்ரூ விமான நிலையத்தில் இருந்து ஒலிம்பிக் கிராமத்துக்கு விரைவில் சென்றுவிடலாம். ஆனால் ஆஸ்திரேலியா விளையாட்டு வீரர்கள், நிர்வாகிகள் உட்பட 30 பேரை ஏற்றி வந்த சொகுசு பஸ்சை ஓட்டிய ஓட்டுநர் வழி தெரியாமல் தவித்தார்.

இதனால் பாக்கிங்காம் அரண்மனை, வெஸ்ட் ஹம் தெருவின் பின்புறம் வழியாக செல்ல வேண்டிய பஸ்சை, வேறு வழியாக இயக்கினார். இதனால் சுமார் 3.30 மணி நேரம் லண்டன் நகரைச் சுற்றி திரிந்த அந்த பஸ், பின்னர் ஒலிம்பிக் கிராமத்தை வந்தடைந்தது.

அதேபோல அமெரிக்க வீரர்கள், வீராங்கனைகள் பயணித்த சொகுசு பஸ்சை ஓட்டிய ஓட்டுநரும், வழி தெரியாமல் சுமார் 4 மணிநேரம் லண்டன் நகரைச் சுற்றிக் காட்டினார். 23 மைல்கள் சுற்றிய பிறகு, அமெரிக்க அணியினர் ஒலிம்பிக் கிராமத்தை வந்தடைந்தனர்.

இது குறித்து ஒலிம்பிக் போட்டிக்கான போக்குவரத்து ஆணையாளர் பீட்டர் ஹென்ரி கூறியதாவது,

ஒலிம்பிக் கிராமத்துக்கு வீரர்களை அழைத்து வந்த பஸ்கள் வழி தவறி 4 மணிநேரம் சுற்றித் திரிந்தது என்பதை என்னால் நம்ப முடியவில்லை. அது உண்மை என்றால், ஒலிம்பிக் கிராமத்துக்குச் செல்லாமல், சௌத்என்ட் பகுதிக்கு பஸ் சென்றிருக்கலாம். மேலும் 4 மணி நேரம் அப்பகுதியில் சுற்றி திரிந்தால், இங்கிலாந்தின் தென்கிழக்கு பகுதிகள் முழுவதையும், அவர்கள் பார்த்திருக்கலாம் என்றார். (5)





# ஐ.பி.எல்லில் ஆபாச நடனம் நீதிமன்றில் வழக்கு விசாரணை

சென்னையில் கடந்த ஏப்ரல் மாதம் வை.எம்.சி.ஏ. மைதானத்தில் நடைபெற்ற பிரம்மாண்டமான ஐ.பி.எல் தொடக்க விழாவில் பெண்களும், குழந்தைகளும் கலந்து கொண்டனர். தொடக்க விழாவை முன்னிட்டு சினிமா நடிகர் - நடிகைகளால் ஆடப்பட்ட கலாசார சீரழிவான மற்றும் தடை செய்யப்படாத நடனக் காட்சிகள் அரங்கேறின.

இதை எதிர்த்து சட்டத்தரணி கே. ஜெபக்குமார் மதுரையில் உள்ள சென்னை உயர்நீதிமன்றக் கிளையில் மனு தாக்கல் செய்திருந்தார். இந்த மனுவை நேற்றுமுன்தினம் விசாரணைக்கு எடுத்துக் கொண்ட நீதிபதி ஏ. செல்வம், இந்தியக் கிரிக்கெட் சபையின் தலைவர் என். ஸ்ரீனிவாசன், பொலிவுட் நட்சத்திரங்களான அமிதாப்பச்சன், சல்மான்கான், கரீனாகபூர், பிரியங்கா சோப்ரா ஆகியோருக்கு நோட்டீஸ் அனுப்ப உத்தரவிட்டார்.

மேலும், இந்தியன் பிரீமியர் லீக் தலைவர் ராஜீவ் சுக்லா, அமெரிக்க பொப் பாடகி கேட்டி பெர்ரி, சென்னை சூப்பர் கிங்ஸ் உறுப்பினரும், ஆஸ்திரேலிய கிரிக்கெட் வீரருமான டக் பொலஞ்சர் மற்றும் செனி செட்மேக்ஸ் தொலைக்காட்சி நிறுவன அதிகாரிகளுக்கும் இந்த நோட்டீஸ் அனுப்ப உத்தரவிடப்பட்டது.

(5)

DLF INDIAN PREMIER LEAGUE

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆஷஷ் தொடரை விட சிறந்தது எங்கள் ஆட்டம்



ஆஸ்திரேலிய - இங்கிலாந்து அணிகளுக்கிடையில் இடம்பெறும் சரித்திரப்புகழ் பெற்ற ஆஷஷ் தொடரை விட இந்திய - பாகிஸ்தான் அணிகளுக்கிடையிலான போட்டி பெரியது என்று பாகிஸ்தான் அணியின் அதிரடிச் சகலதுறை வீரர் சயிட் அப்ரிடி தெரிவித்துள்ளார்.

இந்திய - பாகிஸ்தான் அணிகளுக்கிடையிலான கிரிக்கெட் உறவுகளில் முன்னேற்றம் ஏற்பட்டு, எதிர்வரும் டிசெம்பர் மாத முடிவில் பாகிஸ்தான் அணி இந்தியாவிற்குக் கிரிக்கெட் சுற்றுப்பயணம் மேற்கொள்ள இந்தியக் கிரிக்கெட் சபை சம்மதம் தெரிவித்துள்ள நிலையிலேயே சயிட் அப்ரிடி இந்தக் கருத்துக்களைத் தெரிவித்துள்ளார்.

இரு நாடுகளிடையிலான கிரிக்கெட் உறவை மேம்படுத்த இரு நாட்டுக் கிரிக்கெட் சபைகளும் மேற்கொண்டுள்ள முயற்சிகளைப் பாராட்டிய சயிட் அப்ரிடி, இது சிறப்பான முன்னேற்றம் எனவும் குறிப்பிட்டார். இந்திய - பாகிஸ்தான் அணிகளுக்கிடையிலான போட்டி பரவலாகப் பின்தொடரப்படும் போட்டியாகக் காணப்படுகின்றன எனத் தெரிவித்த அவர், இந்திய, பாகிஸ்தானிய நாட்டவர்கள் மாத்திரமன்றி உலகம் முழுவதிலுமுள்ள மக்களால் ரசிக்கப்படுகிறது எனத் தெரிவித்தார்.

இந்தியாவிற்கெதிராகப் போட்டியில் பங்குபற்றும் போது அதிகபட்ச அழுத்தங்கள் காணப்படுவதாகத் தெரிவித்த சயிட் அப்ரிடி, ஆனால் அதையும் தாண்டி அந்த ஆட்டங்கள் மிகுந்த பரபரப்பையும், கிளர்ச்சியையும் ஊட்டக்கூடியன எனத் தெரிவித்தார். (5)

# முதலிடத்திலும் சாதனை



அண்மையில் விம்பிள்டன் கிண்ணத்தை 7 ஆவது முறையாக வென்று சாதனை படைத்த சுவிட்சர்லாந்தின் ரோஜர் பெடரர் தற்போது புதிய உலக சாதனை ஒன்றை நிகழ்த்தியுள்ளார். உலக ரென்னிஸ் தரவரிசையில் முன்னாள் அமெரிக்க வீரரான பீட் சாம்ப்ராஸ் 286 வாரங்கள் முதலிடத்தில் இருந்ததே இதுவரை உலக சாதனையாக இருந்து வந்தது.

சாம்ப்ராஸின் இந்தச் சாதனையை 287 வாரங்கள் முதலிடத்தில் நீடித்து 30 வயதான பெடரர் நேற்று முந்தினம் முறியடித்தார்.

கடந்த 2004 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் தனது 22 ஆவது வயதிலேயே உலக ரென்னிஸ் தரவரிசையில் முதலிடத்தைப் பிடித்த பெடரர் 2008 ஆம் ஆண்டு ஓகஸ்ட் வரை தொடர்ந்து முதலிடத்திலேயே நீடித்து வந்தார். 2009 ஆம் ஆண்டு யூலை மாதத்தில் மீண்டும் முதலிடத்திற்கு முன்னேறிய அவர், 2010 பிரெஞ்ச் ஓபனில் அடைந்த தோல்வியால், ரபேல் நடால் முதலிடத்தைப் பிடித்தார். இந்த நிலையில், 17 கிராண்ட்சிலாம் பட்டங்களை வென்றுள்ள பெடரர், சமீபத்தில் விம்பிள்டன் கிண்ணத்தை 7 ஆவது முறையாக வென்றதன் மூலம் 2 வருட இடைவெளிக்குப் பின்பு மீண்டும் முதலிடத்தைப் பிடித்தார். அடுத்து வர இருக்கும் ஒலிம்பிக் தொடர் வரை பெடரர் முதலிடத்திலேயே நீடிப்பார். மேலும், அண்ட்ரே அகாசிக்கு பின்னர் முதலிடத்தைப் பிடித்த வயதான வீரர் பெடரர்தான் என்பதும் குறிப்பிடத்தக்கது. (5)


**A/L TAMIL SEMINAR**

முற்றிலும் எதிர்பார்க்கை வினா விடைகளுடன் 150 ரூபா மட்டுமே.
சனி 9.00 - 11.00
BEACON - யாழ் வெலிங்டன் சந்தி
(20631) (3.6.7)

**பணிப்பெண் தேவை**

ஒரு சிறிய குடும்பத்திற்கு நிரந்தரமாக தங்கி நின்று சமையல் வேலை உட்பட வீட்டுப் பணிதனை செய்வதற்கு 36 வயதுக்குட்பட்ட பணிப்பெண் உடன் தேவை.
தொடர்பு - 0775167472
(20599) (3.6.7)

**உதயன் இணைய வானொலி**

நல்லூர் உற்சவகால விசேட ஒலிபரப்பு
தொடர்புகளுக்கு:- 0215672247

**IELTS** A1 B1 B2
October/27th Exam in Jaffna Call: 0777302882
Visit: http://edu.kugroup.info/ielts
K.U Education, No 75, Temple Road, Jaffna www.kugroup.info

**காணி விற்பனைக்கு**

மாலுசந்தி நெல்லியடி யாழ்ப்பாணத்தில் 5½ பரப்பு தோட்டக்காணி மற்றும் விசாலமான வீட்டுடன் கூடிய 02 பரப்பு வீட்டுக்காணி என்பன விற்பனைக்குண்டு.
தொடர்புகளுக்கு - சி. யோகராசா - 004790829032
சி. சுதர்சன் - 0778915878
(19288) (3.6.7)

**உடன் தேவை**

உணவகத்தில் வேலை செய்வதற்கு கீழ்க்காணும் வெற்றிடங்கள் உள்ளன.

* சிட்டை எழுதுநர் (இருபாலாரும்)
* காசாளர் (இருபாலாரும்)
* மேசை கவனிப்பாளர் (ஆண்கள் மட்டும்)
* சுத்திகரிப்பாளர் (இருபாலாரும்)
* சமையலாளி (ஆண்கள் மட்டும்)
* ரொட்டி தயாரிப்பவர் (ஆண்கள் மட்டும்)

கீழ்க்காணும் முகவரிக்கு உங்கள் விண்ணப்பங்களை அனுப்பி வைக்கவும்.
267A, C. பொன்னம்பலம் வீதி, யாழ்ப்பாணம்.
(C/1581) (3.6.7)

**விற்பனையாகிறது**

* அரச அலுவலகத்தாபன நடைமுறை இலங்கை நிர்வாக சேவை போட்டிப் பரீட்சைக்குரிய கடந்த கால வினாத்தாள்களை உள்ளடக்கியது.
ஆக்கம் - நா. இராசநாயகம்
புதிய பதிப்பு - விலை - 450/=
* கணக்காய்வும் உறுதிப்பாடும், கணக்காளர், கணக்காய்வாளர் போட்டிப்பரீட்சைகளுக்கான வழிகாட்டி - 450/=
ஆக்கம் - ஞா. தேவஞானன்.
அன்னை புத்தகசாலை யாழ்ப்பாணம்.
021 222 9881 (சி/1574) (3.6.7)

**மணல் விற்பனைக்குண்டு**

கட்டட வேலைக்கும், பூச்சுவேலைக்கும் சிறந்த மணல் மண் இப்போது உங்கள் இடத்திற்கே கொண்டு வந்து தரப்படும்.
4 டிரக்டர் - 21, 000/=
தொடர்புகளுக்கு: ரமேஸ்
072 2694462
(20488) (6-7-8)

**aat SRI LANKA**

இலங்கை அரசால் ஏற்றுக்கொள்ளப்பட்ட **கணக்காளராக** நீங்கள் வருவதற்கு நாங்கள் **உத்தரவாதம்**

O/L தகமையுடன் தொழில்த்துறைக் கணக்காளராய் (ACCOUNTANT) வருவதற்கான துரித வழி

* குறுகிய காலத்தில் தொழில்த்துறைக்கு ஏற்ற கல்வி
* குறைந்த பயிற்சிக்கட்டணம்
* சிறந்த அனுபவம் வாய்ந்த விரிவுரையாளர்கள்
* Job Training

பதிவுகளுக்கான இறுதித் திகதி 31.07.2012
(சி/1567)(6-14-8)
APTECH Computer Education
Mind Vishion College
(Reg No: PV 85546)
Navalar Road, Jaffna
0212219456

அனைத்து கற்கை நெறிகளுக்குமான புதிய பிரிவுகள் ஆரம்பம்
21.07.2012 / 23.07.2012 காலை 10.00 மணி
IIS INSTITUTE OF INFORMATICS STUDIES
இல 100, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்
தொ.பே. 021 222 2831

**சர்வதேச விசா விற்பன்னர்கள் பங்குபெறும் திசைகாட்டியின் மாபெரும் விசா விழிப்புணர்வுக் கருத்தரங்கு**

கனடா, ஆஸ்திரேலியா, மலேசியா, நியூசிலாந்து போன்ற பன்னாட்டு குடும்ப, student விசாக்களுக்குரிய சட்ட ரீதியான ஆலோசனைகள், வழிகாட்டல்கள், திசைகாட்டல்கள்.
இடம் - TILKO HOTEL K.K.S. ROAD, JAFFNA.
காலம் 22.07.2012 ஞாயிறு மு.ப 10 மணி
பிரவேசம் முற்றிலும் இலவசம்
21.07.2012 பி.ப 4 மணிக்கு முன் 0212219016 என்ற தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டு முன்பதிவு செய்தல் அவசியம்.
இதுவும் திசைகாட்டியின் சமூகப் பொறுப்போடு கூடிய கைங்கரியமாகும்.
திசைகாட்டி பிறைவேற் லிமிட் (PV 82703)
முன்மாதிரியான விசா ஆலோசனை நிறுவனம்
57, சிவகுருநாதர் ஒழுங்கை, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.
(20617) (3.6.14)

**அரசியல் விஞ்ஞானம் கருத்தரங்கு**

யாழ்.மண்ணில் முதன் முறையாக
இலங்கையின் முன்னணி ஆசிரியர் சி.அ.யோதிலிங்கம் &K.சுகாஷ் இணைந்து வழங்கும் பரீட்சை வழிகாட்டல் கருத்தரங்கு
21,22,27 ஆம் திகதிகளில் 12 - 3 P.M

* எதிர்பார்க்கை வினாக்கள்
* விடை எழுதும் முறை
* குறுவினாக்கள்
* M.C.Q

வெளிமாணவர்களும் பங்கேற்கலாம்
பதிவுகளை உடன் மேற்கொள்ளவும்
DCM யாழ்.நகர் (வேம்படி மகளிர் கல்லூரி அருகில்)

**கரைச்சி வடக்கு பல நோக்கு கூட்டுறவுச் சங்கம் (வ.து) பரந்தன் கேள்வி விண்ணப்பம் கோரல்.**

எமது சங்கத்தினால் மேற்கொள்ளப்பட்டு வரும் முகவர் சேவை நிலையங்களுக்கு பொருள்கள் ஏற்றியிறக்க பாரவூர்திகள் தேவைப்படுகின்றன. (உள்ளூர் சேவை மற்றும் கொழும்பு, வவுனியா) எனவே குறித்த சேவைக்கு லொறி உரிமையாளர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. இதற்கான மேலதிக விவரங்களையும் விண்ணப்பப்படிவங்களையும் கடமை நாள்களில் தலைமை அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம் உரிய விண்ணப்பங்களை அனுப்ப வேண்டிய முகவரி " தலைவர், கரைச்சி வடக்கு ப.நோ. கூ. சங்கம், பரந்தன் "
விண்ணப்ப முடிவுத் திகதி 31.07.2012
தலைவர்,
கரைச்சி வடக்கு ப.நோ.கூ.சங்கம்,
பரந்தன்.
(19287) (3.6.7)


இப்பத்திரிகை ... உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 20.07.2012 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org